இந்நிலையில், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்பியுள்ள அவை உரிமை மீறல் பிரச்சினையை கோர்ட்டில் சுதா கோபால் தாக்கல் செய்துள்ள மனுவோடு சேர்த்துப் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது.

இதுபோன்று கிரிமினல் சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் விசாரிக்க வேண்டிய பிரச்சினைகளில், வழக்கு மன்றங்கள்தான் நேரடியாக விசாரித்துத் தக்க தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

எழுந்துள்ள பிரச்சினைகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாகவும் உள்ளன. எனவே, இவை முழுக்க முழுக்க நீதி மன்ற விசாரணைக்கு உட்பட்டவையாகவே அமைகின்றன.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி-

உறுப்பினர் ஒருவர் சட்டமன்ற விடுதி வளாகத்தில் வெளியாள் ஒருவரால் தாக்கப்பட்டது குறித்து-பேரவைத் தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி.

..எந்த ஒரு பிரச்சினையும் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கும்போது சட்டமன்றப் பேரவை அதில் தலையிடுவது இல்லை. அதைப் போன்றே, சட்டமன்றப் பேரவையின் ஒரு பிரச்சினை பரிசீலனையில் இருக்கும் போது நீதிமன்றம் அதில் தலையிடுவது இல்லை. இது காலம்தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபு ஆகும். 26—12—1992 ஆம் தேதியன்று உறுப்பினர் விடுதியில் அந்நாளைய சட்டமன்றப்பேரவை உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்ட பிரச்சினை குறித்து அவையில் எழுப்பப்பட்டபோது, அச்சம்பவம் பேரவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. பிரச்சினை பேரவை உரிமைக் குழுவின் விசாரணையில் இருந்த காரணத்தால் நீதிமன்றவிசாரணை நடத்த இயலாது போனதை குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் என்பதைத் துல்லியமாக நிரூபிக்க இயலவில்லை எனவும் முடிவெடுத்து, அப்பிரச்சினை அன்றைய உரிமைக் குழுவால் கைவிடப்பட்டுள்ளது.

அன்றைய உறுப்பினர் திரு. தீர்த்தராமன் பிரச்சினை போன்றே தற்போது பரிசீலனையில் இருக்கும் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தாக்கப்பட்டது குறித்த சம்பவம் உள்ளது. சம்பவம் நடைபெற்ற அன்றே காவல் துறையால் அரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அப்பிரச்சினை சட்டமன்றப் பேரவையிலும் எழுப்பப்பட்டது. இன்றைய நிலவரப்படி இந்த வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. நீதிமன்றத்தின்

பக்கங்கள்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

உறுப்பினர் ஒருவர் சட்டமன்ற விடுதி வளாகத்தில் வெளியால் ஒருவரால் தாக்கப்பட்டது குறித்து—பேரவை தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

கைது செய்யப்பட்டு நிறுத்தப்பட்ட சுதாகோபாலும் திரு பீட்டர் அல்போரன்ஸக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டைத் தாக்கல் செய்துள்ளார். அதுவும் நீதிமன்றத்தில் குற்றவியல் தகவல் அறிக்கையோடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் வழக்காகப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள நிலையில் பேரவையிலும் இப்பிரச்சினையை ஆராய்வது நீதிமன்ற விசாரணையைத் தடைப்படுத்துவதாகவே அமையும். மேலும் மேற்கண்ட மாறுபட்ட தகவல்களில் இருந்து இப்பிரச்சினை அவை உரிமை மீறல்தான் என உறுதிபடக் கூறிட இயலாத நிலை உள்ளதால் இதனை அவை உரிமை மீறல் என வகைப்படுத்த இயலாது எனத் தீர்ப்பளிக்கிறேன். எனினும் பேரவையில் கலந்துகொள்வதற்காக வரும் ஒரு உறுப்பினரைத் தாக்குவது என்ற செயல் மிகவும் கண்டிக்கத் தக்கது என்பதைத் தெரிவிப்பதோடு நீதிமன்றம் இதனை உரியவாறு விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் இந்தப் பிரச்சினை இத்தோடு விடப்படுகிறது. 689—693

உறுப்பினர் மீது—தொடர்ச்சி

உறுப்பினர் டாக்டர் கே. குமாரதாஸ் மீதான அவை உரிமை குழுவின் அறிக்கை பேரவை முடிவு—

உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ்மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய, உரிமைக் குழுவின் அறிக்கை 30—4—1993 ஆம் நாள் அன்று உரிமைக் குழுவின் தலைவர் பேரவைக்கு அளித்தார்.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

உறுப்பினர்மீது—தொடர்ச்சி

'உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ்' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை—பேரவை முடிவு—தொடர்ச்சி

அவ்வறிக்கை பேரவை விதி 229(ஆ)-இன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பேரவை விதி 229(ஈ)ன் கீழ் அந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை பேரவை இசைந்து ஏற்றுக் கொள்கிறது என்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 696

தொலைக்காட்சி மீது—

பேரவை நடவடிக்கை பற்றி உள் நோக்கம் கற்பித்து தொலைக்காட்சி ஒளிபரப்பிய செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—

30—3—1993 அன்று தொலைக்காட்சி செய்தியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றி உள் நோக்கம் கற்பிக்கும் வகையில் செய்தி ஒளி பரப்பப்பட்டதாகக் குறிப்பிட்டு ஒரு சட்டமன்ற உறுப்பினர் 31—3—1993 அன்று கொடுத்தஅவை உரிமை மீறல் பிரச்சினை குறித்துத் தலைவர் 29—4—1993-ஆம் நாளன்று அளித்த திப்புரைகளின் தொகுப்பு பின்வருமாறு :

''அவை உரிமை மீறல்பிரச்சினை பற்றிய அறிவிப்பினைத் தொடர்ந்து பேரவையில் அன்று நான் பின்வருமாறு அறிவித்திருந்தேன் :

..எந்த அடிப்படையில் அப்படி செய்திகளைச் சொன்னார்கள் என்பது குறித்து தொலைக்காட்சியினரிடம் விளக்கம் கேட்க உள்ளேன். அவ்வாறு தெரிவித்திருந்தபோது பேரவைக்குக் களங்கம் உண்டாக்கும் செயல் என்றே கருதுகிறேன். மேலெழுந்தவாரியாகப்

தலைவர்—தொடர்ச்சி.

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

தொலைக்காட்சி மீது—தொடர்ச்சி

பேரவை நடவடிக்கை பற்றி உள்நோக்கம் கற்பித்து தொலைக்காட்சி ஒளிபரப்பிய செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

பார்க்கும்போதே இது உரிமை மீறல் பிரச்சினைதான் என்றாலும், தொலைக் காட்சி நிலையத்தாரிடம் இதைத் தெரி வித்து அவர்களிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது முடிவை அவையில் தெரிவிக் கிறேன் என்று தெரிவித்திருந்தேன்.

இது குறித்து தொலைக்காட்சி நிலைய இயக்கு நருக்கு 31-3-1993 அன்று ஒரு கடிதம் அனுப் பப்பட்டது. அதற்கு சென்னைத் தொலைக் காட்சி நிலைய இயக்குநர் தனது 12-4-1993 ஆம் தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார் ;

"The comments offered by the News Editor is reproduced below :

We had included the report in question on the basis of our Reporter's copy as well as on Agency despatches. There was no motive as mentioned in the Hon. Speakers communication. If, however, any inference of distortion has been drawn, we assure you that it was not so intentioned. Our endeavour has always been to present the news, especially, those relating to the Legislative Assembly in a fair manner and we assure you that we would continue to do so in future."

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

தொலைக்காட்சி மீது—தொடர்ச்சி

பேரவை நடவடிக்கை பற்றி உள் நோக்கம் கற்பித்து தொலைக்காட்சி ஒளிபரப்பிய செய்தி குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

தொலைக்காட்சி நிலையத்தார் அளித்த இவ்விளக்கம் ஏற்புடையதாக இல்லை என்பதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைச் செய்திகளை மக்களுக்கு பேரவை விதிமுறைகளுக்கு உட்பட்டு, நடந்தனவற்றையே செய்தியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ள தொலைக்காட்சி நிலையத்தினர் அவர்கள் மனம் போன போக்கில் அவர்களுடைய எண்ணங்களுக்கேற்ப சேர்த்தும் குறைத்தும் திரித்தும் செய்தியாகத் தெரிவிப்பது தவறான செயல் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

தொலைக்காட்சி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளவாறு பேரவைச் செய்திகளை in a fair manner வெளியிடுவதாக உறுதி அளித்துள்ளபடி நடக்காததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. If however, any inference of distortion is drawn என்று சொல்லி விட்டு இப்பிரச்சினையில் அவ்வாறு செய்தியை சிதைத்து வெளியிடப் பட்டுள்ளது பற்றி நான் குறிப்பிட்டு இருந்தும் அதற்காக தங்கள் குறைந்தபட்ச வருத்தத்தைக் கூடத் தெரிவிக்காததை இப்பேரவையின் இறையாண்மையைப் பொருட்படுத்தாத செயலாகவே கருத வேண்டியுள்ளது, இருப்பினும்

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

தொலைக்காட்சி மீது தொடர்ச்சி

பேரவை நடவடிககை பற்றி உள்நோக்கம்

கற்பித்து தொலைக்காட்சி ஒளி பரப்பிய

செய்தி குறித்து பேரவைத் தலைவரின்

தீர்ப்பு— தொடர்ச்சி

தொலைக் காட்சி நிறுவன அலுவலர்கள் வேறுவித நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் இவ்விதம் நடந்து கொள்ளும் நிலை இருப்பதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊர்ஜிதமாகியுள்ளது.

எனவே, இப்பிரச்சினையில் தொலைக் காட்சி நிறுவனத்தினர் அவர்கள் அம்பு தான். எய்தவர்களை விட்டு விட்டு அம்பை நொந்து பயன் என்ன என்ற பெருந்தன்மைக்கேற்ப தொலைக்காட்சி நிறுவனத்தினர் மீது சற்று பெருந்தன்மை காட்டி இனி வரும் நாட்களிலாவது அவையின் உரிமையைப் பாதிக்கும் அளவுக்கு செய்திகளை வெளியிடலாகாது என்ற அறிவுரையை ஏற்று நடப்பார்கள், தங்களுடைய அஷ்யூரன்சைக் காப்பாற்று வார்கள் என்று கருதி நடந்த சம்பவத் திற்கு கடும் எச்சரிக்கையினை severe warning ஐச்செய்து, இத்துடன் இப்பிரச் சினையை விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,'' 405—406

பத்திரிகைகள் மீது—

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 9—2—1993 ஆம் நாளிட்ட ''தினகரன்'' பத்திரிகை வெளியிட்டது குறித்து எழுப்பப் பட்ட உரிமைப் பிரச்சினை தொடர்பாக தலைவர்கீழ்க்கண்டவாறு தீர்ப்பு அளித்தார்:

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

"திரு. குமரி அனந்தன் 9—2—1993 அன்று தினகரன் நாளிதழில் வெளிவந்துள்ள ஒரு செய்தி குறித்துப் பேரவையில் ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார்கள். அதில். பேரவை உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் தன்னைக் குறிப்பிட்டு. தான் தொகுதிக்குப் போகவில்லை என்று சாட்டிய குற்றச்சாட்டை முறையற்றது என்று கூறி, அவைத் தலைவர் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பின்னரும், 9—2—1993 நாளிட்ட இதழில் தினகரன் பத்திரிகை வெளியிட்டிருப்பதால் தன்னுடைய உரிமை மீறப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். இது குறித்து ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு என்னுடைய தீர்ப்பை வழங்குவதாக நான் அவையில் தெரிவித்திருந்தேன்,

'தினகரன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் தனது 31—3—1993 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :

'மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் 2 தடவை குறுக்கிட்டு. திரு. குமரி அனந்தன் சாத்தான்குளம் தொகுதிக்குப் போவதேயில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இரண்டாவது தடவை அவ்வாறு சொன்னபோது அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தாங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டது குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

அனுப்பிய நகலிலிருந்து தெரிய வருகிறோம், முதல் தடவையும் அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதா என்பதை எங்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் பிப்ரவரி 8 ஆம் தேதி திரு. குமரி அனந்தன் பேசிய பேச்சின் முழுப் பகுதியின் நகலும் எங்களுக்கு அனுப்பித்தந்திடின். நாங்கள் தங்களுக்கு உரிய பதில் அனுப்புவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, பேரவைச் செயலகம் 10—4—1993 அன்று 'தினகரன்' செய்தி ஆசிரியருக்கு அனுப்பிய கடிதத்தில் 8—2—1993 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையின் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட தேவையான நடவடிக்கைக் குறிப்பின் பகுதி நகல் அவர்களுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டது குறித்து சுட்டிக் காட்டி, திரு. குமரி அனந்தன் அவர்களது உரையின் பிற பகுதிகள் இந்தப் பிரச்சினைக்குத் தொடர்பு இல்லாதது என்பதால் அதன் நகலை அவர்களுக்கு அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது, மேலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகள் 9—2—1993 நாளிடப்பட்ட 'தினகரன்' நாளிதழில் எவ்வாறு பிரசுரிக்கப்பட்டது என்பதற்கான விளக்கத்தினை மட்டும் இச்செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அப்பத்திரிகை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி.

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை' தினகரன் பத்திரிகை வெளியிட்டது குறித்து பேரவைத்தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

தற்போது 28—4—1993 ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் ''தினகரன்'' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கீழ்க்கண்டவாறு பதில் அளித்துள்ளார் :

''அவைக் குறிப்பிலிருந்து பேரவைத் தலைவர் அகற்றும் பகுதியைப் பத்திரிகைகள் செய்தியாக வெளியிடக் கூடாது என்பதை பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபுகளிலிருந்து மேற்கோள் காட்டுவது மன்னர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றியதாகும். மக்கள் ஆட்சிக்கு இது பொருந்தாது. ஜனநாயகத்தில் சட்டமன்றத்தைவிட மக்கள் மன்றம் பெரிது என்பதை யாரும் மறுக்க முடியாது. சட்டமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் அப்படியே தெரிந்துகொள்ள மக்களுக்கு உரிமை உண்டு. எனவே பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து அகற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது என்பது நமது அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல என அவரே தீர்ப்பு வழங்கி இருக்கிறார் 'மேலும் அரசியல் சட்டப் பிரிவு 194, உட்பிரிவு 3-ன்படி பேரவையின் உரிமைகள் இன்னின்ன என்பதற்கு சட்ட வடிவம் தரப்பட்டிருக்குமானால் அது அனைத்துத் தரப்பினருக்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும்''—அரசியல் சட்டத்திற்குப் புது விளக்கம் தருகிறார்— "ஆகவே 'தினகரன்' வெளியிட்ட செய்தியின்மீது திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினையில் பேரவை உரிமை மீறல் எதுவும்

த—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிகைகள்—தொடர்ச்சி

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய குதியை தினகரன பத்திரிகை வெளியிட்டது பேரவை குறித்து தலைவரின தீர்ப்பு—தொடர்ச்சி

எழவில்லை என்பதைத் தங்களுக்குத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.—அதுவும் அவர்களே முடிவு எடுத்துக் கொண்டார்கள். பேரவைக்கு எந்த வேலையும் அவர்கள் வைக்கவில்லை.

திரு நடேசன் பால்ராஜ் அவர்கள் முதலில் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறித்தும், அவரது சாத்தான் குளம் தொகுதி குறித்தும் பேச முற்பட்ட போது நான் இன்னொரு உறுப்பினரை சொந்த முறையில் குற்றம் சாட்டக் கூடாது என அறிவுறுத்தி இருந்தேன். மீண்டும், திரு. நடேசன் பால்ராஜ் அதே குற்றச்சாட்டைச் சொல்ல முற்படவும், நான் குற்றச்சாட்டு கூடாது என்றும், அந்தக் குற்றச் சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்றும் அவையிலேயே அறிவித்தேன். ஆனால் 'தினகரன்' செய்தி ஆசிரியர் அனுப்பியுள்ள 28—4—1993 ஆம் தேதியிட்ட கடிதத்தில் பேரவைச் செயலகத்தின் 23—3—1993 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பிய பகுதி நகலில் இருப்பது போல குற்றச்சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படுவதாகப் பேரவைத் தலைவர் சட்டப் பேரவையில் முறைப்படி அறிவித்ததாகத் தங்களுக்குத் தகவல் இல்லை எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

தலைவர்— தொடர்ச்சி.

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி,

உரிமைப் பிரச்சினை— தொடர்ச்சி,

பத்திரிகைகள் மீது— தொடர்ச்சி,

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை "தினகரன்" பத்திரிகை வெளியிட்டது குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

செய்தி ஆசிரியரின் இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில் இந்தக் குற்றச்சாட்டுப் பகுதி இரண்டு வெவ்வேறு நேர்வுகளில் குறிப்பிட்டது அல்ல. ஒரே ஒரு நேரத்தில் அடுத் தடுத்து குறிப்பிடப்பட்டு பேரவைத் தலைவரால் நீக்கப்பட்ட பகுதி யாகும். இவ்வாறு இருக்க, செய்தி ஆசிரியரின் விளக்கம் பிரச்சினை யைத் திசை திருப்புவதாக உள்ளது. மேலும், அவர் தனது கடிதத்தில், அவைக் குறிப்பிலிருந்து அவைத் தலைவர் அகற்றும் பகுதிகளைப் பத்திரிகைகள் செய்தியாக வெளியிடக் கூடாது என்பதை பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபுகளிலிருந்து மேற்கோள் காட்டுவது மன்னராட்சி காலத்தில் நடை பெற்ற நிகழ்ச்சிகள் பற்றியதாகும் என்றும், மக்களாட்சிக்கு அது பொருந்தாது என்றும் கூறியுள்ளதோடு ஜனநாயகத்தில் சட்டமன்றப் பேரவையைவிட மக்கள் மன்றம் பெரிது என்றும் சட்டமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் அப்படியே தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு என்றும், பேரவைத் தலைவர் அவைக்குறிப்பிலிருந்து அகற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் பத்திரிகைகள் பிர சுரிக்கக்கூடாது என்பது அரசியல் சட்டத் திற்கேற்புடையது அல்ல என்றும் பது விளக்கம் தந்துள்ளார்கள்.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

மேற்படி கூற்றிலிருந்து இப்பத்திரிகை, சட்டமன்றத்தின் உரிமைகள் குறித்து மிகத் தவறான எண்ணம் கொண்டுள்ளது தெளிவாகப் புலனாகிறது. பேரவையின் உரிமைகள் என்னென்ன என்பது குறித்து சட்டமியற்றும் வரை, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பேரவையின் உரிமைகள் யாவும் இச் சட்டமன்றத்திற்கும் பொருந்தும். இந் நிலையில் பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து அகற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் பத்திரிகைகளில் பிரசுரிக்கக் கூடாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என இப் பத்திரிகை ஆசிரியர் தெரிவித்திருப்பது விந்தையாக உள்ளது.

அரசியல் சட்டம் இயற்றிய மாமேதை அம்பேத்கார் அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த பல அடிப்படை கோட்பாடுகளையே கேலி செய்யும் வகையில் இருப்பதாகவே இப்பத்திரிகை ஆசிரியரின் விளக்கத்தைக் கருத வேண்டியுள்ளது. மேலும், இப்பேரவைக்குள்ள இறையாண்மையையும், இந்தியப் பாராளுமன்ற மரபுகளையும் மதிக்கும் மனப் பக்குவமும் இப்பத்திரிகைக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இப்பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி மற்றும் அது தொடர்பாக செய்தி ஆசிரியர் அளித்துள்ள

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிக்கைகள் மீது—தொடர்ச்சி

அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை "தினகரன்" பத்திரிகை வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

விளக்கம் யாவற்றையும் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போதே உரிமை மீறிய செயல் என்பது தெளிவாகிறது. எனவே உரிமைக் குழுவுக்கு அனுப்பி இதனை ஆய்ந்து, தக்க மேல் நடவடிக்கைகளுக்காகப் பரிந்துரை வழங்குமாறு கேட்டு பேரவைத் தலைவருக்கு இப்பிரச்சினையில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவை உரிமைக் குழுவுக்கு இப் பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்", 676—680

"இல்லஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா" வார இதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை—பேரவை முடிவு.

"இல்லஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா" இதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய. உரிமைக் குழுவின் அறிக்கை 30—4—1993 ஆம் நாள் அன்று உரிமைக் குழுவின் தலைவர் பேரவைக்கு அளித்தார்.

அவ்வறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. பேரவை விதி 229(ஈ)-ன்

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி.

''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா'' வாரஇதழ்'' மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை—பேரவை முடிவு —தொடர்ச்சி

கீழ் அந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளைப் பேரவை இசைந்து ஏற்றுக் கொள்கிறது என்ற தீர் மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 694—695

பேரவைச் செயலாளருக்கு ஒரு உறுப்பினர் அனுப்பிய உரிமைப் பிரச்சினை முன் அறிவிப்பைக் குறித்து முன் கூட்டியே ''தினகரன்'' நாளிதழ் செய்தி வெளி யிட்டது குறித்து—பேரவைத் தலை வரின் தீர்ப்பு.—

பேரவைச் செயலாளருக்கு உறுப்பினர் ஒருவர் அனுப்பிய உரிமைப் பிரச்சினையின் முன்ன றிவிப்பை முன்கூட்டியே 'தினகரன்' நாளி தழ் வெளியிட்டது குறித்து 30—4—1993 ஆம் நாளன்று தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்.

''திரு. டி. எம். ரங்கராஜன் எம்.எல்.ஏ. அவர்கள் 2—4—1993 அன்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார். பேரவை விதி 36(5)இன்படி உறுப்பினரால் செயலருக்கு அனுப்பப் பெறும் முன் அறிவிப்பினைப் பேரவைத் தலைவர் அனு மதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாதவரை அதனை உறுப்பினரோ அல்லது வேறு

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப்பிரச்சினை—தொடர்ச்சி.

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி.

பேரவைச் செயலாளருக்கு ஒரு உறுப்பினர் அனுப்பிய உரிமைப் பிரச்சினை முன் அறிவிப்பைக் குறித்து முன்கூட்டியே 'தினகரன்' நாளிதழ் செய்தி வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

எவரோ வெளியிடக் கூடாது என்றிருப்பதைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவியில் இருந்து நீக்கக் கோரி தீர்மானம் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப்பட்டு 2—4—1993 அன்று பத்திரிகைகளில் வந்திருப்பதாக உள்ளது தன்னுடைய உரிமையை மட்டுமல்லாது அவையின் உரிமையையும் பாதிப்பதாக உள்ளதாகத் தெரிவித்து அச்செய்தி 'தினகரன்' பத்திரிகையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் தெரிவித்ததாக உள்ளதால் எதிர்க்கட்சித் தலைவர் மீது ஓர் உரிமை மீறல்பிரச்சினையைக் கொண்டு வருவதாகவும் அவையில் விளக்கினார். இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது "I have not made it Public and I will not make it Public" என்றார். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இதுபற்றிக் கூறும் போது அந்தச் செய்தி எப்படிப் பத்திரிகைகளில் வந்தது என்பதை விசாரித்து அதற்குப் பிறகு யார் மீது உரிமைப்பிரச்சினை கொண்டுவரவேண்டுமென்று முடிவு எடுப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நான் அவை முன்னவர் அவர்களின் ஆலோசனையை ஏற்று பத்திரிகையாளர்களை விசாரித்து அதன் அடிப்படையிலே முடிவு செய்யலாம் என்று அறிவித்தேன்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிகை மீது—தொடர்ச்சி

பேரவைச் செயலாளருக்கு ஒரு உறுப்பினர் அனுப்பிய உரிமைப் பிரச்சினை முன் அறிவிப்பைக் குறித்து முன்கூட்டியே 'தினகரன்' நாளிதழ் செய்தி வெளியிட்டது குறித்து. பேரவைத் தலைவரின் தீர்ப்பு —தொடர்ச்சி.

இது தொடர்பாக பல்வேறு பத்திரிகைகளில் வந்திருந்த செய்திகளைப் பார்க்கையில் 'தினகரன்' பத்திரிகை மட்டும் இந்த அறிவிப்புத் தொடர்பான தகவல்களை திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் பத்திரிகைகளுக்குத் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ளது. விளக்கம் கோரப்பட்ட பல்வேறு பத்திரிகைகள் தமது விளக்கக் கடிதத்தில் இது பற்றிய செய்தி பி.டி.ஐ. மற்றும் யூ.என்.ஐ. ஆகிய செய்தி நிறுவனங்களின் மூலம் பெறப்பட்டதாகத் தெரிவித்தன. சில பத்திரிகைகள் தமது இயல்பாக செய்திகள் சேகரிக்கும் நடவடிக்கைகள் மூலம் கிடைத்த தகவல் என்று தெரிவித்துள்ளன. மேலும் இதுபோன்ற நிலை எதிர்காலத்தில் ஏற்படாது தவிர்க்கப்படும் என்று தெரிவித்துள்ளதை ஏற்றுக் கொள்ளலாம் எனக் கருதுகிறேன். 'தினகரன்' நாளிதழ் மட்டும் தமது பதிலில்.

'Though you have mentioned in your letter that there is prima-facie case of breach of privilege against our newspaper, we have reason to belive that no privilege issue has been raised against our newspaper, in the floor of the Assembly.

எனத் தெரிவித்தது. திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது தான் உரிமைப் பிரச்சினையைக்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி.

பேரவைச் செயலாளருக்கு ஒரு உறுப்பினர் அனுப்பிய உரிமைப் பிரச்சினை முன் அறிவிப்பைக் குறித்து முன் கூட்டியே 'தினகரன்' நாளிதழ் செய்தி வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

கொண்டு வந்தார்கள் என்றாலும் அப்பத்திரிகையும் அவை உரிமையை மீறும் வகையில் தான் செய்தி வெளியிட்டுள்ளது என்பது விதிகளின்படி தெளிவாகி இருந்தாலும் அவை உரிமையினை அப்பத்திரிகையும் மீறியுள்ளது ஏன் என்பதற்கான விளக்கம் நேரடியாகத் தரவில்லை. மேலும் அப்பத்திரிகைக்கு மேற்படி செய்தி எவ்வாறு கிடைத்தது என்ற விவரத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் தெரிவித்ததாகப் பிரசுரித்திருப்பது அவை உரிமை மீறிய செயலாகக் கருத வேண்டியிருக்கும் என்று தெரிவித்து, அவர்களிடம் விளக்கம் கோரியதற்கு நேரடியாக பதில் தராததால் 13—4—1993 தேதியிட்ட இச்செயலகக் கடிதத்தில் மேற்படி செய்தி எதிர்க்கட்சித் தலைவரால் கொடுக்கப்பெற்றது என்று பிரசுரிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி அவர் அத்தகைய செய்தியைப் பத்திரிகைக்கு அளித்தாரா என்பதையும் குறிப்பாகத் தெரிவிக்கும்படி வலியுறுத்தப்பட்டது. இக்கடிதத்திற்கு இந்த நாள் வரையில் 'தினகரன்' செய்தி ஆசிரியரிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியிருந்தபோதிலும் அவர்

த—தொடர்ச்சி

பக்கங்கள

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

பத்திரிகைகள் மீது—தொடர்ச்சி

பேரவைச் செயலாளருக்கு ஒரு உறுப்பினர் அனுப்பிய உரிமைப் பிரச்சினை முன் அறிவிப்பைக் குறித்து முன் கூட்டியே 'தினசரன்' நாளிதழ் செய்தி வெளியிட்டது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

"I have not made it public and I will not make it public"

என்று திட்டவட்டமாகத் தெரிவித்த காரணத்தாலும், இது பற்றி மாற்றுக் கருத்து எதுவும் எந்தப் பத்திரிகை நிறுவனங்களிடமிருந்தும் வராத நிலையிலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்கது என்றே கருத வேண்டியுள்ளது.

எனினும் 'தினகரன்' பத்திரிகையைப் பொறுத்தவரையில் பத்திரிகைச் செய்தியில் மேற்படி செய்திக்குறிப்பு திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன், எதிர்க்கட்சித் தலைவரால் கொடுக்கப்பட்டிருந்தது என வெளியிட்டதற்குக் கேட்கப்பட்ட விளக்கத்திற்கு இதுவரை பதில் கிடைக்காத காரணத்தால் அப்பத்திரிக்கை மீது உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப் பெறவில்லை என்ற போதிலும் அப்பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்த விதம் அவை உரிமை மீறிய செயல்தான் என்பது தெளிவாகிறது. எனவே, பேரவை விதி 226-ன்படி (Suomoto) ஆக இந்தப் பத்திரிகையின் அவை உரிமை மீறிய செயலை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்து பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைக்கிறேன்.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—

28—4—1993 ஆம் நாளன்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு தலைவர் அனுமதி மறுத்தபிறகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச முயன்றதையொட்டி தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

"எதிர்கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்த உறுப்பினர்களும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். இது முறையல்ல. இந்த அளவுக்கு எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல. உறுப்பினர் கோஷம் எழுப்புவது முறையல்ல. தயவுசெய்து உட்காரவேண்டும். அல்லது அவையை விட்டு வெளியேற வேண்டும். அவையை விட்டு வெளியேற வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு இந்தியப் பாராளுமன்ற சரித்திரத்தில் எதிர்க் கட்சித் தலைவரை வெளியேறுமாறு சொன்னபோது, வெளியேற மறுத்தது எந்தச் சட்டமன்றத்திலும் இல்லை. எந்தச் சட்டமன்றத்திலும் இப்படி இல்லை. அண்மையில்கூட ஆந்திரா சட்டமன்றத்தில் உறுப்பினர்களை வெளியேற்றியபோது மற்ற உறுப்பினர் களை எல்லாம் அவைக் காவலர்களை வைத்து வெளியேற்றினார்கள். எதிர் கட்சித் தலைவரான என்.டி. ராமாராவ் மட்டும் தானே வெளியேறினார். இங்கு எதிர்கட்சித் தலைவரான எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் அவையை விட்டு வெளியேற வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும், தற்போது அவையில் முறை தவறி நின்று கொண்டு பேரவையின் அலுவல்களை

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப் பெறுதல்—தொடர்ச்சி.

தடுத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் அவைக் காவலர்கள் வெளியேற்றக் கேட்டுக்கொள்கிறேன்.''

(எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் அவைக் காவலர்களால் வெளியேற்றப் பட்டனர்.)

(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்ததை யொட்டித் தலைவர் குறிப்புரைத்த தாவது.)

பேரவையின் வாயிலிருந்து வெளியேற்றப் பட்ட உறுப்பினர்கள் அவை நடவடிக் கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்திக்கொண் டிருக்கக் கூடாது. வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களைக் காவலர்கள் அங்கே யிருந்தும் வெளியேற்றுவார்கள்.''

28—4—1993-ஆம் நாளன்று ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு, தலைவர் இசைவு மறுத்த பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகளையொட்டி எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேறுமாறு தலைவர் ஆணையிட் டார். 264—265

(இது குறித்து அவை முன்னவரும், முதல மைச்சர் அவர்களும் கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் தலைவர் வழங் கிய தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு.)

தொலைக்காட்சி, வானொலியில் இதே போலத்தான் இந்தப் பேரவை தொடங்கிய நாளிலிருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே திட்டமிட்டு பேரவையினுடைய

தலைவர்—தொடர்ச்சி.

திர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்— தொடர்ச்சி.

நடவடிக்கைகளைத் திசை திருப்புகிற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது பற்றி இரண்டு உரிமை மீறல் பிரச்சினைகள் கூட வந்திருக்கின்றன. அதற்கு அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம்கூட பேரவையினுடைய இறையாண்மையை மேலாண்மையை ஏற்றுக் கொண்டு கொடுப்பதாகத் தெரியவில்லை. எனவே, அதையெல்லாம் நான் உரிமை மீறல் பிரச்சினையாக எப்படி எடுப்பது என்று கருதிக் கொண்டிருக்கிறேன். எனவே அவர்கள் தொடர்ந்து இதைத்தான் செய்வார்கள். இதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் இன்றைக்கும்.

இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியினர் இந்தப் பிரச்சினையிலே எழுப்பியதைப் பற்றி ஒரு விளக்கத்தைப் பேரவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை. காலையில் இப்பிரச்சினையை பற்றி எழுப்ப வேண்டும் என்று என்னுடைய அறையிலே வந்து அவர்களுடைய அறிவிப்பைக் கொடுத்தார்கள். இன்றைய தினம் பேரவையின் நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின்மீது விவாதம் நடைபெற இருக்கிறது. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது அப்ரோப்பிரியேஷன் பில்— நடைபெறுகிற விவாதத்தில் எல்லாப் பிரச்சினைகளையும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, பொதுவாக இந்த அப்ரோப்பிரியேஷன் பில் எடுத்துக் கொள்கிற நாளில், இதுபோன்ற அலுவல்களை. பேரவையை ஒத்திவைக்க வேண்டும் என்று வரக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக் கொள்வது இல்லை. இதே பிரச்சினையை நீங்கள் இந்தப் பொது விவாதத்தில் பேசலாம் என்று சொல்லி இதுவரையிலேயும் மறுக்கப்பட்டுத்தான் வந்திருக்கிறது,

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப் பெறுதல்—தொடர்ச்சி

இருந்தாலும் எதிர்கட்சித் தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் அதை வற்புறுத்திக் கேட்டார்கள், என்பதற்காக நான் அந்தப் பிரச்சினையை எழுப்பவும் அனுமதித்தேன் பேச அனுமதித்தேன். எதிர்க்கட்சித் தலைவரை விரிவாகவும் பேச அனுமதித்தேன், அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல ஆரம்பித்த முதல் வாக்கியத்திலேயே குறுக்கீடு செய்ய ஆரம்பித்தார்கள், அதைத்தான் நீங்கள் கவனிக்க வேண்டும். அவர்கள் தெரிவித்ததே ஆந்திராவில் முதலமைச்சர் ராஜினாமா செய்த பிரச்சினையை இவர்களே வாதத்திலே கிளப்பிவிட்டு. அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல ஆரம்பித்தவுடன் குறுக்கிட்டார்கள். அப்படிக் குறுக்கிட்டதிலேயிருந்து. நான் அப்போதிருந்தே சொல்லிக்கொண்டே இருந்தேன், எப்படி நீங்கள் பேசுகின்றபோது மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அமைதியாக இருந்தார்களோ அதைப்போல அமைச்சர் பதில் சொல்லவும் நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னேன், காங்கிரஸ் உறுப்பினர்கள் எத்தனை பேர், முறைகேடாக விதி முறைகளுக்குப் புறம்பாக அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது எத்தனைமுறை எழுந்தார்கள் என்பதை அப்போதே குறிப்பிட்டுச் சொன்னேன். பிறகு ஒரு உறுப்பினர் அத்துமீறி சத்தமிட்டதையும் கூட வன்மையாகக் கண்டித்தேன். அதையெல்லாம் கூட எதிர்கட்சித் தலைவர் கண்டுகொள்ளவே இல்லை. சரி, தவறுதான், என்னுடைய உறுப்பினர்கள் இனி அப்படி நடக்கமாட்டார்கள் என்று சொல்லவில்லை. அதன்

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி.

பின்னர் ஒவ்வொரு முறையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கும், அமைச்சர் தெரிவித்த கருத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மறுப்புரைகள் தெரிவிக்க வேண்டும் என்று எழுந்தபோதெல்லாம் அவர் அனுமதிக்கப்பட்டு இடையிடையேயும் மறுப்புத் தெரிவித்தார். மறுப்புத் தெரிவித்ததற்குப் பிறகு அமைச்சர் தன்னுடைய விளக்கத்தை முடித்ததற்குப் பிறகு இது வரையிலேயும் பேரவையினுடைய வரலாற்றில் பேரவைத் தலைவர் 'இந்த விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை,' என்று முடிவு கூறியதாகத்தான் இருக்கிறது அல்லது வேறு இந்த விவாதத்திற்கு மேற்கொண்டு சில விவரங்களை எல்லாம் கேட்க வேண்டியிருக்கிறது. விவாதம் தேவைதான் என்று பேரவைத் தலைவர் முடிவு செய்தால் பேரவையை ஒத்திவைக்கின்ற தீர்மானத்தை முன்மொழியச் சொல்லலாம். அந்த வகையில் அமைச்சர் விளக்கத்திற்குப்பிறகும் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம் கேட்க வேண்டும் என்று இரண்டொரு விளக்கத்தைக் கேட்டார். அந்த 24-ம் பெரும்பான்மையினருக்கே கொடுக்கப்பட்டதா என்றும் அதையொட்டிய சில விளக்கங்களையும் கேட்டார், அப்போதே முடிந்துவிடுகிறது. இதை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இந்த 2, 3 விளக்கத்திலேதான் இருக்கிறது என்று அதையும் அவரே கேட்டு முடித்துவிட்டார் எனவே மேற்கொண்டு இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது, திரும்ப எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்..தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைககப் பெறுதல்—தொடர்ச்சி.

கொண்டு அவர் கேட்ட விளக்கத்திலேயிருந்து முடிந்தே விடுகிறது. அமைச்சர் சொன்ன விளக்கத்தினாலே மட்டும் கூட ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் முடிவு எடுக்க வேண்டிய அளவுக்கு நிலைமை இருந்தாலும்கூட, எதிர்கட்சித் தலைவர் திரும்பவும் வாய்ப்பை எடுத்துக் கொண்டு ஒத்திவைத்ததைப் போலக் கருதி, சில விளக்கங்களைக் கேட்டார். அதற்கும் பதில் சொல்லியாகிவிட்டது. அதன் பின்னர் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் முடிவு செய்ததற்குப் பிறகு, எப்படி நீங்கள் அந்த முடிவு எடுக்கலாம் என்று விவகாரத்தைக் கிளப்பினார்கள். அந்த எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டு விதிமுறைகளுக்குப் புறம்பாக நடந்தார்கள், அந்த நேரத்திலேகூட மற்ற எந்த உறுப்பினர்களும் அவர்களைப் போல எழுந்து முறைகேடாக நடந்து கொள்ளவில்லை.

எனவே, நாளைக்கு இந்தப் பிரச்சினை வெளியே போகின்றபோது திட்டமிட்டு இந்தப் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லாமல் எதிர்க் கட்சியினர் நடந்து கொண்டார்கள் என்கிற செய்தி, வெளியிலே தெரிவிக்க வேண்டிய அளவுக்கு நியாய உணர்வுள்ளசெய்தி நிறுவனங்களும்— தொலைக்காட்சி, வானொலி நிறுவனங்களுக்கும் அந்த நியாய உணர்வு இருக்குமேயானால் அவர்களும் இதை, இன்றைக்கு முறை

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி.

கேடாக எதிர்க்கட்சியினர் நடந்து கொண்டு வெளியேறினார்கள், பேரவைத் தலைவர் சொன்ன தீர்ப்பை மீறித் தாங்கள் பேச வேண்டும் என்று வற்புறுத்தி நின்று இங்கே விவகாரம் வளர்பதற்குரிய சூழ்நிலைகளை எல்லாம் உருவாக்கி அதன் பின்னர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல இன்றைக்கு அந்த பிரச்சினை அந்த அளவிலே முடிவுப் பெற்று, நான் அனுமதி மறுத்ததோடு நின்று இருக்குமானால் இன்றைக்கு என்ன செய்தி வெளியே போகும்? இந்த 175 கல்வி நிறுவனங்களுக்கு உயர்நீதி மன்றம் தடை செய்திருப்பதில் அரசாங்கம் எந்தத் தவறும் செய்யவில்லை; கோர்ட் உத்தரவின் பேரில்தான் இது வரையிலும் கொடுத்திருக்கிறார்கள் என்கிற செய்திதான் வெளியே போகும். அந்த செய்தி வெளியேபோகிற போது இங்கே பெரிய தவறு நடந்ததைப்போல இன்றைக்கு ஒரு மிகப் பெரிய மாயையைத் தவிடு பொடியாக்கி விட்டோமே என்று கருதி,, இன்றைக்கு இந்தச் செய்தி தலைப்பு செய்தியாகப் போவதற்குப் பதில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்கிற செய்தி தலைப்பில் சொல்ல வேண்டும் என்று அவர்கள் எடுத்த முடிவாகத்தான் இதனைக் கருதுகிறேன். ஆகவேதான் வரம்பை மீறி விதிமுறைகளை மீறி சட்ட விதிகளை மீறி இன்றைக்கு அவர்கள் நடந்து இருக்கிறார்கள் என்பது தெளிவாகயிருக்கிறது.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி

இதிலே பேரவை முன்னவர் அவர்கள் எனக்கு உதவ வேண்டும். எதிர்கட்சித் தலைவர் பொறுப்பானவர். இந்தக் கூட்டத் தொடரிலேயே மூன்றாவது முறையாக இவர் வெளியேற்றப்பட்டிருக்கிறார். நம்முடைய பேரவை விதி 120-ன்படி ஒரு உறுப்பினர் முறை கேடாக நடந்து கொண்டு அவர் பெயர் கூறி அழைக்கப்பட்டு இரண்டு முறை வெளியேற்றப்பட்டாலே பேரவையின் எஞ்சிய நாட்களுக்கு பேரவைக்கு அனுமதிக்கப்படாமல் தள்ளி வைக்கலாம் என்கிற விதி இருக்கிறது. இரண்டாவது முறை அவர்கள் செய்த நேரத்தில்கூட அதைச் செய்திருக்க வேண்டும். பெருந்தன்மை காரணமாக ஏற்கெனவே 2.3 உறுப்பினர்கள் விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு சில வேண்டுகோள்களை வைத்த காரணத்தால் அப்போதே அவர்களை அனுமதித்தோம், அதே பெருந்தன்மை தொடரட்டும் என்கிற வகையிலே அவர்கள் இரண்டாவது முறையும் அன்றைக்கு அந்த அளவுக்கு ரொம்ப முறைகேடாக வரம்பு மீறி நடந்து காவலர்களைத் தாக்கியதற்குப் பின்னாலும் கூட. அவர்கள் பேரவைக் கூட்டத்தில் எஞ்சிய நாட்களுக்கு வரக்கூடாது என்ற உத்தரவை அன்றைக்கே நாம் அவர்களுக்கு தெரிவிக்கவில்லை. தொடர்ந்து இப்படி நடக்கிற பெருந்தன்மையயே ஏதோ பலவீனம் என்பதைப் போல நினைத்துக் கொண்டு அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே. இது பற்றியும் பேரவை ஒரு முடிவு செய்வது நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

நீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்று தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி

..அவர்கள் காவலர்களால் வெளியேற்றப் பட்டபோது. அவர்கள் செய்த முழக்கங் கள் எல்லாம் எதுவும் அவைக் குறிப் பிலே இருக்காது. அவையெல்லாம் முறைகேடானவை, இயற்கையாகவே இருக்காது.

..பேரவை முன்னவர் அவர்களும், தலை மைக் கொறடா அவர்களும் தெரி வித்த கருத்துக்களைப்போல, காங் கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாகவே திட்ட மிட்டு பேரவையின் நடவடிக்கை களுக்கு குந்தகம் ஏற்படுத்த வேண் டும் என்கிற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த காரணத்தால் அவர்கள் கடுமையான நடவடிக்கைக்கு அந்தக் காலகட்டத்திலேயே ஆளாக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால். பெருந் தன்மை காரணமாக அத்தகைய கடுமை யான நடவடிக்கைகளை எடுக்காமல் அவர்களும் பேரவையிலேயிருந்து பேரவை நடவடிக்கைகளில் கலந்து கொண்டு தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுகிற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் பெருந்தன்மையாக இருந்து வந்ததை அவர்கள் ஏற்றுக்கொள்கிற பக்குவமின்றி தொடர்ந்து நடந்து கொண்ட காரணத்தாலேதான் இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒட்டுமொத்த மாக அனைவரையும் ஒன்றுக்கு மூன்று முறை காவலர்களைவைத்தேவெளியேற்ற வேண்டிய நிலைமைக்குப் பேரவையை ஒரு துர்பாக்கிய நிலைமைக்கு ஆளாக்கி னார்கள். மூன்று முறையும் காவலர் களை வைத்துத்தான் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள் — அவர்களாகவே வெளியேறினார்கள் என்கிற நிலைமை இல்லை.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவை பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி

நான் சொன்னதைப்போல பொறுப்புள்ள எதிர்க்கட்சிகளாக இருந்திருக்கிறவர்கள் பேரவைத் தலைவர் ''வெளியேற்றுகிறேன்'' என்று சொன்னதற்குப் பிறகு வெளியேறித்தான் இருக்கிறார்கள். திரு, செல்லபாண்டியன் அவர்கள் இந்தப் பேரவைத் தலைவராக இருந்த பொழுது, எந்த அளவிற்கு மாண்பைக் காப்பாற்றி வந்தார் என்பதை எல்லோரும் பெருமையாகச் சொல்லுவார்கள், அன்றைய செஞ்சிமலைத் தொகுதி உறுப்பினர் திரு.கே.ஆர். நல்லசிவம் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையைப் பேச எழுந்து, தொடர்ந்து இதைப் போன்று ஒரு ஒத்திவைப்புப் பிரச்சினையை அவர் கொடுத்து அனுமதி மறுத்து விட்டார். நான் இன்றைக்கு அவர்களைப் பேச அனுமதித்தேன். அவர் இந்தப் பிரச்சினையை எழுப்ப முடியாது என்றே அன்று அனுமதி மறுத்தார்—அனுமதி மறுத்த நேரத்தில் திரு.கே. ஆர். நல்லசிவம் அவர்கள்—1966-லே நடந்தது—திரும்பத் திரும்ப அந்தப் பிரச்சினையை வற்புறுத்தி நான் எழுப்ப வேண்டும் என்று சொன்னார். எழுப்ப வேண்டும் என்று அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்தியதற்குப் பிறகு, இவர் திரும்பத் திரும்பச் சொல்லி முடியாது, உட்காருங்கள் என்றார். அவர் நான் உட்கார முடியாது, இதில் அரசாங்கம் ஏதாவது பதில் சொன்னால்தான் உட்காருவேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். அதன் பின்னர் பேரவைத் தலைவர் அவரைச் சொன்னது, ஒன்று உட்காருங்கள், அல்லது

வெளியே போங்கள் என்றார். அதற்கு திரு.கே.ஆர். நல்லசிவம் நான் எந்த உறுதி மொழியையும் அரசாங்கத்திட மிருந்து வாங்காமல், இதைப் பேசாமல் நான் உட்காருவதை விட வெளியே போகிறேன் என்று சொல்லி விட்டு, வெளியே போய்விட்டார். பேரவைத் தலைவர், உட்காருங்கள் அல்லது வெளியே போங்கள் என்ற 'ஆப்ஷனை அவருக்குக் கொடுத்தார். இரண்டு 'ஆப்ஷன் கொடுத்தார். பேரவைத் தலைவர் கொடுத்த அந்த முதல் ஆப்ஷனை அவர் கேட்காமல், இரண்டாவது ஆப்ஷனை எடுத்துக் கொண்டு நான் வெளியே போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனது பேர வைத்தலைவரை அவமதித்ததாக ஆகும் என்று அவர் முடிவு செய்து அதன் பின்னர் மறுநாளும் இந்தப் பிரச்சினையை அவர் எழுப்பி திரு.கே.ஆர். நல்லசிவம் அவர்கள் தான் நடந்து கொண்ட விதத்திற்காக பேரவைத் தலைவரிடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்று சொல்கிறார். என்னைப் பொறுத்து பிரச்சினை இல்லை. இந்த அவையிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொல்லி அவர் மன் னிப்புக் கேட்டிருக்கிறார் என்கிற சம் பவம் எல்லாம் இந்தப் பேரவையிலே நடந்திருக்கிறது. இவர்களைப்போல இவ்வளவு முறை— வெளியேறுங்கள் என்று சொன்னதற்குப் பிறகும் வெளி யேற மாட்டோம் என்று பிடிவாதம் செய்யவில்லை திரு.கே.ஆர். நல்ல சிவம், உட்காருங்கள் அல்லது வெளி யேறுங்கள் என்று சொன்னதற்கு, வெளியேறினார். நான் சொன்ன முதல் ஆணையை நிறைவேற்றாமல் இரண் டாவது ஆணைக்குத் தான் கட்டுப்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும் — தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி.

பட்ட காரணத்தாலே அது கண்டனத்திற்குரியது என்று அவரை மன்னிப்புக் கேட்கச் செய்த பேரவை இந்தப் பேரவை. அன்றைக்கிருந்த அந்தப் பேரவைத் தலைவர் செல்லபாண்டியன் அவர்கள் இருந்த நேரத்தில் காங்கிரஸ் ஆட்சி; காங்கிரஸ் ஆட்சி நடந்த நேரத்தில் வெளியேறச் சொல்கிறீர்களானால் வெளியேறிக் கொள்கிறேன் என்று வெளியேறியதே குற்றம் என்று சொல்லி அவரை மன்னிப்புக் கேட்கச் செய்தார்கள்.

ஆனால், இன்றைக்கு வெளியேறுங்கள் என்று நான் ஒன்றுக்கு மூன்று முறை கட்டளையிட்டும்கூட, வெளியேறாமல் எதிர்க்கட்சித் தலைவர் பிடிவாதம் பிடித்து பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற முயற்சியிலே ஈடுபட்டது மிகவும் கண்டனத்திற்குரியது. அப்படிக் கண்டனத்திற்குரிய காரியத்தை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், ஒன்றுக்கு மூன்று முறை செய்திருக்கிறகாரணத்தால் பேரவை விதி 120 'The Speaker may direct any Member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House and any Member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the day's meeting'. என்று இருக்கிறது.

'If any Member is ordered to withdraw a second time in the same session, the Speaker may direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session' என்றும் இருக்கிறது,

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் திற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி.

எனவே, அந்தப் பேரவை விதி 120-ன் கீழ் எதிர்க்கட்சித் தலைவரையும் இன்று அவையிலே இருந்த காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரையும் பேரவையின் இந்தக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்குப் பேரவையில் கலந்துக் கொள்ளக் கூடாது; பேரவையிலேயிருந்து தள்ளி வைக்கப்படுகிறார்கள் என்கிற அறிவிப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்,'' .. 271—273 275. 278—280

29—4—1993 ஆம் நாளன்று ஒரு அமைச்சர் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென அனுமதியின்றி ஓர் உறுப்பினர் அடிக்கடி எழுந்து பேசியதையொட்டி தலைவர் அளித்த தீர்ப்புரைகள் வருமாறு :

''..அமைச்சர் பேசட்டும், அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார், பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்,

..இங்கே நடந்தது ரிக்கார்ட் ஆகியிருக்கிறது, அதை அமைச்சர் சொல்கிறார்,

..அவர் சொல்லட்டும், அவர் இங்கே நடந்த அவைக் குறிப்பிலே இருக்கிற பிரச்சினையைச் சொல்லி இருக்கிறார். நீங்கள் உட்காருகிறீர்களா இல்லையா? முறை தவறி நடப்பது என்பது இது நான்காவது முறை. இந்த மாதிரி மிரட்டுகிற வேலையெல்லாம் இங்கே செல்லாது. உட்கார வேண்டும், இல்லையென்றால் வெளியேற வேண்டும்.

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் பேரவைப் பணியினின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுதல்—தொடர்ச்சி.

..வெளியேற வேண்டும், காவலர்கள் அவரை அப்புறப்படுத்தவும், மரியாதை இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார், அவர் சொல்லிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது,

(உறுப்பினர் பேரவைக் காவலர்களால் பேரவையிலிருந்து வெளியேற்றப் பட்டார்.)

..மரியாதை தெரியாத மனிதனாக இருக்கிறவரைக்கும் இந்த அவையிலே இருப்பதற்கு அருகதையே கிடையாது, எப்படியெல்லாம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் நடந்து கொள்கிறார் என்பதைப் பாருங்கள், எவ்வளவு மரியாதையாக, ஒரு மரியாதை உள்ள மனிதனாக நடந்து கொள்கிறார் என்பதைப் பாருங்கள், நான்காவது முறையாக உறுப்பினர் வெளியேற்றப் பட்டிருக்கிற காரணத்தால் அவையின் எஞ்சிய நாட்கள் அவைக்கு வரக் கூடாது என்று தள்ளி வைக்கிறேன், எவ்வளவு மரியாதையாக ஒரு சாதாரண மனிதன் நடந்து கொள்கிற முறைகூட தெரியாமல் காவலர்களிடத்திலே முறை தவறி நடந்ததைப் பத்திரிகையாளர்கள் பார்த்திருக்கிறீர்கள், .. 391—394

ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—

உரையாற்றும் முறை—

ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றின் மீது பேச அனுமதிக்கப்பட்ட உறுப்பினர் அதற்கு தொடர்பு இன்றிப் பேசியபோது தலைவர் அளித்த தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு :

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்பு தீர்மானம்—நடைமுறைகள்—தொடர்ச்சி
உரையாற்றும்முறை—தொடர்ச்சி.

"இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அவசியம் பற்றி நான் விளக்குகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆளுநரை இழுக்கக் கூடாது. ஆளுநரின் நடவடிக்கைகளை இந்தப் பேரவையில் எந்த வகையிலேயும் இழுக்கக் கூடாது.

..நீங்கள் கொடுத்த அறிவிப்பு இந்த 175 பள்ளிகளைப் பற்றியதுதான், எனவே அதை மீறி நீங்கள் பேசுவது என்பது இந்த நேரத்தில் முடியாது, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினையை மீறிப் பேசினால் தங்களுக்கு அனுமதி மறுக்க வேண்டிவரும்.

..நீங்கள் கேட்ட கோரிக்கையோடு இருக்கலாம். மற்றவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் அவையின் நேரத்தை வீணடிக்கிற முயற்சியில் ஈடுபடக் கூடாது. நான் ஏற்கெனவே உங்களுக்கு தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பிரச்சினையை மீறிப் பேசினால் நான் அதற்கு மேல் உங்களைப் பேச அனுமதிக்க மாட்டேன்." 241—243

பதிலுரைக்குபின் விளக்கம் கோருதல்—

அமைச்சருடைய விளக்கத்திற்குப் பின் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது என்று தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம் கோர முயன்றபோது அளிக்கப்பட்ட தீர்ப்புரைகளின் தொகுப்பு வருமாறு:

"... நான் இசைவு மறுத்திருக்கிறேன், நீங்கள் பேச முடியாது,

த—தொடர்ச்சி

தலைவர்— தொடர்ச்சி,

பக்கங்கள்

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

ஒத்திவைப்புத் தீர்மானம்— நடைமுறைகள்— தொடர்ச்சி

பதிலுரைக்குப்பின் விளக்கம் கோருதல்— தொடர்ச்சி

..நீங்கள் 2, 3, முறை குறுக்கிட்டு விளக்கம் கேட்டீர்கள், விளக்கம் கொடுத்ததற்குப் பிறகு. அது குறித்து நான் முடிவு செய்ததற்கு பிறகு இதிலே வேறு எதையும் அனுமதிக்க முடியாது. இது முறையல்ல, நான் இசைவு மறுத்ததற்கு பிறகு எதிர்க் கட்சித் தலைவர் இப்படி பிடிவாதம் செய்வது சரியல்ல.

..நான் செய்வது சரியல்ல என்றே திரும்ப திரும்ப பேரவைத் தலைவர் மீதே குற்றம் சுமத்திக்கொண்டு இருக்கக் கூடாது தயவு செய்து உட்காருங்கள். பேரவைத் தலைவர் மீது"Member should not cast aspirationsi" என்று இருக்கிறது, அதற்குப் பிறகும் நீங்கள் திரும்பத் திரும்ப இங்கேபேரவைத் தலைவருக்கு எதிராக முறைகேடாக இந்த மாதிரிப் பேசி விட்டு பிறர் பேசுகிறார்கள் என்று வெளியிலே போய் சொல்வது நல்லதல்ல. பேரவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு செய்ததற்குப் பிறகு. அது அவசியம் என்று நீங்கள் கருதலாம்.

அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறேன், என்னுடைய தீர்ப்புக்கு மீறி நீங்கள் அது அவசியம்தான் என்று சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல.

..உட்காருங்கள். எதிர்க்கட்சியினர் இப்படி பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்குப் பின்னரும் இதை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை

என்று அந்தப் பிரச்சினைக்கு முடிவு சொன்ன பிறகும். எதிர்க்கட்சித் தலைவர் தானும் எழுந்து நின்று தன்னுடைய கட்சியினரையும் இவ்வாறு எழுந்து நிற்கச் செய்து கொண்டிருப்பது முறையல்ல, தயவுசெய்து உட்காருங்கள். இது முறையல்ல எந்த விதியின் கீழ் இப்படி இத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள்? நான் அதை எடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னதற்குப் பிறகு அதிலே பேசுவதற்கு எங்கே இடம் இருக்கிறது? உங்களுக்கு வாய்ப்பு அளிக்காமல் இல்லை. அமைச்சர் விளக்கம் சொன்னதற்குப் பிறகும்கூட நான் அப்போதே தீர்ப்பு வழங்கியிருக்கலாம், அதற்குப் பின்னரும் நீங்கள் விளக்கம் கேட்க அனுமதித்து, அதற்கு பதிலையும் அமைச்சர் சொன்னதற்குப் பிறகும், இன்னும் திரும்ப திரும்ப விளக்கம் கேட்டுக் கொண்டிருப்பதென்றால் நான் எப்படி அனுமதி அளிக்க முடியும்? இதற்கு நான் ஒத்திவைத்தே இருக்கலாம், ஒத்திவைப்பதற்கு மறுத்ததற்குப் பிறகு. இந்த அவையில் விவாதிக்க முடியாது என்று சொன்னதற்குப் பிறகு. வேண்டுமென்றே இதர அலுவல்களைக் குந்தகப்படுத்த வேண்டும் என்ற ஒரே முடிவிலேதான் நீங்கள் செயல்படுவதாக இது அமைகிறது. இது முறையல்ல. பேரவையின் முன்னவர் அவர்கள் தான் கருத்துச் சொல்ல வேண்டும், நான் தீர்ப்பை வழங்கியதற்குப் பின்னரும் இவ்வாறு முரண்பாடாக நடந்து கொண்டிருப்பது சரியல்ல. பாராளுமன்ற மரபுகளுக்கு முற்றிலும் முரணானது.

. . ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தமாக வேண்டாம். வேறு எந்தப் பிரச்சினையில் வேண்டுமானாலும் சொல்லலாம். இந்தப் பிரச்சினையில் வேண்டாம். நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்ததற்குப் பிறகு அந்தப் பிரச்சினை மீது அவர்களுக்கு எந்த கருத்தும் சொல்ல எந்த அளவுக்கு அனுமதி இல்லையோ அதே போல அமைச்சர்களுக்கும் அதிலே கருத்து சொல்ல வாய்ப்பு இல்லை. நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவை மறுத்ததற்குப் பிறகு மற்ற உறுப்பினர்களுக்கு அனுமதி இல்லாதபோது அமைச்சர்களுக்கும் கூட அந்தப் பிரச்சினையில் கருத்துக்கள் சொல்ல அனுமதியில்லை. தயவு செய்து அனைவரும் உட்கார வேண்டும்.

. . எதிர்க்கட்சித் தலைவரும் அவரைச் சார்ந்த உறுப்பினர்களும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். இது முறையல்ல. இந்த அளவுக்கு எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல. உறுப்பினர் கோஷம் எழுப்புவது முறையல்ல. தயவுசெய்து உட்கார வேண்டும் அல்லது அவையை விட்டு வெளியேற வேண்டும். அவையை விட்டு வெளியேற வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு இந்தியப் பாராளுமன்ற சரித்திரத்தில் எதிர்க்கட்சித் தலைவரை வெளியேறுமாறு சொன்னபோது, வெளியேற மறுத்தது எந்தச் சட்டமன்றத்திலும் இல்லை. எந்தச் சட்டமன்றத்திலும் இப்படி இல்லை. அண்மையில் கூட ஆந்திரா சட்டமன்றத்தில் உறுப்பினர்களை வெளியேற்றியபோது, மற்ற உறுப்பினர்களை எல்லாம் அவைக் காவலர்களை வைத்து வெளியேற்றி

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி பக்கங்கள்

ஒத்திவைப்புத் தீர்மானம்—நடைமுறைகள்—தொடர்ச்சி

பதிலுரைக்குப்பின் விளக்கம் கோருதல்—தொடர்ச்சி

னார்கள். எதிர்க்கட்சித் தலைவரான என்.டி. ராமாராவ் மட்டும் தானே வெளியேறினார். இங்கு எதிர்க்கட்சித் தலைவரான எஸ்.ஆர். பாலசுப்ர மணியன் அவையை விட்டு வெளியேற வேண்டும். திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களையும் தற்போது அவையில் முறை தவறி நின்றுகொண்டு பேர வையின் அலுவல்களை தடுத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் அவைக் காவலர்கள் வெளியேற்றக் கேட்டுக் கொள்கிறேன்.

(எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் அவைக் காவலர்களால் வெளி யேற்றப்பட்டனர்.)

. . சில உறுப்பினர்கள் கோஷம் எழுப்பி யது முழுக்க முழுக்க விதிமுறைகளுக்கு மாறான செயல். கண்டனத்திற்கு உரியது. அவையின் விதிகளின்படி இல்லா மல் அனைத்து முறையிலும் கண்டனத் திற்குரிய வகையில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் நடந்து கொண்டிருக் கிறார்கள். இது முழுக்க முழுக்க கண்டனத்திற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' 261—265

ஒழுங்கு முறை—

அனுமதி பெற்றுப் பேசுதல்—

உட்கார்ந்து கொண்டே யாரும் பேசக் கூடாது என்று குறிப்புரைக்கப் பெற்றது. 395

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

ஒழுங்குமுறை—தொடர்ச்சி

உறுப்பினர்கள் அவையில் நடந்து கொள்ளும் முறை—

வினா-விடை நேரத்தின்போது ஓர் உறுப்பினர் அடிக்கடி எழுந்து நின்றதையொட்டி அவ்வாறு எழுந்து நிற்கக் கூடாது என்று குறிப்புரைக்கப் பட்டது. 339

கவன ஈர்ப்பு—நடைமுறைகள்—

விளக்கம் கோருதல்—

கவன ஈர்ப்புக்கு அமைச்சர் அளித்த அறிக்கையின் மீது விளக்கம் கோரும் உறுப்பினர் சுருக்கமாகக் கேட்க வேண்டும். 407

குறுக்கீடுகள்—

உறுப்பினர் உரையில் விளக்கம்—

ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும் என்று ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருந்த போது, இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டதையொட்டித் தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

''நீங்கள் உட்காருங்கள், அதை அந்த உறுப்பினரே சொல்லட்டும்.'' 241, 242

குற்றச்சாட்டு—நடைமுறைகள்—

ஓர் உறுப்பினர் தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டிப் பேசியபோது தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டக் கூடாது என்று குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு சொன்ன பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. 401

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி

சட்டமுன்வடிவு—நடைமுறைகள்—தொடர்ச்சி

உரையாற்றும் முறை—

சட்டமுன்வடிவின் மீது பேசிய சில உறுப்பினர்கள் அவைமுன் ஆய்வில் உள்ள சட்டமுன்வடிவிற்கு தொடர்பு இல்லாத ஒரு பிரச்சினையை பேசிய போது தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்:

"நீங்கள் இதிலே சம்பந்தம் இல்லாத ஒரு பிரச்சினையைப் பேசுகிறீர்கள்.

..எம். ஜி. ஆர். பல்கலைக் கழகம் பற்றி இதிலே பேச வேண்டாம்". 739

உறுப்பினர் உரையில் விளக்கம்—

ஒரு சட்டமுன் வடிவின் மீது ஓர் உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருந்த போது தெரிவித்த கருத்து குறித்து ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் இன்னொரு உறுப்பினர் பேச முயன்றதைப் பற்றிப் பின்வருமாறு குறிப்புரைக்கப்பெற்றது :

"இதிலே அவருடைய கருத்து அது. உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லுகிறீர்கள். இரண்டும் போய்க் கொண்டிருக்கலாம்." 717

த— தொடர்ச்சி

பக்கங்கள்

தலைவர்— தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி

சட்டமுன்வடிவு— நடைமுறைகள்— தொடர்ச்சி

திருத்தம்—

சட்டமுன்வடிவின் மீது உரையாற்றிய உறுப்பினர் பழைய உட்பிரிவு ஒன்று விடுபட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

" இப்போது அதை சர்குலேட் செய்திருக்கிறார்கள். அந்த திருத்தத்தை இப்போது அமைச்சரே கொடுக்கிறார். அதைப் பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது முன்மொழிவார். அந்தத் திருத்தத்தையும் சேர்த்து உறுப்பினர் பேசலாம். " 442

வாக்கெடுப்பு—

ஒருசட்டமுன் வடிவின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அவையில் நிலவிய நிலை குறித்து கீழ்க்கண்டவாறு தலைவர் தீர்ப்பு அளித்தார் :

" சட்டமுன்வடிவுகளின் மீது வாக்கெடுப்பு நடைபெறுகின்ற நேரத்தில் உறுப்பினர்கள் அங்கும் இங்கும் நடந்து கொண்டோ, அடுத்தவர் இருக்கையில் சென்று அமர்ந்துகொண்டோ இருக்கக் கூடாது. வாக்கெடுப்பு நேரத்தில் அந்தந்த உறுப்பினர்களின் இருக்கையில் தான் இருக்க வேண்டும். உறுப்பினர் இருக்கைக்குப் போக வேண்டும். உறுப்பினர்கள் அப்படியே எழுந்து போய்க் கொண்டிருப்பது கூடாது. அது போல வெளியேயிருந்து வருகிற உறுப்பினர்களும் வாக்கெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் வெளியேதான் நிற்கவேண்டும். " 733

தலைவர்—தொடர்ச்சி | பக்கங்கள்

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி

சிறப்பு கவனஈர்ப்பு—நடைமுறைகள்—

சிறப்பு கவனஈர்ப்பு—நடைமுறைகள்—

சில கைதிகள் சென்னை சிறையிலிருந்து பட்டுக்கோட்டை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது மாமண்டூரில் தப்பிச் சென்றது குறித்து—

முதலமைச்சர் பதிலுரை அளித்தார்கள் 668—672

மதம் மாறிய தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய சலுகைகளை வழங்க வேண்டிய அவசியம் குறித்து—

முதலமைச்சர் பதில் அளித்தார். 403—404

அனுமதி—

66. கோபால், டாக்டர் க.	நன்னிலம் (செ.வ.)
67. கோவிந்தராசு, திரு. மா.	ரிஷிவந்தியம்
68. சக்குபாய், திருமதி ரா.	கும்மிடிபூண்டி
69. சக்குபாய் தேவராஜ், திருமதி டி.	திருவள்ளூர்
70. சஞ்சய் ராமசாமி, திரு.	விருதுநகர்
71. சண்முகநாதன், திரு. எஸ்.	ஆலங்குடி
72. சண்முகம், திரு. எஸ். வி.	மதுரை மேற்கு
73. சத்தியமூர்த்தி, திரு. வ.	கடலாடி
74. சந்திரசேகர், திரு. வி. பி.	பொள்ளாச்சி
75. சம்பத், திரு. எ.	வாணியம்பாடி
76. சரஸ்வதி, திருமதி அ. தி.	சத்தியமங்கலம்
77. சரஸ்வதி, திருமதி ப.	கபிலர்மலை
78 சரோஜா, டாக்டர் வெ.	சங்கரி (செ.வ.)
79. சாத்தையா, திரு. தி.	இராஜபாளையம் (செ.வ.)
80. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர்.	முகையூர்
81. சிங்காரம், திரு. ஆர்.	பேராவூரணி
82. சிங்காரம், திரு. கே.	மொரப்பூர்
3. சிங்கை கோவிந்தராசு, திரு.	சிங்காநல்லூர்
4. சியாமளா, திருமதி ரெ.	கோவில்பட்டி

85. சிவசுப்பிரமணியன், திரு. கு.	குறிஞ்சிப்பாடி
86. சிவபதி, திரு. என். ஆர்.	தொட்டியம்
87. சின்னசாமி, திரு. கா.	சேந்தமங்கலம் (ம.ப.)
88. சின்னசாமி, திரு. ம.	கரூர்
89. சின்னசாமி, திரு. வி. கே.	பவானிசாகர்
90. சின்னப்பன், திரு. கே. கே.	ஜெயங்கொண்டம்
91. சீனியம்மாள், டாக்டர் மு.	அவினாசி (செ.வ.)
92. சீனிவாசன், திரு. ஆ. கு.	பெரணமல்லூர்
93. சீனிவாசன், திரு. கு.	மன்னார்குடி
94. சுதர்சனம், திரு. டி.	பூந்தமல்லி
95. சுந்தரசாமி, திரு. எம்.	கலசப்பாக்கம்
96. சுந்தரதாஸ், திரு. மா.	விளவன்கோடு
97. சுந்தரம், திரு. எம். கே.	தண்டராம்பட்டு
98. சுந்தரராஜ் டாக்டர் எஸ்.	பரமக்குடி (செ.வ.)
99. சுந்தரவேல், திரு. ஏ.கே.சி.	திருப்பத்தூர்
100. சுந்தராம்பாள், திருமதி செ.	மேட்டூர்
101. சுப்பிரமணியம், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
102. சுப்பிரமணியன், திரு. வி. என்.	பெருந்துறை
103. சுப்பிரமணியன், திரு. வீ.	கண்டமங்கலம் (செ.வ.)
104. சுப்புரத்தினம், திரு. ஆ.	பழனி (செ.வ.)
105. சுலோசனா, செல்வி எல்.	மேட்டுப்பாளையம்
106. சுவாமிநாதன், திரு. சி.	புதுக்கோட்டை
107. செங்கோட்டையன், திரு. கே.ஏ.	கோபிசெட்டிபாளையம்

108. செல்லக்குமார், டாக்டர் அ.	அண்ணா நகர்
109. செல்லசாமி, திரு. ஏ. டி.	ஒட்டன்சத்திரம்
110. செல்லதுரை, திரு. ஆ.	திருச்செந்தூர்
111. செல்வகணபதி, திரு. டி. எம்.	திருச்செங்கோடு
112. செல்வராசன், திரு. அ.	துறைமுகம்
113. செல்வராஜ், திரு. கே.	கோயம்புத்தூர் மேற்கு
114. செழியன், திரு. தா.	பெரம்பலூர் (செ.வ.)
115. சேகர், டாக்டர் எம். பி.	பெரம்பூர் (செ.வ.)
116. சேகர், திரு. எம். ஜி.	பாலக்கோடு
117. சொக்கலிங்கம், திரு. பி.	மதுராந்தகம்
118. சோமசுந்தரம், திரு. எஸ். டி.	தஞ்சாவூர்
119. ஞானசேகரன், திரு. சி.	வேலூர்
120. டேனியல்ராஜ், திரு. எஸ்.	ஸ்ரீவைகுண்டம்
121. தங்கமுத்து, திரு. கு.	திருவோணம்
122. தங்கராஜ், திரு. ஆர்.	ஆண்டிமடம்
123. தங்கவேல், திரு. எம்.	முசிறி
124. தண்டாயுதபாணி, திரு. வி.	குடியாத்தம்
125. தமிழரசன், திரு. செ. கு.	வந்தவாசி (செ.வ.)
126. தமிழரசு, திரு. வெ.	ஆத்தூர்
127. தம்புசாமி, திரு. வே.	திருவாரூர் (செ.வ.)
128. தருமலிங்கம், திரு. கி.	அணைக்கட்டு
129. தர்மலிங்கம், திரு. பே.	பாளையங்கோட்டை
130. தவசி, திரு. கே.	ஆண்டிப்பட்டி

131.	தனபால், திரு. ம. ..	திருப்போரூர் (செ.வ.)
132.	தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்
133.	தாமோதரன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்
134.	திருநாவுக்கரசு. திரு. எஸ். ..	அறந்தாங்கி
135.	துரை, திரு. எஸ். எம். ..	ஆத்தூர்
136.	துரை முருகன், திரு. கே. எஸ்...	பல்லடம்
137.	துரை ராமசாமி, திரு. ..	வெள்ளக்கோவில்
138.	தெய்வநாயகம், திரு. எ. ..	மதுரை மத்தி
139.	தென்னவன், திரு. மு. ..	இராமநாதபுரம்
140.	தேவராஜ், திரு. அ. ..	செய்யாறு
141.	தேனி பன்னீர்செல்வம், திரு. ..	போடிநாயக்கனூர்
142.	நடேசன், திரு. மு. ..	சேலம்-2
143.	நடேசன். பால்ராஜ், திரு. வெ...	நாங்குநேரி
144.	நாகூர் மீரான், திரு. எஸ். ..	கடையநல்லூர்
145.	நிர்மலா, திருமதி பி. ..	திண்டுக்கல்
146.	நெடுஞ்செழியன், டாக்டர் இரா...	தேனி
147.	பஞ்சவர்ணம், திருமதி கே. ..	வலங்கைமான் (செ.வ.)
148.	பட்டாபிராமன், திரு. கா. ப...	காஞ்சிபுரம்
149.	பரந்தாமன். டாக்டர் ஜெ. ..	பேரணாம்பட்டு (செ. வ.)
150.	பரமசிவம், திரு.ஆர். பி. ..	சின்னசேலம்
151.	பரமசிவன், திரு. ஏ. எம். ..	சோழவந்தான்
152.	பலராமன், திரு. உ. ..	பூங்கா நகர்

153.	பழனிசாமி, திரு. இரா.	..	தாரமங்கலம்
154.	பழனிசாமி, திரு. க.	..	எடப்பாடி
155.	பழனிசாமி, திரு. நா. சா.	..	கிணத்துக்கடவு
156.	பழனிசாமி, திரு. வெ.	..	திருப்பூர்
157.	பழனிசாமி, திரு. ஜி.	..	திருத்துறைப்பூண்டி (செ. வ.)
158.	பழனியம்மாள், திருமதி க.	..	ராசிபுரம்
159.	பன்னீர்செல்வம், திரு. என்.	..	திருவிடைமருதூர்
160.	பன்னீர்செல்வம், திரு. சா.	..	திண்டிவனம்
161.	பன்னீர்செல்வம், திரு. ஜெ.	..	திருநாவலூர்
162.	பாண்டியம்மாள், திருமதி. இரா.	..	உசிலம்பட்டி
163.	பாப்பா சுந்தரம், திரு. அ.	..	குளித்தலை
164.	பாலகங்காதரன், திரு. ஜெ.	..	சிவகாசி
165.	பாலகிருஷ்ணன், திரு. சோ.	..	முதுகுளத்தூர்
166.	பாலசுப்பிரமணியன், திரு. கி.	..	பட்டுக்கோட்டை
167	பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர்.	..	பொங்கலூர்
168.	பாலன், திரு. எம். கே.	..	சைதாப்பேட்டை
169.	பாலையா, திரு. ஆ.	..	குளச்சல்
170.	பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ்.	..	தென்காசி
171.	புதுநயினார் ஆதித்தன், திரு. இரா.	..	சேரன்மகாதேவி
172.	புரட்சிமணி, திரு. ச.	..	மங்களூர் (செ.வ.)
173.	புருஷோத்தமன், டாக்டர் வெ.	..	பெண்ணாகரம்
174.	பூராசாமி. திரு. எம்.	..	பூம்புகார்
175.	பெரியசாமி, திரு. வே.	..	அந்தியூர் (செ.வ.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

176. பெரியவீரன், திரு. எம். .. பெரியகுளம்

177. பெருமாள், திரு. செ. .. ரங்காடு (ம.ப.)

178. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். நிலக்கோட்டை (செ. வ.)

179. பொன்னுசாமி, பேராசிரியர், கு. மருங்காபுரி

180. பொன்னுசாமி, திரு. பெ. .. தருமபுரி

181. பொன்னுவேலு, திரு. ஏ. தா. வரகூர் (செ.வ.)

182. போளூர் வரதன், திரு. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

183. மணிமேகலை, டாக்டர் சு. .. அரியலூர்

184. மணிமேகலை, திருமதி வி. ஜி. அருப்புக்கோட்டை

185. மணிவாசகம், திரு. கே. பி. .. உடுமலைப்பேட்டை

186. மதுசூதனன், திரு. இ. .. டாக்டர் இராதா-கிருஷ்ணன் நகர்

187. மரியம் உல் ஆசியா, திருமதி கே. அரவக்குறிச்சி

188. மல்லிகா, செல்வி கோ, .. புவனகிரி

189. மனோகரன், திரு. கே. ஏ. .. ஓசூர்

190. மாணிக்கம், திரு. சி. .. ஈரோடு

191. மாலா, டாக்டர் ஜி. ஆர். .. திருச்சிராப்பள்ளி-2

192. முத்துசாமி, திரு. சு. .. பவானி

193. முத்தையா, திரு. இரா. .. சேடப்பட்டி

194. முருகானந்தன், திரு. கே. ஆர். சிவகங்கை

195. முருகையா பாண்டியன், திரு. ஆர் அம்பாசமுத்திரம்

196. முனிரத்தினம், திரு. ஏ. எம். .. சோளிங்கர்

197. முனிவெங்கடப்பன், திரு. கே. .. கிருஷ்ணகிரி

198. முனுசாமி, திரு. கா. பூ. .. காவேரிப்பட்டினம்

199. முஹம்மது ஆசிப், திரு. .. திருவல்லிக்கேணி

200. மூர்த்தி, திரு. து. .. சீர்காழி (செ.வ.)

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

202. ரகுபதி, திரு. சே. .. திருமயம்

203. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

204. ரங்கராஜன், திரு. டி. எம். .. மயிலாப்பூர்

205. ரத்தினவேல், திரு. த. .. திருவெறும்பூர்

206. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்

207. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. தூத்துக்குடி

208. ரவிக்குமார், திரு. ஏ. .. பொன்னேரி (செ.வ.)

209. ரவிச்சந்திரன், திரு. வி. .. உப்பிலியாபுரம்

210. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. ஆலங்குளம்

211. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்

212. ராஜு, திரு. கே. ஆர். .. கூடலூர்

213. ராஜு, திரு. கே. பி. .. பேரூர்

214. ராஜேந்திரன், திரு. என். ஆர். .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

215. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

216. லாரன்ஸ், திரு. கு. .. பத்மநாபபுரம்

217. லோகாம்பாள், திருமதி ஜெ. லால்குடி

218. வரதராஜன், திரு. செ. து. .. செங்கல்பட்டு

219. விசுவநாதன், திரு. ஜி. .. ஆற்காடு

220. வீரபாண்டியன், டாக்டர் பெ. .. செங்கம் (செ.வ.)

221. வெங்கட்ராம ரெட்டி, திரு. மு. தளி

222.	வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ்.		கடலூர்
223.	வேடியப்பன், திரு. தா.	..	போளூர்
224.	வேலையா, திரு. டி.	..	திருநெல்வேலி
225.	ஜனார்தனன், திரு. தே.	..	விழுப்புரம்
226.	ஜானகிராமன், திரு. கோ.	..	மேல்மலையனூர்
227.	ஜீனத் சர்புதீன், திருமதி	..	சேப்பாக்கம்
228.	ஜெயக்குமார், திரு. எஸ்.	..	தியாகராய நகர்
229.	ஜெயகுமார், திரு. டி.	..	ராயபுரம்
230.	ஜெயராமன், திரு. எஸ். ஆர்.	..	சேலம்-1
231.	ஜெயலலிதா, டாக்டர் ஜெ.	..	பர்கூர்
232.	ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்	..	ஆரணி
233.	ஸ்ரீதரன், டாக்டர் அ.	..	வால்பாறை (செ.வ.)
234.	(வெற்றிடம்)	..	ராணிப்பேட்டை
235.	பிட்ரிக்ஸ் டி'சோசா, டாக்டர்		நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

சுப்பிரமணியன், திரு. கே.	..	தலைமை வழக்கறிஞர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 15, ஸ்ரீமுக — திருவள்ளுவர் ஆண்டு 2024.

1993, ஏப்ரல் 28, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''

ஒரு செயலை செய்து முடிக்க விரும்புவோர் வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம் மேற்கொண்ட வினை உரிய இடம் ஆகிய ஐந்தினையும் குற்றமற எண்ணிச் செய்யவேண்டும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் அவர்கள் 22–4–1993 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. இயற்கை எய்திய இப்பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் பொருட்டு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 501, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

501—

ப்ளஸ்-2 கேள்வித் தாள்கள்.

*20375—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ப்ளஸ்-2 கேள்வித் தாள்கள் தேர்வு நடப்பதற்கு முன்பே வெளியானது பற்றி அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நடந்து முடிந்த மேல் நிலைத் தேர்வுகளைப்பொறுத்த மட்டில் வினாத்தாட்கள் வெளியான சம்பவம் பற்றிய தகவல் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற ப்ளஸ்—2 தேர்வு நடப்பதற்கு முன்னதாகவே கேள்வித் தாள்கள் வெளிவந்து விட்டன. வெளி வந்த கேள்வித்தாள்கள் ஜெராக்ஸ் எடுத்து சாதாரணமாக 100 ரூபாய் என்ற அளவில் விற்கப்பட்டுள்ளன. வெளியான கேள்வித் தாள்களை எடுத்துக் கொண்டு மாணவர்கள் வீடுகளுக்கே சென்று விற்பனை செய்துள்ளார்கள். இதன் காரணமாக நல்ல முறையில் படிக்கின்ற மாணவர்கள் குறைந்த மார்க்குகளையும் படிக்காத மாணவர்கள் அதிக மார்க்குகளையும் பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டு விட்டன. மருத்துவக் கல்லூரி என்ஜினியரிங் கல்லூரிகளில் கெட்டிக்காரத்தனமாகப் படிக்கின்ற மாணவர்கள் சேர்வதற்கான வாய்ப்பு இதனால் குறைந்துள்ளது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, வினாத்தாள் வெளியாகிவிட்டது என்ற ஒரு புகார் வருகின்றபோது பரிட்சை நடக்கும். பரிட்சை

நடந்த நேரத்தில், நாம் தருகின்ற வினாத்தாளும், அதுவும் ஒன்றாக இருக்குமேயானால் உடனடியாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றவர்கள் எல்லாம் புகார் செய்வார்கள். அந்த நிலையிலே தான் அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டி வருகிறது. ஆனால் இதுவரையிலும் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக தமிழ் நாட்டிலே எந்தப் பகுதியிலேயிருந்தும் அரசுக்குத் தகவல் இல்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் முழுவதிலும் இந்தத் தேர்வு நடப்பதற்கு முன்னதாகவே கேள்வித் தாள்கள் வெளியாகி ஜெராக்ஸ் காப்பி பல மாணவர்களுக்கு விற்கப்பட்டுள்ளது. அது அரசின் கவனத்திற்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார் கள். இனி மேலும் இது போன்ற தவறுகள் நடக்காத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறும், இது போன்ற தவறுகள் நடக்கின்ற போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற தவறுகள் நடை பெறக் கூடாது என்பதுதான் அரசினுடைய நோக்கமாகும். அந்த அடிப்படையில்தான் நாம் இந்தப் பொறுப்பை ஏற்று நிறைவேற்றி வருகிறோம். அப்படி யாராவது தவறு செய் வார்களேயானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு கின்ற வினாத்தாள், போலி வினாத்தாளாக இருக்கலாம். ஆகவேதான் எங்களுக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது ஒரு இடத்தில் வினாத்தாள்கள் வெளியாகியிருந்தால் அந்த மாணவனுக்கு உடனடியாகத்தெரிந்து வேறு வினாத்தாள்கள் அடுத்த குவஸ்ட்டின் பேப்பர் கொடுப் பதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வெளியானால்தான் அதிலே என்ன செய்வது என்பதைப் பற்றி, எவ்வளவு பேர் அதிலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அரசு நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர இன்றைய நிலையில் அப்படி வெளியாகவில்லை என்பது தான் அரசினுடைய நிலை யாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா.

DR. BEATRIX D'SOUZA : Hon. Speaker Sir, apart from reports of papers being leaked out, this year, according to the Association of Heads of Schools—S.S.L.C. Schools and Higher Secondary Schools,—the questions themselves were very obscure and ambiguous in Mathematics, English and Social studies. Also, according to reports, a social worker has claimed that cyclostyled answers to the leaked question papers were smuggled into the examination hall. In fact, the whole examination system has become a kind of obstacle race and the final hurdle is their evalution which is so erratic that very often the students fail by a very narrow margin. I would like to know whether the Hon. Minister would consider, after computerisation of marks, whether students should not be allowed to fail by a margin below 5 marks. Sometimes they fail by 2 marks.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு சம்பந்தமாக எல்லா பிரச்சினைகளையும் தொகுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக கேள்வித்தாள் ஏதேனும் கடுமையான கேள்வியாகவோ, அல்லது சிலபசுக்கு அப்பாற்பட்ட கேள்வியாகவோ கேட்கப்பட்டிருக்குமேயானால் அதைஎல்லாம் திருத்துகின்றபோது கவனத்தில் எடுத்து மார்க் தரவேண்டு மென்ற ஒரு முறையை நம் தேர்வுத்துறை பின்பற்றி வருகிறது. மற்றபடி ஏதேனும் தவறு செய்து இருப்பார்களேயானால் அந்த புகார் வரும்போது அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்றபடி எந்தவிதமான தவறும் நிகழக் கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 502, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

502—

கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற்காலிகப் பட்டதாரி அட்டவணையாளர்கள்.

* 20542—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டியிலுள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள தேர்வுப் பிரிவில் தற்காலிகமாகப் பணிபுரியும் பட்டதாரி அட்டவணையாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

DR. BEATRIX D'SOUZA : Hon. Speaker Sir, apart from reports of papers being leaked out, this year, according to the Association of Heads of Schools—S.S.L.C. Schools and Higher Secondary Schools,—the questions themselves were very obscure and ambiguous in Mathematics, English and Social studies. Also, according to reports, a social worker has claimed that cyclostyled answers to the leaked question papers were smuggled into the examination hall. In fact, the whole examination system has become a kind of obstacle race and the final hurdle is their evalution which is so erratic that very often the students fail by a very narrow margin. I would like to know whether the Hon. Minister would consider, after computerisation of marks, whether students should not be allowed to fail by a margin below 5 marks. Sometimes they fail by 2 marks.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு சம்பந்தமாக எல்லா பிரச்சினைகளையும் தொகுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக கேள்வித்தாள் ஏதேனும் கடுமையான கேள்வியாகவோ, அல்லது சிலபசுக்கு அப்பாற்பட்ட கேள்வியாகவோ கேட்கப்பட்டிருக்குமேயானால் அதைஎல்லாம் திருத்துகின்றபோது கவனத்தில் எடுத்து மார்க் தரவேண்டுமென்ற ஒரு முறையை நம் தேர்வுத்துறை பின்பற்றி வருகிறது. மற்றபடி ஏதேனும் தவறு செய்து இருப்பார்களேயானால் அந்த புகார் வரும்போது அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்றபடி எந்தவிதமான தவறும் நிகழக் கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 502, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

502—

கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற்காலிகப் பட்டதாரி அட்டவணையாளர்கள்.

* 20542—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டியிலுள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள தேர்வுப் பிரிவில் தற்காலிகமாகப் பணிபுரியும் பட்டதாரி அட்டவணையாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற் காலிக பட்டதாரி அட்டவணைப் பணியாளர்கள் தங்கள் பணியை நிரந்தரம் செய்ய வேண்டி தொடுத்துள்ள வழக்குகள் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்திலும் உச்சநீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளன. எனவே இவ்வழக்குகளில் தீர்ப்பு பெறப்படும் வரை இது குறித்து எந்த ஒரு முடிவும் எடுக்க இயலாது.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று கூறினார்கள். தற்போது தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணியாற்றும் ஏறக்குறைய 80 நபர்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு ஆண்டுக்கு 240 நாட்களுக்கு மேல் பணியாற்றி இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு தினக் கூலியாக 40 ரூபாய் கிடைக்கிறது. அது இந்த கால கட்டத்தில் வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இல்லை. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதை கருணை உள்ளத்தோடு பரி சீலித்து நம் அரசு அவர்களுக்கு தினக் கூலியாக 60 ரூபாய் அளவில் வழங்க—அந்த வழக்கு தீர்ப்பு ஆகும் வரையில் 60 ரூபாய் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்தில் வழக்கு இருக் கின்ற காரணத்தால் அது தெரிந்ததற்குப் பிறகு, அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம் என்பதுதான் முறையாக இருக்கும் என்கின்ற காரணத்தால் இப்போது இந்தப் பிரச்சினையை நாம் பரிசீலிக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 503—திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

503—

கிராமப்புற மக்களுக்கு சுற்றுப்புறச்சூழல் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல்.

* 11235—திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புற மக்களுக்கு சுற்றுப்புறச் சூழல் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வீடியோ பொருத்திய பேருந்துகளைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற்காலிக பட்டதாரி அட்டவணைப் பணியாளர்கள் தங்கள் பணியை நிரந்தரம் செய்ய வேண்டி தொடுத்துள்ள வழக்குகள் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்திலும் உச்சநீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளன. எனவே இவ்வழக்குகளில் தீர்ப்பு பெறப்படும் வரை இது குறித்து எந்த ஒரு முடிவும் எடுக்க இயலாது.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று கூறினார்கள். தற்போது தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணியாற்றும் ஏறக்குறைய 80 நபர்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு ஆண்டுக்கு 240 நாட்களுக்கு மேல் பணியாற்றி இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு தினக் கூலியாக 40 ரூபாய் கிடைக்கிறது. அது இந்த கால கட்டத்தில் வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இல்லை. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதை கருணை உள்ளத்தோடு பரிசீலித்து நம் அரசு அவர்களுக்கு தினக் கூலியாக 60 ரூபாய் அளவில் வழங்க—அந்த வழக்கு தீர்ப்பு ஆகும் வரையில் 60 ரூபாய் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தால் அது தெரிந்ததற்குப் பிறகு, அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம் என்பதுதான் முறையாக இருக்கும் என்கின்ற காரணத்தால் இப்போது இந்தப் பிரச்சினையை நாம் பரிசீலிக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 503—திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

503—

கிராமப்புற மக்களுக்கு சுற்றுப்புறச்சூழல் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல்.

* 11235—திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புற மக்களுக்கு சுற்றுப்புறச் சூழல் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வீடியோ பொருத்திய பேருந்துகளைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-10

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே எங்கெங்கே எப்படிப் பட்ட அசுத்தங்களால் சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுகிறது என்பதை யும், சுற்றுப்புறச் சூழ்நிலைகள் கெடுவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், வீடியோ படங்கள் மூலம் கிராமங்கள் தோறும் காண்பிக்கப்படுவது அவசியம் என்பதால் இப்படிப்பட்ட கேள்வி யைக் கேட்டேன். இதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்; மரம் போன்ற, சுற்றுப்புறச் சூழ்நிலைக்குச் சாதகமாக உள்ள எதையும் பாதிக்கிற அளவிலே வெட்டிவிடக் கூடாது என்றெல்லாம் பல்வேறு வகையிலே இப்போது விளம்பரம் செய்யப்படுகிறது. குறிப்பாக, டி.வி.யிலே இப்படிப்பட்ட விளம்பரங்கள், சின்ன சின்ன பிட்டாகப் போடப்படுகிறது. எனவே தான் இதற்காக, தனியாக நாம் ஒரு வீடியோ காசெட் தயார் செய்து ஊர் ஊராக கொண்டு போய் போடுவது என்பது சாத்தியமாக இருக்காது. பொருள் செலவும் கூடுதலாக இருக்கும் என்ற காரணத்தால் தான் இப்போது நான் இந்தக் கருத்திற்கு இல்லை என்று சொல்லியிருக்கிறேன். எனவே, வேறு வகை யிலே, பொருள் செலவு அதிகம் இல்லாமல், வேறு என்னென்ன வகையிலே இதைப்பற்றி விளம்பரப்படுத்த முடியும் என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீர்த் தேக்கங்கள் மற்றும் குப்பைக் கூளங்கள் தேங்கிக் கிடக்கின்ற நிலையில் துர்நாற்றம் வீசுவதுடன் கொசுக்கள் மற்றும் ஈக்கள் அதிக அளவிலே உற்பத்தியாகி அதன் மூலம் பொதுமக்களுக்கு மலேரியா, காலரா போன்ற நோய் பரவி, அதன் பிறகு அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதைவிட, அதனை முன்கூட்டியே தடுப்பதற்கு நட வடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்றும், மேலும் பல முன்னேறிய நாடுகளிலேகூட என்ன செய்கிறார்கள் என் றால், தொடர்ந்து அந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலையைக் காப்ப தற்கு ஒளி-ஒலி படக்காட்சிகள் மூலம் தொடர் பிரச்சாரங்கள்

1993 ஏப்ரல் 28]

செய்து வருகின்றார்கள். மேலும், அங்கே எதிலும் சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்கப்பட்டுள்ளது. அங்குள்ள தூய்மையைப் பற்றி அதிகமாகச் சொல்லலாம். ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வீடுதோறும் அங்கே பிளாஸ்டிக் கேரி பேக் தருகிறார்கள். அதிலே, தினமும் வருகின்ற குப்பைக் கூளங்களைச் சேகரித்து அதை அந்த நகராட்சி அலுவலர்கள் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அல்லது தினமும் வந்து அப்புறப்படுத்தி வருகின்றார்கள். அதன் மூலம் அங்கே குப்பைக் கூளங்களை வெளியிலே கண்ணால் பார்ப்பதுகூட அரிதாக இருக்கிறது. ஈ, கொசுக்களைக்கூட வெளிநாடுகளிலேயெல்லாம் பார்க்க முடிய வில்லை. இப்படிப்பட்ட நிலையிலே அங்கே மிகவும் ஆரோக்கிய மாகவும், சுகாதார முறையிலும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி மரியம் உல் ஆசியா, கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று நமது நாட்டிலும், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ''எழில்மிகு சென்னை 2000'' என்று அறிவித்து, சென்னை நகரத்தினுடைய தூய்மையைப் பாதுகாக்க வேண்டும்; அதை அழகுபடுத்தவேண்டும் என்று திட்டங்களைத் தீட்டுகின்ற இந்த வேளையிலே, சென்னை மாநகரத்திலும் சரி, அதேபோன்று, கோவை, திருச்சி, மதுரை போன்ற மக்கள் அதிகமாக, நெருக் கடியாக உள்ள இடங்களிலும் சரி, குப்பைக் கூளங்களைப் பாலிதீன் கவர்களில் போட்டு அவற்றை நகராட்சியினர் அப்புறப்படுத்துவதற்கு, சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப் பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே எப்படி இருக்கிறது என் பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படம்பிடித்து அப்படியே இங்கே காட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் அம லாக்குவதுதான் நமக்கு இருக்கிற பெரிய சிக்கல். பொதுமக்கள் எந்த அளவுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்களோ அந்த அள விற்கு நம்மால் செய்ய முடியும். இப்போது அவர்கள் சொல்லிய அத்தனைக் கருத்துக்களும், இந்த நோய் வந்த பின்னாலே அந்த நோய்க்கு உண்டான டிரீட்மெண்ட் கொடுக்கிற பொறுப்பை மருத்துவத்துறை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அதேபோன்று, சுகாதாரத்திலே எப்படி வைத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும், சுற்றுப்புறத் தூய்மையைப் பார்ப்பதற்காகவும் இந்தத் துறையிலே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பணிகளை அமுல் ஆக்க வேண்டிய முழுப் பொறுப்பு உள்ளாட்சித் துறையிடத்திலே இருக்கிறது. எனவே, உள்ளாட்சித்

துறை மூலமாக அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிந்து அறிந்தால் பஞ்சாயத்துக்களிலே, அல்லது நகராட்சிகளிலே, மாநகராட்சிகளிலே எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதைப் பற்றி நாம் ஆலோசிக்கலாம். எனவே, பொதுமக்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பிளாஸ்டிக்பேக் எல்லாம் கொடுக்கலாம். அது நல்ல சிறப்பான திட்டம்தான். ஆனால், அதிலே குப்பையைப் போடுவதற்குப் பதிலாக, அதை மடித்து வீட்டிலே வைத்துவிட்டு, பழையபடி, குப்பையை ரோட்டிலே தான் போடுகிற ஒரு நிலையிலே நம்முடைய நிலை இருக்கிற காரணத்தால், பொதுமக்களுக்கு இதைப்பற்றிச் சொல்லித் தந்து, பொதுமக்கள் அதை முழுமையாகத் தெரிந்து கொண்ட பின்னாலே தான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். இப்போதுகூட பல இடங்களிலே குப்பைத் தொட்டிகளை வைக்கிறார்கள். அந்தக் குப்பைத் தொட்டி வைக்கப்பட்ட அடுத்த நாளே எங்காவது காணாமல் போய்விடுகிறது. அதை உடைத்து, அதிலே இருக்கிற கம்பியை எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பல்வேறு சங்கடங்களை அரசாங்கம் இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் என்றைக்கு அதற்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்களோ, அன்றைக்கு இந்தப் பிரச்சினைகள் முழுமையாகத் தீருவதற்கு வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. வேலையா.

முற்பகல் 10–15

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர்களுடைய கருத்துப்படி இன்றையதினம் ஏர் பொலூஷன், வாட்டர் பொலூஷன் எந்த அளவுக்கு மக்களைப் பாதிக்கிறதோ அந்த அளவுக்கு 'நாய்ஸ்' பொலூஷனும் மக்களைப் பாதிக்கிறது. இப்பொழுது இரயில்வே நிலையம் என்றாலும் சரி, பஸ் நிலையம் என்றாலும் சரி, பயணிகளுக்கு மிகவும் துன்பம் கொடுக்கக்கூடிய நிலைமையிலும், குழப்பத்தை உண்டாக்குகின்ற வகையிலும் எங்கே பார்த்தாலும் வீடியோக்கள் அலறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதுவும் நம்முடைய சுகாதாரத்தைப் பாதிக்கிறது. சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதிக்கிறது என்கின்ற அடிப்படையில் 'இந்த' நாய்ஸ் பொல்யூஷனைக் கன்ட்ரோல் பண்ணுவதற்கும் நமது சுகாதாரத் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்தம் எங்கேயும் அதிகமாக வரக் கூடாது. இங்கே இருந்தால்கூட சப்தம் குறைவாகத்தான் வர வேண்டும்.

அதிகமாக வரக் கூடாது. எனவே, அதற்கு ஒரு இடத்தைக் குறிப்பிட்டு வைத்திருக்கிறார்கள்; இந்த இந்த இடத்தில் ஸ்பீக்கரை வைத்துக் கொள்ளலாம் அல்லது வைக்கக் கூடாது என்று ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். அந்தக் கட்டுப்பாட்டை நாம் கடைப்பிடித்தாலே கூட ஓரளவிற்குப் பிரச்சினை இல்லாமல் இருக்கும். எனவே, அதையெல்லாம் சில நேரத்திலே மீறுகின்ற பொழுதுதான் ஒவ்வொரு இடத்திலேயும் அதற்கான அதிகாரிகளைப் போட்டு நாம் கண்காணிக்க முடிவதில்லை. இப்பொழுது நமக்கு இருக்கிற பிரச்சினையே, ஒரு விதி என்று சொன்னால், அந்த விதியைத் தெரிந்த பின்னாலே அதை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற உணர்வு எல்லோருக்கும் இருந்துவிட்டால் பிரச்சினை இருக்காது. விதிகளை வகுத்து விடுகிறோம். ஆனால், அந்த விதிகளை மக்கள் கடைப்பிடிக்கவில்லை என்பதற்காக அவர்களுக்காக அதிகாரிகளைப் போட்டுக் கடைப்பிடிக்க வைப்பது என்பதுதான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவேதான், நான் சொன்னேன், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் இதையெல்லாம் முழுமையாகச் சிறப்பாகச் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த ஸ்டார் டி.வி. நிறுவனத்தார் ஏர் பொல்லூஷன் எப்படிப்பட்டது, எவ்வளவு கிருமிகளை, எப்படியெல்லாம் நோய்களை உண்டாக்குகிறது என்ற அடிப்படையில், ஒரு கண்ணாடியிலே இந்தத் தூசியைத் துடைக்கின்ற வகையில் ஒரு காட்டனை எடுத்து, இப்படித் துடைப்பார்கள், இவ்வளவு தூசி இருக்கிறது, இதுபோல புகை பிடிப்பதால் நுரையீரலிலே இருக்கின்ற அழுக்குகளை நீங்கள் எப்படி எடுக்க முடியும், இந்த நோய்க் கிருமிகளால், இந்த அசுத்தங்களால் ஏற்படுகின்ற வியாதியை நீங்கள் எப்படிக் குணப்படுத்த முடியும் என்பதைச் சிந்தித்தீர்களா என்பது போன்ற வாசகங்களைத் தெள்ளத் தெளிவாகப் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதை உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் தொலைக்காட்சியின் மூலமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி, நீங்கள் விவாதம் போல் விரிவாகப் போகக்கூடாது, கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: பஞ்சாயத்து யூனியன் டி.வி மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே அதைப்பற்றிக் கேட்டு, அதற்குப் பின்னாலே தெரிந்து அல்லது அவர் மூலமாகப் பதிலைச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ நடேசன் பால்ராஜ்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே தெருக்களிலே குப்பையையும், சுருட்டைக் குடித்துவிட்டு அதையும் ஆங்காங்கே மிக எளிதாக எறிந்து விட்டுப் போய் விடுகிறார்கள். நமது நாட்டிற்கு அண்டை நாடான இலங்கையிலே ஏறத்தாழ இருபது வருஷங்களுக்கு முன்பே ஒவ்வொரு எலக்ட்ரிக் போஸ்ட்களிலே வேஸ்ட் பாக்ஸ் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு இப்படித்தான் செய்ய வேண்டும் என்று அறிவுரை சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆகவே, குப்பையை அங்கே வெளியிலே போடுவதே இல்லை. அதே போன்ற ஒரு நடவடிக்கையை சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங்களிலே நீங்கள் அமல் படுத்த முன்வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி, சுற்றுப்புறச் சூழல் குறித்து கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்ச்சி உண்டாக்குவது பற்றிய கேள்வி. எல்லோரும் நகர்ப்புற மக்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதைப் பற்றிய துணைக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போலச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்கும் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னபடி, நாம் வைக்கிற பொருள் கொஞ்சம் காஸ்ட்லியாக இருந்தால் அந்தப் பொருள் காணாமல் போய் விடுகிறது. இரயில்வே ஸ்டேஷனிலேகூட இப்பொழுது குடிதண்ணீர் குடிப்பதற்காக டம்ளர் வைத்திருந்தால் அந்த டம்ளர் காணாமல் போகிறது என்ற காரணத்தினால்தான் செயினைப் போட்டு நாம் கட்டி வைத்திருக்கிறோம். எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால்தான், ஒரு காஸ்ட்லியான பொருளை வைக்கிறபொழுது அது காணாமல் போய் விடுகிறது. எனவே, அரசாங்கத்திற்கு வீணான செலவு ஆகிறதேயொழிய, என்ன நோக்கமோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய் விடுகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற அந்தக் கோரிக்கையெல்லாம் பரிசீலிக்கப்பட

வேண்டிய ஒன்றுதான். அந்த அளவிற்குப் பொது மக்களிடத்திலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் இதற்கு ஒத்துப் போகிற ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய சொத்து என்று சொன்னால் அந்தச் சொத்தை யாராவது எடுத்துச் செல்வதற்கோ அல்லது அதை நாசப்படுத்துவதற்கோ முயற்சி எடுக்கிறபொழுது ஏன் என்று தட்டிக் கேட்கிற ஒரு நிலை என்றைக்கு இந்த நாட்டிலே உருவாகிறதோ அன்றைக்கு இது எல்லாம் வெற்றிகரமாக முடியும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 504—திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

504—

பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு.

*11769— திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பெரியார் நகர் புறநகர், மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இப்பொழுது இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, புறநகர் மருத்துவமனையை உருவாக்கிய நோக்கம், பொது மருத்துவமனைகளில் பெருகி வருகின்ற எண்ணிக்கையைக் குறைப்பதற்காகப் புறநகர் மருத்துவமனையை உருவாக்கி உள்ளீர்கள். ஆனால், புறநகர் மருத்துவமனையை மிகப் பெரிய தொகையினை

வேண்டிய ஒன்றுதான். அந்த அளவிற்குப் பொது மக்களிடத்திலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அவர்கள் இதற்கு ஒத்துப் போகிற ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய சொத்து என்று சொன்னால் அந்தச் சொத்தை யாராவது எடுத்துச் செல்வதற்கோ அல்லது அதை நாசப்படுத்துவதற்கோ முயற்சி எடுக்கிறபொழுது ஏன் என்று தட்டிக் கேட்கிற ஒரு நிலை என்றைக்கு இந்த நாட்டிலே உருவாகிறதோ அன்றைக்கு இது எல்லாம் வெற்றிகரமாக முடியும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 504—திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

504—

பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு.

*11769— திரு. ப. ரங்கநாதன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர், புறநகர் அரசு மருத்துவ மனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரியார் நகர் புறநகர், மருத்துவ மனையில் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் செய்ற்குறிப்பு ஏதும் இப்பொழுது இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. ப. ரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, புறநகர் மருத்துவமனையை உருவாக்கிய நோக்கம், பொது மருத்துவமனைகளில் பெருகி வருகின்ற எண்ணிக்கையைக் குறைப்பதற்காகப் புறநகர் மருத்துவமனையை உருவாக்கி உள்ளீர்கள். ஆனால், புறநகர் மருத்துவமனையை மிகப் பெரிய தொகையினை

முதலீடு செய்து உருவாக்கிய பின்பும், அந்த மருத்துவமனையை முழுமையாகப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற அளவிற்கு அங்கே போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் நரம்பியல் பிரிவினை அங்கே ஆரம்பிக்கலாம் ; அல்லது வேறு எந்த சிறப்புப் பிரிவினையாவது அங்கே ஆரம்பித்தால் நலமாக இருக்கும் என்பதை உணர்ந்து, அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பொதுவான நோயாளிகளைப் பார்ப்பதோடு, 5 சிறப்புப் பிரிவுகளில் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாள் அங்கே மருத்துவர்கள் வருகிறார்கள். எனவே, தனியாக நிரந்தரமாக அதை அங்கே ஆரம்பிக்கிற வாய்ப்பு இல்லை. நரம்பியல் பிரிவிலேகூட ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும், சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவர் மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார். எனவே, அதைத் தொடர்ந்து செய்வதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 நாட்களுக்கும் 5 சிறப்புப் பிரிவுகளும் அங்கே செயல்படுகின்றன. ஆனால், மருத்துவமனையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அந்தப் பகுதியிலே இருப்பவர்கள், சுற்றுப்புறத்திலே இருப்பவர்கள், புறநகர்ப் பகுதிகளிலே வாழ்பவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு நரம்பியல் பிரிவு இல்லையென்றாலும், அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் செயல்படுகிற வகையில் ஒரு பிரிவினை அங்கே தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தொடர்ந்து 24 Hours மருத்துவர்கள் இருப்பார்கள். அங்கே அவசர சிகிச்சைக்கு வரக்கூடியவர்களைப் பார்ப்பதற்கான Casuality-யில், டாக்டர்கள் இருப்பார்கள். எனவே, அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லையென்று கருதுகிறேன். அப்படி இல்லாமல் இருந்தால், அது பற்றி ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 505—டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

1993 ஏப்ரல் 28]

505—

இராமநாதபுரம் மாவட்ட மருத்துவமனையில் வாந்தி, வயிற்றுப் போக்கு காரணமாக சேர்க்கப்பட்ட உள்நோயாளிகள்.

*16816—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட மருத்துவமனையில், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கால் 1992 அக்டோபர் மாதத்தில் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) தடுப்பு நடவடிக்கையாக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் தலைமை அரசினர் மருத்துவமனையில் கடந்த அக்டோபர் 1992ஆம் ஆண்டு, 44 நபர்கள் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டு உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டார்கள்.

(ஆ) தகவல் கிடைத்தவுடன் 56,993 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. உப்புநீர்க் கரைசல் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. குடிநீரைத் தூய்மைப்படுத்துவதற்காக பிளீச்சிங் பவுடர் மற்றும் குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கொதிக்க வைத்து ஆறிய நீரையே குடிக்க வேண்டுமென்று சொல்லி அந்த மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கின்றன. சுகாதார அலுவலர்கள் அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக மேற்கொண்டார்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு நோய், மழைக் காலங்களில் வெள்ளம் அதிகமாக வருகிற காலங்களிலும், அதே சமயத்தில் வறட்சிக் காலங்களிலும் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால், இருக்கிற தண்ணீரைச் சாப்பிடும் போதும் ஏற்படுகிற, வாட்டர் பொல்யூஷனால் ஏற்படுகிற நோய். இது சீஸனாகத்தான் வருகிறது. அவ்வாறு வருகிறபோது, மருத்துவமனையில் நோயாளிகளைச் சேர்ப்பதற்கு '' ஐஸலேஷன் வார்டு'' என்று சொல்லப்படுகிற வார்டில் பாத்ரூம் வசதியில்லா

மல், லெட்ரின் வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு ''ஐஸலேஷன் வார்டை'' நிரந்தரமான நிலையில் பராமரிப்பதற்கு உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐஸலேஷன் வார்டிலே குறிப்பிட்ட சில ''பெட்ஸ்'' மட்டுமே அங்கே இருக்கும். குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே இருக்கும். திடீரென நோயாளிகள் ஒரே நேரத்தில் அங்கே அதிகமாக வந்து விடுகிறபோது, இது போன்ற சங்கடங்கள், பிரச்சினைகள், பற்றாக்குறை ஏற்படத் தான் செய்கிறது. நிரந்தரமாக அதற்காக ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒவ்வொர் ஆண்டும் நடப்பதில்லை. ஏதாவது ஒரு ஆண்டு, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கிறது. அதுவும் ஆண்டிலே ஒரு மாதம் அல்லது 2 மாதங்கள் மட்டுமே இவை பயன்படுத்தப்படுகின்றன. எனவே தான் இருக்கிற வசதிகளை வைத்து நாம் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். நிதிப் பிரச்சினை காரணமாக, எதிர்காலத்திலே நிதிநிலைமைகளை எல்லாம் மனதிலே வைத்து, நிதி ஓரளவிற்கு கிடைக்கக்கூடிய ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படுகிறபோது சங்கடம் இல்லாத நிலை ஏற்படுகிறபோது அதைப் பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு அந்த ''எபிடமிக் டிசீஸஸ்'' வருகிறபோது, மாவட்ட அளவில் ''மூவிங் ஸ்குவாட்'' வைத்து உடனுக்குடன் வைத்திய வசதி கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டமிட்டுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கே அருகிலே இருக்கிற மருத்துவமனைகளிலே அதுபோல வசதிகள் அனைத்தையும் உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது திடீரென காலரா நோய் ஏற்பட்டுப் பரவுகிறது. அல்லது வயிற்றுப்போக்கு நோய் பரவுகிறது என்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கிற அதிகாரிகள் மூலமாக அத்தனை மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்துகள் மற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. எனவே, மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அவர்களுக்கு சிகிச்சை கொடுத்தால்தான் கொஞ்சம் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை, அதாவது '' மொபைல் யூனிட் ''-ஆக வைத்து செய்ய முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

முற்பகல் 10-25

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, உண்மையாக காலரா நோய் ஏற்பட்டால் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது அங்குள்ள டாக்டர்கள் அதை காலரா என்று குறிப்பிடாமல், வயிற்றுப் போக்கு என்றுதான் குறிப்பிடுகிறார்கள். உண்மையாக காலரா நோய் ஏற்பட்டால் கூட, காலரா என்று எழுதாமல் இருப்பது ஏன் ? அந்த மாதிரி வயிற்றுப் போக்கு என்றுதான் குறிப்பிட வேண்டுமென்று அறிவுரை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படுகிறபோது அது காலராவாக இருந்தால் காலரா என்று குறிப்பிட வேண்டும். வயிற்றுப்போக்கு இருந்தால் வயிற்றுப்போக்கு என்று குறிப்பிட வேண்டும். இதிலே அரசாங்கத்திற்கு எந்த நஷ்டமோ இலாபமோ இல்லை. அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அரசாங்கம் இப்படிப்பட்ட எந்த உத்தரவையும் எந்த மருத்துவருக்கும் கொடுக்கவில்லை. மருத்துவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் டெக்னிக்கல் பீப்பில். அவர்களிடத்திலே போய் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று என்றைக்கும் அரசாங்கம் தலையிடுவது கிடையாது. எனவே, அவர்கள் என்ன நோய் இருக்கிறதோ அந்த நோயைத்தான் குறிப்பிடுகிறார்கள். எனவே, அதிலே தலையிடுவது கூட தவறு என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 5 ஆண்டுகளுக்கு அல்லது 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை, எப்பொழுதாவது வருகிறது என்று சொன்னார்கள். கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமாக தமிழ்நாட்டில், குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், கோடைக்காலம், மழைக்காலம் என்று வேறுபாடு இல்லாமல் தொடர்ந்து இந்த வயிற்றுப்போக்கு நோய் இருக்கின்றது. கடந்த மாதம் கூட முதுகளத்தூர் பகுதியில் இந்த வியாதியால் கடுமையாக பாதிக்கப்பட்டு பலபேர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்கள். இதற்குச் சுற்றுப்புறச்சூழல் மட்டும் காரணம் என்று தெரியவில்லை. ஏதோ ஒரு தொற்று நோய் உண்டாக்கக்கூடிய கிருமி அந்தப் பகுதியில் புதியதாக

ஏற்பட்டு இருப்பது போல ஒரு அச்சம் ஏற்படுகிறது. அதனைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரத்தியேக உத்தரவின் பேரில் இந்த வயிற்றுப் போக்கு நோயைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வாரா? கடந்த ஆண்டுகளை ஆய்வு செய்வோமேயானால் இந்த ஓராண்டுக் காலத்தில் ஏறத்தாழ 200 விழுக்காடு அதிகமாக இந்த வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்ட புள்ளி விவரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நேரிடையாகக் கொண்டுவந்தபோது, அவர்கள் அருகிலேயே இருந்து அந்தத் துறையினுடைய செயலாளரை அழைத்து, இதற்குத் துரிதமான நடவடிக்கை எடுத்து மருந்துகள் எல்லாம் அனுப்ப வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தார்கள். அதற்கு, நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், இதுவரையிலும் இந்த வயிற்றுப்போக்கு வியாதியை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் பிரத்தியேக நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 200 சதவீதத்திற்கு மேலே என்று சொன்னார். அதற்கு வாய்ப்பே இல்லை. 100 சதவீதத்திற்கு என்று திருத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலே எப்பொழுதுமே கொஞ்சம் குடிதண்ணீர், மழை பற்றாக்குறை, இப்படி இருந்துகொண்டே இருக்கும். மழை கொஞ்சம் அதிகமாக பெய்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு சாதாரணமாக ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல கொஞ்சம் அதிகமான அளவில்தான், அங்கே வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. உடனே, உள்ளாட்சித்துறையோடு தொடர்புகொண்டு, அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் அறிவுறுத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினரை நான் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட செய்தி எங்கேயாவது வருகிறபோது அந்த பகுதியிலே இருக்கின்ற மக்கள் எப்படிப்பட்ட குடிநீர் கிடைத்தாலும், பாதுகாக்கப்பட்ட குடிநீராக இருந்தாலும் சரி, கிணறு அல்லது குளத்திலேயிருந்து எடுக்கிற தண்ணீராக இருந்தாலும், கொதிக்க வைத்து, ஆற வைத்து அவர்கள் அதைக் குடித்தால் பெரும் பகுதியான இந்தப் பிரச்சினை தடுக்கப்பட்டுவிடும், தீர்ந்துவிடும். அவர்கள் அதைப்பற்றியே கவலைப்படாமல், பக்கத்து வீட்டிலே இந்த நோய் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, குடிக்கிற தண்ணீரை கொதிக்க வைத்துக் குடிக்காத காரணத்தால் அவர்களுக்கும் வருகிறது, உடனே அரசாங்க மருத்துவ

மனைக்கு எடுத்து வந்து அங்கே நாம் அவர்களை காப்பாற்றுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் இறந்து விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இந்தச் சங்கடங்களை போக்குவதற்கு, பொது மக்கள் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு எங்கேயாவது இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்ற இடத்திலே அல்லது இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்ற இடத்திலே அவர்கள் தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்க வேண்டும். அதே போன்று உணவை சுட வைத்து சாப்பிடுவது இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளை அவர்கள் கடைப்பிடித்தால் இந்தப் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படும் என்று கருதுகிறேன். எனவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, தனியாக ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து அந்த ஆய்வு செய்து இதைத் தவிர வேறு ஏதாவது பிரத்தியேகக் காரணம் இருக்குமா என்பது பற்றி சிந்திக்கும்படி, அதைப் பற்றி கேட்கும்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் அறிவுறுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 506, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

506—

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்காக இருக்கைகள் ஒதுக்கீடு.

*9789—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்கு (V.I.P.) என இரண்டு இருக்கை ஒதுக்க ஆணை இருந்தும் தற்போது எந்த பேருந்திலும் இடம் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இரண்டு இருக்கைகள் மிக முக்கிய நபர்களுக்கு ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனைக்கு எடுத்து வந்து அங்கே நாம் அவர்களை காப்பாற்றுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள் இறந்து விடுகிற சூழ்நிலை ஏற்படு கிறது. எனவே, இந்தச் சங்கடங்களை போக்குவதற்கு, பொது மக்கள் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு எங்கேயாவது இப்படிப்பட்ட சிரமங்கள் இருக்கின்ற இடத்திலே அல்லது இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்ற இடத்திலே அவர் கள் தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்க வேண்டும். அதே போன்று உணவை சுட வைத்து சாப்பிடுவது இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளை அவர்கள் கடைப்பிடித்தால் இந்தப் பிரச் சினைகள் முழுமையாக தீர்க்கப்படும் என்று கருதுகிறேன். எனவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, தனியாக ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து அந்த ஆய்வு செய்து இதைத் தவிர வேறு ஏதாவது பிரத்தியேகக் காரணம் இருக்குமா என்பது பற்றி சிந்திக்கும்படி, அதைப் பற்றி கேட்கும்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் அறிவுறுத்துவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 506, திரு. பி. சொக்கலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

506—

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்காக இருக்கைகள் ஒதுக்கீடு.

*9789—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் மிக முக்கிய நபர்களுக்கு (V.I.P.) என இரண்டு இருக்கை ஒதுக்க ஆணை இருந்தும் தற்போது எந்த பேருந்திலும் இடம் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இரண்டு இருக்கைகள் மிக முக்கிய நபர்களுக்கு ஒதுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தின் தொலை தூரப் பேருந்துகள் அனைத்திலும் மிக முக்கிய நபர்களுக்கு என்று இரண்டு இருக்கைகள் ஒதுக்கப்படுகின்றன. முக்கியமாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இருக்கைகள் எண். 3, 4, 5 மற்றும் 6 ஆகியவற்றை மறுக்கக்கூடும் என்ற நிபந்தனையுடன் பதிவு செய்தல் என்ற வழிமுறையை பின்பற்றி பயணிகளுக்கு ஒதுக்கலாம் என்று நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10.30

திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கோ அல்லது தொகுதி முன்னேற்றம் குறித்தோ சென்னை அல்லது மற்ற ஊர்களுக்குப் பயணம் செய்யும்போது அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளை மட்டும்தான் பயன்படுத்தும் சூழ்நிலை உள்ளது. அப்படி மதுராந்தகத்திலிருந்து பயணம் செய்யும்போது அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் மிகவும் முக்கிய நபர்களுக்கு என இரண்டு இருக்கைகள் ஒதுக்க ஆணை இருந்தும், அந்த இருக்கைகள் காலியாக இல்லாமல் எத்தனையோ முறை நின்றே பயணம் செய்யவேண்டி உள்ளது. நடத்துநரிடம் கேட்டால் பேருந்து புறப்படுகிறபோது, புறப்படுகிற இடத்திலே இருந்துதான் நாங்கள் இடம் கொடுக்க முடியும். மதுராந்தகத்தில் ஏறினால் இடம் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். இதைத் தவிர்க்கும்பொருட்டு அரசுப் போக்கு வரத்துக் கழகப்பேருந்தில் மிகவும் முக்கிய நபர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளை மிகவும் முக்கிய நபர்கள் மட்டுமே பயன்படுத்தும் வகையில் எப்போதும் எந்த ஸ்டேஜிலேயும் காலியாக வைக்கப்படுமா என போற்று தலுக்குரிய மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடத்திலிருந்து மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, புறப்படுகின்ற இடத்திலே இருந்துதான் இரண்டு இருக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரை வழங் கப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் 4 இருக்கைகளை புறப்படுகிற இடத்தில் கடைசியாகப் புறப்படும் நேரம் வரையிலும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பாக நாங்கள் இதை ரிசர்வ் செய்வதற்குக் காரணமே, இப்போது கன்னியாகுமரியை எடுத்துக் கொண்டால் அங்கே

இருந்து புறப்படுகிறபோது ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லை என்று சொன்னால்—ஒரு இருக்கைக்கு 103 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கிறது—அதாவது அந்த 4 இருக்கைகளும் அப்படியே வருகிறபோது ஏறத்தாழ 103 ரூபாய் ஒரு இருக்கைக்கு என்று சொன்னால் 4 இருக்கைகளுக்கும் ஏறத்தாழ 412 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அதன் காரணத்தால்தான் ரிசர்வ் செய்து விடுகிறோம். இப்படி நஷ்டம் வராமல் தவிர்க்கின்ற வகையில் உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் உறுதுணையாக இருந்தால்தான் போக்குவரத்துக்கழகங்கள் நஷ்டத்தில் இயங்காமல் இருக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே உங்களுடைய உறுதுணையைத் தெரிந்து பேருந்து புறப்படுகிற அந்த இடத்தில் உங்களுக்குத் தேவையான இருக்கைகள் பேருந்து புறப்படும் வரையிலும் இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் கரிய கோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைக்கும் பணி 7—9-1990ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியில் இதுவரையில் மூன்று அடுக்கு ஜல்லி நிரவல் செய்யும் பணி முடிவு அடைந்துள்ளது. மே மாதத்திற்குள்ளாக தார்ச்சாலை போடப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியகோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையானது தற்போது பராமரிக்கப்பட்டு தார்ச்சாலையாகப் போடப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை இதய தெய்வம் அவர்களுக்கும், நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து மிக விரைவாக இந்தப் பாதை செப்பனிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி வேளாண்மைத் துறையோடு கலந்து பேசி முடிவு எடுத்து இலவசமாகக் கொடுப்பது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 519, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

519—

மலைவாழ் மக்களுக்காக கரியகோவில் — ஆலாங்குறிச்சிக்கு தார்ச்சாலை.

*9454—திரு. வெ. தமிழரசு :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலை வாழ் மக்கள் நலன் கருதி கரியகோயிலிருந்து ஆலாங்குறிச்சிக்கு தார்ச்சாலை அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது ?

(ஆ) எப்போது சாலைப் பணி முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் கரிய கோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைக்கும் பணி 7–9-1990ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியில் இதுவரையில் மூன்று அடுக்கு ஜல்லி நிரவல் செய்யும் பணி முடிவு அடைந்துள்ளது. மே மாதத்திற்குள்ளாக தார்ச்சாலை போடப்பட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரியகோயிலிலிருந்து ஆலாங்குறிச்சிக்குச் செல்லும் சாலையானது தற்போது பராமரிக்கப்பட்டு தார்ச்சாலையாகப் போடப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக என்னுடைய நன்றியை இதய தெய்வம் அவர்களுக்கும், நம்முடைய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து மிக விரைவாக இந்தப் பாதை செப்பனிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக, வருகின்ற மே மாதத்திற்குள்ளாகவே தார்ச்சாலை போடப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 520, திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை.

511—

திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை.

*11195—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகைபாபு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

520—

பூம்புகார் தொகுதியில் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள்.

15347—திரு. எம். பூராசாமி:—

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் நலன் கருதி தொகுப்பு வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக, வருகின்ற மே மாதத்திற்குள்ளாகவே தார்ச்சாலை போடப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 520, திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை.

511—

திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை.

*11195—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகை பாபு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

520—

பூம்புகார் தொகுதியில் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள்.

15347—திரு. எம். பூராசாமி:—

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் நலன் கருதி தொகுப்பு வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவாக, வருகின்ற மே மாதத்திற்குள்ளாகவே தார்ச்சாலை போடப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 520, திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை.

511—

திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை.

*11195—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகைபாபு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உல்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

520—

பூம்புகார் தொகுதியில் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள்.

15347—திரு. எம். பூராசாமி:—

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் நலன் கருதி தொகுப்பு வீடுகள் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்துப் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(30-வது பட்டியல்).

1—

சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிரந்தர மாக்குதல்.

வினா எண் 11411—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிரந்தரமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை நிரந்தரம் செய்வதற்கு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து கருத்துரு இதுகாறும் பெறப்படவில்லை இது சம்பந்தமாக கருத்துரு பெறப்பெறும்பொழுது அதனை அரசு பரிசீலிக்கும்.

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(30-வது பட்டியல்).

1—

சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிரந்தர மாக்குதல்.

வினா எண் 11411—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் நிரந்தரமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சிவகாசியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை நிரந்தரம் செய்வதற்கு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து கருத்துரு இதுகாறும் பெறப்படவில்லை இது சம்பந்தமாக கருத்துரு பெறப்பெறும்பொழுது அதனை அரசு பரிசீலிக்கும்.

[1993 ஏப்ரல் 28

2—

கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு இலவசப்பட்டா வழங்கல்.

வினா எண் 5532—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு இலவசப் பட்டா வழங்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை வட்டம், பட்டமங்கலம் கிராமம், கலைஞர் கருணாநிதி நகர் என்று அழைக்கப்படும் குடியிருப்பு இடம் தாலுகா மற்றும் அரசு அலுவலகங்கள் கட்ட விதிக்கப்பட்ட இடம் என வரையறுக்கப்பட்ட அரசு நிலங்களின் பட்டியலில் குறிக்கப்பட்டிருப்பதால் இந்நேர்வில் பட்டா வழங்க இயலாது.

3—

இரண்டாம்புளிக்காடு மேல்பகுதியில் பாப்பங்கண்ணி ஆற்றங் கரையில் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு குடிமனைப் பட்டா வழங்கல்.

வினா எண் 6494—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம்புளிக்காடு மேல்பகுதியில் பாப்பங்கண்ணி ஆற்றங் கரையில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், இரண்டாம் புளிக்காடு என்பது பாப்பானோடை ஆறு என வகைப்படுத்தப் பட்ட தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்காக இருப்ப தாலும் மேற்படி நிலத்தை அடமானம் செய்தால் வெள்ளம் வரும் போது குடியிருப்பிற்கு ஆபத்து ஏற்படும் என்பதாலும் மேற்படி நிலத்திற்குப் பட்டா வழங்க இயலாது.

4—

ஐ. ஏ. எஸ். மற்றும் ஐ. பி. எஸ். தேர்வுகளில் தேர்ச்சிபெற்ற தமிழக மாணவர்களின் எண்ணிக்கை.

வினா எண் 3083—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ. ஏ. எஸ். மற்றும் ஐ. பி. எஸ். போன்ற அனைத்து இந்திய அளவிலான தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற தமிழக மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவிற்கான காரணத்தை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்குறையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 4–3–1992 அன்று நடந்த துணைவேந்தர்கள் மாநாட்டில் பல்கலைக்கழகங்கள் ஆகிய இந்தியப் பணிகளுக்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய வகையில் பாடத் திட்டத்தை (Syllabus) மேம்படுத்தவும், மற்ற பெயர் பெற்ற பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டத்திற்கு இணையாகச்செய்ய வழிவகை மற்றும் நடவடிக்கை எடுக்கவும், ஒவ்வொரு பல்கலைக் கழகமும் இது குறித்து உரியவாறு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதி திராவிடர் நலத்துறையினரால் நடத்தப்படும் பயிற்சி நிலையங் கள் மற்றும் அண்ணா நிர்வாகப் பயிற்சி நிலையம் ஆகியவை

TRUTH ALONE TRIUMPHS

தொடர்ந்து ஆண்டு முழுவதும் சிறந்த மாணவர்களுக்கு தீவிரப் பயிற்சி கொடுக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கி செயல்படுத்த வேண்டுமெனவும், அவ்வாறு பயிற்சி அளிக்கும்போது, அண்மையில் இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல்பணி தேர்ச்சி பெற்று தமிழ்நாட்டில் பணியில் சேர்ந்துள்ள இளம் அலுவலர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்திய ஆட்சிப்பணி/இந்தியக் காவல்பணி தேர்வு எழுத விரும்புவோருக்கு உதவக்கூடியதும், பயனும் மதிப்பும் வாய்ந்தது மான நூல்கள், கருத்துரைகள் ஆகியவற்றின் பட்டியலின் நகல் அனைத்து அரசு மற்றும் உதவி பெறும் தனியார் கல்லூரிகளின் நூலகங்களில் வைக்கப்படவேண்டுமென்று கல்லூரி முதல்வர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5—

கல்வி ஆண்டு 1992–93-ல் அரசு மற்றும் தனியார் மூலம் நிறுவப் படும் கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகள்.

வினா எண் 3201—திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வி ஆண்டு 1992–93-ல் அரசு மற்றும் தனியார் மூலம் நிறுவப்பட உள்ள கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

1992–93 ஆம் கல்வியாண்டில் புதியதாகத்தொடங்கப் பட்டுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்:

1. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

2. தனியார் மூலம் அரசு நிதி உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.

பொறியியல் கல்லூரி:

1992–93 ஆம் கல்வியாண்டில் யாதொரு பொறியியற் கல்லூரியும் நிறுவப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

6—

வேம்பலூர் அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்துதல்.

வினா எண் 8914— திரு. ஆ. பாலையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தக்கலை கல்வி மாவட்டம், வேம்பலூர் அரசு தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் வருகிற கல்வி ஆண்டில் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): இப்பள்ளி 1993-94 ஆம் கல்வியாண்டிலிருந்து நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை வெளிபட்டுள்ளது.

7—

விழுப்புரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா எண் 1227— திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) விழுப்புரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8—

தொக்காலிகாட்டிலுள்ள தாய்சேய் நல விடுதிக் கட்டிடம்.

வினா எண் 2783—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காலி காட்டில் தாய்சேய் நலவிடுதிக் கட்டிடம் கட்டப்பட்டு அதில் இயங்காத மருத்துவமனையை இயங்க வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில், தொக்காலிகாட்டில் ஒரு தாய்சேய் நல விடுதி இயங்கி வருகிறது. அதில் கிராம சுகாதார செவிலியர் ஒருவர் பணியாற்றி வருகிறார்.

9—

கீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மருத்துவ வார்டு.

வினா எண் 8692—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரம் கீரனூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் குருசாமிநாயுடு நினைவு அறக்கட்டளையால் பத்தாண்டுகளுக்கு முன்னதாக கட்டப்பட்டும் இன்னமும் மூடிவைக்கப்பட்டுள்ள மகப்பேறு மருத்துவ வார்டு செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

மேற்படி கட்டிடம் 31-1-1992 முதல் சுகாதாரத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அங்கு தற்போது 10 கட்டில்கள் மற்றும் படுக்கை வசதிகள் உள்ளன. மகப்பேறு மருத்துவம் பார்க்கப்பட்டு வருகிறது.

1993 ஏப்ரல் 28]

10—

மாநிலம்முழுவதும் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்தும் திட்டம்.

வினா எண் 8877— திரு கே. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலம் முழுவதும் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே செயல்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் முழுவதும் இலவசக் கண் சிகிச்சை முகாம்கள், 8 மாநில நடமாடும் கண் சிகிச்சைக் குழுக்கள் மற்றும் 7 மாவட்ட நடமாடும் கண் சிகிச்சைக்குழுக்கள் மூலம் அரசு நடத்தி வருகிறது. வழக்கம்போல் நடப்பு ஆண்டிலும் மாநிலம் முழுவதும் இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும்.

11—

சத்தியமங்கலம் தொகுதி மலைவாழ் மக்கள் நலன் கருதி நடமாடும் மருத்துவ ஊர்தி ஏற்படுத்துதல்.

வினா எண் 8886—திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதியில், மலைவாழ் மக்கள் நலன் கருதி அவர்களுக்கு நடமாடும் மருத்துவ வேன் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

சத்தியமங்கலம் தொகுதி மலைவாழ் மக்களுக்கு மருத்துவ வசதியளிக்கும் பொருட்டு தற்காலிகமாக ஒரு மருத்துவ ஊர்தி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு மருத்துவ வசதி தற்சமயம் கிடைத்து வருகிறது.

12—

குன்னூர் வட்டம், சேலாஸ் என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 8931—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்தில் உள்ள சேலாஸ் என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) தற்பொழுது நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்திலுள்ள சேலாஸ் என்ற கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

குன்னூரில் போலியோ தடுப்பு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 8932—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 28]

(அ) போலியோ தடுப்பு மருந்து தயார் செய்ய குன்னூரில் ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): குன்னூரில் போலியோ தடுப்பு மருந்து தயார் செய்ய நிறுவனம் அமைப்பது சம்பந்தமாக அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

14—

கத்தாழை கிராமத்திற்கு சுகாதார நிலையம் அமைத்தல்.

வினா எண் 9179—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், கத்தாழை கிராமத்திற்கு சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 96,800. இதற்கேற்ப அங்கு (1) கிருஷ்ணாபுரம், (2) புவனகிரி மற்றும் (3) சேத்தியாத் தோப்பு ஆகிய இடங்களில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதாலும், 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அரசின் கொள்கையாக இருப்பதாலும் மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேற்படி ஊராட்சி ஒன்றியம், கத்தாழை கிராமத்தில் தற்போது அமைப்பதற்கில்லை.

[1993 ஏப்ரல் 28

15—

தமிழ்நாட்டில் 1990-91 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளான போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை.

வினா எண் 1528—திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு போக்குவரததுத துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1990-91 ஆம் ஆண்டில் ஆபத்துக்கு உள்ளான போக்குவரத்து வாகனங்கள் எத்தனை?

(ஆ) இவற்றில் மனித உயிர் இழப்பு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் 1991-ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளான போக்குவரதது வாகனங்கள் 36,730.

(ஆ) இவற்றில் இறந்தோர் எண்ணிக்கை 6,406.

16—

பொள்ளாச்சி - பாலக்காடு செல்லும் நகரப் பேருந்து கோடங்கிப்பட்டிக்கு சென்றுவர நடவடிக்கை.

வினா எண் 10968—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி - பாலக்காடு சாலையில் செல்லும் நகரப் பேருந்து கோடங்கிப்பட்டிக்கு 3 முறை சென்று வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

1993 ஏப்ரல் 28]

கோடங்கிப்பட்டி கிராமம், பொள்ளாச்சி -பாலக்காடு பிரதான சாலையில் உள்ள கோடங்கிப்பட்டி பிரிவிலிருந்து 1.8 கி.மீ. தூரத்தில் உள்ளது. இக்கிராமத்திற்குச் செல்லும் கப்பிச்சாலை பழுதடைந்து பேருந்து இயக்க ஏற்ற நிலையில் இல்லாத காரணத்தால், தற்போது வினாவில் கோரியுள்ளவாறு பேருந்து இயக்குவது இயலாது.

17—

கொடுமுடியிலிருந்து சென்னைக்குப் பேருந்து விடுதல்.

வினா எண் 12108—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஓர் சுற்றுலா இடமாகவும், திருக்கோவில் உள்ள ஊராகவும் விளங்குவதால் அங்கிருந்து சென்னைக்கு ஓர் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கொடுமுடியிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்கும் திட்டமெதுவும் தற்போது இல்லை. கொடுமுடியிலிருந்து பிரத்தியேகமாக சென்னைக்குப் பேருந்துகள் இயக்குவது பொருளாதார ரீதியில் சாத்தியமானதல்ல.

18—

பேராவூரணி, சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து தொலை தூரப்பேருந்துகள் விடுதல்.

வினா எண் 12423—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி, சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து தொலைதூரப் பேருந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரதது்த் துறை அமைச்சர் :

பேராவூரணி, சோழன் போக்குவரத்துக் கழகப் பணி மனையிலிருந்து தொலைதூரப் பேருந்துகள் இயக்குவதற்கான திட்டம் ஏதும் இல்லை.

19—

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட வைகை பாசனக் கண்மாய்களின் காலவாய்களை ஆழப்படுத்துதல்.

வினா எண் 1469—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட வைகை பாசனக் கண்மாய்களின் கால்வாய்களை ஆழப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவாகச் செய்திட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் கால்வாய்களுக்குத் தண்ணீர் வழங்கு அமைப்பு களை சீர் செய்யவும், கால்வாய்களை சீரமைக்கவும், கால்வாய் களின் பொதுக் கரைகளை சீரமைத்து பழைய நிலைக்கு உயர்த் தவும் ஒரு திட்டம் ரூ. 50.50 இலட்சம் மதிப்பீட்டில் 1992-93 ஆம் ஆண்டில் பகுதித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டு 1992-93 ஆம் நிதி ஆண்டின் வரவு செலவுத் தொகையாக ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 28]

20—

ஆனைமலை ஆறு, நல்லாறு அணைகளைக் கட்டி பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் இணைத்தல்.

வினா எண் 3958— திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆனைமலை ஆறு, நல்லாறு அணைகளைக் கட்டி பரம்பிக்குளம் - ஆளியாறு திட்டத்தில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆனைமலையாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு கேரள அரசுடன் துணை ஒப்பந்தம் செய்துகொள்ள தமிழ்நாடு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இரு மாநிலங்களுக்கு இடையே துணை ஒப்பந்தம் நிறைவேறியதும், அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லாறு திட்டத்தின் விவரங்கள் தமிழ்நாடு அரசால், கேரள அரசின் தகவலுக்காகவும், ஆய்வுக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்ட முன்னோடி அறிக்கை மத்திய நீர் வளக் குழுவுக்கும் அனுப்பப்பட்டு மத்திய நீர்வளக் குழுவால் கேட்கப்பட்டுள்ள விவரங்கள் அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

21—

ஆலங்குடியிலுள்ள குளங்களைத் தூர் எடுத்தல்.

வினா எண் 4794— திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீண்ட காலமாக மழை இல்லாமல் ஆலங்குடி வறட்சியாக இருக்கின்ற காரணத்தால், குளங்கள் எல்லாம் இருக்கும் இடமே தெரியாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குளங்கள் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆலங்குடி தொகுதியில் உள்ள அரசு பொதுப் பணித் துறை பராமரிப்பில் உள்ள குளங்கள் அனைத்தும் நன்கு பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. ஆண்டு தோறும் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு குளங்கள் மராமத்துப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும் இத்தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் குளங்கள் மற்றும் முன்னாள் ஜமீன் குளங்கள் போன்றவைகளுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம் போன்ற தலைப்புகளின்கீழ் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

22—

திண்டுக்கல் வட்டம், இரண்டலைப் பாறை அருகே என். ஆர் இ.பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கண்மாய்.

வினா எண் 5460—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலுகா அடியாதூத்து கிராமம் இரண்டலைப் பாறை அருகே என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சம் செலவில் கட்டப்பட்ட விவசாயிகளின் பாசன வசதிக்காக கட்டப்பட்ட கண்மாய் திண்டுக்கல் நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசாணை பிறப்பிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளின் பாசன நலன் கருதி முந்திய நோக்கத்தின்படி மீண்டும் மாற்ற அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் வட்டம், அடியாதூத்து கிராமம் இரண்டலைப்பாறை அருகே என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் பொதுப் பணித்துறை மூலம் பாசன வசதிக்கான திட்டம் ஏதும் கட்டப்

படவில்லை. ஆனால் திண்டுக்கல் வட்டம், அடியாதூத்து கிராமம் இரண்டலைப் பாறை அருகே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டில் ரூ. 30.30 இலட்சம் மதிப்பில் 250 ஏக்கர் பாசன வசதிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பாசனக் கால்வாய் தவிர இதர வேலைகள் முடிவடைந்துள்ளன. 1986-ல் இக்கண்மாயினை திண்டுக்கல் நகராட்சிப் பகுதி குடிநீர் வழங்கலை நிலைப்படுத்தும் பொருட்டு பயன்பட வேண்டும் எனவும், எக்காரணம் கொண்டும் பாசனத்திற்கு பயன்படுத்தக் கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது. எனவே பாசன கால்வாய் வெட்டப்படவில்லை. தற்பொழுது அரசு ஆணையின்படி திண்டுக்கல் குடிநீர் திட்டத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

(ஆ) தற்பொழுது திண்டுக்கல்லிற்கு பேரணை குடிநீர் வழங்கு திட்டம் நிறைவேற்றப்பட்டதாலும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் திட்டத் தலைப்பில் செயல்படுத்திய திட்டத்தை குடிநீருக்குப் பயன்படுத்துதல் கூடாது என்ற அரசு விதிமுறையினாலும் இந்தக் கண்மாயினை பொதுப்பணித் துறைக்குக் கொடுத்துவிட மாவட்ட ஆட்சியாளர் மூலமாக திண்டுக்கல் நகராட்சியிடம் கேட்கப்பட்டு உள்ளது.

23—

நீரார்—நல்லார் அணைகட்டும் திட்டம்.

வினா எண். 5780—திரு. டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீரார் - நல்லார்—அணைகட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) நீரார் - நல்லார் அணைகட்டும் திட்டத்தின் சாத்தியக்கூறு அறிக்கை பொதுப்பணித் துறையின் வாரியக் கூட்டு அறிக்கை மத்திய நீர்வளக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இந்தத் திட்டம் பரம்பிக்குளம் ஆழியாறு ஒப்பந்த ஆய்வுக் கூட்டத்தில் ஒரு பொருளாக சேர்க்கப்பட்டுள்ளது. 18—8—1990-ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பரம்பிக்குளம் ஆழியாறு ஒப்பந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்

தின்படி இத்திட்டத்தின் தொழில்நுட்ப விவரங்கள் கேரள அரசின் கருத்துக்களை அறியும் பொருட்டு கேரள அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. கேரள அரசின் இந்தத்திட்டத்திற்கான கருத்துக்கள் வந்தபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மேற்கொண்டு திட்டத்தை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

24—

கருப்பக்கோயில் அருவியில் சிறு அணை கட்டுதல்

வினா எண் 6546— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நத்தம் ஒன்றியத்திற்குட்பட்ட என். குட்டுப்பட்டிக்கு அருகே கருப்பக்கோயில் அருவியில் சிறு அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இந்த அணையை விரைவில் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) கருப்பக்கோயில் அருவி இடையில் கண்மாய் அல்லது அணைக்கட்டு அமைக்க வசதியான இடம் இல்லாத காரணத்தாலும், சம்பந்தப்பட்ட ஊர் மக்கள் எதுவும் தேவையென்று கருதாத காரணத்தாலும் இத்திட்டம் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்யத் தேவையில்லை என அரசு கருதுகிறது

1993 ஏப்ரல் 28]

25—

தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பிலுள்ள பூங்காவை அழகுபடுத்தல்.

வினா எண் 10744— திரு. எம். கே பாலன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பில் தற்போது உள்ள பூங்காவினை அழகுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பில் தற்போது உள்ள பூங்காவை அழகுபடுத்த, தக்க வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயாரித்த பின்னர் கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மேற்படி கருத்துப் பெறப்பட்டவுடன் அரசின் நிதி நிலைமைக்கேற்ப தகுந்த நடவடிக்கை அரசால் எடுக்கப்படும்

26—

நடுவிக்கோட்டை பெரியார் நகர் ஆதி திராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண் 11928— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை பெரியார் நகர ஆதி திராவிடர்கள் காலனிக்கு 1992-93ல் ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக் கோட்டை பெரியார் நகர் ஆதி திராவிடர் காலனியில் உள்ள குடிசைகளுக்கு ''குடிசைக்கு ஒரு விளக்கு'' திட்டத்தின் கீழ் இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்தில் தற்பொழுது நிலுவையில் இல்லை

27—

திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதிக்கு நம்பிவயலிலுள்ள மின்பகிர் மாற்றியைப் புதிதாக அமைத்தல்

வினா எண் 11934—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் பற்றாக் குறையாக இருப்பதால் 1992-93-ல் நம்பி வயலிலுள்ள ட்ரான்ஸ்பார்மரை மாற்றி புதிதாக அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காண உஞ்சிய விடுதிக்கு வழங்கப்படும் மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிதாக மாற்று மின் வழி அமைத்து நம்பி வயல் மின் பகிர்மாற்றி 5-லிருந்து மின்சாரம் வழங்க பணி துவங்கப்பட்டு விட்டது. பணிகள் முடிவுற்றதும் மின் பகிர்வு சீரடையும்.

28—

அதம்பை (தெற்கு) ஆதி திராவிடர்களுக்கு தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 11938—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கு) ஆதி திராவிடர்களுக்கு 1992–93-ல் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், அதம்பை (வதற்கு) ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு தெரு விளக்கு விஸ்தரிப்பு கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

29—

ஆதிதிராவிடர் தெருவிற்கும் ஊராட்சி தெருவிளக்கு இணைப்பிற்கும் முன்னுரிமையில் சலுகை அளித்தல்.

வினா எண் 12270—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆதி திராவிடர் தெருவிற்கும், ஊராட்சி தெருவிளக்கு இணைப்பிற்கும் 1992-93-ல் சீனியாரிட்டியில் சலுகை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை. ஆதி திராவிடர் தெருக்கள் உட்பட அனைத்து ஊராட்சி தெருவிளக்கு விண்ணப்பங்களும் பதிவு வரிசை அடிப்படையில் எடுத்துக் கொள்ளும் வழி முறையில் மாற்றம் செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

30—

பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி புதுநகர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 12291—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி புதுநகர் ஆதி திராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி புதுநகர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

31—

பெருமகளூர் கூத்தாடிவயல் ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் 12292—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் கூத்தாடிவயல் ஆதி திராவிடர்களுடைய காலனி வீடுகளுக்கு 1992-93-ல் ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

விடை—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் கூத்தாடிவயல் ஆதி திராவிடர்களுடைய காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தரக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

32—

அந்தோணியார்புரம் மீனவர் காலனி தெருவில் தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 12293—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரம் மீனவர் காலனி தெருவில் 1992-93-ல் தெருவிளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரம் மீனவர் காலனி தெருவில் தெருவிளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்தில் நிலுவையில் இல்லை.

33—

கம்பைப்பட்டினம் அம்மா பள்ளிவாசலுக்கு மின் இணைப்பு கொடுத்தல்.

வினா எண் 12295—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கம்பைப்பட்டினம் அம்மா பள்ளிவாசலுக்கு 1992-93-ல் மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கம்பைப்பட்டினம் அம்மா பள்ளிவாசலுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்தில் நிலுவையில் இல்லை.

34—

ஆலடிக்காடு பிள்ளையார் கோயிலுக்கு தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 12298—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தகாடு ஊராட்சி ஆலடிக்காடு பிள்ளையார் கோயிலுக்கு 1992-93-ல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தக்காடு ஊராட்சி, ஆலடிக்காடு பிள்ளையார் கோயிலுக்கு புதிதாக தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

35—

புதுக்குடி இருப்பில் ஊருக்குள் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 12299—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடக்கிக்காடு ஊராட்சி - புதுக்குடி இருப்பில் ஊருக்குள் 1992-93 இல் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடக்கிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பு பகுதியில் தெருவிளக்கு பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

36—

சேதுசாலை - அந்தோணியார்புரம் வரை வெற்றுச்சாலையோரத்தில் தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 12303—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம்' சேது சாலையில் இருந்து கொள்ளுக்காடு அந்தோணியார்புரம் வரை வெற்றுச் சாலை ஓரத்தில் 1992-93-ல் தெருவிளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேது சாலையிலிருந்து கொள்ளுக்காடு - அந்தோணியார்புரம் வரை வெற்றுச்சாலை ஓரத்தில் தெருவிளக்கு பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

37—

ஆலடிக்காடு ஆதிதிராவிடர் குடிசை வீடுகளுக்கு ஒற்றைவிளக்கு அமைத்தல்.

வினா எண். 12304—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி ஆலடிக்காடு ஆதி திராவிடர்களின் குடிமை வீடுகளுக்கு 1992-93-ல் ஒற்றை விளக்கு போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஊமத்தநாடு ஊராட்சி, ஆலடிக்காடு ஆதி திராவிடர்களின் 15 குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத்தரக் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்வாண்டு (1992-93) இறுதிக்குள் இந்த ஒற்றை விளக்கு இணைப்புகள் வழங்க ஆவன செய்யப்படும்.

38—

வெட்டன்விடுதியில் நயினான் கொல்லை செல்லும் முக்கத்தில் வேகத்தடுப்பு அமைத்தல்.

வினா எண் 12306—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதியில் இருந்து கறம்பக்குடி செல்லும் சாலையில் வெட்டன்விடுதியில் நயினான்கொல்லை செல்லும் முக்கத்தில் வேகத்தடுப்பு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வேகத்தடுப்பு அமைப்பதற்காக மாவட்ட போக்குவரத்து ஆலோசனைக்குழு மூலம் அனுமதி பெற்று வேகத்தடுப்பு அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

39—

திருத்தங்கல் தேர்வுநிலைப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

வினா எண் 3798—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருத்தங்கல் தேர்வுநிலைப் பேரூராட்சி, நகராட்சியாக மாற்றப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருத்தங்கல் தேர்வு நிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருமந்துறையை மையமாகக் கொண்டு ஒரு ஒன்றியம் அமைத்தல்.

வினா எண் 3986—திரு. செ. பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஏற்காடு தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருமந்துறையை மையமாக வைத்து ஒரு ஒன்றியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) ஏற்காடு தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருமந்துறையை மையமாக வைத்து புதிதாக ஒரு ஒன்றியம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) உள்ளாட்சி அமைப்புகளில் எவ்வித மாறுதலும் செய்யக் கூடாது என அரசின் தடையாணை தற்போது அமுலில் உள்ளது. இத்தடையாணை விலக்கப்பட்ட பின்னர் அரசுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவினங்கள் உட்பட இதர சாதக பாதக அம்சங்கள் அனைத்தையும் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கப்படவுள்ளது.

41—

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வில்லியநல்லூர் காலனிக்கு மயானப்பாதை அமைத்தல்.

வினா எண் 4142—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வில்லியநல்லூர் காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வில்லியநல்லூர் காலனிக்கு மயானப் பாதை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991-92 ஆம் ஆண்டு ரூ. 10,000 மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 28

42—

பலபத்து ராமபுரம் கிராமம் ஆதி திராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 4647— திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் பலபத்து ராமபுரம் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா ?—

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைசசர் :

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், பலபத்திர ராமபுரம் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கீழ்க்கண்ட திட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.

1.	சங்கணான் கிணறு (தேசிய வேலை வாய்ப்புத் திட்டம்).	20	வீடு
2.	மருத்தாத்தாள்புரம் (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்)	20	வீடு
		40	வீடு

மேலும் இதுவரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாத கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்த பின்னர் தகுதி உடைய நபர்கள் இருந்தால் 1992–93 ஆம் வருடம் வீடு கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

43—

மாநகராட்சிப் பள்ளிகளை தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரித்தல்.

வினா எண் 5059— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சிப் பள்ளிகளை பராமரிக்கும் பொறுப்பினை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்து சிறந்த முறையில் இயக்கிட நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா?

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மாநகராட்சிப் பள்ளிகளை பராமரிக்கும் பொறுப்பினை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளும் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

44—

நாவலூர் கிராம ஆதி திராவிட மக்களுக்கான மயானப் பாதையை சீர் செய்தல்.

வினா எண் 5403—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, நாவலூர் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு மயான பாதையை சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் ஊராட்சி ஒன்றியம், நாவலூர் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு, 1992–93 ஆம் ஆண்டில் மயானப் பாதையை மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது

45—

சானார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் ஊராட்சிகளை மாற்றியமைத்தல்

வினா எண் 5596—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியங்களில் எந்தெந்த ஊராட்சிகளை மாற்றி அமைக்க அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) ஆம் எனில், அரசு அவற்றினை பரிசீலித்து முடிவு ஏதேனும் எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவற்றின் விவரம் என்ன ?

(ஈ) எந்தெந்த ஊராட்சிகள் மாற்றி அமைக்கப்படவிருக்கின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எந்த ஊராட்சியையும் மாற்றி அமைக்க கோரிக்கைகள் வரப்பெறவில்லை. நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் சீரங்காட்டுப்பட்டி என்ற ஊராட்சியை இரு ஊராட்சிகளாகப் பிரிக்கக் கோரிக்கை வரப்பெற்று அதன் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவிட்டது.

(ஆ) சீரங்காட்டுப்பட்டி ஊராட்சியினை இரண்டாகப் பிரித்து சீரங்காட்டுப்பட்டி என்ற ஊராட்சியும், கொசுக்குறிச்சி என்ற புதிய ஊராட்சியும் அமைக்க அறிக்கைகள் வெளியிடப் பட்டுள்ளன. இவ்வூராட்சிப் பிரிவினை ஊராட்சித் தேர்தல் நடைபெறும் நாளில் இருந்து அமலுக்கு வரும்.

(இ) பிரிக்கப்படாத சீரங்காட்டுப்பட்டி ஊராட்சியில் 12 உட்கிளை கிராமங்கள் இருந்தன அவற்றில் 7 உட்கிளை கிராமப் பகுதிகளைப் பிரித்து கொசுக்குறிச்சி என்ற புதிய ஊராட்சியை அமைக்கவும், எஞ்சிய ஐந்து உட்கடைக் கிராமங்களைக் கொண்ட பகுதிக்கு சீரங்காட்டுப்பட்டி என்ற ஊராட்சி அமைக்கவும் 15–3–1990ல் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

(ஈ) இவ்விரு ஊராட்சி ஒன்றியங்களிலும் வேறெந்த ஊராட்சியும் மாற்றியமைக்கப்பட தற்சமயம் சாத்தியம் இல்லை

46—

பாரபுலிமேடு ஊரை இரண்டாகப் பிரித்து அதன் குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா எண் 6400—திரு வே பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம், அததாணி பேரூராட்சிககுச் சேர்ந்த ''பாரபுலிமேடு'' என்ற ஊரை இரணடாகப் பொதுப்

1993 ஏப்ரல் 28]

பணித்துறை வாய்க்கால் பிரிப்பதால் அதன் குறுக்கே சிறிய பாலம் கட்டித்தர அரசு முயலுமா ?

(ஆ) இப்பாலம் கட்ட என்ன செலவாகும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம், அத்தாணி பேரூராட்சியைச் சேர்ந்த பாரபுலிமேடு என்ற ஊரில் வாய்க்கால் மீது சிறு பாலம் கட்ட ரூ. 75,000 செலவாகும் எனினும், பேரூராட்சியின் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் தற்போது அப்பணியை எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

47—

தில்லங்காடு ஊராட்சி, வீரசோழன் குளத்தை ஆழப்படுத்துதல்.

வினா எண் 6437—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் தில்லங்காடு ஊராட்சி குளமான வீரசோழன் குளத்தை ஆழப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புக்கரம்பை ஊராட்சி தில்லங்காடு வீரசோழன் ஊராட்சி குளத்தை ஆழப்படுத்தி பாராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

48—

கொரட்டூரிலிருந்து பெரியகத்தி கோட்டைக்கு செல்லும் கப்பி சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் 6700—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொரட்டூரிலிருந்து பெரிய கத்தி கோட்டைக்கு செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் கொரட்டூரிலிருந்து பெரியகத்தி கோட்டைக்கு செல்லும் கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தர போதிய நிதி வசதி இல்லாததால் செயற் குறிப்பேதும் இல்லை.

49—

வல்லவன்பட்டிணம் முனீஸ்வரர் கோவில் குளத்தை பராமரித்தல்.

வினா எண் 6893—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் திருத்தேவன் ஊராட்சி வல்லவன்பட்டிணம் முனீஸ்வரர் கோவில் குளத்தை பராமரித்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவன் ஊராட்சியில் உள்ள வல்லவன்பட்டிணம் முனீஸ்வரர் கோவில் குளத்தைப் பராமரிப்பது பற்றிய திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

1993 ஏப்ரல் 28]

50—

தாண்டவராயன் சோழகன்பேட்டையிலிருந்து பிச்சாவரம் வரை உள்ள இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7564—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தாண்டவராயன் சோழகன்பேட்டையிலிருந்து பிச்சாவரம் வரை உள்ள இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தாண்டவராய சோழகன் பேட்டையிலிருந்து பிச்சாவரம் வரை உள்ள இணைப்புச் சாலையை அகலப்படுத்தியதற்கு எதிராக நில உரிமையாளரால் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. அவ்வழக்கு முடிவுக்கு வந்த பின்புதான் மேற்சொன்ன சாலையை தார்ச் சாலையாக மாற்றும் பணி மேற்கொள்வது பற்றி முடிவு செய்யப்படும்.

51—

தென்காசி ரோட்டில் ஓடையின் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா எண் 8520—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆலங்குளம் நகரம் தென்காசி ரோட்டில் சி.எஸ்.ஐ. சர்ச்சுக்கு அருகில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): ஆலங்குளம் நகரம் தென்காசி ரோட்டில் சி.எஸ்.ஐ. சர்ச்சுக்கு அருகில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் கட்ட, ஒருங்கிணைந்த சிறு நகர் வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நகர் பராமரிப்பு இயக்குநர் அனுமதி கிடைத்தவுடன் பணி துவங்கப்படும்.

52—

பெருச்சி வன்னியம்பட்டியிலிருந்து அம்மாபுதுப்பட்டிக்கு சாலை வசதி அமைத்தல்.

வினா எண் 9810—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் உள்ள பெருச்சி வன்னியம்பட்டியிலிருந்து அம்மாபுதுப்பட்டிக்கு சாலை வசதி அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் உள்ள பெருச்சி வன்னியம்பட்டியிலிருந்து அம்மா புதுப்பட்டிக்கு சாலை வசதி செய்ய நிதிப் பற்றாக்குறையினால் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

53—

வத்தராயன் தெத்து காலனிக்கு மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 10761—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம் வத்திராயன் தெத்து காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும்?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியம் வத்தராயன் தெத்து காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தரும் செயற் குறிப்பு தற்பொழுது ஏது மில்லை.

54—

வயலாமூர் காலனி மக்களுக்கு மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 10777—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வயலாமூர் காலனி மக்களுக்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வயலாமூர் காலனிக்கு தற்போது மயானப் பாதை வசதி செய்து தரும் செயற் குறிப்பு ஏதுமில்லை.

55—

ஜெயங்கொண்டான் காலனி மக்களுக்கு மயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 10779—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

[1993 ஏப்ரல் 28

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள ஜெயங்கொண்டான் காலனி மக்களுக்காக மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஜெயங்கொண்டான் காலனி மக்களுக்காக மயானப் பாதை வசதி அமைத்துக் கொடுக்க செயற் குறிப்பேதும் தற்போது இல்லை.

56—

சாத்தப்பாடி ஆதிதிராவிடர் மக்களுக்குச் சாலை வசதி செய்தல்

வினா எண் 10784—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள சாத்தப்பாடி ஆதி திராவிட மக்களுக்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம், மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாத்தப்பாடி ஆதி திராவிட மக்களுக்கு 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சாலை வசதி செய்து கொடுக்க பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

57—

சித்தேரி கிராம ஆதி திராவிட மக்களுக்கு மாயானப் பாதை அமைத்தல்.

வினா எண் 10786— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள சித்தேரி கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு மயானப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சித்தேரி கிராமத்தில் மயானப் பாதை தற்போது அமைக்கும் செயற் குறிப்பேதும் இல்லை.

58—

வண்டராயன்பட்டிலிருந்து அழிச்சிக்குடி வரை சாலை வசதி செய்தல்.

வினா எண் 10789— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள வண்டராயன்பட்டியில் இருந்து அழிச்சிக்குடி காலனி வரையில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி ஒன்றியம், வண்டராயன்பட்டு— அழிச்சிக்குடி காலனி சாலையை தார்ச் சாலையாக மேம்பாடு செய்யும் பணி நடைபெறுகிறது.

[1993 ஏப்ரல் 28

59—

கோவை ரோட்டிலிருந்து கிழக்கே பணிக்கம்பட்டி வரை உள்ள சாலையை தார் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 11130— திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், கோவை ரோடிலிருந்து கிழக்கே பணிக்கம்பட்டி வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் கோவை ரோடிலிருந்து கிழக்கே பணிக்கம்பட்டி வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்ற நிதி ஆதாரமின்மையால் செயற் குறிப்பு ஏதுமில்லை.

60—

வைத்தினாதம்பேட்டை, புதுக்குடி, ராயமுண்டலம்பட்டி, பெரமூர் போன்ற பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண் 11351—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியிலுள்ள வைத்தினாதம் பேட்டை, புதுக்குடி, ராயமுண்டலம்பட்டி, பெரமூர் போன்ற பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருவையாறு தொகுதியிலுள்ள வைத்தினாதம் பேட்டை, புதுக்குடி, ராயமுண்டலம்பட்டி, பெரமூர் போன்ற பெரிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிப்பதற்கான செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. கருத்துருக்கள் வரப் பெற்றால் அனைத்து அம்சங்களும் கருத்திற் கொண்டு பரிசீலிக்கப்படும்.

1993 ஏப்ரல் 28]

61—

பரமக்குடி தொகுதி, சாத்தனூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் பயன் பெறும் ஊர்கள்.

வினா எண் 11385—டாக்டர் எஸ்.சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், பரமக்குடி தொகுதியில் சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எத்தனை ஊர்கள் சேர்க்கப்பட்டுள்ளன?

(ஆ) இவற்றுள் பயன்பெறும் ஊர்களின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 56 கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) இவற்றுள், சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தற்போது கீழ்க்கண்ட ஒன்பது கிராமங்கள் பயன்பெறுகின்றன.

(1) பாண்டியூர், (2) முக்கூட்டுச்சாலை, (3) சின்ன அக்கிரமேகி, (4) பாப்பர் கிரகிக்கோட்டை, (5) கள்ளர் கிரகிக்கோட்டை, (6) குலுக்கர் கிரக்கிகோட்டை, (7) அரசடிவண்டல், (8) சித்தனேந்தல், (9) மணிச்சனேந்தல்.

62—

கரம்பயம்—வேப்பன்காடு சாலையில் கல்வெர்ட் அமைத்தல்.

வினா எண் 11448—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம்—வேப்பன்காடு சாலையில் 1992-93-ல் கல்வெர்ட் அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம்—வேப்பன்காடு சாலையில் கி. மீ. 2/4-ல் கல்வெர்ட் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

63—

ஆண்டாங் கொல்லைக்கு வானொலிப் பெட்டி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி அளித்தல்.

வினா எண் 11973—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சி ஆண்டாங் கொல்லைக்கு 1992-93-ல் வானொலிப் பெட்டி, தொலைக் காட்சிப் பெட்டி அளிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டாங்கொல்லை கிராமத்தில் 10 குடியிருப்புகளே உள்ளன. அதன் மக்கள் தொகை 50 க்குக் குறைவாகவே உள்ளது. எனவே அங்கு 1992–93-ல் தொலைக் காட்சிப் பெட்டியோ, வானொலிப் பெட்டியோ அளிக்க செயற் குறிப்பு இல்லை.

64—

இரண்டாம்புளிக்காடு கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் கடலோர பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு புதிய நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண் 12022—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கடலோர பகுதிக்கு தண்ணீர் சப்ளை செய்யும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு புதிய நீர்மூழ்கி மோட்டார் பொருத்தி தண்ணீர் வழங்க 1992-93-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் கடலோர பகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு புதிய நீர்மூழ்கி மோட்டார் பொருத்தி தண்ணீர் வழங்க தற்போது செயற் குறிப்பு ஏதுமில்லை.

65—

அம்மையாண்டியில் ஆதி திராவிடர் காலனியை பழுதுபார்த்தல்.

வினா எண் 12046—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டியில் 1992-93-ல் ஆதி திராவிடர் காலனியை பழுது பார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், அம்மையாண்டியில் கட்டப்பட்டுள்ள ஆதி திராவிடர் காலனியை பழுது பார்ப்பதற்காக அரசு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே செயற்குறிப்பு ஏதும் இல்லை.

66—

பெருமகளூர் நகர், இந்திரா நகர் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 12065—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகர், இந்திரா நகர் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு 1992-93-ல் காலனி வீடு கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவா சத்திரம் ஒன்றியத்தில் பெருமகளூர் பேரூராட்சியில் இந்திரா நகர் உள்ளது. இங்கு 1990-92-ல் ஆதி திராவிடர்களுக்கு 21 வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதித்து 21 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதே பகுதியில் வாழும் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க இயலாது.

67—

குப்பத்தேவன் வலசையில் படித்துறை அமைத்தல்.

வினா எண் 12069—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஊமத்தநாடு ஊராட்சி குப்பத்தேவன் வலசையில் 1992-93-ல் படித்துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி, குப்பத்தேவன் வலசையில் 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலேயே ரூ. 8,000 செலவில் படித்துறை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

68—

உலக்கொல்லை குடியிருப்புக்கு கல்வெர்ட் அமைத்தல்.

வினா எண் 12074—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி,, சோலைக்காடு ஊராட்சி உலக்கொல்லை குடியிருப்பு கி.மீ. 0/2-ல் கல்வெர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், ஒன்றியம், சோலைக்காடு ஊராட்சி வாழைக்கொல்லை கி. மீ. 0/2-ல் ரூ. 10,000 மதிப்பீட்டில் கல்வெர்ட் 1991-92—ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து செயற்குறிப்பேதும் இல்லை.

69—

ருத்ர சிந்தாமணி ஊராட்சி கிராம சாலைக்கு தடுப்புச் சுவர் அமைத்தல்.

வினா எண் 12079—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ருத்ரசிந்தாமணி ஊராட்சி கிராம சாலை கி.மீ. 0/2-ல் தடுப்புச்சுவர் 1992—93-ல் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ருத்ரசிந்தாமணி ஊராட்சி, ருத்ரசிந்தாமணி கிராம சாலை கி.மீ. 0/2-ல் ரூ. 12,900 மதிப்பீட்டில் 1991—92—ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு விட்டது. எனவே இது குறித்து செயற்குறிப்பு இல்லை.

70—

புதுநகர் ஆதிதிராவிடர்களுக்கு வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டி அளித்தல்.

வினா எண் 12411—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வ) ஊராட்சி புதுநகர் ஆதிதிராவிடர்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அளிக்க 1992—93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1993 ஏப்ரல் 28

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

71—

அந்தோணியார்புரம் மீனவர் காலனிக்கு குடிதண்ணீர் பைப் விஸ்தரிப்பு கொடுத்தல்.

வினா எண் 12658—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரம், மீனவர் காலனிக்கு தனித்தனியாக குடிதண்ணீர் பைப் விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அந்தோணியார்புரத்தில் உள்ள மீனவர் காலனியில் இரண்டு தாரா குடிநீர் பைப்களும், கூட்டுறவு நீர்த் திட்டமும் இயங்கி அந்த மீனவர் காலனி குடியிருப்பிற்கு போதுமான குடிதண்ணீர் வழங்கி வருகிறது. மேலும் தனித்தனியாக ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் அமைக்க அப்பகுதியில் பத்து அடிக்குக் கீழே குடிநீர் தன்மையற்ற ஒப்புநீர் கிடைப்பதால் மேல்நிலை தொட்டி அமைக்க இயலாத நிலை உள்ளது. எனவே தனித் தனியாக பைப் விஸ்தரிப்பு கொடுக்க இயலாத நிலை உள்ளது.

72—

கீழநெடுவாய் ஆயக்கட்டு ஏரியிலுள்ள போக்குமடையை செப்பனிடுதல்.

வினா எண் 14662—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, கீழநெடுவாய் ஆயக்கட்டு ஏரியிலுள்ள போக்குமடைபழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை செப்பனிட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதி, கீழநெடுவாய் ஆயக்கட்டு ஏரியிலுள்ள போக்குமடையைச் செப்பனிடும் பணியினை, ஆண்டிமடம் ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றிய அளவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

73—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பு நீரை குடிநீராக்கும் திட்டம்.

வினா எண் 14717—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பு நீரை குடிநீராக்கும் அமைப்பு எத்தனை இடங்களில் உள்ளன?

(ஆ) அவற்றால் பயன்பெறும் பொது மக்கள் தொகை எவ்வளவு?

(இ) மேலும் ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பு நீரை குடிநீராக்கும் அமைப்பு 13 இடங்களில் உள்ளன இவற்றால் மொத்தம் 23,843 பேர் பயன் அடைகின்றனர்.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் தேவையை கணக்கில் கொண்டு உப்புநீரை குடிநீராக்கும் திட்டம் ரூ. 125.5 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஜப்பான் நாட்டு உதவிக்காக திட்ட அறிக்கை மைய அரசின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 3.8 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் அளவு கொண்ட இயந்திரம் ஒன்று சாயல்குடியிலும் நடுத்தர உற்பத்தி திறன் கொண்ட அமைப்பு இராமநாதபுரம், ராமேஸ்வரம், உச்சிபுளி, திருபுலாணி மன்னடிமாலர், பகைவெண்டி ராஜகல்பாளையம் ஆகிய இடங்களிலும் இது தவிர மேலும் 43 இடங்களில் சிறிய அளவிலான உற்பத்தித்திறன் கொண்ட அமைப்புகளை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

74—

கே. ராமநாதபுரம் புதூரில் புதிய நியாயவிலைக் கடை திறத்தல்.

வினா எண் 8971—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கே. ராமநாதபுரம் புதூரில் புதிய நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கடம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கே. ராமநாதபுரம் புதூரில் 150 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இந்த கிராமம் கடம்பூர் கிராமத்திலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ளது. கடம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நலிந்த பொருளாதார நிலையில் செயல்படுவதால் மேற்படி கே. ராமநாதபுரம் கிராமத்தில் 150 குடும்ப அட்டைதாரர்களுக்கு தனியே கடை திறக்க தற்பொழுது சாத்தியக் கூறுகள் இல்லை. இந்த அட்டைதாரர்கள் கடம்பூர் கடை எண் 2-லிருந்து உணவுப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

75—

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத் துணைப் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் 9849—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு உணவு, மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத் துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 28]

(அ) மற்றும் (ஆ) தற்போது புதுக்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்காக உள்ள துணைப் பதிவாளர் (பால் பதம்) அலுவலகத்திலிருந்து பதவி இடங்களை திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு மாற்றம் செய்ய பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

76—

நியாய விலைக் கடைகளில் திடீர் சோதனை நடத்தும் அதிகாரத்தின் மாற்றங்கள்.

வினா எண் 10491—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் திடீர் சோதனை நடத்தும் அதிகாரம் தற்போது யார் யாருக்கு உள்ளது?

(ஆ) இதில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பண்டங்கள் (குடும்ப அட்டைகள் மூலம் விநியோகம் செய்தலை ஒழுங்கு படுத்துதல்) ஆணை, 1982-ன் கீழ் நியாயவிலைக் கடைகளைத் திடீர் சோதனை நடத்தும் அதிகாரம் பின்வரும் அலுவலர்களுக்கு உள்ளது:—

1, சென்னை நகரம்:

(1) உதவி ஆணையர் (உணவுப் பொருள் வழங்கல்).

(2) கூட்டுறவு சார் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்).

(3) தாசில்தார் அல்லது தனி தாசில்தார்.

(4) கண்காணிப்பாளர்/சோதனை ஆய்வாளர்கள் (உணவுப் பொருள் வழங்கல் பணி).

2. மாவட்டங்கள்:

(1) மாவட்ட விநியோக அலுவலர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(2) உதவி ரேஷன் அலுவலர்.

(3) தாசில்தார்.

(4) தாலுக்கா விநியோக அலுவலர்.

(5) தனி தாசில்தார்.

(6) துணை தாசில்தார் (பறக்கும்படை).

(7) கூட்டுறவு சார் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்).

(8) தனி வருவாய் ஆய்வாளர் (உணவுப் பொருள் வழங்கல் பணி).

பின்வரும் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களும் தாங்கள் செயல்படுத்தும் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நியாய விலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்கின்றனர்.

(1) ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலர்கள்.

(2) தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்கள்.

3) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்கள்.

(4) குடிமைப்பொருள் (குற்ற புலனாய்வுத்துறை) அலுவலர்கள்.

(5) சுகாதாரத்துறை ஆய்வாளர்கள்.

நியாய விலைக் கடைகளை திடீர் சோதனை நடத்தும் அதிகாரம் தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பண்டங்கள் (குடும்ப அட்டைகள் மூலம் விநியோகம் செய்தலை ஒழுங்கு படுத்துதல்) ஆணை 1982-ன் கீழ் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டில் கூட்டுறவு சார்பதிவாளர் பதவியிலிருப் போருக்கு உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 பிரிவு 82-ன் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்யும் அதிகாரம் கூட்டுறவு சார் பதிவாளர்கள் மற்றும் அதற்கு மேல் நிலையிலுள்ள கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்கு உள்ளது. மேலும், பதிவாளரால் அதிகாரம் வழங்கப்பட்ட இதர சார் நிலை அலுவலர்களும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்யலாம்.

(ஆ) இதில் தற்போது மாற்றங்கள் ஏதும் செய்யப்பட வில்லை.

1993 ஏப்ரல் 28]

77—

அரிசி வழங்குவதற்காக தனியாக குடும்ப அட்டை வழங்குதல்.

வினா எண். 10723—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசி வழங்குவதற்காக தனியாக குடும்ப அட்டை வழங்க அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) அரிசி வழங்குவதற்காக தனியாக குடும்ப அட்டை வழங்க அரசிடம் பரிந்துரைகள் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

78—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கழிப்பிட வசதிகள் சுகாதார விதிகளுக்குட்பட்டு ஏற்படுத்துதல்.

வினா எண் 11577 டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கழிப்பிட வசதிகள் சுகாதார விதிகளுக்குட்பட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) மாநிலத்தில் உள்ள பெரும்பாலான மலைத் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு சுகாதார விதிகளுக்குட்பட்டு கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கழிப்பிட வசதிகள் சுகாதார விதிகளின்படி செய்து கொடுக்காத, பராமரிக்காத தோட்ட நிறுவன வேலையளிப்பவர்கள் மீது தொழிலாளர் துறை ஆய்வாளர்களால் நடவடிக்கை எடுககப்பட்டு வருகிறது.

[1993 ஏப்ரல் 28

சமீபத்தில் நாகர்கோயில் தோட்ட நிறுவன ஆய்வரால், கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தி தராத (1) மாஞ்சோலை எஸ்டேட் உரிமையாளருக்கு விதி 17-ன் கீழும், (2) ஊத்து எஸ்டேட் உரிமையாளருக்கு விதி 45 (5)-ன் கீழும், (3) மணிமுத்தாறு எஸ்டேட் போன்ற தோட்ட உரிமையாளருக்கு விதி 12 (ஏ)-ன் கீழும் ஆப்வாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கழிப்பிட வசதிகள் சுகாதார வசதிகளுக்குட்பட்டு ஏற்படுத்த 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு :

விதி 12 (ஏ).—ஒவ்வொரு மலைத் தோட்டங்களிலும் 50 ஹெக்டேர் மற்றும் அதற்குட்பட்ட பரப்புக்கு ஒரு கழிப்பிடம் வீதம் அமைத்துத் தரப்பட வேண்டும்.

விதி 12 (பி).—ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனி நுழைவு வசதிகளுடன் கழிப்பிடங்கள் அமைக்க வேண்டும்.

விதி 13.—பொது சுகாதார விதிகளின்படி கழிப்பிடம் அமைக்கப்பட்டு, அவை தண்ணீர் மற்றும் கழிவு செல்ல வசதி களுடன் இருக்க வேண்டும்.

விதி 14.—ஒவ்வொரு கழிப்பிடமும் மூடப்பட்டு தனி யாக மற்றும் கதவுகளுடன் இருக்க வேண்டும்.

விதி 15.—கழிப்பிடத்தில் ஆண்/பெண் என்று குறிப் பிட்டு ஆண்/பெண் படம் வரையப்பட வேண்டும்.

விதி 16.—கழிப்பிடங்களுக்கு குழாய் மூலமும் அல்லது அருகில் உள்ள தொட்டி மூலமும் தண்ணீர் வசதி செய்து தரப் பட வேண்டும்.

விதி 17.—மலைத் தோட்டங்களில் 20 ஹெக்டேர் அல்லது அதற்குட்பட்ட பரப்புக்கு ஒரு சிறுநீர் கழிப்பிடம் வீதம் ஆண்கள்/பெண்களுக்கு தனித்தனியாக செய்து தரப்பட வேண்டும்.

விதி 18.—சிறுநீர் கழிப்பிடம் பொது சுகாதார விதி களின்படி அமைக்கப்பட்டு தண்ணீர் மற்றும் கழிவு செய்ய வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும்.

விதி 19.—கழிவு நீர் வெளியேற தகுந்தபடி வடிகா கள் அமைக்கப்பட்டு அவை முறையாக சுத்தம் செய்யப்பட வேண்டும்.

1993 ஏப்ரல் 28]

விதி 45 (5)—வேலையளிப்பவர் தோட்ட தொழிலாளர்கள் குடியிருப்புகளின் அருகாமையில் உள்ள குப்பைகளை அகற்றிடவும் கழிப்பிடங்களை அன்றாடம் சுத்தம் செய்து கழிவுகளை அகற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி விதிகளின்படி தோட்ட உரிமையாளர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு கழிப்பிட வசதிகள் செய்து தந்துள்ளார்களா என்று தோட்ட நிறுவன ஆய்வர்கள் ஆய்வு நேரத்தில் உறுதி செய்து வருகிறார்கள். மேற்படி சுகாதார வசதிகளை ஏற்படுத்தாத தோட்ட நிறுவனங்கள் மீது இத்துறை ஆய்வர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

79—

தமிழகத்தில் பீடி, சுருட்டுத் தொழிலாளர் நலச் சட்டம் அமுல் படுத்தல்.

வினா எண் 13691—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழகத்தில் பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் நலச் சட்டம் அமல் நடத்தப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் 1966 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம் அமல் நடத்தப்படுகிறது. இருப்பினும், பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான சலுகைகள் கிடைக்காத வண்ணம் பீடித் தொழில் நிறுவன உரிமையாளர்கள் பலர் சட்ட விதிகளை கடைப்பிடிப்பதில்லையென்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற ஒரு புகாரை விசாரித்த உச்ச நீதிமன்றம் 19—11—1991-ல் வழங்கிய தீர்ப்பில் உண்மையான தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான சலுகைகள் போய்ச் சேரும் வகையில் சட்ட விதிகள் அமுலாக்கப்பட வேண்டுமென்று உத்திரவிட்டுள்ளது. அதனடிப்படையில் அமுலாக்கப்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உண்மையான பீடித் தொழிலாளர்களைக் கண்டறிய கணக்கெடுப்பு பணி நடத்தப்பட்டது. அப்பணி இன்னமும் தொடர்கிறது. இம் மாவட்டத்தில் பீடித் தொழில் நிறுவனங்களில் சட்ட விதிகளை

சிறப்பாக அமல்படுத்த 1—1—1992 முதல் கூடுதலாக 6 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுமார் 55,600 பீடித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பாஸ் புத்தகங்களை கணக்கெடுத்ததில் 32,000 பெண் தொழிலாளர்கள் ஆண்கள் பெயரில் வழங்கப்பட்ட பாஸ் புத்தகங்கள் அடிப்படையில் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உண்மையான பெண் தொழிலாளர்கள் பெயரில் பாஸ் புத்தகங்கள் மாற்றி வழங்க மத்திய சுங்கவரி கலெக்டர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுமார் 400 பீடி நிறுவன உரிமையாளர்கள் மீது தொழிலாளர் நலச் சட்ட விதிகளைக் கடைபிடிப்பதில் காணப்பட்ட பல்வேறு முரண்பாடுகளுக்காக இவ்வருடம் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற கட்டளைகள் அமலாக்கப்படுவது உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டி அவர்களால் 3 மாதங்களுக்கொரு முறை மத்திய மாநில அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி திறனாய்வு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்ற கட்டளைகள் பீடித் தொழில் அதிகமுள்ள திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் அமுலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இப்போது வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் உட்பட பீடித் தொழில் அதிகமுள்ள மற்ற மாவட்டங்களிலும் கணக்கெடுப்புப்பணி மேற்கொள்ளவும், அமுலாக்கப்பணி தீவிரப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

80—

கிராமப் பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் கட்டித்தரும் திட்டம்.

வினா எண் 5874—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

கிராமப் பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் கட்டித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

கால்நடை மருந்தக கட்டிடங்கள் கட்ட குறைந்தது ஒரு ஏக்கர் நிலமாவது துறைக்கு இனாமாக ஊராட்சி ஒன்றியம் வழங்கவேண்டும். கால்நடை மருந்தக கட்டிடம் கட்டுவதற்கு

1993 ஏப்ரல் 28]

ஆகும் செலவில் உரிய பங்குத் தொகையினை ஊராட்சி ஒன்றியம் பொது நிதியிலிருந்து வழங்க சம்மதித்து தீர்மானம் வழங்க வேண்டும். அரசு வழங்கும் மான்யத் தொகை போக ஒன்றியத்தின் முதல் கால்நடை மருந்தகமாக அமையுமானால் 25 சதவீதமும், 2-வது மருந்தகமாக அமையுமானால் 50 சதவீதமும், 3-வது மருந்தகமாக அமையுமானால் 75 சதவீதமும், 4-வது மருந்தகமாக அமையுமானால் 100 சதவீதமும் பங்குத் தொகை யாக வழங்க வேண்டும். மேற்படி நிபந்தனைகளை நிறைவேற்றி வருகின்ற ஒன்றியங்களிலுள்ள நிரந்தரக் கட்டிடம் இல்லாத கால்நடை மருந்தகத்திற்கு ஆண்டு தோறும் தகுதியின் அடிப்படையில் நிதி வசதியினை அடிப்படையாக கொண்டு நிரந்தரக் கட்டிடம் கட்டித் தரப்படுகிறது.

81 —

கரூரில் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 8849— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கரூர் கால்நடை மருந்தகம் கடந்த 1926 ஆம் ஆண்டிலிருந்து வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முயற்சி எடுத்து வருகிறதா?

(இ) கரூர் நகராட்சி கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்ட அரசுக்கு இடம் கொடுக்க விருப்பம் தெரிவித்துள்ளதா?

(ஈ) ஆம் எனில், கால தாமதத்திற்கு என்ன காரணம்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) கரூர் நகராட்சி, கரூர் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட வார்டு எண். 2, பிளாக் எண். 28-ல் 15,126 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தை வழங்க நகர மன்றத்திற்கு மறுப்பு இல்லையெனத் தீர்மானம் வழங்கியுள்ளது.

(ஈ) கரூர் கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்ட ஆகும் நிலத்தைக் கால்நடை பராமரிப்புத் துறை பெற மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வருவாய்த் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக நில ஒதுக்கீடு இன்னும் பெறப்படாததால், கட்டிடம் கட்டும பணி ஆரம்பிக்கப்படவில்லை.

82—

வெட்டன் விடுதியில் இயங்கும் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 10551— திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதியில் இயங்கும் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதியில் இயங்கும்கால்நடை மருத்துவமனைக்கு புதியகட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் தற்பொழுது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

83—

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நலத் திட்டங்கள்.

வினா எண் 11862—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலம் 1992-93 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நலத் திட்டங்களின் விவரம் என்ன?

(ஆ) அவற்றின் மொத்த தொகை ஆண்டுக்கு எவ்வளவு?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) 1992-93 ஆம் ஆண்டு ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு செயல்படுத்தப் படுகின்றன.

வ. எண்.	திட்டத்தின் பெயர்.	1992-93 ஆம் ஆண்டு இலக்கு. பொருள்.	நிதி (ரூபாயில்.)
(1)	(2)	(3)	(4)
1	**சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் :**		
1.	ராகி விதை விநியோகம்	500 கி.	2,000
2.	சோள விதை விநியோகம்	1800 கி.	7,200
3.	பயிர் பாதுகாப்பு கருவிகள்	20 எண்கள்	12,000
4.	வேளாண் கருவிகள்	27 எண்கள்	13,500
2	**ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தித் திட்டம் :**		
1.	நெல் விதை விநியோகம்	78 மெ. டன்.	1,42,940
2.	பயிர் பாதுகாப்பு கருவிகள்	65 எண்கள்	39,000
3.	வேளாண் கருவிகள்	65 எண்கள்	29,250
3	**தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம் :**		
1.	பயறு விதை பெருவிளக்கப் பண்ணை.	2 எண்கள்	10,250
2.	பயறு சான்று விதை கொள்முதல்.	15 குவிண்டால்	3,000
3.	பயறு சான்று விதை விநியோகம்,	15 குவிண்டால்	4,500

(1)	(2)	(3)	(4)
4.	பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம்.	15 எக்டர்	1,125
5.	பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம்.	6 எண்கள்	3,000
6.	ரைசோபியம் விநியோகம்	500 எண்கள்	750
7.	வேளாண் கருவிகள் விநியோகம்.	4 எண்கள்	2,000
8.	தெளிப்பு நீர் கருவி	1	10,000
4.	**தென்னை அபிவிருத்தித் திட்டம் :**		
1.	நெட்டை கன்றுகள் விநியோகம்.	3,000 எண்கள்	25,500,
2.	நெட்டை மற்றும் குட்டை கன்றுகள் விநியோகம்.	8,500 எண்கள்	89,250
3.	வாடல் நோய் தடுப்பு திட்டம்.	320 மரங்கள்	3,200
4.	புதிய பரப்பில் சாகுபடி	22 எக்டர்	66,000
5.	**எண்ணெய் வித்து பகுதி-2 திட்டம் :**		
	நிலக்கடலை விதை விநியோகம்.	25 எக்டர்	12,500
6.	**சிடா உதவியுடன் கூடிய வேளாண் கருவிகள் திட்டம் :**		
	மரக்கன்றுகள் விநியோகம்	10,000 எண்கள்	7,000
7.	**சோயா மொச்சை அபிவிருத்தித் திட்டம் :**		
	0.4 சோயா திடல்	8 எண்கள்	2,320
8	**எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் :**		
1.	நிலக்கடலை சான்று விதை உதவித் தொகை.	290 குவிண்டால்	58,000

1993 ஏப்ரல் 28]

(1)	(2)	(3)	(4)
2.	எள் சான்று விதை உதவித் தொகை.	2 குவிண்டால்	400
3.	நிலக்கடலை உண்மைச் சான்று.	200 குவிண்டால்	10,000
4.	நிலக்கடலை சான்று மற்றும் வீரிய ரகம் விநியோகம்.	740 குவிண்டால்	74,000
	சிறுதளைகள் :		
5.	0.4 எக்டர் நிலக்கடலை	4 எண்கள்	3,720
6.	0.2 எக்டர் எள்	4 எண்கள்	120
7.	0.2 எக்டர் சோயா	44 எண்கள்	4,514
	பெருவிளக்கத்திடல் :		
8.	நிலக்கடலை	30 எக்டர்	60,000
9.	எள்	10 எக்டர்	10,000
10.	சோயா மொச்சை	10 எக்டர்	10,000
11.	ரைசோபியம் விநியோகம்	250 எண்கள்	3,750
12.	பயிர்ப் பாதுகாப்புமருந்துகள்	950 எக்டர்	95,000
13.	தெளிப்பு நீர்க்கருவிகள்	4 எண்கள்	40,000
14.	ஜிப்சம்	200 மெ. டன்.	40,000
15.	வேளாண் கருவிகள்	37 எண்கள்	25,900
16.	பயிர்ப் பாதுகாப்பு கருவிகள்	60 எண்கள்	30,000

(ஆ) வினா (அ) வுக்குரிய பதிலில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை ஆனைமலை வட்டாரத்தில் 1992-93 ஆம் ஆண்டில் செயல்படுத்திட ரூ. 9.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

84—

காலகம் ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்கப் பணியாளருக்கான அலுவலகம் கட்டுதல்.

வினா எண் 13683—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்கப் பணியாளருக்கான அலுவலகம் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

வேளாண்மை விரிவாக்கப் பணியாளர், அந்தந்த வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலோ/வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலகத்திலேயோ உள்ள ஒரு அலுவலராவார். இவரது முக்கிய கடமையாவது, கழனிகளில் விவசாயிகளைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்பங்களை வழங்குவதேயாகும். ஆதலால் வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கு எனத் தனியே அலுவலகம் கட்டித்தர வாய்ப்பில்லை.

85—

உயர் நீதிமன்றத் தடையாணைகளால் கிராமப் புறங்களில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

வினா எண் 8941—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உயர் நீதிமன்ற தடையாணைகளால் கிராமப்புறங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டும் பட்டா வழங்க முடியாத நிலை பல்வேறு இடங்களில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அண்ணா மாவட்டத்தில் எங்கெங்கு இத்தகைய தாமத நிலை உள்ளன?

(இ) இந்த நிலை நீங்க நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை முன்னுரிமை அடிப்படையில் எடுத்து விரைவில் முடிக்க அரசு துரித கால நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

1993 ஏப்ரல் 28]

(ஆ) அண்ணா மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிட்ட கிராமங்களில் இத்தகைய தாமத நிலை உள்ளது :—

வரிசை எண்.	வட்டம்.	கிராமங்கள்.
(1)	(2)	(3)
1.	பழனி ..	வாகரை, கீரனூர், காவலப்பட்டி, சின்னக்கலையம்புத்தூர், சத்திரப்பட்டி, கொல்லம்பட்டி, மேற்கு ஆயக்குடி, விருப்பாட்சி.
2.	நத்தம் ..	வேலம்பட்டி, சமுத்திராப்பட்டி.
3.	திண்டுக்கல் ..	அம்பாத்துரை, பாலகிருஷ்ணாபுரம், ஆத்தூர், வேம்பார்பட்டி, அடியாணத்து
4.	நிலக்கோட்டை ..	ராமராஜபுரம், சேவுகம்பட்டி.
5.	வேடசந்தூர் ..	கொசவபட்டி, பாலப்பட்டி, காணப்பாடி.
6.	கொடைக்கானல்..	வில்பட்டி.

(இ) நிலம் கையகப்படுத்தப்பட்டு தடையாணை பெறப்பட்டுள்ள எல்லா நேர்வுகளிலும் முன்னுரிமை அடிப்படையில் வழக்குகளை விரைவில் முடிக்க ஆவன செய்யுமாறு அவ்வப்போது அரசு வழக்கறிஞர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

86—

சங்ககிரி ஆதி திராவிடர் இன மக்களுக்கு ஒரு சமூகக் கூடம் அமைத்தல்.

வினா எண் 10476—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்ககிரி ஆதி திராவிடர் இன மக்களுக்கு ஒரு சமூகக் கூடம் அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சமுதாய நலக் கூடம் கட்டுவதற்கான இடம், நிதிவசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

87—

அண்ணா மாவட்டத்தில் கறவை மாடுகள் வாங்க அரசு கடன் உதவி பெற்றோர் எண்ணிக்கை.

வினா எண் 10508—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கறவை மாடுகள் வாங்க அண்ணா மாவட்டத்தில் 3 ஆண்டுகளில் (ஆண்டு வாரியாக) அரசு கடனுதவி பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) வழங்கப்பட்ட கடனுதவித் தொகை ஆண்டு வாரியாக எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) கடனுதவி பெற்றோர் எண்ணிக்கை :—

ஆண்டு.	ஆதிதிராவிடர் நலத் திட்டங்கள்.	தாட்கோ திட்டம்.
(1)	(2)	(3)
1989–90	279	2,492
1990–91	291	1,180
1991–92	425	1,760
மொத்தம் ..	995	5,432

1993 ஏப்ரல் 28]

(ஆ) அளிக்கப்பட்ட தொகை :—

ஆண்டு.	ஆதிதிராவிடர் நலத் திட்டங்கள்.	தாட்கோ திட்டம்.
(1)	(2)	(3)
	ரூபாய்.	ரூபாய்.
1989–90	8,69,400	79,18,000
1990–91	9,21,500	37,58,000
1991–92	13,93,400	59,39,700
மொத்தம்	31,84,300	1,76,15,800

88—

ஆதிதிராவிடர் மக்களின் மயானப் பாதையை பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்தல்.

வினா எண் 10875—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மக்களின் மயானப் பாதை பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆதிதிராவிடர் மக்களின் மயானப் பாதை ஆக்கிரமிப்பு தொடர்பாக புகார்கள் ஏதும் பெறப்படின் உடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) ஆகியோர்களின் மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப் படுகிறது. எனவே, ஆதி திராவிட மக்களின் மயானப் பாதை எந்தப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது

குறித்து விபரம் தெரிவிக்கப்பட்டால் அது தொடர்பான மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலருடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

பெரிய நெகமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குதல்.

வினா எண் 11136—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, பெரிய நெகமத்தில் 1977-க்குப் பின் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டாக்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நீண்ட காலமாக பெரிய நெகமத்திலுள்ள ஆதி திராவிடர்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. தற்போது 15—6—1992-ல் 216 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று மேற்படி மனுதாரர்களுக்கு வீட்டுமனை வழங்கத் தக்க நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

90—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி வழங்குதல்.

வினா எண். 11376—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மின் வசதி கிடைக்காத ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் 179 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கக்கோரி வந்த விண்ணப்பங்களில் இதுவரை 29 குடியிருப்புகளுக்கு தெரு விளக்கு பொருத்தப்பட்டு விட்டது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கு அரசு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தெரு விளக்கு பொருத்த ஆவன செய்யப்படும்.

91—

சேண்டா கோட்டையிலுள்ள மிகவும் பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13098—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், சேண்டா கோட்டையிலுள்ள மிகவும் பிற்பட்டோர் இனத்தைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரையினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

92—

மாளியக் காட்டில் மிகவும் பின்தங்கிய சீர்மரபினர் இனத்தவர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13099—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், மாளியக்காட்டில் மிகவும் பின்தங்கிய சீர்மரபினர் இனத்தவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

93—

மடத்திர் காட்டிலுள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பினரான சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13102—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மடத்திர் காட்டிலுள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பினரான சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர, பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

94—

களத்தூர் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13113—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், களத்தூர் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

95—

ஈச்சன்விடுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர் மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13126—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஈச்சன் விடுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மர பினருக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

96—

கீழ்ப்புனல்வாசல் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13127—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், புனல் வாசல் ஊராட்சி, கீழ்ப்புனல்வாசல் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

97—

புனவாசல் ஊராட்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13128—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் புனவாசல் ஊராட்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர, பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

98—

இடிந்தகரை மீனவர்களுக்கு காலனி வீடுகளை புதுப்பித்தல்.

வினா எண் 13814—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, இடிந்தகரை மீனவர்கள் காலனி வீடுகளை புதுப்பித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மீனவர் காலனி வீடுகளை புதுப்பித்துத் தர அரசு நடவடிக்கைகள் ஏதும் எடுப்பதில்லை. மீனவர் இலவச வீட்டுவசதி திட்ட ஒப்பந்தப்படி பயன்பெறுவோரே நல்லமுறையில் பராமரித்துக் கொள்ள வேண்டும்.

99—

தமிழ்நாட்டில் 1991-92-ல் ஆரம்பிக்கப்பட்ட பிற்படுத்தப் பட்டோர் மாணவியர் விடுதிகள்.

வினா எண் 16037—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1991-92-ல் ஆரம்பிக்கப்பட்ட பிற் படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகள் எத்தனை ?

(ஆ) இதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்ட விடுதிகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 1991-92-ஆம் ஆண்டில் 15 பிற் படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள் ஆரம்பிக்கப் பட்டன.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட் டோர் நல மாணவியர் விடுதி ஏதும் துவக்கப்படவில்லை. அம்மாவட்டத்தில் கடலாடியில் சீர்மரபினர் மாணவியர் விடுதி ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 28

100—

நல்லூர் கிராமத்தின் எலும்பு அரைக்கும் ஆலையை இடமாற்றம் செய்தல்.

QUESTIGN No. 2511—THIRU S. RAJARAMAN : Will the Honourablee the Minister for Rural Incustries be pleased to state—

(a) whether the mills at Siruniyam village are crushing bones at that place ?

(b) whether the bone crushing is allowed by the local bodies

(c) the steps taken to secure sanitation of the area

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) (ஆ) மற்றும் (இ): சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சிறுநியம் என்னும் இடத்தின் அருகிலுள்ள நல்லூர் கிராமத்தில் சுமார் 20 வருடங்களுக்கும் மேல் எலும்பு அரைக்கும் ஆலை ஒன்று செயல்பட்டு வந்தது. இவ்வாலையிலிருந்து வரும் துர் நாற்றம் பொதுமக்களின் உடல் நலத்திற்கு தீங்கு விளைவித்த தால், இவ்வாலை மக்கள் புழக்கம் இல்லாத வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் எனத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியதன்பேரில், எலும்பு அரைக்கும் ஆலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு **15-10-1991** முதல் மேற்படி ஆலை மூடப்பட்டு விட்டது.

(31-வது பட்டியல்)

1—

முன்னாள் சிறைவாசிகள் உதவிச் சங்கத்திற்கு அரசு மானியம் வழங்குதல்.

QUESTION No. 8227—THIRUMATHI V. G. MANIMEGALAI : will the Honourable the Minister for Law be pleased to state—

(a) Whether the Government have given any grant to the Discharged Prisoners Aid Society during the last three years and;

(b) the details thereof.

1993 ஏப்ரல் 28]

விடை—

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் :</u>

(அ) மற்றும் (ஆ) 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 18,000 அரசு மானியமாக. தமிழ்நாடு முன்னாள் சிறைவாசிகள் உதவி சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1990-91 மற்றும் 1991–92 ஆண்டுகளுக்கு அரசு மானியம் வழங்குவது குறித்து செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2—

<u>பெரும்பள்ளம் ஊர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்.</u>

<u>வினா எண் 6361 —திரு. வே. பெரியசாமி :</u> மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டை பேரூ ராட்சிக்குட்பட்ட பெரும்பள்ளத்தில் ஊர் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்காமல் உள்ளதை அரசு அறியுமா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :</u>

பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டை கிராமம் பெரும்பள்ளத்தில் மக்கள் குடியிருந்து வரும் இடம் பட்டா நிலமாக இருப்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

3—

<u>விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் கட்டணத்தில் நஞ்சை, புஞ்சை என்ற வித்தியாச விபரம்.</u>

<u>வினா எண் 11562—திரு. என். ஆர். இராஜேந்திரன் :</u> மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில அளவை செய்யும்போது அரசு, விவசாயிகளிட மிருந்து வசூலிக்கும் கட்டணத்தில் நஞ்சை புஞ்சை என்ற பிரிவில் வித்தியாசம் உள்ளதா ?

53-143—18

(ஆ) இக்கட்டண வசூல் தாலுக்காக்கள், மாவட்டங்கள் தோறும் வித்தியாசப்படுகின்றனவா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) 1923 ஆம் வருட நில அளவை எல்லைச் சட்டம், பிரிவு 8-ன்படி, நில அளவைத் தொகை பட்டாதாரர்களிடம் வசூலிக்க வேண்டியதாகும். இத்தொகையை வசூலிக்க செலவு விகிதம் (Cost rate) தயாரிக்க மேற்குறிப்பிட்டுள்ள சட்டம் பிரிவு 26-ன் கீழ் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி முதலில் ஒரு வட்டத்தில் ஏற்படும் மொத்த செலவுத் தொகை கணக்கெடுக்கப்படுகிறது. செலவின் விகிதத்தை கணக்கிட நஞ்சை, புஞ்சை மற்றும் தரிசு நிலங்களை $1\frac{1}{2}:1:1$ என்ற விகிதாச்சாரத்தில் கணக்கில் கொள்ளப்படுகிறது. எனவே நில அளவை வசூல் நஞ்சை மற்றும் புஞ்சை இனங்களில் வித்தியாசம் காணப்படும். அரசுக்கு சொந்தமான தரிசு நிலங்களுக்கான செலவுத் தொகை கணக்கு மாற்று ஏற்பாட்டின்படி (Adjustment of Account) அரசே ஏற்றுக் கொள்கிறது.

(ஆ) நில அளவை கட்டணம் நில அளவை நடைமுறை நூற்படி (Survey Manual) வட்ட வாரியாகக் கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு வட்டத்திலும் நடைமுறையில் உள்ள தினக்கூலி விகிதம், நிலங்களின் தன்மை மற்றும் நில அளவைக் கற்களின் கிரயம் ஆகியவற்றைக் அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுவதுடன், பூமியில் நடப்படும் கல் கிரயம் (மற்றும்) அளவு கூலி ஆகியவை பட்டாதாரர்களின் நிலப்பரப்பிற்கு ஏற்ப வசூல் செய்யப்படுவதால், நில அளவைக் கட்டணம் வட்டத்திற்கு மாறுபடும். இதைத் தவிர்க்க இயலாது.

4—

பொறியியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீடுகள், பொருளாதார கருணை அடிப்படையிலும், கிராமப்புற மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்குதல்.

வினா எண் 4533— திரு. தேனி பன்னீர் செல்வம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பொறியியல் கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு மூலம் செய்யப்படும் தேர்வு முறையில் 10 சதவீத அரசு ஒதுக்கீடு வைத்து பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மாணவர்களும் பயன்பெறும் வகையில் சீர்திருத்தம் செய்ய அரசு முன் வருமா ?

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், கருணை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுமா ?

(இ) கிராமப்புரங்களில் மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம். கல்வி அமைச்சர்

(அ) தற்போது இக்கருத்துரு பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கே இடமில்லை.

(இ) தற்போது இக்கருத்துரு பரிசீலனையில் இல்லை.

5—

தமிழ்நாட்டில் கூடுதலாக ஓவியக் கல்லூரிகள் ஏற்படுத்துதல்.

வினா எண். 10876—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஓவியக் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) மேலும் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் இரண்டு ஓவியக் கல்லூரிகள் மட்டும் உள்ளன. (சென்னை மற்றும் கும்பகோணம்.)

(ஆ) மேலும் கூடுதலாக ஓவியக் கல்லூரிகள் ஏற்படுத்தும் நோக்கம் அரசின் வேலை வாய்ப்பு அதிகம் இல்லாமையால் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

சீர்காழி தொகுதியில் வட ரெங்கத்திற்கு புதிதாக நூல்நிலையம் அமைத்தல்.

வினா எண் 14640—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள வடரெங்கத்திற்கு புதியதாக நூல் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

சீர்காழி தொகுதியிலுள்ள வடரெங்க மக்கட் தொகை 1981ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,985 ஆகும். 5,000 மக்கட் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் தான கிளை நூலகம் திறக்க வழிவகை உள்ளதால், மேற்கண்ட கிராமத்தில் கிளை நூலகம் திறக்க வாய்ப்பில்லை. இருப்பினும் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க தேவையான நிபந்தனைகளை இவ்வூர் மக்களும் மற்றும் உள்ளாட்சி நிறுவனமும் நிறைவு செய்யும் பட்சத்தில் இவ்வூரில் தஞ்சாவூர் மாவட்ட நூலக அலுவலரால் ஒரு பகுதி நேர நூலகம் ஏற்படுத்தப்படும்.

7—

கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய மருத்துமனைகளில் பாம்புக்கடி மருந்துகள் வைத்திருக்க நடவடிக்கை

வினா எண் 1090— திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒன்றிய மருத்துவமனைகள் சுகாதார நிலையங்கள் மற்றும் கிராமிய மருந்தகங்கள் ஆகியவற்றில் பாம்புக்கடி மருந்துகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போதிய மருந்துகள் வழங்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பாம்புக்கடிக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தும் ஏ.எஸ்.வி. (Anti Snake Venom) என்ற மருந்து சென்னையில் உள்ள கிங் நிலையத்தில்தான் வழங்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக கிங் நிலையத்தினரால் பாம்புக் கடி மருந்து அனுப்பி வைக்கப்படாமல் உள்ளது. இதனால் மருத்துவமனைகள், கிராமிய மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்புக்கடி மருந்து கைவசம் இருக்க வாய்ப்பு இல்லை. மேலும் பாம்புக்கடிக்கு உள்ள மருந்தை எப்பொழுதும் குளிர் சாதனப் பெட்டியில் வைக்க வேண்டியிருப்பதால் ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் கிராமிய மருந்தகங்களில் குளிர்சாதனப்பெட்டி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வசதி இன்மையால் அருகாமையில் உள்ள மருத்துவமனைக்கு பாம்பு கடித்தவர்களை அனுப்பி வைக்கப்படவேண்டிய நிலை உள்ளது. எனினும், வருங்காலங்களில் எல்லா ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் கிராமிய மருந்தகங்களில் பாம்புக்கடி மருந்து கட்டாயமாக இருப்பு இருக்கும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

8—

அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 2501—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் மருந்து இருப்பில் இல்லை என்று கூறி வெளிமருந்து கடைகளில் வாங்கி வரச்சொல்வதைத் தடுக்க மருத்துவ மனைகளிலேயே மருந்து கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

அனைத்து மருத்துவ மனைகளிலும் போதுமான மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

9—

மயிலாடுதுறை நகரில் உள்ள மருத்துவமனைகளில் மருந்துகள் மாத்திரைகள் கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 3487—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நகரில் உள்ள அரசு பொது மருத்துவ மனையில் உள் நோயாளிகளுக்கும் வெளி நோயாளிகளுக்கும் மருந்துகள் மாத்திரைகள் மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் இல்லாமல் நோயாளிகள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

தமிழ்நாட்டின் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை மையக் கொள்முதல் முறையில் வாங்க 1991-92-ம் ஆண்டுக்கு பல்வேறு மருந்தாக்கங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்பாணைகள் வழங்கப்பட்டும், மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்களின் கடுமையான விலையேற்றம், சுங்கம் மற்றும் கலால் வரி மற்றும் நாணய மாற்றம் மற்றும் பல்வேறு காரணங்கள் நிமித்தமாக மருந்துப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஆணை பெற்ற நிறுவனங்கள் சரியான முறையில் மருந்துப் பொருட்களை மருத்துவ நிலையங்களுக்கு விநியோகிக்கவில்லை. பொதுமக்கள் நலனை கருத்திற்கொண்டு அரசு மருத்துவ நிலையங்களுக்கு தேவையான உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கேதுவாய், அரசால் போர்க்கால நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலைமை சீரடைந்து விட்டது. மேலும் 1992—93-ம் ஆண்டுக்கு அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை பெறுவதற்கேதுவாய் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

10—

வட்ட அரசு மருத்துவ மனைகளில் அத்தியாவசிய மருந்துகள் போதிய அளவு இருக்க நடவடிக்கை.

வினா எண் 7882—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட அரசு மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் போதிய கையிருப்பு இல்லாத காரணத்தால் அறுவை சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சை பெறும் நோயாளிகள் வெளியில் மருந்து வாங்குவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தேவையான மருந்துகளை அம்மருத்துவ மனைகளில் தலைமை மருத்துவரே வாங்கிக் கொள்ளும் அதிகாரம் வழங்கப்படுமா ?

விடை —

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 28]

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கேதுவாய் மையக் கொள்முதல் முறையில் 1991-92-ம் ஆண்டுக்கு பல்வேறு மருந்தாக்கங்களுக்கு (Manufacturers) ஒப்பந்தப்புள்ளி ஏற்பாணைகள் வழங்கப்பட்டும் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்களின் கடுமையான விலையேற்றம், நாணய மதிப்புக் குறைப்பு, சுங்கம் மற்றும் கலால் வரி மாற்றம் பல்வேறு காரணங்கள் நிமித்தமாக மருந்து பொருட்களை சரியான முறையில் மருத்துவ நிலையங்களுக்கு விநியோகிக்கவில்லை. பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கேதுவாய் அரசால் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது நிலைமை சீரடைந்துவிட்டது. மேலும் வட்ட அரசு மருத்துவ மனைகளில் அத்தியாவசியமான மற்றும் உயிர் காக்கும் மருந்துப் பொருட்களை அவ்வப்போது அவசரத் தேவைகளுக்கு கொள்முதல் செய்து கொள்வதற்கேதுவாய் அந்தந்த மருத்துவமனைகளில் முதன்மை மருத்துவ அலுவலர்களுக்கு படுக்கைகளின் எண்ணிக்கைக்கு உட்பட்டு பின்வருமாறு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது:—

(1) 100 எண்ணிக்கைக்குட்பட்ட படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையின் முதன்மை மருத்துவ அலுவலர் ஒரு நாளைக்கு ஒரு மருந்துப் பொருளுக்கு ஒரு முறை ரூபாய் 500 வரை செலவிடலாம்.

(2) 100-க்கு மேற்பட்ட 500-க்கு கீழ் படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையின் முதன்மை மருத்துவ அலுவலர் ஒரு நாளைக்கு ஒரு மருந்துப் பொருளுக்கு ஒரு முறை ரூபாய் 1,000 வரை செலவிடலாம்.

11—

மருந்துக் கொள்முதல் குழுவில் அனுபவம் வாய்ந்த மருந்தாளுநரையும் மருத்துவப்பட்டம் பெற்ற சட்டமன்ற உறுப்பினரையும் நியமித்தல்.

வினா எண் 10531—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மருந்து கொள்முதல் குழுவில் உறுப்பினர்களாக அனுபவம் வாய்ந்த ஒரு மருந்தாளுநரையும் மருத்துவப்பட்டம் பெற்ற ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் சேர்க்க அரசிற்கு ஏதேனும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காகவும் அவற்றின் விலையை நிர்ணயிப்பதற்காகவும் மூன்று குழுக்கள் முறையே பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் மருத்துவம மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மற்றும் மருத்துவக்கல்வி இயக்குநர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு குழுவிலும் இரண்டுக்கு மேற்பட்ட மருத்துவர்கள் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளார்கள். மேலும் தமிழ்நாடு மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திலிருந்து ஒரு உறுப்பினரை ஒவ்வொரு குழுவிலும் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இக்குழுக்கள் ஒவ்வொரு மருந்துப்பொருளின் விலையையும் நிர்ணயிக்கும் பொழுது அதனைத் தயாரிக்கும் மருந்தகத்தின் உற்பத்தித்திறன் மருந்துப்பொருளின் தரம் போதிய மருந்து வீநியோகம், முதலியன குழுவில் நன்கு பரிசீலிக்கப்பட்டு அதன்பின்னரே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் மாவட்டங்களில் பணிபுரியும் மருந்துக் கிடங்கில் பண்டகக் காப்பாளர்களால் தொகுத்து வழங்கப்பட்ட மருந்துப்பொருட்களுக்கான தேவைப்பட்டியலுக்கிணங்க கொள்முதல் ஆணைகள் வழங்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு குழுவும் சரியான முறையில் செயலாற்றி வருவதால், மேலும் குழுவில் உறுப்பினர்களை நியமித்து குழுவை விரிவாக்க அவசியமில்லையென்று கருதப்படுகிறது.

12—

கொண்டிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக மாற்றுதல்.

வினா எண் 11356—திரு. ஆர். சிங்காரம், : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

1993 ஏப்ரல் 28]

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை கொண்டிக் குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை கொண்டிம் குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

13—

மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் நோயாளிகளைப் பார்க்கச் செல்லும் மக்களிடம் கட்டணம் வசூலித்தல் குறித்து புகார்.

வினா எண் 11714—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட மருத்துவமனைகள் போன்ற பெரிய மருத்துவ மனைகளில் நோயாளிகளை பார்க்கச் செல்லும் மக்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

அரசினர் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளைப் பார்க்க செல்லும் நபர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவ தில்லை.

14—

திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதி செய்து தருதல்.

வினா எண் 14174— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதி செய்துகொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(1) இல்லை.

(2) திருவாரூர் அரசினர் மருத்துவமனை தவிர திருவாரூரில் விஜயபுரம் என்னுமிடத்தில் இயங்கிவந்த மருந்தகம் திருவாரூர் மருத்துவமனையோடு இணைந்து 40 படுக்கைகளுடன் பணியாளர்களுடன், இயங்க அரசு ஆணை 347, சுகாதாரம், நாள் 8—9—1991-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவை தவிர விஜயபுரம் மருந்தகத்துக்கு பழுது பார்க்கப்பட்டுள்ளது.

15—

பட்டுக்கோட்டையில் இருந்து சென்னைக்கு மேலும் ஒரு திருவள்ளுவர் விரைவுப் பேருந்து விடுதல்.

வினா எண் 13615— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் இருந்து சென்னைக்கு 1992-93-ல் மேலும் ஒரு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 28]

பட்டுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் வழித்தடத்தின் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

16—

பட்டுக்கோட்டையில் இருந்து கிரமங்கலத்திற்கு கூடுதல் நகரப் பேருந்து விடுதல்

வினா எண் 13630—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது பட்டுக்கோட்டையிலிருந்து கீரமங்கலம் செல்லும் 29-ம் நம்பர் நகரப் பேருந்து போதவில்லையாதலால், இன்னுமொரு கூடுதல் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துதுறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை கீரமங்கலம் தடத்தில் கழக நகரப் பேருந்து ஒன்று 12 நடைகளும் நான்கு புறநகர் பேருந்துகள் 8 நடைகளும் இயக்கப்படுகின்ற பேருந்துகளே போதியதாக உள்ளதால் கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

17—

தூத்துக்குடி-ராதாபுரம் பேருந்து மீண்டும் முதுமொத்தான் வழியாக இயங்கல்

வினா எண் 14163 திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தடம் எண். 145-ஏ தூத்துக்குடி-ராதாபுரம் பேருந்து மீண்டும் முதுமொத்தான் வழியாக இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துதுறை அமைச்சர்:

[1993 ஏப்ரல் 28

தூத்துக்குடி-ராதாபுரம் (தடம் எண். 145-ஏ) தடத்தில் இயக்கப்பட்டு வந்த இரு புறநகர் பேருந்துகளில் பயணிகள் விகிதாச்சாரம் 40 விழுக்காடுக்கும் குறைவாகவே இருந்தபடியால் எரிபொருள் தட்டுப்பாடு நேரத்தில் ஒரு பேருந்து நிறுத்தப் பட்டது. ஒரு பேருந்து, தற்போது தூத்துக்குடியிலிருந்து முதுமொத்தான் மொழிவழியாக ஆத்தங்கரை பள்ளிவாசல் தினசரி 2 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று உடன் குடியிலிருந்து திசையன்விளை, முதுமொத்தான் மொழி வழியாக ஆணைக்குடி வரை தினசரி 6 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது.

18—

சுரண்டையில் இருந்து அச்சன்குன்றம் கருவந்தா வழியாக, மருக்காலங்குளம் வரை பேருந்து வசதி செய்துதருதல்.

வினா எண் 14874—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சுரண்டை யில் இருந்து அச்சன்குன்றம், கருவந்தா, ஊத்துமலை, அண்ணா மலைபுதூர், கங்கணாள்கிணறு, மறுநாத்தான்புரம், தங்கம்மாள் புரம் வழியாக மருக்காலங்குளம் வரை பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

கோரிக்கையில் கேட்டுள்ள வழித்தடத்தின் தூரம் 33.0 கி. மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பேருந்து வசதியற்ற கிராமங் கள் ஏதும் இல்லை. எனவே அரசு விதிப்படி, நகரப் பேருந்து இயக்க இயலாது. தவிர வழித்தடத்தின் தூரம் மிகவும் குறை வாக இருப்பதால் வெளியூர் பேருந்து இயக்கவும் உகந்ததாக இல்லை. இவ்விரு நகரப் பேருந்துகளின் இருக்கை விகிதாச் சாரம் சுமார் 50 சதவீதமே ஆகும். எனவே தற்போது ஓடிக் கொண்டிருக்கும் பேருந்துகள் போதுமானதாக கருதப்படுகிறது.

1993 ஏப்ரல் 28]

19—

திருவிடைமருதூர் மற்றும் குடவாசல் ஒன்றியம், நாச்சியார் கோவில், துக்காச்சி, ஏரவாஞ்சேரி செல்லும் தார்ச் சாலையைச் சீர்படுத்துதல்.

வினா எண் 669—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் மற்றும் குடவாசல் ஒன்றியம், நாச்சியார்கோவில், துக்காச்சி, ஏரவாஞ்சேரி வழியாக பூந்தோட்டம் செல்லும் தார் சாலையைச் சீர்படுத்தி அகலப்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பூந்தோட்டம்-நாச்சியார் கோவில் சாலையில் மிகவும் பழுதடைந்துள்ள பகுதிகளை ரூ. 3.60 லட்சம் மதிப்பீட்டில் சீர் செய்யும் பணிகள் துவங்கப்படவுள்ளன. இச்சாலையில் போக்கு வரத்துச் செறிவு குறைவாக உள்ளதால் இருவழித்தடமாக அகலப்படுத்தப்படும் தகுதியினை இச்சாலை பெறவில்லை.

20—

முப்பத்திகோட்டகம், விடங்கலூர் சாலை சீரழிந்துள்ளதை சீர்செய்ய நடவடிக்கை.

வினா எண் 770—திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவாரூர் வட்டம், முப்பத்திகோட்டகம்-விடங்கலூர் சாலை சீரழிந்து குழாய் பாலங்களும் இடிந்து போக்குவரத்து பாதித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையைச் சீர்செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன, பொதுப் பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) முப்பத்தி கோட்டகம் சாலை நீளப் 6.4 கி.மீ. ம்கும். இதில் கி.மீ. 0/0–4/0 வரை அரசு சாலை ஆகும். முறைப்படி அரசு சாலை புதுப்பிக்கப்பட்டு சீர் செய்து திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் ஐந்து இடங்களில் பழுதடைந்துள்ள பாலங்களைத் திரும்பக் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கி.மீ. 4/0–6/4 வரையி லுள்ள பகுதி கீவளூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளது. இப் பகுதியில் 1991–92 ஆம் ஆண்டு ஐவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கருங்கல் ஜல்லி புதுப்பிக்கும் வேலை நடைபெற்று வருகின்றது. இப்பகுதியில் உள்ள குழாய் பாலங் களும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி ஒன்றியச் சாலை யைத் தார்ச் சாலையாக அமைக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

21—

வாழைத் தோட்டம்—அணைக்கரை சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 3861—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினா வுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி வாழைத் தோட்டம்-அணைக்கரை சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் வாழைத்தோட்டம்-அணைக்கரைச் சாலை கி.மீ. 0/0-4/2 ஒரு ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலை ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்த சாலையின் நீளம் 4.2 கி.மீ. இச்சாலையில் கி.மீ. 0/0–2/0 வரையுள்ள பகுதி கருங்கல் தளச் சாலையாகவும் மீதமுள்ள பகுதியான கி.மீ. 2/0–4/2 வரை சரள் தளச் சாலையாகவும்

1993 ஏப்ரல் 28]

உள்ளன. இந்தச் சாலை முழுவதும் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய சுமார் ரூ. 10.00 லட்சம் தேவைப்படும். இது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் சாலை மேம்பாடு செய்தல்/பாலம் அமைத்தல் பணிகளை நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையின் பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்யவும் வழிவகை செய்யப்படவில்லை. எனவே இப்பணியை நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் பகுதி-2 திட்டத்தில் சிறப்பு இனமாகச் சேர்த்து மேற்கொள்ள இயலாது.

22—

திருவிடைமருதூர் தொகுதி, கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட நடவடிக்கை.

வினா எண் 4856—திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் 1990 ஆம் ஆண்டு கீர்த்திமான் ஆற்றின் குறுக்கே இளந்துறையில் பாலம் 3 லட்சம் மதிப்பில் கட்ட அனுமதிக்கப்பட்டு வேறு இடத்தில் மாற்றிக் கட்டி தற்போது தரை மட்டத்துடன் நிறுத்தப்பட்டுள்ளதால் உரிய இடத்தில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஒப்பந்தக்காரர் வாங்கிய பணம் திரும்பப் பெறப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) பாலம் கட்டும் இடம் மாற்றப்படவில்லை.

(ஆ) பாலம் கட்டும் பணி நடைபெறுவதால், ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்த பணத்தை திரும்பப் பெற வேண்டியதில்லை.

23—

கோட்டைக்காடு ஆதி திராவிடர்கள் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 7208—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர்கள் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதி திராவிடர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்குகள் அமைக்கக் கோரி 40 குடிசை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேற் குறிப்பிட்ட பகுதிக்கு 40 ஒற்றை விளக்குகள் பொருத்த நடைமுறை விதிகளின்படி ஆவன செய்யப்படும்.

24—

பூவாணம் ஆதி திராவிடர் தெருவில் உள்ள காலனிகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் 7355—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் ஆதி திராவிடர் தெருவில் உள்ள காலனிகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்குகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

வேண்டி 30 குடிசை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அந்த குடிசைகளுக்கு மின் வசதி அளிக்க நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு ஆவன செய்யப்படும்.

25—

பட்டுக்கோட்டையிலிருந்து ஆவணம் வரை செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரித்தல்.

வினா எண் 7385—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து ஆவணம் வரை செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டையிலிருந்து ஆவணம் வரை செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப் பட்டு வரும் பட்டுக்கோட்டை—அறந்தாங்கி சாலையாகும். இச்சாலையில் பழுதடைந்துள்ள சில பகுதிகளில் தார்தளம் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் பழு தடைந்துள்ள பகுதிகளில் நடப்பாண்டில் ஆண்டு பராமரிப்பு நிதி நிலைக்கேற்றவாறு தார்தளம் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ள முயற்சி செய்யப்படும்.

26—

அதிராமபட்டினத்திலிருந்து கட்டுமாவடி வரை செல்லும் சேது நெடுஞ்சாலையைப் பராமரித்தல்.

வினா எண் 7386—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், அதிராமபட்டினத்திலிருந்து கட்டுமாவடி வரை செல்லும் சேது நெடுஞ்சாலையைப் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், அதிராமபப்பட்டினத்திலிருந்து கட்டுமாவடி வரை செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையில் பராமரிக்கப்பட்டு வரும் முத்துப்பேட்டை-மீமிசல் சாலை கி.மீ. 3/6—43/6 ஆகும். இதில் கி.மீ. 15/4—16/4, 22/0—23/6, 26/0, 27/0, 28/0, 29/0, 29/4, 29/8 ஆகிய பகுதிகள் தனிச்சீர் பணியாக தளம் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மிகவும் மோசமான பகுதிகளான கி.மீ. 19/0—20/6—23/8—10, 29/10, 27/0—28/0, 30/4—10, 31/0—32/0, 32/0—33/0, 33/2—4, 41/3, 4, 6 ஆகிய பகுதிகள் நிதி பற்றாக் குறையின் காரணமாக பழுது பார்க்கப்படாமல் உள்ளது. இவற்றை எதிர்வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதி நிலைக் கேற்றவாறு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதர பகுதிகளில் சென்ற ஆண்டு பராமரிப்புப் பணி மற்றும் தனிச் சீர் பணியாக பழுதுபார்க்கபபட்டு நல்ல நிலையில் உள்ளது.

27—

அலிவலத்திலிருந்து அதம்பை வழியாக நம்பிவயல் செல்லும் நெடுஞ்சாலையை பராமரித்தல்.

வினா எண் 7388—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி கோட்டம், அலுவலத்திலிருந்து அதம்பை வழியாக நம்பிவயல் செல்லும் நெடுஞ் சாலையை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

அலிவலத்திலிருந்து அதம்பை வழியாக நம்பிவயல் வரை செல்லும் சாலையின் மொத்த நீளம் 9—0 கி.மீ. ஆகும். இதில் 3.2 கி.மீ. நீளமுள்ள மிகவும் பழுதடைந் துள்ள சாலையைச் சீர் செய்ய நிதி நிலைக்கேற்றவகையில், நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள 5—8 கி.மீ. நீளமுள்ள சாலை போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது.

1993 ஏப்ரல் 28]

28—

இரட்டைவயலிலிருந்து முதுகாடு செல்லும் நெடுஞ்சாலையை பராமரித்தல்.

வினா எண் 7391—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி கோட்டம், இரட்டை வயலிலிருந்து முதுகாடு செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

இரட்டை வயலிலிருந்து முதுகாடு செல்லும் சாலையின் சரியான பெயர் காலகம்-ஆவுடையார் கோயில் சாலை கி.மீ. 12/6—17/6 என்பதாகும். இச்சாலைப் பகுதியில் உள்ள பழுதுகள் தனிச்சீர் வெள்ள நிவாரணப்பணிகள் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் மூலம் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

29—

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரித்துக் கொடுத்தல்.

வினா எண் 7392—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் நெடுஞ்சாலையைப் பராமரித்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் பெரிய மாவட்டச் சாலையான பட்டுக்கோட்டை—அதிராம்பட்டினம் சாலை

[1993 ஏப்ரல் 28

யாகும். இச்சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணி இதுவரையில் அரசின் திட்டப்பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. இருப்பினும் இச்சாலையில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்பொழுது சீரமைத்து போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்படுகிறது.

30—

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் அணுக் கசிவினால் ஏற்படும் அபாயத்தை தடுத்தல்.

வினா எண் 7487—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் அணுக்கசிவினால் ஏற்படும் அபாயத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா —

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இயங்கி வரும் இந்திய அணுவாற்றல் துறையின் இரு அணு உலைகளும் அடுக்கடுக்கான பற்பல பாதுகாப்பு அமைப்புக்களைக் கொண்டவையாகும். இதன் காரணமாக இந்நிலையத்தில் கதிரியக்கப் பொருட் கசிவு ஏற்படக் கூடிய வாய்ப்பு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க, செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சியாளரால் விரிவான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி, இந்த அணுமின் நிலையத்தில் கசிவு ஏற்பட்டால் பொதுமக்களுக்கு உடனடியாக அணு அறிவிப்பு செய்யவும், தற்காலிக தேவைக்கேற்ப அவர்களை முன்கூட்டியே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பான வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லவும் இத்திட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது, இது மட்டுமின்றி, பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி மாவட்ட ஆட்சிப் பணியாளர்களும், பொது மக்களும் தெரிந்து கொள்ளவும் மற்றும் நிலையத்தை நேரில் சென்று பார்த்து அதனைப்பற்றி அறிந்து கொள்ளவும் ஆண்டு தோறும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

1993 ஏப்ரல் 28]

31—

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கோபால புரம் காலனிக்கு தெரு விளக்கு அமைத்தல்

வினா எண். 7506—செல்வி கோ, மல்லிகா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கோபாலபுரம் காலனிக்கு தெரு விளக்கு, அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன். பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதி, கோபாலபுரம் காலனியில் எட்டு தெரு விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டு இப் பணி சிறப்பு தன்னிறைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்விளக்குகள் நடப்பு ஆண்டில் செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

32—

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கீழ் அனுவன்பட்டு அரிசன காலனிக்கு தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 7509—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கீழ் அனுவன்பட்டு ஆதி திராவிடர் காலனிக்கு தெரு விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

[1993 ஏப்ரல் 28

(அ) மற்றும் (ஆ) : கீழ் அனுவன்பட்டு பஞ்சாயத்து பகுதியில் 12 தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. இங்குள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு மின் விளக்கு பொருத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

33—

கொத்தட்டை கிராமத்திற்கு மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 7515—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கொத்தட்டை கிராமத்திற்கு மின்விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கொத்தட்டை கிராமத்தில் ஏற்கனவே 19 தெருவிளக்குகள் இயக்கத்தில் உள்ளன. இங்கு கூடுதலாக 16 தெரு விளக்குகள் அமைக்கும் பணி அரசின் சிறப்பு தன்னிறைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ் விளக்குகள் யாவும் இந்த ஆண்டில் செயல்பட ஆவன செய்யப் படுகிறது.

34—

கேந்திரக்கிள்ளை கிராமத்திற்கு தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் 7518—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கேந்திரக்கிள்ளை கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி தொகுதி, கேந்திரக்கிள்ளை கிராமத்தில் ஏற்கனவே 26 தெரு விளக்குகள் இயக்கத்தில் உள்ளன. கூடுதல் விளக்குகள் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

35—

புவனகிரி தொகுதி சி. புதுப்பேட்டை கிராமத்திற்கு மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 7521—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புவனகிரி தொகுதியிலுள்ள சி. புதுப்பேட்டை கிராமத்திற்கு மின் விளக்கு அமைத்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி சி. புதுப்பேட்டையில் மின் விளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

36—

நங்கவரம் நச்சலூர் செல்லும் வழியில் வாரிக்கரை பாலத்தை புதிதாக கட்டுதல்

வினா எண் 8172—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் உடுக்குறியிடாத வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 28

(அ) குளித்தலை தொகுதி, நங்கவரம்—நச்சலூர் செல்லும் வழியில் வாரிக்கரை பாலத்தை புதிதாக கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்சமயம் எவ்வித இடையூறும் இல்லாமல் மூழ்கு பாலத்தின் மீது போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இந்த இடத்தில் புதியதாக உயர் மட்ட பாலம் அமைக்க தோராயமாக ரூபாய் 40.00 இலட்சம் தேவைப்படும். உயர்மட்டப்பாலம் கட்டும் பணி இதுவரை அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் எதிலும் இடம் பெறவில்லை. திட்டப்பணிகளுக்கு ஆண்டுதோறும் மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால் இப்பாலப்பணியினை பாகம்—2 திட்டத்தின்கீழ் அண்மை ஆண்டுகளில் மேற்கொள்ள இயலாது.

37—

ஜனத் குமார் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

வினா எண் 8621—திரு. க. பூ. முனுசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்பெண்ணை—ஜனத்குமார் நதிகளின் மேல் பாலமின்மையால் போக்குவரத்து பாதிக்கப்படுவதால் பாலங்கள் அமைக்கும் (தருமபுரி—திருப்பத்தூர் சாலை) செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ); தென்பெண்ணையாற்றின் மீது ஏற்கனவே பாலம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. ஜனத் குமார் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியை மத்திய சாலை நிதித் திட்டத்தில் ரூபாய் 15.00 இலட்சம் மதிப்பீட்டில் செயலாக்க தமிழ்நாடு அரசு மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

1993 ஏப்ரல் 28]

38—

பேலப்பாளையத்தில் உள்ள பாளையம்கால் வாய்க்காலை மராமத்து செய்தல்.

வினா எண் 9378—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை மேலப்பாளையத்தில் உள்ள பாளையம் கால் வாய்க்காலை மராமத்து செய்து தர அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஆம். உலக வங்கி நிதியுடன் செயல்படும் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், தாமிரபரணி உபதிட்டத்தின், 8 அணைக்கட்டுகள் மற்றும் 11 கால் வாய்களின் மேம்பாடுகளுக்காக ரூபாய் 245.45 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை மேலப்பாளையத்தில் உள்ள பாளையங் கால் கால்வாய் இந்த 11 கால்வாய்களில் ஒன்றாகும். பாளையங்கால் கால்வாயில் மேம்பாட்டுப் பணிகள் (மராமத்து எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன) முந்தைய அடைப்புகாலமான ஏப்ரல்—ஜூன், 1992 முடிய 40 விழுக்காடு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள், வரும் அடைப்பு காலமான ஏப்ரல்—ஜூன், 1993-ல் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

39—

திருநெல்வேலி அரசு சுற்றுலா மாளிகையை விரிவுபடுத்துதல்.

வினா எண் 9429—திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அரசு சுற்றுலா மாளிகையை விரிவு படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) திருநெல்வேலி அரசு சுற்றுலா மாளிகை வளாகத்தில் 4 அறைகள் கொண்ட கூடுதல் சுற்றுலா மாளிகை ஒன்றை 1993–94 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் கட்ட கருத்துரு மாநில திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) இப்பணி மாநிலத் திட்டக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் நிதி நிலையைக் கருத்திற்கொண்டு இரண்டாம்பகுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படலாம்.

40—

ஏரிப்புறக் கரையில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித் தருதல்.

வினா எண் 1173—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஏரிப்புறக் கரையில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஏரிக்கரையில் தற்போது துணை ஆரம்ப சுகாதார மையம் இல்லை, எனவே இதற்காக கட்டிடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1993 ஏப்ரல் 28]

41—

மைலாப்பூரில் சாக்கடை நீர் குடிநீரோடு கலப்பதை தடுத்தல்.

வினா எண் 3492—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குறிப்பாக மைலாப்பூரில் சாக்கடை நீர் குடிநீரோடு கலப்பதைத் தடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னை மைலாப்பூர் பகுதி மிகவும் நெருக்கமான வீடுகள் கொண்ட பகுதியாக இருப்பதால் வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் குழாய்கள் மற்றும் பழமை வாய்ந்த (காலப்போக்கில் மண்ணின் தன்மையில் அரிக்கப்பட்ட) பழுதடைந்த குடிநீர் குழாய்கள் மிகவும் நெருக்கமாக அமைக்கப்பட்டிருப்பதாலும் மாசு கலந்த நீர் குடிநீர் குழாயில் கலக்க வாய்ப்புள்ளது. இதைத் தடுப்பதற்கு பழுதுபட்ட குழாய்களை புதுப்பிக்க குடிநீர் வாரியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீரில் கழிவு நீர் கலப்பதாகவரும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது.

42—

கூடுதலாக உள்ள கைப்பம்புகளுக்கு கூடுதல் பிட்டர் நியமிக்க நடவடிக்கை.

வினா எண் 4592—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 100 கைப்பம்புகளுக்கு மேல் ஒவ்வொரு 100 கைப்பம்புகளுக்கும் கூடுதலாக ஓர் பிட்டர் நியமித்துக் கொண்டு ஒன்றிய நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கலாம்

என்ற அரசு ஆணை இருந்தும் பொது நிதியே இல்லாத ஒன்றியங்களில் 400 கைப்பம்புகள் இருந்தும், கூடுதல் பிட்டர் நியமிக்க முடியாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித்துறை அமைச்சர்:</u>

(அ) அரசு ஆணை 312, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 14—5—1987-ன்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 100 கைப்பம்புகளுக்கு மேல் உள்ள ஒவ்வொரு 30 கைப்பம்புகளுக்கும் ஒரு கூடுதல் பிட்டர் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

43—

<u>நகரங்களில் சுகாதாரக்கேடு விளைவிக்கும் பன்றிகளை அகற்ற நடவடிக்கை.</u>

<u>வினா எண் 6061—திரு. ம. சின்னசாமி:</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சுகாதாரக்கேடு விளைவிக்கும் வகையில் நகரங்களில் உள்ள பன்றிகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:</u>

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் சுகாதாரக்கேடு விளைவிக்கும் வகையில் பன்றிகள் நடமாட்டம் இருப்பின் அதன் சொந்தக்காரருக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்படுகிறது. மேலும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அபராதக் கட்டணமும் விதிக்கப்படுகிறது. தவிர மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று அவசியமாயின் பன்றிகளை சுட்டு அழிக்கும் நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

1993 ஏப்ரல் 28]

44—

பெருமகளூர் நகரம் கே. ஆர். புரத்திற்கு இரண்டு தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 6573—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம் கே. ஆர். புரத்திற்கு இரண்டு தெரு விளக்கு விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் பெருமகளூர் பேரூராட்சியைச் சேர்ந்த கே. ஆர் புரத்திற்கு தற்போதுள்ள 11 தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்ய வேண்டும் இப்பணிகளை செய்ய பெருமகளூர் பேரூராட்சியில் நிதி வசதி இல்லை.

45—

ஆவுடாணிக்கோட்டை, முதுகாடு ஆகிய கிராமங்களில் தெரு விளக்குகளை சீரமைத்தல்.

வினா எண் 6703—திரு, ஆர், சிங்காரம். : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முதுகாடு ஊராட்சி ஆவுடாணிக்கோட்டை, முதுகாடு ஆகிய கிராமங்களில் தெரு விளக்குகளை சீரமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

[1993 ஏப்ரல் 28

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் முதுகாடு ஊராட்சியினை சேர்ந்த முதுகாடு மற்றும் ஆவுடாணிக் கோட்டை கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளை சீரமைக்கும் பணி போதிய நிதி நிலைமை இல்லாததால் எடுத்துக்கொள்ளப்படவில்லை, ஆயினும் 8—4—1992-க்குப் பிறகு முதுகாடு ஊராட்சிக்கு வரவினமாக வந்துள்ளதை கொண்டு தெரு விளக்குகள் சீராக பராமரித்து எரிய வைக்க மின் உபகரணங்கள் வாங்கப்பட்டு எரிய ஆவன செய்யப்பட்டுள்ளது, மேலும் தற்போது தெரு மின் விளக்குகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது, எனவே இதற்கான செயற் குறிப்பு அரசிடம் ஏதுமில்லை,

46—

தேவர் மலையிலும் கோயில் நத்தத்திலும் ஓர் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்,

வினா எண் 6935—திரு, வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் தேவர் மலையில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டவும் கோயில் நத்தத்தில் ஓர் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பர்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் ஒரு துணை சுகாதார நிலையம் தேவர் மலையில் இயங்கி வருகிறது. கோவில் நத்தத்தை உள்ளடக்கிய செங்குளத்தில் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்த இரண்டு சுகாதார நிலையங்களும் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகின்றன, மேற்கண்ட துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் இல்லை.

1993 ஏப்ரல் 28]

47—

சாந்தாம்பேட்டையில் இயங்காமல் பழுதடைந்துள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை பழுது பார்த்தல்,

வினா எண் 7089—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சாந்தாம்பேட்டையில் இயங்காமல் பழுதடைந்துள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை உடன் பழுது பார்த்து இயங்கச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், மருங்கப்பள்ளம் ஊராட்சி சாந்தம்பேட்டையில் மூன்று இந்தியா மார்க் 2 ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ளன. இதில் ஒரு இந்தியா மார்க் 2 கைப்பம்பு மோசமாக பழுதானதால் பட்டியலிருந்து நீக்கப்பட்டது. மற்றொரு கைப்பம்பு உப்புநீராக உள்ளது. ஒரு கைப்பம்பு நன் முறையில் பயன்படுத்தப்படுகிறது. இங்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க பள்ளிக்கருகில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

48—

நடுமனைக்காட்டில் ,மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் இணைத்தல்.

வினா எண் 7180—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒட்டங்காடு ஊராட்சி நடுமனைக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் இணைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் ஒட்டங்காடு ஊராட்சியிலுள்ள நடுமனைக்காட்டில் தற்போது இயங்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான தண்ணீர் வழங்கப்பட்டு வருவதால் 1992-93-ல் நீர்மூழ்கி மோட்டார் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

49—

ஒட்டங்காடு ஊராட்சி சிறிய தெற்குக் காட்டில் மயானச் சாலை அமைத்தல்.

வினா எண் 7246—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி சிறிய தெற்குக் காட்டில் மயானசாலை அமைத்து தகரக் கொட்டகை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, ஒன்றியம் ஒட்டங்காடு ஊராட்சி சிறிய தெற்குக் காட்டில் மயானச்சாலை அமைத்து தகரக்கொட்டகை அமைத்துக் கொடுக்க போதிய நிதிவசதி யின்மையினால் தற்போது செயற் குறிப்பேதும் இல்லை.

50—

திருவாசலடி கிராமத்தின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண் 7596—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், திருவாசலடி கிராமத்தின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் திருவாசலடி கிராமத்தின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய நடப்பு நிதியாண்டில் (1992-93) விசையிறைப்பான் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

51—

பெரியநற்குணத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு மயான பாதை அமைத்தல்.

வினா எண் 7685—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரியநற்குணத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு மாயனப்பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பெரிய நற்குணத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மயானப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 28

52—

எல்லப்பட்டி கிராமத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 7958—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை தொகுதி, நத்தம்பண்ணை பஞ்சாயத்துக்குட்பட்ட எல்லைப்பட்டி கிராமத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிழற்குடை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் நத்தம்பண்ணை ஊராட்சி எல்லைப்பட்டியில் நிழற்குடை அமைக்கும் வேலை எதுவும் 1992-93-ம் ஆண்டு திட்டத்தில் இல்லை. 1993-94ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து திட்ட வழிமுறைகளுக்குட்பட்டு இப்பணியை எடுப்பது குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முடிவு செய்யும்.

53—

சென்னை நகரில் ஒட்டப்படும் விளம்பர போர்டுகள், சுவரொட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி விளம்பரம்.

வினா எண் 8170ஏ—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை மாநகராட்சி சென்னை நகரில் ஒட்டப்படும் விளம்பர சுவரோட்டிகள் (Display), விளம்பர போர்டுகள் மற்றும் விளம்பர பேனர்களுக்கு வசூலிக்கப்படும் விளம்பர வரி விகிதம் விவரம் என்ன?

(ஆ) 1988-89, 1990-91 மற்றும் 1991-92-ல் அக்டோபர் முடிய கிடைத்த விளம்பர வரி வருவாய் ஆண்டு வாரியாக எவ்வளவு?

(இ) இவற்றில் வரி ஏய்ப்புகளை கண்டறிய எவ்வகையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

1999 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) விளம்பர சுவரொட்டிகள்:	நிர்ணயிக்கப்பட்ட வரி விகிதம்.		
	வாரம்.	மாதம்.	வருஷம்
(1)	(2)	(3)	(4)
அ. $\frac{1}{2}$ சதுர மீட்டர்	0.50	2.00	—
ஆ. $\frac{1}{2}$ சதுர மீட்டரில் இருந்து 1 ச.மீ.	1.00	4.00	...
இ. ஒவ்வொரு கூடுதல் ஒரு மீட்டருக்கும் அதற்கு குறைந்ததற்கும்.	0.80	3.20	...
விளம்பர போர்டுகள்:			
அ. $\frac{1}{2}$ சதுர மீட்டர் ...	0.50	2.00	20.00
ஆ. $\frac{1}{2}$ ச.மீ. இருந்து 1 ச.மீ. வரை	1.00	4.00	40.00
இ. $\frac{1}{2}$ ச.மீ. இருந்து $2\frac{1}{2}$ ச.மீ. வரை	2.00	8.00	80.00
ஈ. ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் அதற்கு குறைந்ததற்கும்.	1.50	6.00	60.00
விளம்பர பேனர்கள்:			
அ. 3. மீட்டரில் இருந்து 6. மீ. வரை	—	40.00	—
ஆ. 6 மீட்டரில் இருந்து 15 மீ. வரை.	—	80.00	—

(ஆ) 1988-89 ... ரூ. 7.62 லட்சம்

1989-90 ... ரூ. 5.91 லட்சம்.

1990-91 ... ரூ. 6.33 லட்சம்.

1991-92

(அக்டோபர் 1991 வரை ரூ.3.99 லட்சம்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(இ) விளம்பர சுவரொட்டிகளின் அளவிற்கு தகுந்தாற் போல் வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது. வரி வசூலித்ததற்கு அத்தாட்சியாக சென்னை மாநகராட்சியின் முத்திரைகள் விளம்பர சுவரொட்டிகள் மீது பதிக்கப்படுகிறது. அனுமதி பெறாதவை இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்படுகின்றன.

மேலும் அரசு 1985-ஆம் ஆண்டில் தமிழ்நாடு விளம்பரப் பலகைகள் அரசுடமையாக்கும் சட்டம் அமுலுக்கு கொண்டு வந்து அச்சட்ட எண் 39—ன் படி சென்னை மாநகரில் விளம்பரப் பலகைகள் வைக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைந்துள்ளது. அதன்படி விளம்பரப் பலகை வைக்கும் இடத்திற்கு நில வாடகை மாவட்ட ஆட்சியரால் வசூலிக்கப்படுகிறது. விளம்பரப் பலகை வைத்த பிறகு வரி வசூலிக்கப்பது மாநகராட்சியின் பொறுப்பிற்கு வருகின்றது. இவ்வகையில் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறாமல் வைக்கப்படும் விளம்பரப் பலகைகள் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்டுள்ள குழு கண்டறிந்து அவைகளை அகற்றுவதுபற்றி முடிவெடுக்கும். விளம்பரப் பலகைகளின் உரிமையாளர்கள் விளம்பர வரியை மாநகராட்சிக்கு செலுத்தாமல் மாநகராட்சியின் பேரில் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்கள். அவ்வழக்குகளின் தீர்ப்பின்படி தற்பொழுது, மாநகராட்சி வரிவிதிப்பு முறைகளை பின்பற்றி வரிவிதித்து வரிகேட்பு நோட்டீஸ் ரூ. 26,89,262 மதிப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வரித் தொகையை வசூலிக்க மாநகராட்சி மேலும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

54—

கண்ணாடிக்குளம் கிராமத்தில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச காலனி வீடுகள் அமைத்தல்.

வினா எண் 8655—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், கண்ணாடிக்குளம் கிராமத்தில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச காலனி வீடுகள் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆலங்குளம் ஒன்றியம் கண்ணாடிக்குளம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்கள் யாரும் ஒன்றியத்தில் இலவசவீடு கட்ட பட்டாக்களுடன் பதிவு ஏதும் செய்யாததால் 1992-93 ஆம் ஆண்டு இக்கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் ஏதுமில்லை. எனினும் வருங்காலத்தில் இக் கிராமம் ஆதிதிராவிட மக்கள் தங்களது பட்டாக்களை பதிவு செய்தால் விதிகளுக்குட்பட்டு இலவச வீடுகட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

55—

மாவலியூத்து கிராமத்தில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு இலவசக் காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 8657—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், மாவலியூத்து கிராமத்தில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு இலவச காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆலங்குளம் ஒன்றியம், மாவலியூத்து கிராம ஆதி திராவிட மக்கள் தங்களுக்கு தொகுப்பு வீடுகட்டுவதற்கு ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் பதிவுகள் ஏதும் செய்யவில்லை. எனவே 1992-93 ஆம் ஆண்டு இலவச வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

56—

சி. முட்லூர் குமுடிமூலை ஆதிதிராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்து தருதல்.

வினா எண் 918—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி. முட்லூர் குமுடிமூலை ஆதிதிராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், புவன கிரி ஊராட்சி ஒன்றியம் சி. முட்லூர் குமுடிமூலை ஆதிதிராவிடர் காலனிக்கு சாலைவாசதி 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

57—

சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்துள்ள சாலைகளை அகலப்படுத்தும் பணியில் மாநகராட்சியை ஈடுபடுத்தல்.

வினா எண் 8742—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் போக்குரவத்து நெரிசல் மிகுந்துள்ள சாலைகளை அகலப்படுத்தும் பணியில் சென்னை மாநக ராட்சி ஈடுபட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கொான்ஹார் நெடுஞ்சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. எஸ்.ஆர்.பி. கோயில் தெரு (வடக்கு), திரு. வி. க. நகர் பேப்பர் மில்ஸ்|சாலையிலிருந்துதொழிலாளர் நல காப்பீடு மருத் துவமனை சாலை வரையுள்ள கிழக்குபுறப் பகுதி விரிவாக்

கப்பட்டுள்ளது. மேலும், சர்தார் வல்லபாய் படேல் சாலை, சாஸ்திரி நகர், மகாத்மா காந்தி தெரு, பிரேஸர் பிரிட்ஜ் சாலை, நார்த் போர்டு சைடு ஹாடோஸ் சாலை மற்றும் ஸ்டெர்லிங் சாலை பகுதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

58—

கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமத்தில் மயானத்திற்கு இடம் வழங்க அரசு நடவடிக்கை.

வினா எண் 10149—திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி பெரிய நெகமத்தில் மயானத்திற்கு இடம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) பெரிய நெகமம் பேரூராட்சியைச் சேர்ந்த பெரிய நெகமம் மற்றுமுள்ள மூன்று கிராமங்களில் கீழ்க்கண்ட விவரப்படி தற்போது மயானங்கள் உள்ளன:—

	கிராமத்தின் பெயர்.	க.ச.எண்	பரப்பு.
	(1)	(2)	(3)
			ஏக்கர்.
1.	பெரிய நெகமம்	84	0.75
2.	சின்னவேடம்பட்டி	260	0.50
3.	ரங்கம்புதூர்	210	0.50
4.	நெகமம் மற்றும் காளியப்பம் பாளையம் ஆதி திராவிடர் மயானம்.	77	0.50

மேற்கண்ட பரப்பு கொண்ட மயானங்களே தற்போது போதுமானதாக உள்ளன. கூடுதலாக மயானத்திற்கு இடம் தேவைப்படாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

உலக வங்கி உதவியுடன் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் சென்னையில் அமுல்படுத்தும் திட்டங்கள்

வினா எண் 10165 —திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சென்னையில் திட்டங்கள் அமுல்படுத்தி வருகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் உலக வங்கி நிதியுதவியுடன் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று சுகாதாரத் திட்டத்தை ரூ. 150.80 கோடி மதிப்பீட்டில் 1986-87-லிருந்து செயல்படுத்தி வருகிறது. இது செப்டம்பர் 1992 முடிய ரூ. 95 கோடி செலவு செய்யப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் சென்னை நகர குடிநீர் வசதியினை மேம்படுத்தல், குடிநீர் வழங்கு அமைப்பினை அபிவிருத்தி செய்து விஸ்தரித்தல். இந்த வாரியத்தின் நிர்வாக அமைபினை அபிவிருத்தி செய்தல் ஆகியவை ஆகும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் செயல்படுத்தி வரும் முக்கிய பணிகளின் விவரங்கள்:

1. கொடுதலையாற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினைத் தடுத்து நீர்பிடிப்புகளில் திருப்பி கொடுதலையாறு படுகையில் உள்ள நீர்ப்பிடிப்புகளில் செறிவூட்டுவதற்காக, தடுப்பணைகள் கட்டுவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளன. முதலானதாக வள்ளியூரிலும், இரண்டாவதாக ஜெகந்நாத

1993 ஏப்ரல் 28]

புரத்திலும் தடுப்பணைகள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மூன்றாவது தடுப்பணை மேல்சம்பேடு என்ற இடத்தில் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டு வருகிறது.

2. மணலி பகுதிக்கு செங்குன்றத்திலிருந்து மாதவரம் நீரேற்று நிலையம் வரை 1,000 மி.மீ. விட்டமுள்ள கான்கிரீட் குழாய்கள் 5 கி. மீ. நீளத்திற்குப் போடும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

3. செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

4. பூண்டி திறந்தவெளி பூசிய கால்வாயை அபிவிருத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்படும்.

5. தூர்ந்துபோன குடிநீர் விநியோகக் குழாய்களை மாற்றி அமைக்கும் பணி பல்வேறு கட்டங்களாக செயல் படுத்தப்பட்டு வருகிறது.

6. சென்னை நகரில் குடிநீர்க் குழாய்கள் இதுவரை போடப்படாத. 85 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் போடப்பட வுள்ளது. மேலும் சென்னை நகருடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்து பகுதிகளுக்கு பிரத்யேகமாக குடிநீர் வசதிக்காக புதுக்குழாய்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

7. சென்னை நகரில் பெரும்பான்மையான இடங்களில் உள்ள பிரதான குழாய்கள், கிளைக் குழாய்கள் ஆகியவற்றை வலுப்படுத்தி அவற்றினை அதிக வட்டமுள்ள குழாய்களாக மாற்றுவதற்கான திட்டம் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்,

8. குடிநீர் வாரியத்தினை மேம்படுத்துவதற்காக சில பணிகள் நடைபெற்று வருகின்றன. வீட்டு இணைப்புகளில் மற்றும் விநியோக குழாய்களில் நீர் கசிவினால் ஏற்படும் நீர் இழப்பினைத் தடுப்பதற்காக திட்டங்கள் தயா ரிக்கப்பட்டு முதல் கட்டத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

கழிவு நீரகற்று வசதி :

1. கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பினை அபிவிருத்தி செய் வதற்காக கீழ்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன :

(அ) பொதுத் தெருக்களில் புதிய கழிவு குடிநீர்க் குழாய்கள் 68 தெருக்களில் 8.5 கி.மீ. நீளத்திற்கு போடப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக மேலும் 9 கி.மீ நீளத்திற்கு போடப் பட்டு வருகிறது.

[1993 ஏப்ரல் 28

(ஆ) 680 தனியார் தெருக்களில் 80 கி.மீ, நீளத்திற்கு புதிய கழிவுநீர்க் குழாய்கள் போடப்பட்டுள்ளது. மேலும் 82 கி.மீ. நீளத்திற்கு கழிவு நீர்க்குழாய்கள் போடப்படும்.

(இ) கழிவு நீரகற்று அமைப்பின் குறுகிய கால அபிவிருத்திக்கான முதற்கட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனில் பழமையான கழிவுநீர் செல்லும் பாதைகளில் 6 கி.மீ. நீளத்திற்கும் பழைய ஆழமான கழிவுநீர்க் குழாய்களை 15 கி.மீ. நீளத்திற்கும் கசடுகள் எடுக்கப்பட்டுள்ளன. 30 கழிவு நீரகற்று நிலையங்களிலிருந்து கசடுகள் எடுக்கும் முறை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த குறுகிய காலத்து திட்டத்தின் இரண்டாவது கட்டம் விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஈ) வடக்கு செம்பியம் ஈக்காட்டுத்தாங்கல், ஆ.வி. நகர் பகுதிகளில் புதியதாக கழிவு நீரேற்று நிலையங்கள் அமைக்கும் பணிகளும் கழிவு நீரேற்று விசைக் குழாய்கள் போடும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

(உ) என். எஸ். கே. நகர் பகுதியில் கழிவு நீரகற்று வசதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. சாலிக்கிராமம் பஞ்சாயத்துப் பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிக்காக அந்த பகுதி 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கழிவு நீர்க்குழாய்கள் போடும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 36 கி. மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் போடப்பட்டுள்ளது. மேலும் 7. கி. மீ. நீளத்திற்கு கழிவு நீர்க்குழாய்கள் போடப்படும்.

3. சென்னையிலுள்ள பழமையான 10 கழிவு நீரேற்று நிலையங்களை மாற்றியமைத்து அதற்கான விசை இயந்திரங்கள் அதிக திறனுள்ளதாக பொருத்தும் பணிகள் எடுக்கப்படவுள்ளன.

4. சென்னை நகரில் தாழ்வான பகுதிகளான தெற்கு கேசவபெருமாள்புரம், கோவிந்தசாமி நகர், நமச்சிவாய புரம், திருவள்ளுவர்புரம் முதலிய பகுதிகளில் கழிவுநீரகற்று வசதி பணிகள் நடைபெற்று வருகின்றன.

60 —

நயினார்கோயில் ஒன்றியம் பனிதிவயல் கிராமத்தில் துணை சுகாதார நிலையம கட்டும் திட்டம்.

வினா எண் 10212—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார் கோயில் ஒன்றியப், பனிதிவயல் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் எந்த ஆண்டு கட்டப்படும்.

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார் கோயில் ஊராட்சி ஒன்றியம் , பனிதிவயல் கிராமத்தில் துணை சுகாதார நிலையத்திற்கான இடம் கிடைத்தவுடன் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

61—

கழுநீர்குளம் ஊராட்சி, கல்லூத்து, கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 10408—திரு. எஸ் .எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள கழுநீர்க்குளம் ஊராட்சி, கல்லூத்து கிராமத்திலுள்ள ஆதிராவிடர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி—கட்டப்பொம்மன் மாவட்டம், கழுநீர்க்குளம் ஊராட்சி, கல்லூத்து கிராம ஆதி திராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு இலவச பட்டா இது வரை வழங்கவில்லை. வருவாய்த் துறை மூலம் பட்டா வழங்கினால் தொகுப்பு வீடுகள் கட்டுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

62—

சாணார்பட்டி பஞ்சாயத்து, ராமன் செட்டிப்பட்டியில் புதிதாக ஒரு அடி துளை குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண். 10515—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி பஞ்சாயத்திற்குட்பமட ராமன் செட்டிபட்டியில் தற்போது இரு அடிபம்புகள் இருந்தும் அவை இயங்காததால் அங்கு புதிதாக ஒரு அடி துளை குழாய்க் கிணறு அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நத்தம் தொகுதி, சாணார்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட ராமன் செட்டிபட்டியில் உள்ள இரு கையிறைப்பான்களும் நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருப்பதால் வேறு குடிநீர்த் திட்டம் எதுவும் செயல்படுத்த இயலாது.

63—

புதுவயல் கிராம ஆதி திராவிடர்களுக்கு கூட்டுக் குடியிருப்பு கட்டும் திட்டம்.

வினா எண் 10545—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கல்லாக்கோட்டை ஊராட்சியில், புதுவயல் கிராமத்திற்கு ஆதி திராவிடர் கூட்டுக் குடியிருப்புக் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை தொகுதி, கந்தவர்க் கோட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாக்கோட்டை ஊராட்சியில், புதுவயல் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் நடப்பாண்டில் (1992-93) போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் கட்ட வாய்ப்பில்லை. நிதிநிலைமைக்கு ஏற்ப வரும் ஆண்டுகளில் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும்.

64—

சின்னதம்பி பாளையம் ஊராட்சி, தாசரியூர் கிராமத்திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

வினா எண் 10811—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், சின்னத் தம்பிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட தாசரியூர் கிராமத் திற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், தாசரியூர் குடியிருப்பின் மக்கள் தொகை ஆதி திராவிடர்கள் 150 பேரும் இதர மக்கள் 200 பேரும் மொத்தம் 350 மக்கள் தொகையை கொண்டுள்ளது. அக்குடியிருப்பில் இரண்டு ஆழ்குழாய்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு நல்ல முறையில் போதுமான அளவு தடையின்றி பாதுகாப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதால் ,மேலும் தற்போது ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் இதுவரை ஏதும் இல்லை.

65—

வேப்பங்காடு ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்,.

வினா எண் 11492—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், வேப்பங்காடு ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1984-85-ல் வேப்பங்காடு ஊராட்சி ஆதி திராவிடர் களுக்கு 30 தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1992-93-ல் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

66—

நடுவிக்கோட்டை எஞ்சிய ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 11493—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை எஞ்சிய ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1988-89-ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் நடுவிக்கோட்டை ஆதிதிராவிடர்களுக்கு 25 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1992-93-ல் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

67—

மாளியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 11495—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் மாளியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் 1992-93-ல் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1991-92 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் மாளியக்காடு ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு 13 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர செயற்குறிப்பு ஏதுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

68—

மாவடுகுறிச்சி ஊராட்சி நாடாகாட்டில் நீர்மூழ்கி மோட்டார் அமைக்கும் திட்டம்.

வினா எண் 11617—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி நாடாகாட்டில் 1992-93-ல் நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சியில் இயங்கும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து தேவையான அளவு குடிநீர் வழங்கப் பட்டு வருவதால் இந்த மேல்நிலை நீர்த் தொட்டிக்கு 1992-93-ல் நீர்மூழ்கி மோட்டர் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

69—

இரண்டாம் புலிக்காடு ஊராட்சி நாணத்திடலுக்கும் தெற்கு பகுதிக்கும் புதிய குழாய்கள் இணைத்து குடிநீர் வழங்குதல்.

வினா எண் 12007—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவசத்திரம் ஒன்றியம், இராண்டாம் புலிக்காடு ஊராட்சி நாணத்திடலுக்கும் தெற்கு பகுதிக்கும் 1992-93-ல் புதிய குழாய்கள் இணைத்து குடி தண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவசத்திரம் ஊராட்சி ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஊராட்சி, நாணத்திடலுக்கும் தெற்கு பகுதிக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நாடியம் ஆதி திராவிட குடியிருப்பு மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு 1992-93-ஆம் ஆண்டில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

70—

சீகன்காட்டிலுள்ள பழைய அரசு கிணற்றை தூர் எடுத்து போர் போட்டுக் கொடுத்தல்.

வினா எண் 12027—திரு. ஆர். சிங்காரம்,: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவசத்திரம் ஒன்றியம்: சீகன்காட்டிலுள்ள பழைய அரசு கிணற்றை சுத்தப்படுத்தி, தூர் எடுத்து போர் போட்டுக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ருத்திரசிந்தாமணி ஊராட்சியிலுள்ள அரசு குடிநீர் கிணற்றினை பொதுமக்கள் குடிநீருக்காக பயன்படுத்தி வருகிறார்கள். குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதிதாக ஓர் ஆழ்குழாய் அடுத்து வரும் திட்டங்களில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் வெள்ளாளங்காட்டிலிருந்தும் ஜி. எல். ஆர். பைப்மூலம் சீகன்காடு பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

71—

சின்னக்கழனிவாசல் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைத்து பைப்லைன் விஸ்தரித்து தண்ணீர் கிடைக்கச் செய்தல்.

வினா எண் 12033—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னக்கழனி வாசலில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலைக் குடிநீர் தொட்டிக்கு மின் மோட்டார் உடன் இணைத்து, பைப் லைன் விஸ்தரித்துக் கொடுத்து தண்ணீர் சப்ளை செய்ய 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஊராட்சி, சின்னக்கழனி வாசலில் ஒரு கையிறைப்பானும் ஒரு மின் விசைத் திட்டமும் பயனிலுள்ளது. மேலும் 1990-ல் நிறுவப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின் விசைத் திட்டம் மின் இணைப்பு பெற்று பொதுமக்களின் பயனுக்கு கொண்டு வரப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. கிராமம் முழுவதும் பயன்பெறும் இத் திட்டத்திற்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு தேவையில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

72—

ஊமத்தநாடு ஊராட்சி எடையர் குளத்தில் படித்துறை அமைத்துக் கொடுத்தல்

வினா எண் 12071—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி ஊமத்தநாடு ஊராட்சி எடையர் குளத்தில் 1992-93-ல் படித்துறை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி எடையர் குளத்தில் 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலேயே ரூ. 8,000 மதிப்பீட்டில் படித்துறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

73—

கைவனவயலில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்தல்.

வினா எண் 12323—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், ஒன்றியம் கைவனவயலில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதாக இருப்பதால் அதை உடன் 1992-93-ல் பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கைவனவயலிலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுது பார்க்கப்பட்டு, தற்பொழுது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

[1993 ஏப்ரல் 28

74—

ஆலங்குடி பேரூராட்சிக்கு துப்புரவு தொழிலாளர்கள் கூடுதலாக நியமிக்க நடவடிக்கை.

வினா எண் 12545—திரு. எஸ். சண்முகநாதன்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி பேரூராட்சிக்கு துப்புரவு தொழிலாளர்கள் போதுமானதாக இல்லாதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், துப்புரவு தொழிலாளர்கள் அதிகம் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பேரூராட்சிகளில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க நியமன அளவீடு நிர்ணயம் செய்து 2-6-1987 தேதிய 450, ஊரக வளர்ச்சித்துறை அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது. இதில் குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்களின் நீளம் 1 கிலோ மீட்டர் இருந்தால் ஒரு துப்புரவு பணியாளரும், மற்ற பகுதிக்கு 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு துப்புரவு பணியாளரும் நியமனம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலங்குடி பேரூராட்சியில் குடியிருப்பு பகுதியில் உள்ள தெருக்களின் நீளம் 10.160 கிலோ மீட்டர். மேற்கூறப்பட்ட அரசாணையின்படி இப்பேரூராட்சியில் 10 துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதி உள்ளது. ஆனால் இப்பேரூராட்சியில் 17 துப்புரவு பணியாளர்கள் ஏற்கனவே பணியாற்றி வருகிறார்கள். நியமன அளவீட்டுக்கு மேல் 7 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

(ஆ) ஆலங்குடி பேரூராட்சியில் ஏற்கனவே தகுதிக்கு அதிகமாக துப்புரவு தொழிலாளர்கள் பணியாற்றி வருவதால், கூடுதலாக துப்புரவு தொழிலாளர்கள் நியமனம் செய்யும் வாய்ப்பு எழவில்லை.

1993 ஏப்ரல் 28]

75—

மரக்காவலசையில் இயங்கும் பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றுதல்.

வினா எண் 3172—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மரக்காவலசையில் இயங்கும் பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மரக்காவலசையில் தற்போது இயங்கும் பகுதி நேர அங்காடியை சேதுபாவாசத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியே நடத்துகின்றது. இவ்வங்காடி செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய நாட்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டும் செயல்பட்டு வருகிறது. இவ்வங்காடியுடன் 341 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளது. அங்காடி வாடகையின்றி திரு. எம். செயின்லாதின் என்பவரின் சொந்த வீட்டில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றுவதால் தனியாக விற்பனையாளர் ஒருவரை நியமித்து அவருக்கு சம்பளம் ரூ. 500 கொடுக்க வேண்டும். இதனால், மேற்படி கூட்டுறவு வேளாண்மை வங்கிக்கு செலவுகள் கூடுதலாகும். எனவே, 341 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வரும் மரக்காவலசை பகுதிநேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற வேண்டிய அவசியம் எழவில்லை.

76—

பெரியகுமட்டி நியாயவிலைக் கடையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்குக் கூடுதல் அரிசி வழங்குதல்.

வினா எண் 7697—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியப் பெரியகுமட்டி நியாயவிலைக் கடையில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கும் நிலையில் கூடுதலாக அரிசி ஒதுக்கீடு செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி தொகுதி, பரங்கிப் பேட்டை ஒன்றியம் பெரியகுமட்டி நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள 194 குடும்ப அட்டைகளுக்குப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பெரியவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 4 கிலோ, சிறியவர்களுக்கு மாதமொன்றுக்கு 2 கிலோ என்ற அடிப்படையில் குடும்ப அட்டை ஒன்றுக்கு அதிகபட்ச அளவாக 12 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. 194 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந் தோறும் 12 கிலோ அரிசி கிடைக்குமாறு அந்த நியாய விலைக் கடைக்கு அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

77—

இராஜபாண்டி கிராமத்தில் நிரந்திர நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 9615—திரு. எஸ்.எஸ் ராமசுப்பு: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள இராஜபாண்டி கிராமத்திற்கு நிரந்தர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் ஒவ்வொரு நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. ஏற்கெனவே நியாய விலைக் கடை இயங்கி வரும் வருவாய் கிராமங்களிலும், காடு, மலைகள், ஆறுகள் போன்ற இயற்கைத் தடைகள் இருக்கும் மற்றொரு நியாய விலைக் கடை திறக்கப்படுகிறது இரண்டு நியாயவிலைக் கடைகளின் இடையே 3 கிலோ மீட்டர் மற்றும் அதற்கு மேல் தூரம் இருக்கும் பட்சத்தில் கடை நடத்தத் தேவையான கட்டிடத்தினை வாடகை இன்றி வழங்கும் பட்சத்தில் அங்கு பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மிகவும்

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

அத்தியாவசியமாயிருந்தால் தான் இத்தகைய கடைகள் திறக்கப்பட வேண்டும். நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், இராஜபாண்டி கிராமத்தில் ஏற்கெனவே கிளைக் கடை ஒன்று செயல்பட்டு வருவதால், அரசின் விதிப்படி புதிதாக மற்றொரு நிரந்தகு நியாயவிலைக் கடை அமைக்க இயலாது.

87—

அரசு சார்பற்ற நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அரசின் சார்பாக செய்யப்படும் உதவிகள்

வினா எண் 10481—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பற்ற நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அரசின் சார்பாக ஏதேனும் உதவிகள் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சுமார் 115 தன்னியலாக செயல்படும் நுகர்வோர் அமைப்புகள் உள்ளன. இவைகளில் சில அமைப்புகளே நுகர்வோர் நலனுக்காக திறம்படச் செயல்படுகின்றன. இத்தகைய நுகர்வோர் நலன் காக்கும் அமைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு பல உதவிகளைச் செய்துவருகிறது. இத்தகைய அமைப்புகள் நுகர்வோர் நலனுக்காக கண்காட்சிகள், கருத்தரங்குகள் ஆகியவை நடத்துவதற்கும் அரசு நிதி உதவி அளிக்கிறது. இந்த ஆண்டு, இத்தகைய தன்னியலாகச் செயல்டும் நுகர்வோர் அபைப்புகளுக்கு நிதி உதவி அளிப்பதற்கான ரூ. 50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தகுதி உள்ள நுகர்வோர் அமைப்புகளைத் தேர்ந்தெடுத்து நிதி உதவி செய்வதற்கு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரின் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வோர் நலனுக்காக பணிபுரிவோர்களுக்கு மாநில அரசு முதற் பரிசாக ரூ. 3,000, இரண்டாம் பரிசாக ரூ 2,000, மூன்றாம் பரிசாக ரூ. 1,000 நற்சான்றிதழ்களுடன் வழங்கி கௌரவிக்கிறது.

79—

புதுக்கோட்டை வேலைவாய்ப்பகத்தில் தொழிற்கல்வி பயின்று பதிவுசெய்து வேலைபெற்றவர்கள் நிலவரம்

வினா எண் 12555—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொழிற்கல்வி பயின்று பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் இந்த ஆண்டு வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்—

(அ) 31—10—1992 அன்றைய தேதியில் புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்துகொண்டு செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளோரின் எண்ணிக்கை— 2,506.

தொழிற்பயிற்சி பெற்றவர்கள்	1,732
பட்டயம் பெற்றோர்	774

(ஆ) அதில் இந்த ஆண்டு 31—10—1992 முடிய உள்ள கால அளவில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் வேலை பெற்றோர்களின் எண்ணிக்கை—

[1993 ஏப்ரல் 28]

80—

5

புதுக்கோட்டை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பி.எட். முடித்து பதிவுசெய்து வேலைபெற்றவர்களின் நிலவரம்

வினா எண் 12722— திரு எ. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பி.எட். முடித்து பதிவு செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் இந்த ஆண்டு வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) 31—10—1992 அன்றைய தேதியில் புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செல்லுபடிப் பதிவேட்டில் இருந்து பி.எட். முடித்து பதிவுசெய்தோரின் எண்ணிக்கை:

ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
966	397	1,363

(ஆ) இந்த ஆண்டு 31—10—1992 முடிய புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெற்ற பி.எட். முடித்தோரின் எண்ணிக்கை:

ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
28	11	39

81—

பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தால் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை

வினா எண் 10949—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தால் பயன்பெறும் விவசாயிகள் எத்தனை பேர்?

(ஆ) விவசாயிகள் சரியாக பயன்பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) 1991-92ம் ஆண்டில் 369 பேர் ஆவர்.

(ஆ) கட்டிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் விளைபொருளின் விலை குறையும்போது இருப்பு வைத்து நல்ல விலை கிடைக்கும்போது விற்கும் வகையில் பொருள் ஈட்டுக்கடன், கிடங்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தரத்திற்கேற்ப விளைபொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக, வணிகமுறை தரம் பிரிப்பு மையம் ஒன்று செயல்பட்டு இலவசமாக தரம்பிரிப்பு சானறிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு தேவையான விளைபொருட்களையும் விற்பனைக்கூடம் மூலம் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு ஆதரவு விலைக்குக் கீழ், விலை வீழ்ச்சி ஏற்படும்போது, இந்திய பருத்திக் கழகம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் பருத்திக் கொள்முதல் செய்ய உறுதி அளித்துள்ளது.

82—

கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவமனையாக உயர்த்த அரசு விதிக்கும் நிபந்தனைகள்

வினா எண் 11192—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவமனையாக உயர்த்த அரசு விதிக்கும் நிபந்தனைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து கீழ்க்கண்ட நிபந்தனைகள் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன :—

(1) தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 50-க்கு மேல் இருத்தல் வேண்டும்.

(2) தரம் உயர்த்தப்பட வேண்டிய கால்நடை மருந்தகத் திற்குச் சொந்தமான நிலம், கட்டிடம் இருத்தல் வேண்டும்.

(3) கால்நடை மருத்துவமனை பணியாளர்களுக்கான குடியிருப்பு மற்றும் கால்நடைகளை உள்நோயாளியாக அனு மதிக்க கட்டிடம் கட்டப் போதிய இடவசதி இருத்தல் வேண்டும்.

(4) போதிய குடிதண்ணீர் வசதி இருத்தல் வேண்டும்.

83—

கிராம விவசாயிகளுக்கு, விவசாயமுறைகளைத் தெரிந்துகொள்ள அரசு செய்திப்படம் வெளியிடுதல்.

வினா எண் 11423—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற விவசாயிகள் நலன் கருதி நவீன விவ சாய முறைகளை அவர்கள் தெரிந்து விவசாயம் செய்ய அரசு செய்திப்படம் தயாரித்து வெளியிட்டு செயல்படுத்துமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) கிராமப்புற விவசாயிகள் நலன் கருதி நவீன விவசாய முறைகளை அவர்கள் தெரிந்து விவசாயம் செய்ய அரசு உலக வங்கி உதவியுடன் உழவர்பயிற்சி நிலையங்களை

பலப்படுத்துதல் மற்றும் வேளாண் காடுகள் திட்டத்தின்கீழ் வீடியோ படம் எடுத்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலக தகவல் பிரிவு மூலம் கிராமப்புறங்களில் காண்பிக்கும் திட்டத்தினை செயல்படுத்துகிறது.

அதன்படி சென்ற ஆண்டு (1991–92-ம் ஆண்டு) கீழ்க்காணும் தலைப்புகளில் நவீன விவசாய முறைகளைப் பற்றிய வீடியோ படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன:—

1. புழுதிக்கால் நெல் சாகுபடி
2. தோட்டக்கால் நெல் சாகுபடி
3. கரும்பு சாகுபடி
4. பருத்தி சாகுபடி
5. நிலக்கடலை சாகுபடி
6. தென்னை சாகுபடி
7. பயிறுவகை சாகுபடி
8. தரிசு நில மேம்பாடு
9. வேளாண் காடுகள் பராமரிப்பு
10. மானாவாரி நில மேம்பாடு
11. பட்டு உற்பத்தி
12. தீவன உற்பத்தி
13. மண் வளம் பாதுகாப்பு.

(ஆ) நடப்பு ஆண்டில் (1992-93) மகளிர் மேம்பாட்டு திட்டம் பற்றிய ஆறு வீடியோ படம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

84—

அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு சிறு தொழில் பயிற்சியளித்தல்.

வினா எண் 587—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஆண்டுதோறும் சிறுதொழிற் பயிற்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஆண்டுதோறும் சிறுதொழில் பயிற்சி அரசால் ஏற்கெனவே நடத்தப்பட்டு வருகிறது.

85—

தமிழ்நாட்டில் 1990—91-ல் திறக்க வேண்டிய புதிய அரசினர் மாணவ, மாணவியர் விடுதி குறிப்பிட்ட மாதத்தில் திறக்காததினால் பயன் பெற முடியாத நிலை.

வினா எண் 598—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் 1990—91-ல் திறக்க வேண்டிய புதிய அரசினர் மாணவ, மாணவியர் விடுதிகள் ஜுன், ஜுலை திங்களில் திறப்பதற்கு பதிலாக டிசம்பர் 1991 வரை திறந்ததினால் மாணவர்கள் பயன்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

1990-91—ல் 40 புதிய விடுதிகள் திறக்க ஆணையிடப்பட்ட தேதி ..	29—8—1990
9 விடுதிகளுக்கு மாற்று இடங்கள் தேர்வு செய்து ஆணையிடப்பட்ட தேதி ..	19—10—1990
மேலும் 2 விடுதிகளுக்கு மாற்று இடங்கள் தேர்வு செய்து ஆணை வெளியிடப்பட்ட தேதி ..	17—1—1991

இவ்விடுதிகள் திறக்கப்பட்ட மாதங்கள்.

9 விடுதிகள் திறக்கப்பட்டது ... அக்டோபர் 1990-ல்
19 விடுதிகள் திறக்கப்பட்டது ... நவம்பர் 1990-ல்.
9 விடுதிகள் திறக்கப்பட்டது ... டிசம்பர் 1990-ல்
2 விடுதிகள் திறக்கப்பட்டது ... ஜனவரி 1991-ல்
1 விடுதி திறக்கப்பட்டது ... நவம்பர் 1991-ல்.

86—

திருமருகலில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 1554—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

நன்னிலம் தாலுக்கா, திருமருகலில் உள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

நன்னிலம் வட்டம், திருமருகலில் உள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால், வரும் ஆண்டுகளில் தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டு நிதிநிலைமைக்கு ஏற்ப புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

87—

மேலப்பிள்ளையார்குளம் கிராமத்தில் வீடு இல்லாத ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்கி வீடு கட்டுதல்.

வினா எண் 2608—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், மேலப்பிள்ளையார்குளம் கிராமத்தில் வாழும் வீடு இல்லாத 51 ஆதிதிராவிட குடும்பத்திற்கு பட்டா வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட மேலப்பிள்ளையார்குளம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு அம் மாவட்ட ஆட்சியரிடம் பரிசீலனையில் உள்ளது. அது அரசுக்குக் கிடைத்தவுடன் நிலம் கையகப்படுத்த அறிவிக்கை வெளியிட ஆணை பிறப்பிக்கப்படும்.

88—

பூலாம்பட்டியில் அரசு ஆதி திராவிடர் மாணவிகள் விடுதி அமைத்தல்.

வினா எண் 8897—திரு. தா. செழியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் வட்டம், பூலாம்பாடியில் அரசு ஆதி திராவிட மாணவிகள் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் வட்டம், பூலாம்பாடியில் அரசு ஆதி திராவிடர் நல மாணவிகள் விடுதி திறப்பது குறித்து வரும் நிதியாண்டில் தேவை மற்றும் நிதி நிலைமை அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

89—

ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரின் அலுவலகத்தை திண்டுக்கல்லில் இருந்து பழனிக்கு மாற்றுதல்.

வினா எண் 6081—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்திற்கான ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரின் அலுவலகம் தற்பொழுது திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை பழனி நகருக்கு மாற்றம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) அறியும்.

(ஆ) இல்லை, தற்பொழுது இரண்டு வருவாய் வட்டங்களுக்கு ஒரு ஆதி திராவிடர் நலத் தனி வட்டாட்சியர் அலுவலகம் வீதம் செயல்பட வரையறை செய்யப்பட்டுள்ளது. இவ் வரையறையின்படி திண்டுக்கல்—அண்ணா மாவட்டத்தில் பழனி மற்றும் வேடசந்தூர் வட்டங்களுக்கான ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் (திண்டுக்கல் அலகு-II) இவ்விரு வட்டங்களுக்கும் பொதுவான தூரத்தில் உள்ளதால் திண்டுக்கல்லைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

90—

காரைக்காட்டு சாவடி ஆதி திராவிடர்களுக்கு மயானக் கொட்டகை அமைத்தல்.

வினா எண் 7805—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, காரைக்காட்டுசாவடி, ஆதி திராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காரைக் காட்டுசாவடி கிராமம் நஞ்சை மகத்து வாழ்க்கை ஊராட்சியைச் சார்ந்ததாகும். 1992-93-ஆம் ஆண்டில் நஞ்சை மகத்து வாழ்க்கை ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 27,300-க்கு சட்டமன்ற உறுப்பினரின் ஆலோசனையின் பேரில் பாலம் கட்டும் வேலை ஒன்றும் பேருந்து நிழற்குடை கட்டும் பணியும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே காரைக் காட்டுசாவடி கிராமத்தில் மயான கொட்டகை இந்த ஆண்டில் கட்ட வாய்ப்பு இல்லை.

1993 ஏப்ரல் 28]

91—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13067—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாத புரம், புக்கரம்பை, மேற்குக்காடு, தில்லாங்காடு, பள்ளத்தூர், ஆலடிக்காடு, ஆண்டிக்காடு, எட்டிவயல், பேராவூரணி சின்ன கள்ளங்காடு ஆகிய ஊர்களில் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

92—

நெல்லியடிக்காடு அம்பலக்காரர் இனத்தவர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 13096—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, நெல்லியடிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த சீர்மரபினரான அம்பலக்காரர் இனத்தவர்களுக்கு காலனி கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர, பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

[1993 ஏப்ரல் 28

93

தொக்காளிக்காடு மிகவும் பின்தங்கிய சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13100—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காளிக்காடு மிகவும் பின் தங்கிய சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடு கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

94—

தென்னங்குடி ஊராட்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13114—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம் தென்னங்குடி ஊராட்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத்தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

1993 ஏப்ரல் 28]

95—

திருச்சிற்றம்பலம் ஊராட்சி, பொக்கன்விடுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13121—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, பொக்கன் விடுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

96—

துறவிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13122—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், துறவிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :,

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

97—

பெரிய தெற்குகாடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டும் திட்டம்.

வினா எண் 13133—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, பெரிய தெற்குக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக் குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

98—

ஒட்டங்காடு ஊராட்சி, கோரவயல்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13134—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, கோரவயல்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

99—

பைங்கால் ஊராட்சியைச் சேர்ந்த மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13552—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பைங்கால் ஊராட்சி, ஆண்டாகோட்டை, அம்மையாண்டி, ஏனாதி கரம்பை, வீரராகபுரம், ஏனாதிகரம்பை மேற்கு, செங்கமங்கலம் மேலக்காடு, செங்கமங்கலம் கீழக்காடு ஆகிய ஊர்களில் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

மிகப் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக் குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

100—

சென்னை கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையம் சிறப்பாக நடைபெற நடவடிக்கை.

வினா எண் 4857— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டியிலுள்ள அரசு கண்ணாடி தொழிற் பயிற்சி நிலையத்தில் சில இயந்திரங்கள் இயங்காமலும், மாணவர்களுக்கு சரிவர பயிற்சி அளிக்காமலும் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொழில் பயிற்சி நிலையம் சிறப்பாக நடைபெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) கிண்டி, அரசு கண்ணாடி தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிப்பதற்காக உள்ள இயந்திரங்கள் அனைத்தும் நன்கு இயங்கி வருகின்றன. பாடத் திட்டத்தின்படி மாணவர்களுக்கு முறையாக பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆகவே, இவ்வினாவிற்கு இடமில்லை.

32—வது பட்டியல்

1—

பொது சொத்திற்கு சேதம் விளைவிப்பவர்களிடமிருந்து சேதத் தொகையை வசூலிக்க சட்டம்.

வினா எண் 2428 — திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

போராட்ட காலங்களில் பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிப்பவர்களிடம் இருந்து அல்லது அவர் சார்ந்துள்ள இயக்கத்திடமிருந்து சேதத் தொகையை வசூலிக்க சட்டம் கொண்டு வந்து பொது சொத்தைக் காப்பாற்ற அரசு வழி வகுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் ;

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பொதுச் சொத்திற்கும் பொதுமக்களுக்கும் விளைவிக்கப்பட்ட சேதம் மற்றும் இழப்புக்கான தண்டனைக்கும் இழப்பீட்டிற்கும் அது தொடர்பான இனங்களுக்கும் வகை செய்வதற்கு, 1992 ஆம் ஆண்டு

1993 ஏப்ரல் 28]

தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 59/ 1992) இயற்றப் பெற்றுள்ளது.

2—

திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஏற்படுத்தல்.

வினா எண். 11059—திரு. எம். ஆண்டி அம்பலம்:, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் வேலூர் மற்றும் புழல் அல்லாமல் வேறு எங்கெங்கு திறந்த வெளிச் சிறைச்சாலைகள் அமைக்க அரசிடம் கருத்துக்கள் உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் :

கோவை மாவட்டத்தில் சிங்காநல்லூரில் மட்டும் திறந்த வெளிச் சிறை ஒன்று உள்ளது, தஞ்சை மாவட்டம் திருமலைசமுத்திரத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்க அரசு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து உத்தேச நிலத்திற்கு அருகில் இயங்கி வரும் தனியார் பொறியியல் கல்லூரி நிர்வாகத்தினர் நீதிமன்றத் தடையாணை பெற்றுள்ளதால் மேற்படி இடத்தில் திறந்த வெளிச் சிறை அமைக்க இயலவில்லை. வேறு கருத்துக்கள் ஏதுமில்லை.

3—

குறிச்சி மேட்டுவயல் இந்திரா நகர் குளம் புறம்போக்கில் குடியிருப்போருக்கு குடிமனைப் பட்டா வழங்குதல்,

வினா எண், 2298—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல் இந்திரா நகரில் நீண்ட பல வருடங்களாக குளம் புறம்போக்கில் குடியிருந்து வருவோர்க்கு குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு, எஸ், டி, சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல் இந்திராநகரில் குடிமனைப் பட்டா வழங்கக் கோரும் நிலம் தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்காக இருப்பதால் பட்டா வழங்க இயலாது,

நகர அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போருக்கு இலவச பட்டா வழங்க நடவடிக்கை,

வினா எண் 8297—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) நகரப் பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருக்கும் மக்களுக்கு குடியிருக்கும் நிலப் பகுதிக்கு, இலவச பட்டா வழங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு, எஸ், டி, சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள நகரங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக ஆக்கிரமணம் செய்து குடியிருந்துவரும் நிலமற்ற ஏழை மக்களுக்கு அந்நிலங்கள் வேறு எதற்கும் பயன்படாத நிலையில் தேவையைக் கருதி அரசால் அவ்வப்போது இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன,

5—

மாவட்டங்களில் நிரந்தர கோட்டாட்சித் தலைவருக்கு உதவியாக துணை கோட்டாட்சித் தலைவரை நியமித்தல்

வினா எண் 13656—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 28]

மாவட்டங்களில் நிரந்தர கோட்டாட்சித் தலைவருக்கு உதவியாக துணைக் கோட்டாட்சித் தலைவர் ஒருவரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

மாவட்டங்களில் நிரந்தர கோட்டாட்சித் தலைவருக்கு உதவியாக துணைக் கோட்டாட்சித் தலைவர் ஒருவரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. கோட்டாட்சித் தலைவருக்கு நேர்முக உதவியாளர் ஒருவர் இருப்பார், அவர் வட்டாட்சியர் நிலையில் நியமனம் செய்யப்படுகிறார், கோட்டாட்சியர் பணியிடத்திற்கு இந்திய ஆட்சிப்பணி முடித்தவர்களையும் உதவி மாவட்ட ஆட்சியராக நியமனம் செய்வதுண்டு. துணை ஆட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டால் அவர்களுக்கு கோட்டாட்சித் தலைவர் என்ற பணியிடத்தின் பெயர் ஆகும், ஒரு கோட்டத்தில். கோட்டாட்சித் தலைவர் பணியிடத்தில் இரண்டு துணை ஆட்சியர்களைக் கொண்டு கோட்டாட்சித் தலைவர் மற்றும் துணை கோட்டாட்சித் தலைவர் என்று நியமனம் செய்தால் நிர்வாகச் சிக்கல்கள் எழலாம்.

6—

தொழிற் கல்விக் கூடங்களில் புதிய தொழில் நுட்பங்களை அடிப்படையகக் கொண்ட பாடத் திட்டங்களை கொண்டு வருதல்.

வினா எண் 5749—திரு. பி. வி. ராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க தொழிற் கல்விக் கூடங்கள் மூலமாக தொழிற்பயிற்சி அளித்து வரும் அரசு புதிய தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு வேறு பாடத் திட்டம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்.

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் தொகையின் மூலமாக பல புதிய டிப்ளமோ வகுப்புகள் தொடங்குவது சம்பந்தமான பாடத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. மேலும் இப்புதிய டிப்ள.மோ வகுப்புகள் 1993—94 அல்லது 1994—95 ஆம் கல்வியாண்டில் தொடங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு மற்ற டிப்ளமோ வகுப்புகளின் பாடத் திட்டங்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 1991—92 ஆம் கல்வி ஆண்டில் முதல் ஆண்டு டிப்ளமோவில் சேர்ந்த மாணவர்களுக்கு, முதல் ஆண்டுக்குரிய பாடத் திட்டங்களில் மிகக் குறைந்த மாற்றங்கள் செய்யப்பட்டன. மேலும் முதல் ஆண்டு படிப்பு எல்லோருக்கும் பொதுவானது. ஆனால், இவர்கள் இரண்டாம் ஆண்டு, மூன்றாவது செமஸ்டர் வரும்போது (1992—93 ஆம் கல்வி ஆண்டிலிருந்து) தத்தம் பிரிவுகளில் மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படி கல்வி பயில வேண்டும்.

7—

அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள்.

வினா எண் 6249—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனி நிறுவனங்களின் கீழ் எங்கெங்கு பொறியியல் கல்லூரிகள் இயங்குகின்றன?

(ஆ) தனியாரின் கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரிகளில் அவற்றிற்கான அகில இந்திய சவுன்சில்கள் உரிய அங்கீகாரம் வழங்கப்படாமலேயே இயங்குபவை ஏதேனும் உள்ளதா?

(இ) இதன் காரணமாக பாதிக்கப்படவிருக்கும் மாணவர்கட்கு எவ்வகையில் பாதிப்பு நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளின் மாவட்ட வாரியான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகள் விவரம் :

(மாவட்ட வாரியாக.)

வரிசை எண்.	மாவட்டம்.	அரசு.	அரசு நிதி உதவி பெறுபவை.	சுய நிதி.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	சென்னை	..	..	..	..
2	செங்கல்பட்டு-எம். ஜி. ஆர்.	..	..	8	8
3	தென்னாற்காடு	..	..	—	..
4	வட ஆற்காடு-அம்பேத்கார்	1	..	1	2
5	திருவண்ணாமலை —சம்புவராயர்.	..	..	1	1
	தருமபுரி	..	..	1	1
7	சேலம்	1	..	1	2
8	பெரியார்	..	..	2	2
9	கோயம்புத்தூர்	1	2	4	7
10	நீலகிரி	..	..	..	..
11	திருச்சிராப்பள்ளி	..	..	1	1
12	தஞ்சாவூர்	..	..	2	2
13	புதுக்கோட்டை	..	..	1	1
14	திண்டுக்கல்-அண்ணா	..	..	2	2
15	மதுரை	..	1	..	1
16	பசும்பொன் தேவர் திருமகனார்.	1	..	..	1

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
17	இராமநாதபுரம்			1	1
18	காமராசர்			2	2
19	திருநெல்வேலி—கட்டபொம்மன்	1		1	2
20	சிதம்பரனார்			1	1
21	கன்னியாகுமரி			1	1
	மொத்தம்	5	3	30	38

(ஆ) 14 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சிலின் அங்கீகாரம் பெறக் காத்திருக்கும் தருவாயில் இயங்கி வருகின்றன.

(இ) தற்போது இதனால் எதிர்மறை விளைவுகள் ஏதும் இல்லை. ஏற்கெனவே அரசும் பல்கலைக் கழகமும் அங்கீகாரம் அளித்துள்ளன. எனினும் புதிய வகுப்புகள் துவங்குதல் போன்றவற்றிற்கு அங்கீகாரம் அளிக்க அகில இந்திய தொழில் நுட்பக் கழக அங்கீகாரம் தேவை என்று அறிவிக்க வேண்டியுள்ளது. இதனால், காலதாமதம் ஏற்படுகின்றதேயன்றி நேரடி இடர்பாடுகள் இதுவரை ஏற்படவில்லை.

8—

கொண்டையம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 9076—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி அரசு உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வியமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கொண்டையம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த 1992–93 இல் எந்தவித கருத்துருக்களும் இல்லை.

9—

சிவகாசியில் தீக்காய சிகிச்சைப் பிரிவு அமைக்க நடவடிக்கை.

வினா எண் 3322—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிவகாசியில் தீக்காய சிகிச்சைப் பிரிவு தனியாக அமைத்திட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சிவகாசியில் தீக்காய சிகிச்சைப்பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

10—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை.

வினா எண் 6188—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்து மாத்திரைகள் தங்கு தடையின்றி கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40,000 லிருந்து ரூ. 50,000 மதிப்பிற்கான மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் அத்தியாவசிய மருந்து, மாத்திரைகள் வாங்கிட மருத்துவ அலுவலருக்கு ரூ. 1,000-மும் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்)களுக்கு ரூ. 4,000-மும் ஆண்டு ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடும், பட்டியல்களை நேர் செய்ய அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. ஆக, எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான மருந்து, மாத்திரைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11—

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க மேற்கொள்ளும் நடைமுறைகள்.

வினா எண் 7986—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு மேற்கொண்டுள்ள நெறிமுறைகள் விவரம் என்ன ?

(ஆ) புதிதாக எங்கெங்கு நிறுவ அரசு உத்தேசித்துள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு கீழ்க்காணும் நெறிமுறைகளை மேற்கொண்டுள்ளது :—

(1) சமவெளிப்பகுதியில் 30,000 மக்கட்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும், மலைப்பகுதியாயின் 20,000 மக்கட்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்றும் அமைக்கப்படும்,

1993 ஏப்ரல் 28]

(2) ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் கிராமத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிற்கு எந்தவித மருத்துவ வசதியும் இல்லாமலிருக்க வேண்டும்.

(3) கிராம மக்களோ அல்லது ஊராட்சி ஒன்றியமோ நன்கொடை ரூ. 10,000 அரசிற்கு செலுத்த வேண்டும்.

(4) 3-லிருந்து 5 ஏக்கர் நிலம் வரை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு நன்கொடையாகக் கொடுக்க வேண்டும்.

(5) ஆரம்ப சுகாதார நிலையம் உடனடியாக செயல்பட வாடகையில்லாக் கட்டிடம் ஒன்று நிரந்தரக் கட்டிடம் கட்டும் வரை கொடுக்க வேண்டும்.

(ஆ) இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் இது குறித்து ஆணை வெளியிடப்படும்.

12—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு துவக்குதல்.

வினா எண் 8272—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு துவக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. எதிர்காலத்தில் தேவையிருப்பின் நிதி நிலையை கருத்திற்கொண்டு இத்திட்டத்தை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

13—

தாலூகா தலைமை மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் மற்றும் மார்ச்சுவரி வேன்கள்.

வினா எண் 8683—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாலூகா தலைமை மருத்துவ மனைகளில் ஆம்புலன்ஸ் மற்றும் மார்ச்சுவரி வேன் கூட இல்லாத நிலை எங்கெங்கு உள்ளன ?

(ஆ) அவற்றில் அவ்வசதிகளை ஏற்படுத்தித் தர இவ்வாண்டிலேனும் அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) தற்சமயம் அனைத்து 50க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆம்புலன்ஸ் வேன்கள் படுக்கை வசதிகளைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது. 18 அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் ஒரு அமரர் ஊர்தி உள்ளது. புதியதாக ஏற்படுத்தப்பட்ட திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் தென்காசி, நெல்லை-கட்டபொம்மன் ஆகிய மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் அமரர் ஊர்தி வசதி இல்லை. தாலூகா தலைமை மருத்துவமனைகளில் தற்போது அமரர் ஊர்திகள் ஏதும் இல்லை.

(ஆ) நிதி நிலைமை காரணமாக தற்போது இயலாது.

14—

சாத்தப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு பெண் மருத்துவர்.

வினா எண் 8818—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

1993 ஏப்ரல் 28]

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் சாத்தப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பெண் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேர்வாணையக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி மருத்துவர் அல்லது பட்ட மேற்படிப்புப் படித்த மருத்துவர் நியமிக்கப்படும்போது பெண் உதவி மருத்துவர் அங்கு நியமிக்கப்படுவது குறித்து அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

15—

வால்பாறை கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவ மனைகளுக்கு ஈ.சி.ஜி. இயந்திரம்.

வினா எண் 9970—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை அரசு மருத்துவமனை, கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைகளில் ஈ.சி.ஜி. மெஷின் செயல்படுகின்றனவா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

வால்பாறை, கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூரிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு ஈ.சி.ஜி. இயந்திரம் வழங்கப்படவில்லை. இருப்பினும் நிதி இருக்குமேயானால் ஈ.சி.ஜி. இயந்திரம் வாங்க செயற்குறிப்பு அனுப்புமாறு மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணி இயக்குநர் திருப்பூரிலுள்ள கோயம்புத்தூர் இணை இயக்குநரைக் கேட்டுள்ளார்.

TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 28

16—

இராமபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையம்.

வினா எண் 10329—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், இராம புரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நல நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியத்தின் மக்கள் தொகை 58,100. அங்கு (1) மல்லசமுத்தி ரம், (2) பாலமேடு, (3) வையப்பமலை ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

17—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனைக்கு ஒரு எக்ஸ்ரே கருவி.

வினா எண் 10377—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுக்கும் வசதி செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் துவங்கும் ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனை மற்றும் வட்ட மருத்துவமனைகளிலும் படுக்கை வசதிகளை கணக்கில் கொள்ளாமல் எக்ஸ்-ரே பிரிவுகள் அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போது இயங்கி வரும் 137 வட்ட மருத்துவமனைகளுள் பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையும் ஒன்றாகும். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரேப் பிரிவு அமைக்கும் திட்டம் அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

18—

பட்டுக்கோட்டையிலிருந்து பாலத்தளி வரையில் செல்லும் நகரப் பேருந்தை மனவயல் சீதாம்பாள்புரம் வரை நீட்டிப்பு செய்ய நடவடிக்கை

வினா எண் 13041—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஒன்றியம்; பட்டுக்கோட்டையிலிருந்து பாலத்துளி வரையில் வருகின்ற நகரப் பேருந்தை மனவயல், சீதாம்பாள்புரம் வரை நீட்டித்து நிரந்தரமாக்கித்தர 1992-93ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை-சீதாம்பாள்புரம் (வழி) பாலத்தளி தடத்தின் நீளம் 14 கி.மீ. பாலத்தளியிலிருந்து எண்ணாளி வயல், மனவயல் வழியாக சீதாம்பாள்புரம் வரை உள்ள சாலை குறுகலாக பழுதடைந்து பேருந்து இயக்கத் தகுதியற்றதாக உள்ளது. எனவே, பட்டுக்கோட்டை-பாலத்தளி இயக்கப்படும் நகரப் பேருந்து தடத்தினை சீதம்பாள்புரம் வரை நீட்டித்து இயக்க வாய்ப்பில்லை.

53—143—28

19—

பேராவூரணி-சென்னை மார்க்க திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை சூப்பர் டீலக்ஸ் ஆக மாற்றுதல்.

வினா எண் 13614—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணியில்இருந்து சென்னை செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை 1992–93இல் சூப்பர் டீலக்ஸ் ஆக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பேராவூரணியிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் பேருந்தினை சொகுசுப் பேருந்தாக (சூப்பர் டீலக்ஸ் ஆக) மாற்றி இயக்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

20—

புதுக்கோட்டையிலிருந்து மரமடக்கிவரை செல்லும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டித்தல்

வினா எண் 13633—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தற்போது புதுக்கோட்டையிலிருந்து மரமடக்கி செல்லும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை-கீரமங்கலம் (வழி) மரமடக்கி வழித்தடத்தின் நீளம் 43.0 கிலோ மீட்டராகும். மேற்படி வழித் தடத்தின் அனைத்துப் பகுதியும் பேருந்து வசதி பெற்றதாகும். வழித் தடத்தின் நீளம் அனுமதிக்கப்பட்ட 30.0 கிலோ மீட்டரைக், காட்டிலும் அதிகமாக இருப்பதால், புதுக்கோட்டையிலிருந்து மரமடக்கி வரை இயங்கும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டிக்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

21—

குளித்தலை, சிவாயம் மற்றும் இரண்யமங்கலம் காட்டுவாரிகளை சீர்படுத்தி பாசன வசதி செய்தல்.

வினா எண் 327—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குளித்தலை காட்டுவாரி. சிவாயம், காட்டுவாரி இரண்யமங்கலம் காட்டுவாரி போன்றவற்றைச் சீர்படுத்தி, ஆழப் படுத்தி விவசாயிகளுக்கு பாசன வசதி செய்து தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால், திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம், கருப்பத்தூர் கிராமம் அருகே குளித்தலை காட்டுவாரியில் (புங்கார்) ஒரு அணை கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

22—

தச்சநல்லூர், வண்ணாரப்பேட்டை கிராமங்களை இணைக்கும் பணியை உடன் முடிக்க நடவடிக்கை.

வினா எண் 2630—திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி ஜங்சனுக்கு வடக்கே தச்சநல்லூர் கிராமத்தையும் வண்ணாரப்பேட்டை கிராமத்தையும் இணைக்கும் பணியை காலதாமதமின்றி உடன் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஆம். பணிகள் யாவும் விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

பழங்காவிரியில் ரெகுலேட்டர் கட்ட நடவடிக்கை.

வினா எண் 3473—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் காவிரி ஆற்றில் தண்ணீர் வந்தும் அதிலிருந்து பிரியும் கிளை ஆறான பழங்காவிரியில் தண்ணீர் செல்வதற்கு வசதியில்லாமல் இருப்பதால் அதில் ரெகுலேட்டர் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பழங்காவிரியில் தொலைகல் 76/69இல் 1992–93ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூபாய் 16.50 இலட்ச மதிப்பீட்டில் ஒரு ரெகுலேட்டர் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கூடிய விரைவில் பணி முடிக்கப்படும்.

24—

சென்னை-செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் தாம்பரம் இரயில் நிலையத்திற்கு எதிரே சுரங்கப்பாதை அமைத்தல்.

வினா எண் 3916—திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாம்பரம் இரயில் நிலையத்திற்கு எதிரே சென்னை-செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை] அமைச்சர் :

இத்தகைய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை

25—

போதுமான தண்ணீர் கிடைக்க பெரிய வாய்க்கால், சார வாய்க்கால் தலைப்புகளை காவிரி செவ்வாய்க்கிழமை படித்துறை அருகே மாற்றம் செய்தல்.—

வினா எண் 4198—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குத்தால பேரூராட்சி பகுதியில் 1500 ஏக்கர் நிலத்திற்கு பாசன கால்வாய்களாக காவேரி யிலிருந்து பிரிந்து வரும் பெரிய வாய்க்கால், சார வாய்க்கால் ஆகியவற்றின் தலைப்பு பயன்பெறும் பகுதியிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளதால் போதுமான தண்ணீர் கிடைக்காத தால் அந்த இரண்டு கால்வாய்களின் தலைப்புகளை அரு கிலுள்ள காவேரி செவ்வாய்க்கிழமை படித்துறை அருகே மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் கேட்கப்பட்டுள்ள தலைப்புகள் மாற்றம் செய்ய தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமில்லை. ஆனால் மூவலூர் அருகே ரூபாய் 16.50 இலட்ச மதிப்பீட்டில் ஒரு ரெகுலேட்டர் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது இதன் செயல்திறனைப் பொறுத்து வினாவில் குறிப்பிட்டுள்ள கால்வாய்களுக்கு ஒரு ரெகுலேட்டர் கட்டலாமா எனத் தீர்மானிக்கப்பட வேண்டும்.

26—

மூவலூர் அருகே காவிரி ஆற்றில் ரெகுலேட்டர் கட்டுதல்

வினா எண் 4268—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் மாவட்டம். மயிலாடுதுறை வட்டம், கடலங்குடி வானாதிராஜபுரம், சோழம்பேட்டை ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் காவேரி ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களின் பாசன நிலங்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்கும் பொருட்டு மயிலாடுதுறை வட்டம் மூவலூர் அருகே காவிரியின் மைல் 76/69-ல் 1992-93-ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூபாய் 16.50 இலட்சங்களின் மதிப்பீட்டில் ஒரு ரெகுலேட்டர் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் பணி முடிக்கப்படும்.

27—

மாறாந்தை—நாலான்குறிச்சி உடையாம்புளி சாலையை செப்பனிடல்

வினா எண் 4863—திரு எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம். ஆலங்குளம் ஒன்றியம். மாறாந்தை—நாலான்குறிச்சி உடையாம்புளி சாலை செப்பனிடப்படாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சாலையைச் செப்பனிட அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன். பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் சரியான பெயர் நாவலன்குறிச்சி உடையாம்புளி சாலையாகும். இச்சாலையின் சரியான நீளம் 2.40 கி மீ ஆகும் இந்த சாலை ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிக்கப்படும் ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதனை மேம்பாடு செய்ய உத்தேசமாக ரூ. 3.96 லட்சம் செலவினம் ஆகும். ஒன்றியத்திற்கு ஆண்டுக்கு வரும் தலசாலை மான்யம் குறைவாக உள்ள

தாலும், ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் இவ்வளவு பெரிய தொகையில் பணி எடுத்து செய்ய இயலாததாலும் இப்பணி ஒன்றியத்தின் மூலம் செய்ய இயலவில்லை. இச்சாலை பேருந்து சென்று வரும் சாலையாதலால் இதனை கிராமசாலைகள் (Rural roads) சட்டத்தின் மூலம் நடப்பு நிதி ஆண்டில் எடுத்துச் செய்ய திருநெல்வேலி கிராம சாலைகள் கோட்டப் பொறியாளருக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

28—

காவிரி ஆற்றுப் பகுதியில் செங்கல் சூளைக்கு மண் எடுப்பதை தடுக்க நடவடிக்கை.

வினா எண் 4967—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரி ஆற்றுப் படுகையில் செங்கல் சூளைக்கு மண் எடுப்பதால் கரை வலுவிழந்து உடைப்பு எடுத்து வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவிரி ஆற்றுப் படுகையில் செங்கல் சூளைக்கு மண் எடுக்க துறையினரால் அனுமதிக்கப்படுவதில்லை. மீறி யாரேனும் மண் எடுக்க முயற்சித்தால் அதனைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் காவிரிக் கரையில் உள்ள வலுவிழந்த பகுதிகள் ஏற்கெனவே பலப்படுத்தப்பட்டு விட்டபடியால் வெள்ளத்தால் உடைப்பெடுக்கும் வகையில் அபாயம் ஏதுமில்லை.

29—

புகளூர் பாசன வாய்க்காலை புதுப்பிக்க நடவடிக்கை.

வினா எண் 5039— திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புகளூர் பாசன வாய்க்காலை புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புகளூர் பாசன வாய்க்காலை சீரமைக்கும் திட்டம் குறித்து பணிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவிருக்கிறது.

30—

திருவெறும்பூர் ஒன்றியத்திலுள்ள கண்மாய்களைத் தூர் எடுத்து சீர் செய்தல்

வினா எண் 5303— திரு. த. ரத்தினவேலு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் ஒன்றியத்திலுள்ள பெரியகுளம் கண்மாய் மற்றும் அதன் பகுதியிலுள்ள அனைத்து கண்மாய்களையும் தூர் எடுத்து சீர்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருவெறும்பூர் ஒன்றியத்திலுள்ள பெரியகுளத்திலிருந்து வாழவந்தான் கோட்டை வரை உள்ள குளங்களின் கரைகள் யாவும் பலப்படுத்தப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. மேற்கண்ட குளங்களில் தூர்எடுப்பததற்கு அதிக அளவு நிதி தேவைப் படுகிறது. ஆனால் இதன் மூலம் எதிர்பார்க்கும் பலனும் கிடைக்காது. மேலும் மேற்கண்ட அனைத்து குளங்களுக்கும் வாய்க்கால்களிலிருந்து போதுமான அளவு தண்ணீர் அளிக்கப் பட்டு ஆயக் கட்டு நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட்டு வருவதால் மேலும் தூர் அகற்றும் அவசியம் இல்லை என கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

31—

காவேரிப்பாக்கம் ஏரியில் தூர் வாரும் திட்டம்.

வினா எண் 5947— திரு. ஏ. எம். முனிரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதியில் காவேரிப்பாக்கம் ஏரியில் தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவேரிப்பாக்கம் ஏரியை தூர் வாரும் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால், காவேரிப்பாக்கம் ஏரி பாசன கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீடு ஆய்வில் உள்ளது.

32—

செம்பரம்பாக்கம் ஏரியில் மணல் எடுப்பதை தடுக்க நடவடிக்கை

வினா எண் 6282—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் செம்பரமபாக்கம் ஏரிக்கு மேற்புறமும் நீர்வரத்து பகுதியிலும் ஏராளமாக மணல் எடுக்கப்பட்டு வருவதால் அப்பகுதிகள் தாழ்வடைந்து இருப்பதால் ஏரிக்கு நீர் வரத்து குறைந்து வருவது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மணல் எடுக்கப்படுவதைத் தடுக்கவும் ஏரிக்கு நீர் வரத்து வழி செம்மைப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) செம்பரம்பாக்கம் ஏரிக்கு மேற்புறமும் நீர்வரத்து பகுதியிலும் சவுடு மண் எடுத்ததினால் நீர்வரத்து பாதிக்கப் படவில்லை:

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1993 ஏப்ரல் 28

33—

வெட்டன்குளத்தில் தூர் எடுக்க நடவடிக்கை.

வினா எண் 6385—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம். ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்தில் வெட்டன்குளம் நீண்ட நாட்களாக தூர் எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்கும் பணி எப்போது மேற்கொள்ளப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்திலுள்ள வெட்டன்குளம் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ளது. இதனைத் தூர் வாரும் பணி உரிய ஊராட்சி ஒன்றியத்தினால் செய்யப்பட வேண்டும்.

34—

கறம்பக்குடி ஒன்றியம் வெட்டன்குளம் வழியாக கொட்டக்காடு குளங்களுக்கு செல்லும் வரத்து வாரியை தூர் எடுத்தல்

வினா எண் 6388—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி. கறம்பக்குடி ஒன்றியத்தில் பொன்னன் விடுதி, நெப்பன்குளம், வெட்டன்விடுதி, வெட்டன்குளம் வழியாக கோட்டக்காடு குளங்களுக்குச் செல்லும் வரத்து வாரியைத் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

நெப்பன்குளம் தவிர. மீதியுள்ள குளங்கள் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ளதால் கறம்பக்குடி ஒன்றியம் மூலம் தூர் எடுக்கப்பட வேண்டும். நெப்பன்குளத்

திற்கு வரும் வரத்து வாய்க்காலைப் பொறுத்தவரை அடுத்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

35—

நாடியம் குளத்திற்கு ரோலிங்சட்டர் அமைத்து. கோட்டைக் குளத்தில் பழுதடைந்த ரோலிங் சட்டரை சீரமைத்தல்

வினா எண் 6433—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம். சேதுபாவாசத்திரம் ஒன்றியம் நாடியம் குளத்திற்கு ரோலிங் சட்டர் ஒன்று அமைத்துக் கொடுக்கவும் கோட்டைக்குளத்தில் பழுதடைந்த ரோலிங் சட்டரைச் சீரமைத்துக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

நாடியம் குளத்தில் உள்ள 5 மதகுகளில் சாதாரண சட்டர்கள் (Paddle Shutter) உள்ளது. அவற்றில் ஆழமடை இரண்டு மட்டும் திருகு சட்டர் (Screw Gearings shutter) பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய மதகுகளுக்கு தற்போதுள்ள சட்டர்களே போதுமானது, கோட்டக்குளம் ஊரில் உள்ள மதகுகளில் சாதாரண சட்டர்களே உள்ளது. அவற்றை பழுது பார்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

36—

ஒட்டங்காடு ஊராட்சி, கோரவயல் காட்டில் ஓடும் சி.எம்.பி. வாய்க்காலை தூர் எடுத்தல்.

வினா எண் 7141—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, கோரவயல் காட்டில் ஓடும் சி.எம்.பி. வாய்க்காலை தூர் எடுத்து செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 ஏப்ரல் 28

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிட்டுள்ள கோரவயல்காடு வாய்க்காலில் 1991-92ல் ரூ. 3,300 மதிப்பீட்டில் குடிமராமத்துத் திட்டத்தின் கீழ் தூர் வாரப்பட்டது.

37—

கோமுகி அணை கொள் அளவை அதிகப்படுத்தி கூடுதலாக ஒரு கதவு நிறுவி கரையை உயர்த்துதல்.

வினா எண் 8791—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு கோமுகி அணை கொள் அளவை அதிகப்படுத்த கூடுதலாக ஒரு கதவு (Vent Wey) நிறுவி, கரையை உயர்த்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப் படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கோமுகி அணையானது அதன் தற்போதைய முழு நீர்த் தேக்க அளவான (+) 601.00 அடி வரை நீர் கொள்ளும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதன் உயரத்தை அதிகரிக்க இடம் கொடாது. அணையின் உயரத்தை உயர்த்தும் பணி செயல்படுத்துவது மிகவும் கடினம். மேலும், இது கட்டுமுறைகளை மறு வடிவமைப்பதில் சிக்கல் நிலைகள் உண்டாகும் என்பதால், பொதுவாக இது போன்ற அளவை உயர்த்தும் பணி விரும்பக் கூடியதல்ல. நீரோட்ட வழியிலுள்ள வடிமுறை போன்றவைகளை முழு வடிவமைக்க வேண்டியிருக்கும். இவை தொழில் நுட்ப ரீதியில் சாத்தியக் கூறு ஏற்பட வாய்ப்பு இல்லை. மேலும் காரைக்கட்டிட மிகை நீர்ப்பகுதிகளையும் உச்ச நீர் மட்டத்திற்கு மேற்பட்ட உயரம் (Free Board) போதுமான அளவு இருக்குமாறு உயர்த்த வேண்டியிருக்கும். மற்றும் வெள்ளாறு வடிநிலத்தில் மேலோட்ட பரிசீலனையில், தொழுநூர் ரெகுலேட்டரின் மிகை நீர் ஏதுமில்லை என தெரிய வருகிறது. மேலும் கரியகோவில், ஆணை மடுவு ஆகிய நீர்த்தேக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனவே நீரியல் நோக்கு நிலையிலும், கோமுகி

நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை கூட்டுவது உகந்ததாக இல்லை. எனவே, கோமுகி அணையின் கொள்ளளவை அதிகப்படுத்த ஒரு கதவு நிறுவி கரையை உயர்த்த தொழில் நுட்ப அடிப்படையிலும் நீரியல் அடிப்படையிலும் சாத்தியக் கூறுகள் இல்லை என தலைமை பொறியாளர் (பாசனம்) கருத்து தெரிவித்துள்ளார்.

38—

கொண்டமாந்துறை கிராமத்தின் ராமக்கால் வாரியிலிருந்து வாய்க்கால் வெட்டும் திட்டம்.

வினா எண் 8988—திரு. தா. செழியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் வட்டம், கொண்டமாந்துறை கிராமத்தின் ராமக்கால் வாரியிலிருந்து வாய்க்கால் வெட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஆம். ராமக்கால் வாரியிலிருந்து தொட்டமாந்துறை கிராமத்தில் உள்ள தொண்டமான்துறை ஏரிக்கு வாய்க்கால் வெட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது. திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், ராமக்கால் வாரியிலிருந்து தொண்டமாந்துறை குளத்திற்கு வாய்க்கால் வெட்டி நீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சாத்தியக்கூறு அறிக்கை ரூ. 49.33 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

39—

நீரார்—நல்லார் அணை கட்டும் திட்டம்.

வினா எண் 10730—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீரார்—நல்லார் அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) நீரார்—நல்லார் அணை கட்டும் திட்டம் கேரள அரசின் உதவியுடன் தொடங்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்திற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கேரள அரசின் ஒப்புதலுடன் அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

ஆறுகளை பொது மராமத்து செய்ய சீர்காழி தொகுதிக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.

வினா எண் 11200—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள குளங்கள் மற்றும் பாசன வாய்க்கால் ஆறுகள் பொது மராமத்து செய்ய சீர்காழி தொகுதிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சீர்காழி தொகுதி பொதுப்பணித் துறை சீர்காழி உபகோட்டத்தின் கீழ் வருகிறது. இந்த உப கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் பாசன வாய்க்கால் முதலியவற்றை பொது மராமத்து செய்ய 1992–93–ம் நிதியாண்டில் ரூபாய் 25.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஏரி மற்றும் பாசன வாய்க்கால்கள், வடிகால்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

41—

மயிலாடுதுறையிலும், குத்தாலம் பகுதியிலும் ரெகுலேட்டர் அமைத்துத் தண்ணீர் வழங்குதல்.

வினா எண் 12963—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 28]

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் மயிலாடு துறையிலும் மூவளூர் குத்தாலம் பகுதியிலும் ரெகுலேட்டர் அமைத்துத் தண்ணீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

காவிரி நதியில் மூவளூர் கிராமத்தின் அருகே ரூ. 16.50 லட்சம் செலவில் ஒரு ரெகுலேட்டர் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ரெகுலேட்டர் குற்றாலம் வாய்க்காலில் கீழ்ப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறையில் ரெகுலேட்டர் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

நடுவிக்கோட்டையைச் சேர்ந்த எல்லப்பநாயக்கன் குளத்தை தூர் எடுத்து படித்துறை கட்டுதல்.

வினா எண் 1910—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டையைச் சேர்ந்த எல்லப்ப நாயகன் குளத்தைத் தூர் எடுத்து படித்துறை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி இல்லாததால் நடுவிக்கோட்டையைச் சேர்ந்த எல்லப்ப நாயக்கன் குளத்தைத் தூர் எடுத்து படித்துறை கட்டும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை.

43—

செல்லப் பிள்ளையார் கோவில் ஊராட்சி குளத்தை எடுத்தல்.

வினா எண் 2991—திரு. ஆர். சிங்காரம் : **மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—**

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செல்லப்பிள்ளையார் கோவில் ஊராட்சி குளத்தைத் தூர் எடுத்து அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் ஊராட்சி செல்லப்பிள்ளையார் கோவில் குளத்தைத் தூர் எடுப்பதற்கு செயற்குறிப்பு ஏதுமில்லை.

44—

பழனி நகரிலுள்ள மத்தியப் பேருந்து நிலையத்தை விரிவு படுத்துதல்.

வினா எண் 3436—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி நகரிலுள்ள மத்தியப் பேருந்து நிலையம் விரிவு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம். பழனி நகரில் உள்ள வையாபுரி கண்மாய் புறம்போக்கில் 5 ஏக்கர் 09592 சதுர அடி இடத்தில் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு பழனி நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

(இ) சுமார் ரூ. 76.00 இலட்சங்கள்.

45—

கருவந்தா கிராமத்திலிருந்து இருதமுடையார்குளம் கிராமத்திற்கு சாலை வசதி செய்து இணைப்புச்சாலை போடுதல்.

வினா எண் 4895—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 28]

(அ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் கருவந்தா கிராமத்திலிருந்து இருதமுடையார் குளம் கிராமத்திற்கு சாலை வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இணைப்புச் சாலை போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ). நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் கருவந்தா கிராமத்திலிருந்து இருதமுடையார்குளம் கிராமத்திற்கு இணைப்புச் சாலை வண்டிப் பாதையாக உள்ளது. இதன் நீளம் 4 கி.மீ. இச்சாலை அமைக்க ரூ. 6.00 இலட்சம் ஆகும். தற்போதுள்ள நிதிப் பற்றாக்குறையினால் இச்சாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

46—

வேதாரண்யம் தொகுதி குளங்களை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை.

வினா எண் 5229—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

வேதாரண்யம் தொகுதி மானாவாரி நிலங்களுக்குப் பாசனம் பூரணமாக கிடைத்திட ஏரி, குளங்களை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :—

வேதாரண்யம் தொகுதியில் மானாவாரி நிலங்களின் பாசனத்திற்காக ஏரிகள் ஏதும் ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் இல்லை. ஆகவே பாசனத்திற்காக ஏரிகள் ஏதும் இல்லாததால் அவற்றை மேம்படுத்துவது குறித்த வினா எழவில்லை.

47 —

சானார்பட்டி நத்தம் ஒன்றியம் பகுதிகளில் புதிய மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து பழுதுபட்டதை சீர் செய்தல் :

வினா எண் 5611—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி மற்றும் நத்தம் ஒன்றியப் பகுதிகளில் ஏற்கனவே செயல்படும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் விவரம் என்ன ?

(ஆ) அவற்றில் எங்கெங்கு பழுதுபட்டுள்ளன என அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன ?

(இ) மேலும் எங்கெங்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், ஒன்றியங்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன ?

(ஈ) இவற்றில் இவ்வாண்டில் எத்தனை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எங்கெங்கு அமைக்கப்பட அரசு முடிவு செய்து அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து உத்தரவுகள் பிறப்பித்துள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) நத்தம் ஊராட்சி ஒன்றியம்.	80
சாணார்பட்டி	91
	171

(ஆ) நத்தம் ஊராட்சி ஒன்றியம்.	1. இடையப்பட்டி
சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்.	3

1. தேத்தாம்பட்டி
2. மாரு நூத்து.
3. ராஜக்காபட்டி.

1993 ஏப்ரல் 28]

(இ) நத்தம் ஊராட்சி ஒன்றியம் :

1. சேர்வீடு

2. அம்மாபட்டி.

3. சாத்தம்பாடி.

4. விலாம்பட்டி.

5. மதுக்காரன்பட்டி

6. காசம்பட்டி.

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் :

புங்கம்பாடி.

நத்தமடைப்பட்டி.

கூவ நாத்துப்புதூர்.

ராமராஜபுரம்.

நத்தம் தொகுதியில் இவ்வாண்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்.—6.

(ஈ) நத்தம் ஊராட்சி ஒன்றியம் :

1. அம்மாபட்டி.

2. சேர்வீடு.

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் :

3. புங்கம்பாடி.

4. நத்தமடைப்பட்டி.

5. கூவநாத்துப்புதூர்.

6. ராமராஜபுரம்.

48—

பணி நீக்கம் செய்யப்பட்ட கௌரவ ஊரக அமைப்பாளர்களை மீண்டும் பணியில் அமாத்தல்.

வினா எண் 5831—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கௌரவ ஊரக அமைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டு 5—3—1991 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பணியிழந்த கௌரவ ஊரக அமைப்பாளர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

49—

குட்ட குளவாய்ப்பட்டியில் புதியதாய் ஒரு வானொலி கட்டிடம் அமைத்தல்.

வினா எண் 6311—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியத்தில் குட்ட குளவாய்ப்பட்டியில் புதியதாய் ஒரு கிராம வானொலிக் கட்டிடம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த வானொலி கட்டிடம் அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு , உள்ளாட்சி துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1992–93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ரூ. 12,000 மதிப்பீட்டில் நிறைவேற்ற திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து இது செயல்படுத்தப்படும்.

1993 ஏப்ரல் 28]

50—

தாமரைக்கரை கிராம குளத்தை ஆழப்படுத்த நடவடிக்கை.

வினா எண் 6369—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், தாமரைக் கரை கிராமத்திலுள்ள குளத்தினை ஆழப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) இதனை ஆழப்படுத்த எவ்வளவு செலவாகும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி குறைவாக உள்ளதால் தாமரைக்கரை கிராமத்திலுள்ள குளத்தினை ஆழப்படுத்தும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை.

(ஆ) மேற்படி குளத்தினை ஆழப்படுத்தி கலிங்கினை பராமரிப்பு செய்ய சுமார் ரூ. 1.00 இலட்சம் செலவாகும்.

51—

வடவாளம் பஞ்சாயத்துக்குட்பட்ட இடையான்குளத்தை தூர் எடுத்தல்.

வினா எண் 6394—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வடவாளம் பஞ்சாயத்துக்குட் பட்ட இடையான்குளம் தூர் எடுக்க அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டைத் தொகுதி, வடவாளம் பஞ்சாயத்துக் குட்பட்ட இடையான்குளம் தூர் எடுக்கும் பணி போதிய நிதி வசதியின்மையால் மேற்கொள்ள இயலவில்லை.

1993 ஏப்ரல் 28]

52—

சோலைக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்.

வினா எண் 6416—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சரியாக இயங்காமல் அடிக்கடி பழுதுபட்டுக் கொண்டிருப்பதால் மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசமதிரம் ஒன்றியம், சோலைக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சரியாக இயங்காமல் அடிக்கடி பழுதுபட்டுக் கொண்டிருப்பதால் மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

53—

பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தெருவின் மேல்பகுதியில் போர்வெல் அமைத்தல்.

வினா எண் 6446—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தெருவின் மேல்பகுதியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தெருவின் மேல்பகுதியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

54—

முடச்சிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பில் வாய்க்காலின் மேல் கரையில் ரிவிட்மெண்ட் கட்டுதல்.

வினா எண் 6584—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம்' முடச்சிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பு சாலை ஓரத்தில் செல்லும் வாய்க்காலின் மேல் கரையில் ரிவிட்மெண்ட் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி புதுக்குடியிருப்பு சாலை ஓரத்தில் செல்லும் வாய்க்காலின் மேல் கூரையில் ரிவிட்மெண்ட் கட்டித்தர செயற்குறிப்பு ஏதுமில்லை.

55—

உடைய நாட்டில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள மோட்டாரை மாற்றுதல்.

வினா எண் 6606—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், உடைய நாட்டில் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள நீண்ட பல மாதங்களாக இயங்காமல் இருக்கும் மோட்டாரை மாற்றி புதிய மோட்டார் பொருத்தி தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் ஊமத்தநாடு ஊராட்சியிலுள்ள உடையநாடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி குடிநீர் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

[1993 ஏப்ரல் 23

56—

ஊமத்தநாடு ஆதிதிராவிடர்கள் தெருவுக்குள் செல்லும் சாலையை செப்பனிடுதல்.

வினா எண் 6639—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஆதிதிராவிடர்கள் தெருவுக்குள் செல்லும் சாலையை பராமரித்து செப்பனிட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றிய ஊமத்தநாடு ஆதி திராவிடர் தெருவிற்குள் செல்லும் இச்சாலை செம்பைப் பட்டியம் நெடுஞ் சாலையிலிருந்து பிரிந்து 1 கி.மீ. தூரம் ஆதி திராவிடர் தெரு விற்குள் செல்கிறது. இச்சாலை 0.5 கி. மீ. தூரம் மண்சாலை யாகவும் உள்ளது. நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக இச் சாலை செப்பனிடும் பணியை மேற்கொள்ள செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

57—

கொறக்குடி ஊராட்சி பூலாங்கொல்லை பள்ளிக்கூடத்திற்கு சாலை அமைத்தல்.

வினா எண் 6729—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொறக்குடி ஊராட்சி பூலாங்கொல்லை பள்ளிக்கூடத்திற்கு சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 28

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொறக்குடி ஊராட்சியில் பூலான் கொல்லை பள்ளிக் கூடத்திற்கு சாலை அமைக்க தேவையான இடம் தனியார் பட்டா நிலத்திலுள்ளது. எனவே, தற்போது சாலை அமைத்திட செயற்குறிப்பேதும் இல்லை.

58—

ஒட்டங்காடு பெரிய ஏரியில் வட பகுதியில் புதுப்பட்டினம் சி.எம்.பி. வாய்க்காலில் பைப்போடுதல்

வினா எண் 7267—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு பெரிய ஏரியில் தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருப்பதினால் தென் பகுதி பைப்பை எடுத்துவிட்டு வட பகுதியில் புதுப்பட்டினம் சி.எம்.பி. வாய்க்காலில் பைப் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் ஒட்டங்காடு பெரிய ஏரியில் தென் பகுதி பைப்பை எடுத்துவிட்டு வட பகுதியில் புதுப்பட்டினம் சி.எம்.பி. வாய்க்காலில் பைப் போட்டு கொடுக்க செயற் குறிப்பு ஏதும் பெறப்படவில்லை.

59—

செருவா விடுதி தெற்கு காலனி தெருவிற்கு சாலை அமைத்தல்.

வினா எண் 7309—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 23

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம். செருவா விடுதி, தெற்கு காலனி தெருவிற்கு சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதி, செருவா விடுதி தெற்குக் காலனித் தெருவற்கு சாலை அமைத்துக் கொடுக்க ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

60—

கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களின் குளத்தை பராமரித்து படித்துறை கட்டுதல்.

வினா எண் 7328—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களின் குளத்தைப் பராமரித்து படித்துறை கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கெங்காதரபுரம் ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லாததால் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதி திராவிடர்களின் குளத்தைப் பராமரித்து படித்துறை கட்டும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை.

61—

நற்கந்தன்குடி ஊராட்சிக்குச் சாலை வசதி செய்தல் :

வினா எண். 7787—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நற்கந்தன் குடி ஊராட்சிக்குச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1993 ஏப்ரல் 28

விடை.—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் நற்கந்தன்குடி வழியாக உத்தமசோழமங்கலம் வரை தார்ச் சாலை 1991—92 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ. 24,800 மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.

62—

வாராப்பூரில் உள்ள திருஊரணிக் குளத்தை தூர் எடுத்தல்.

வினா எண். 8214— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா ?

புதுக்கோட்டை தொகுதி, வாராப்பூரில் உள்ள திருஊரணிக் குளத்தில் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை.—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போது திட்ட மான்யம் ஏதும் ஒதுக்கப்படாததால் வாராப்பூரில் உள்ள திருஊரணிக் குளத்தை தூர் எடுக்க வாய்ப்பில்லை.

63—

மட்டயம்பட்டி கிராமத்தில் அம்மாஊரணி குளத்தை தூர் எடுத்து படித்துறை கட்டுதல்.

வினா எண் 8223— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட மட்டயம்பட்டி கிராமத்தில், அம்மாஊரணி குளத்தில் தூர் எடுக்கவும் மற்றும் அக்குளத்திற்கு படித்துறை கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெருங்களூர் ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லாததால் மட்டயம்பட்டி கிராமம், அம்மா ஊரணி குளத்தில் தூர் அகற்றல் மற்றும் படித்துறை கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இயலாது.

64—

பச்சைமலை ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

வினா எண் 8813— திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ஒன்றிய அளவு பெரியதாக உள்ள சேலம் மாவட்டம் பச்சைமலை ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பச்சைமலை ஊராட்சியை இரண்டாகப் பிரித்தால் தனித்து இயங்கக்கூடிய அளவுக்கு நிதி ஆதாரம் இல்லாததால் இவ்வூராட்சியை இரண்டாகப் பிரிப்பது சாத்தியமில்லை.

65—

பூலாம்பாடியில் பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண் 8899— திரு. தா. செழியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பெரம்பலூர் வட்டம் பூலாம்பாடியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பூலாம்பாடியில் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1993 ஏப்ரல் 28]

66—

வாடிப்பட்டி பேரூராட்சியில் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டுதல்.

வினா எண் 9078—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி வாடிப்பட்டி பேரூராட்சியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க அங்கு மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி வாடிப்பட்டி பேரூராட்சியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க குடிநீர்த் திட்ட மதிப்பீடு ரூ. 62.77 இலட்சங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்புதல் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் மேல்நிலை தண்ணீர் தொட்டியும் கட்ட சேர்க்கப்பட்டுள்ளது.

67—

பாலமேடு பேரூராட்சியில் மேல்நிலைத் தண்ணீர் தொட்டி கட்டுதல்.

வினா எண் 9079—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் பாலமேடு பேரூராட்சியில் குடிநீர் பிரச்சினையை போக்குவதற்கு மேல்நிலைத் தண்ணீர் தொட்டி கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதியில் பாலமேடு கிராம பேரூராட்சிக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு ரூ. 55.92 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

68—

உடையூர் ஆதிதிராவிடர் பகுதியில் சாலை வசதி செய்தல்.

வினா எண் 9192—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள உடையூர் ஆதிதிரா விடர் பகுதியில் சாலை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள உடையூர் ஆதிதிராவிடர் பகுதிக்கு 1991—92-ம் ஆண்டில் ரூ. **15,520** **மதிப்பீட்டில்** சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

69—

கிளாவடி நத்தம் காலனிக்கு சாலை செப்பனிட்டு சீர் செய்தல்.

வினா எண் 9204—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கிளாவடி நத்தம் காலனிக்கு சாலை செப்பனிட்டு சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள கிளாவடி நத்தம் காலனிக்கு சாலை அமைக்கும் பணி நடப்பு நிதியாண்டில் ரூ. 10,000 மதிப்பீட்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 28]

70—

புவனகிரி பேரூராட்சியில் தாமரைக்குளத் தெருவிலுள்ள பள்ளிக்கூடத்திற்கு அருகில் கழிப்பிடம் கட்டுதல்.

வினா எண் 9215—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சியில் தாமரைக் குளத்தெருவில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அருகில் கழிப்பிடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி பேரூராட்சியில் தாமரைக் குளத் தெருவில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அருகில் தேவையான இட வசதி இல்லாததால் கழிப்பிடம் அமைப்பதற்கில்லை.

71—

சத்தியமங்கலம் மலைப் பகுதி ஒசூரில் இருந்து பந்திகவுடநல்லி இடையிலுள்ள பள்ளத்திற்கு பாலம் அமைத்தல்.

வினா எண் 9218—திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் மலைப் பகுதி ஒசூரில் இருந்து பந்தி கவுடநல்லி இடையில் உள்ள பள்ளத்திற்கு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சத்தியமங்கலம் மலைப் பகுதி ஒசூரில் இருந்து பந்திகவுட நல்லி இடையில் உள்ள பள்ளம் தமிழ்நாடு எல்லையின் முடிவில் கர்நாடக மாநில எல்லைக்குள் உள்ளது. இதில் கர்நாடக அரசால் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

72—

அதிசயபுரம், இராஜகோபாலப்பேரி கிராமங்களில் குடிநீர் வசதி.

வினா எண் 9649—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள அதிசயபுரம், இராஜகோபாலப்பேரி கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

அதிசயபுரம், இராஜகோபாலப்பேரி பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களாகும். அதிசயபுரம் கிராமத்திற்கு விசைபம்பு குடிநீர்த் திட்டம் வழங்க நீராதாரம் தோற்றுவிக்கும் பணி நடப்பு நிதியாண்டில் (1992–93) இடம் பெற்றுள்ளது. இராஜகோபாலப்பேரி கிராமத்திற்கு வரும் நிதியாண்டுகளில் சாத்தியக்கூறு அடிப்படையில் குடிநீர்த் திட்டம் வழங்க பரிசீலிக்கப்படும்.

73—

தொண்டமான் புதுக்குளத்தைத்தூர் எடுத்தல்.

வினா எண் 9807—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தொண்டமான் புதுக்குளம் நீண்ட நாட்களாகத் தூர் எடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போதியநிதி வசதி இல்லாததால் தொண்டமான் புதுக் குளத்தைத்தூர் அகற்றும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை

74—

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் மேலும் சில ஊராட்சிகளைச் சேர்த்தல்.

வினா எண் 10051—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் மேலும் சில ஊராட்சிகளைச் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி எல்லைக்குள் மேலும் சில ஊராட்சிகளைச் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இருப்பினும் இந்த மாநகராட்சியை ஒட்டியுள்ள வளர்ச்சி பெற்ற பகுதிகளை மாநகராட்சியுடன் சேர்ப்பதற்காக மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

75—

புரசை தொகுதி, அயனாவரம் பி.இ. கோயில் மேற்கு மாடவீதி ஆகிய இடங்களில் குடிநீர் வசதி.

வினா எண் 10164—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) புரசை தொகுதி, அயனாவரம், பி. இ. கோயில் மேற்கு மாட வீதி ஆகிய இடங்களில் குடிநீர் பற்றாக்குறை இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போதுமான குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) புரசை தொகுதி, அயனாவரம் பி. இ. கோயில் தெருவில் உள்ள மக்கள் அதிகாலை 1-00 மணி முதல் 9-00 மணி வரையிலும், பி. இ. கோயில் மேற்கு மாட வீதியில் உள்ள மக்கள் நள்ளிரவு 12-00 மணி முதல் காலை 4-30 மணி வரையிலும் வீட்டு இணைப்புகள் மூலம் குடிநீர் கிடைக்கப் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

(ஆ) தற்போதுள்ள நீர்த்தேக்கங்களில் நீரின் அளவை முன்னிட்டு மேற்கண்ட தெருக்களுக்கு சென்னை நகரத்தில் மற்ற பகுதிகளில் நடைமுறையில் உள்ள குடிநீர் வழங்கு முறையை கடைப்பிடிக்க இயலும்.

76—

மங்கைமடம் மற்றும் திருப்பங்கூர், அண்ணன்பெருமாள் கோயில் போன்ற இடங்களில் நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 10989—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள மங்கைமடம் மற்றும் திருப்பங்கூர், அண்ணன்பெருமாள் கோயில் போன்ற இடங்களில் நிழற்குடை அமைத்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சீர்காழி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட (1) திருபபங்கூர், (2) மங்கைமடம், (3) அண்ணன்பெருமாள்கோயில் (காரைமேடு ஊராட்சி) ஆகிய மூன்று இடங்களிலும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1992—93 ஆம் ஆண்டுத் திட்டத்தில் நிழற் குடைகள் அமைக்கப்பட உள்ளன.

1993 ஏப்ரல் 23]

77—

சொக்கங்கொல்லை காலனியில் குளத்தில் படித்துறை கட்டுதல்.

வினா எண் 11165—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், சொக்கங்கொல்லை காலனியில் குளத்தில் படித்துறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி ஒன்றியம், சொக்கங்கொல்லை காலனி குளத்தின் படித்துறை ஏற்கனவே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

78—

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூரை பேரூராட்சியாக உயர்த்த நடவடிக்கை.

வினா எண் 11373—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூரை பேரூராட்சியாக உயர்த்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூரை பேரூராட்சியாக வகைமாற்றம் செய்ய தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும், உள்ளாட்சி அமைப்புகளில் எவ்வித நிர்வாக மாற்றங்களும் செய்யக் கூடாது என அரசின் தடையாணை தற்போது அமுலில் உள்ளது.

79—

கூட்டுறவுத் தேர்தல்களில் சட்டத்துக்குப் புறம்பாக உறுப்பினராக நியமனம் செய்யப்படுபவர் மீது நடவடிக்கை.

வினா எண் 1015—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முன்பு நடந்து முடிந்த கூட்டுறவுத் தேர்தல்களில் சட்டத்துக்குப் புறம்பாக உறுப்பினர் ஆகத் தகுதி இல்லாதவரும் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டு ஓட்டு அளிக்கும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) அவற்றை சீர்செய்ய அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) 1990 இல் 20,612 தொடக்கநிலை கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டன. இத்தேர்தலுக்கு முன் உரிய தகுதிகளை அடையாதவர்களும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் ; இச்சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் 46,100 உறுப்பினர்கள் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) 1990 இல் தேர்தல் மூலம் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் 28–7–1991 அன்று தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1991-ன் மூலம் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ளன.

மேலும், (1) தகுதிப்பாடுகளை அடையாத உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்று போகவும், (2) சங்கத்தின் முதன்மையான நோக்கத்திற்கிணங்க விதிகளிலோ அல்லது துணை விதிகளிலோ வகுத்துரைக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றவர்களை மட்டுமே இனி உறுப்பினர்களாக சேர்ப்பதற்கும் ; மற்றும் (3) மக்களாட்சி தத்துவ முறைக்குப் புறம்பான நியமன முறையை நீக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களே, தேவைப்பட்டால் மகளிர் மற்றும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர்களை இணைத்துக் கொள்ளவும் (Co-opt) வழிவகுக்க, 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 11–5–1992 அன்று, தமிழ்நாடு சட்டம் 19/1992 மூலம் திருத்தப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 28

80—

பூவாலை கிராமத்திற்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 7857—செல்வி. கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி, பூவாலை கிராமத்திற்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் உள்ள பூவாலை கிராமத்தில் ஏற்கெனவே ஒரு நியாயவிலைக் கடை உள்ளது. இக்கிராமத்திலுள்ள 340 குடும்ப அட்டைதாரர்களில் 219 குடும்ப அட்டைகளுக்கு இக்கூட்டுறவு நியாயவிலைக் கடை மூலமும், மீதமுள்ள 211 குடும்ப அட்டைதாரர்களுக்கு திரு. தண்டபாணி என்ற சில்லரை வணிகர் மூலமும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதனால், இக்கிராமத்தில் தனியே கூட்டுறவுச் சங்கம் அமைத்து மண்ணெண்ணெய் வழங்குவதற்கு தேவை ஏதுமில்லை.

81—

தமிழ்நாட்டில் உள்ள நியாய விலைக் கடைகள் மற்றும் குடும்ப அட்டைகள்.

வினா எண் 10903—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நியாய விலைக் கடைகள் எத்தனை ? குடும்ப அட்டைகள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் தற்போது 21,977 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது. 1,22,07,449 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன.

[1993 ஏப்ரல் 28

82—

சென்னை, தரமணியில் உள்ள மத்திய அரசின் தொழில் பழகுநர் பயிற்சி தேர்வுக்கு பயிற்சியாளர்களைத் தேர்வு செய்தல்.

வினா எண் 11417—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, தரமணியில் உள்ள மத்திய அரசின் தொழில் பழகுநர் பயிற்சித் தேர்வுக்குப் பயிற்சியாளர்களைத் தேர்வுசெய்யும் மையத்தில் இருந்து ஆண்டுக்கு எத்தனை பேர் தேர்வு செய்யப்படுகிறார்கள் ?

(ஆ) தமிழக அரசு நிறுவனங்களுக்கு இந்த மையத்தின் மூலம் ஆண்டிற்கு எத்தனை பேர் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுகிறார்கள் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) சென்னை, தரமணியில் உள்ள மத்திய அரசின் தொழில் பழகுநர் பயிற்சித் தேர்வுக்குப் பயிற்சியாளர்களைத் தேர்வு செய்யும் மையத்தில் இருந்து ஆண்டுக்கு 6,867 பேர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

(ஆ) தமிழக அரசு நிறுவனங்களுக்கு போர்டு ஆப் அப்ரண்டீஸ் மற்றும் டிரெயினிங், தரமணி மூலம் ஆண்டிற்கு (1991-92 ஆம் ஆண்டிற்கு) 1,595 பேர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

83—

கம்பெனிகள் மீது தொழிலாளர் நலச் சட்டப்படி காலி இடங்களை நிரப்புதல்.

வினா எண் 11883—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

காலி இடங்கள் இருந்தும் தினக்கூலிகளாக வைத்துள்ள கம்பெனிகள்மீது தொழிலாளர் நலச் சட்டப்படி நடவடிக்கை எடுத்து காலி இடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

காலி இடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று நிறுவனங்களைக் கேட்க இயலாது. இருப்பினும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம் 1981-இல் உள்ள பிரிவு 3(1)-ன்படி கடந்த 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து காசுவல் தொழிலாளியாக அல்லது தினக்கூலியாக பணிபுரிபவர் நிரந்தரப் பணி பெறுவதற்கு அருகதை உடையவர் ஆகிறார். அவர்கள் பணிபுரியும் இடம் நிறுவனமாக இருந்தால் அவர்கள் அந்த ஆட்சி எல்லைக்குரிய தொழிலாளர் ஆய்வரிடமோ அல்லது தொழிற்சாலை ஆய்வரிடமோ விண்ணப்பித்து நிவாரணம் பெறலாம்.

84—

புதுக்கோட்டை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஆசிரியைப்பயிற்சி முடித்து பதிவு செய்தவர்கள்.

வினா எண் 12721—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இது வரையில் ஆசிரியைப் பயிற்சி முடித்து பதிவு செய்வதர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதில் இதுவரையில் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எத்தனை பேர்கள் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பல்வேறு ஆசிரியை பயிற்சி முடித்து பதிவு செய்து செல்லுபடிப் பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை பின்வருமாறு : (பெண்கள் மட்டும்) :

காலம்.	பி. எட். முடித்து உள்ளோர்.	இடைநிலை ஆசிரியர்கள்.	உடற்கல்வி ஆசிரியர்கள்.	கைவினை ஆசிரியர்கள்.	தமிழ்ப் பண்டிதர்கள்.	இதர மொழிப் பண்டிதர்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
31—10—1992 அன்று.	397	937	16	78	91	..

(ஆ) புதுக்கோட்டை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பல்வேறு ஆசிரியைப் பயிற்சி முடித்து வேலைவாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு (பெண்கள் மட்டும்) :

வரிசை எண்.	காலம்.	பி.எட்.	இடைநிலை ஆசிரியர்கள்.	உடற்கல்வி ஆசிரியர்கள்.	கைவினை ஆசிரியர்கள்.	தமிழ்ப் பண்டிதர்கள்.	இதர மொழிப் பண்டிதர்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
(1)	1990	284	272	..	6	..	..
(2)	1991	17	120	..	4	..	..
(3)	1992 (31—10—1992 முடிய).	11	10	..	2	3	..

85—

அரசு விடுமுறை நாட்களிலும் சுற்றுலாப் பயணிகளை பழப் பண்ணையில் அனுமதித்தல்.

வினா எண் 14235—செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லாறு அரசுப் பழப்பண்ணையில், அரசு விடுமுறை நாட்களிலும் சுற்றுலாப் பயணிகளைப் பழப்பண்ணையில் அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அரசு விடுமுறை நாட்களிலும் கல்லாறு பழப்பண்ணையில் சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க விடுப்பு நாட்களில் சிறப்புப் பணியாளர்கள் பணியில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மேலும் அவர்களுக்கு ஈடு செய்த விடுப்பு வழங்க வேண்டி வரும். இதனால், பணி நாட்களில் வேலை மிகவும் பாதிக்கப்படும். செலவும் அதிகம் ஆகும். ஆகவே, இப்பொழுது இருக்கும் முறையே தொடர்ந்து நீடிக்கும்.

86—

பரமக்குடி தாலுகாவில் 1992-93 ஆம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்பிற்காக வரப்புத் திரட்டும் பணிக்கு தொகை ஒதுக்குதல்.

வினா எண் 14731—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவில் 1992-93 ஆம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்பிற்காக வரப்புத் திரட்டும் பணிக்கு அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) பயன்பெற்றோர் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1992–93ஆம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாற்ற ரூ. 15.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 15.50 இலட்சத்தில் பரமக்குடி தாலுகாவில் 1992-93ஆம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1971 ஹெக்டேர் பரப்பில் சம உயர வரப்பு மற்றும் இதரப் பணிகள் செயல்படுத்த ரூ. 9.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) 1992 நவம்பர் மாதம் முடிய பரமக்குடி தாலுகாவில் சுமார் 1,200 விவசாயிகள் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

87—

பெரு நகரங்களில் காலியிடத்தில் வீட்டு உரிமையாளருக்கு தோட்டம் அமைத்தல்.

வினா எண் 11832—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருநகரங்களில் சாலை ஓரமுள்ள வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான காலியிடத்தில் வீட்டு உரிமையாளருக்குத் தோட்டம் அமைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுமா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் உருவாக்கப்பட்ட திட்டப் பகுதியில் உள்ள அடுக்கு மாடி வீடுகளைச் சுற்றியுள்ள காலியிடங்களை அந்தந்த குடியிருப்போர் சங்கத்திற்குப் பூங்கா அல்லது தோட்டம் அமைப்பதற்கு ஒப்படைக்கப்படுகிறது. இத்திட்டப் பகுதியில், சாலை ஓரங்களிலுள்ள காலியிடங்கள் அந்தந்த உள்ளாட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. எனவே, இக்காலியிடங்களைத் தோட்டம் அமைப்பதற்கு வீட்டு உரிமையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

88—

வல்லம் காலனிக்கு வீட்டுமனைப் பட்டா கொடுத்தல்.

வினா எண் 4131—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வல்லம் காலனிக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்க ஆவன செய்து தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு, எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் வட்டம். வல்லம் காலனியில் மொத்தம் 120 ஆதி திராவிடர் குடும்பங்கள் உள்ளன, இவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்குத் தேவையான இடங்கள், நத்தம் மற்றும் வல்லம் கிராமத்தில் ரி.ச, 12/54, 12/55 முதலியவற்றில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் ஆகியவற்றில் உள்ளன. எனவே. வீடுகள் கட்டுவதற்கு இடம் இல்லாமல் எவரும் இல்லாததால் புதியதாக வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை,

89—

தொழுதூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கல்

வினா எண் 5654—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா— :

மங்களூர் தொகுதியில், தொழுதூர் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு, எம், ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

தற்போது நிலுவையில். இல்லை. விருத்தாசலம் தனி வட்டாட்சியரிடம் இருந்து முன்மொழிவு பெற்ற பின் வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,

90—

அம்மன்குப்பம் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்,

வினா எண் 7611—செல்வி கோ, மல்லிகா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி ஒன்றியம், அம்மன்குப்பம் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், வளையமாதேவி கீழ்பாதி கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வசதிக்கு நிலம் கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிட, அரசாணை 3டி 585, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள்: 24-8-1992 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிக்கை (முன் மொழிவு) அம்மன்குப்பம் ஆதி திராவிடர் குடியிருப்பையும் உள்ளடக்கியது. அதன்படி, நில எடுப்பு நடவடிக்கைகள் முற்றுப் பெற்றதும் அம்மன்குப்பம் காலனி ஆதி திராவிடர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

91—

இராமேஸ்வரத்தில் காணாமல் போன மீனவர்களின் அடையாளங்கள்.

வினா எண் 7470—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்தில் சமீபத்தில் காணாமல் போன மீனவர்களை சுட்டது இலங்கை அரசா அல்லது விடுதலைப் புலிகளா?

(ஆ) மீனவர்கள் அடையாளம் காணப்பட்டார்களா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

1993 ஏப்ரல் 28]

(அ) மற்றும் (ஆ) இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி எப்போது நடந்தது என்று குறிப்பிடப்படவில்லை, இவ்வினா 26-11-1991 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளதால். இதற்கு சற்று முன்பாக அதாவது 15-10-1991-க்குப் பின் இராமேஸ்வரம் பகுதியில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் தமிழக எல்லைக்குள் நடத்திய தாக்குதல் பற்றிய விவரம் பின்வருமாறு :—

15–10–1991 அன்று இராமேஸ்வரம் கடற் கரையிலிருந்து நான்கு மீனவர்களுடன் மீன் பிடிக்கச் சென்ற படகு ஆர்.எம்.எஸ். 182-ஐ நோக்கி இலங்கைக் கடற் படையினர் சுட்டனர். மீன் பிடி சாதனங்களையும் சேதப்படுத்திச் சென்றனர். படகு மற்றும் மீனவர்கள் நலமாகக் கரை வந்து சேர்ந்தனர். 10–10–1991 அன்று நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியில் கச்சத்தீவு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய விசைப்படகு ஆர்.எம்.எஸ். 1381 இலங்கைக் கடற் படையினரால் தாக்கப்பட்டு மீன்பிடி சாதனங்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. இதுபோன்று 18–10–1991 அன்று கச்சத்தீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த விசைப்படகு ஆர்.எம்.எஸ். 1161 இலங்கை கடற் படையினரால் தாக்கப்பட்டது. மீன்பிடி சாதனங்களும் சேதப்படுத்தப்பட்டன. தமிழக மீனவர்கள் எல்.டி.டி. யினாரால் தாக்கப்பட்ட சம்பவம் எதுவும் மேற்குறிப்பிட்ட காலத்தில் நிகழவில்லை.

92—

அழகியநாயகிபுரம் ஊராட்சி, கரிசவயல், அழகியநாயகிபுரம் ஆகிய ஊர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13060— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சி, கரிசவயல், அழகியநாயகிபுரம், மத்துக்காடு, பூவாணம், ஏகனிவயல், செருபாலக்காடு, சிவனாம் புஞ்சை, கட்டையன்காடு, சொக்கநாதன்புரம், ஒளிராமன் காடு ஆகிய ஊர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

93—

காலகம் ஊராட்சி கல்லூரணிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13115— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி கல்லூரணிக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

94—

சித்துக்காடு மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13116— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி, சித்துக்காடு மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்படோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிரப் பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது இல்லை.

95—

உதயசூரியபுரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13143— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அலிவலம் ஊராட்சி உதயசூரியபுரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

96—

வட்டாத்திக்கோட்டை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர் மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 13144— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வட்டாத் திக்கோட்டை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

97—

முதுகாடு, ஆவடையானிக்கோட்டை ஆகிய ஊர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 13560— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முதுகாடு, ஆவடையானிக்கோட்டை, பூலாங்கொல்லை, பட்டங்காடு, கே. ஆர். புரம், தூராங்குடி, வலயன்வயல், மனக்காடு ஆகிய ஊர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

98—

அம்மணிசத்திரம் 50 மீனவர்களை அடைக்கத்தேவன் கூட்டுறவு மீனவர் சங்கத்தில் சேர்த்தல்.

வினா எண் 13574— திரு. ஆர். சிங்காரம், : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அம்மணிசத்திரம் 50 மீனவர்களை 1992–93–ல் அடைக்கத் தேவன் கூட்டுறவு மீனவர் சங்கத்தில் சேர்க்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

இல்லை. பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியப் பகுதியில் மொத்தம் 14 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவ்வொன்றியத்திலுள்ள அம்மணிச்சத்திரம் ஓர் அடையாளம் காணப்பட்ட மீனவர் கிராமம் அல்ல. ஆகவே இக்கிராமம் எந்தச் சங்கத்தின் விவகார எல்லையிலும் இல்லை இப்பகுதியில் உள்ள மீனவர்கள் யாரும் தங்களை எந்த மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினர்களாக சேர்க்கக் கோரி மனு எதுவும் செய்யவில்லை. அம்மணிசத்திரம் கிராமத்தில் உள்ள மீனவர்கள் அருகாமையில் உள்ள மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர விரும்பி உரிய முறையில் மனு செய்து கொண்டால் தொடர்புடைய சங்கத்தின் மூலம் தகுதி அடிப்படையில் முடிவு செய்ய ஏதுவாக இருக்கும்.

99—

கொன்னக்காடு, செல்லப்பிள்ளையார் கோவில் ஆகிய ஊர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 14292— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொன்னக்காடு, செல்லப்பிள்ளையார் கோவில், மேட்டுக் கொல்லை, மருங்கப்பள்ளம், சாந்தாம்பேட்டை, குருவிக் கரம்பை, முனுமக்காடு, பெரியகல்லாங்காடு ஆகிய இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சீர்மரபினருக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

[1993 ஏப்ரல் 28

100—

மூங்கில் தொழில் மற்றும் கோரைப்பாய் நெசவு செய்வோர் இறந்தால் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் அளித்தல்.

வினா எண் 11535—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து மூங்கில் தொழில் மற்றும் கோரைப்பாய் நெசவு செய்வோர் இறந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதில் பணி செய்யும் உறுப்பினர்கள், கைவினைஞர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் அளிக்க தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்களில் வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்*: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில், (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரைஉறுப்பினரால்சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

175 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி ரத்து செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது குறித்து.

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் திரு. வி. தண்டாயுதபாணி, திரு. சி. சுவாமிநாதன், திரு. பெ. பொன்னுசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. உ. பலராமன், திரு. கே. கந்தசாமி, திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் 175 ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி ரத்து செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது பற்றிய பிரச்சினைப்பற்றிவிவாதிக்கப்பேரவையின்

[1993 ஏப்ரல் 28

100—

மூங்கில் தொழில் மற்றும் கோரைப்பாய் நெசவு செய்வோர் இறந்தால் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் அளித்தல்.

வினா எண் 11535—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து மூங்கில் தொழில் மற்றும் கோரைப்பாய் நெசவு செய்வோர் இறந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அதில் பணி செய்யும் உறுப்பினர்கள், கைவினைஞர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் அளிக்க தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்களில் வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்*: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில், (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுனரஉறுப்பினரால்சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

175 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி ரத்து செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது குறித்து.

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் திரு. வி. தண்டாயுதபாணி, திரு.சி. சுவாமிநாதன், திரு.பெ. பொன்னுசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. உ. பலராமன், திரு. கே. கந்தசாமி, திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் 175 ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி ரத்து செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது பற்றிய பிரச்சினைப்பற்றிவிவாதிக்கப்பேரவையின்

[1993 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் எனக் கோரி என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவு எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

•திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலேயே காண முடியாத அளவுக்கு முதன் முறையாக தமிழகத்திலே இருக்கின்ற தலைமை நீதிமன்றம், சென்னை நீதிமன்றம் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி அளித்ததிலே முறைகேடுகள் நடந்திருப்பதாக குற்றம் சுமத்தியிருக்கிறது. கண்டனம் தெரிவித்து இருக்கிறது. தமிழக வரலாற்றிலேயே இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டு எந்த அமைச்சரின் மீதும், எந்த அரசாங்கத்தின் மீதும் இன்றுவரை நீதிமன்றத்தாலே கண்டனம் தெரிவிக்கப்பட்டது கிடையாது. சென்ற ஆண்டு 1991 நவம்பர் மாதத்தில் அரசு கொள்கைப் பிரகடனமாக வெளியிட்டிருக்கிறது. ஏற்கெனவே ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 40,000-க்கும் அதிகமானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆண்டு தோறும் பயிற்சி பெற்றவர்கள 5,000 பேர் வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். ஓர் ஆண்டுக்கு அதிகபட்சமாக வேலை கொடுத்தாலும் 5,000 பேருக்கு மேலே வேலை கொடுக்க முடியாது. எனவே புதிதாக ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி கிடையாது என்று தெளிவாக அரசு கொள்கைப் பிரகடனமாகவே இன்னும் சொல்லப் போனால் விளம்பரமாகவே வெளியிட்டு இருக்கிறது. நவம்பர் மாதத்திலே, பிறகு இதே அவையிலே ஏப்ரல் மாதத்திலே கொள்கை விளக்கக் குறிப்பு கொடுக்கப்பட்டபோது அன்றைய தினம் அதிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். புதிய பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மே மாதத்திலே துவங்கி ஏராளமான பள்ளிக் கூடங்கள், 200-க்கும் அதிகமான பள்ளிக்கூடங்கள் என்று அமைச்சர் அவர்களே இதே அவையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கை மாற்றத்திற்கு காரணம் என்ன ? இன்றைய தினம் திடீரென்று புதிய பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டிய அவசியம் என்ன என்று இந்த அவையிலேயே நானே கேள்வி கேட்டிருக்கிறேன். அன்றைய தினம் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் எங்களுக்குத் திருப்தி இல்லை. அமைச்சர் அவர்கள் சொன்னதெல்லாம் சிறுபான்மையினருக்கு கேட்கின்ற நேரத்திலே கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு கொடுக்கக் கூடாதா ? பெரும்பான்மையினர்கள் கேட்டால் கொடுக்கக் கூடாதா ? பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு பயிற்சிப் பள்ளிகளில் இடம் கொடுக்கக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறாரா என்றெல்லாம் கேட்டார். ஆனால்

இன்றைய தினம் தெளிவாக என்ன தென்படுகிறது என்று சொன்னால் அந்த சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் தான் வழக்கு தொடுத்திருக்கிறார். பி. என். ஜோசப் என்பவர் வழக்கு தொடுத்திருக்கிறார். அந்த வழக்கிலே முறைகேடுகள் நடைபெற்று இருக்கிறது என்று குற்றம் சுமத்தியிருக்கிறார். 192 பள்ளிக் கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதில் அனைத்தும் முறைகேடுகள், முறையாக எதுவும் செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் முறையாக விண்ணப்பங்கள் கூட கோரப்படவில்லை. ஏற்கனவே விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கெல்லாம் பள்ளிக்கூடங்கள் வழங்கப்படவில்லை என்றெல்லாம் அவர் குற்றம் சுமத்தி இருக்கிறார். நம்முடைய உயர் நீதிமன்றம், டிவிஷன் பென்ச், 2 பேர் அடங்கிய டிவிஷன் பென்ச் நேற்றைய தினம் தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே அவர்களுடைய குற்றச்சாட்டுக்களை டிவிஷன் பென்ச் அப்படியே அங்கீகரித்திருக்கிறது, ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த குற்றச்சாட்டுகளுக்கு முழுமையான முகாந்திரம் இருக்கிறது என்று டிவிஷன் பென்ச் குறிப்பிட்டிருக்கிறது. முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த வழக்கிலே கல்வி அமைச்சர் எதிர் மனுதாரராக சேர்க்கப்படாவிட்டாலும் அவரை எங்களாலே அதனாலே விசாரிக்க முடியவில்லை என்றாலும் அதிகாரிகள் வந்தார்கள், அந்த அதிகாரிகளும் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை என்று நீதிபதி தன்னுடைய தீர்ப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆக பெரிய இடத்திலே இருக்கின்ற, அமைச்சர் அந்தஸ்த்திலே இருக்கின்ற, அமைச்சரவை அந்தஸ்த்திலே இருக்கின்ற ஒருவர், அவர் அளித்த தாக்கீதுகளின் அடிப்படையிலேயே தான் இந்த அனுமதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகிறது என்பதையும் மிகத் தெளிவாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். Extranious Considerations இருந்திருக்க வேண்டும் என்பதையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அதிகார துஷ்பிரயோகம் பெரும் அளவிலே நடைபெற்று இருக்கிறது. அதிகார துஷ்பிரயோகத்தால்தான் இந்த அளவுக்கு இங்கே நடைபெற்று இருக்கிறது. இவ்வளவு பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். ஆக சட்டப்பேரவையிலே கொடுத்த தகவல்கள் தவறானவை, அரசின் சார்பிலே கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கங்கள் தவறானவை, அரசின் சார்பிலே செய்யப்பட்ட பிரகடனங்கள் உண்மைக்கு மாறானவை என்பதை எல்லாம் இன்றைய தினம் சென்னை உயர்நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறது. இந்த குற்றச்சாட்டுகளுக்குப் பின்னாலேயும் இதற்கு பொறுப்பு ஏற்று இங்கே வராமலேயே அமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்திருக்க வேண்டும். ஏன் என்றால் அவ்வளவு கடுமையான குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அமைச்சர் மட்டுமல்ல, நீங்கள் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி, கூட்டுப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு இந்த அமைச்சரவையே இதன் மீது ராஜினாமா செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

ஆகவே, இதே போல் ஆந்திராவில் அன்றைய தினம் உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்த நேரத்திலே முதலமைச்சர் ஜனார்தன் ரெட்டி ராஜினாமா செய்திருக்கிறார். இது போன்று பல்வேறு முன் உதாரணங்களை என்னால் சொல்ல முடியும், இதைவிட கடுமையான குற்றச்சாட்டுகள் எந்த ஒரு அமைச்சரவையின் மீதும் எந்த அமைச்சரின் மீதும், எந்த உயர்நீதிமன்றமும் சுமத்தியதற்குப் பின்னாலும் ராஜினாமா செய்யாமல் இருந்தார்கள் என்பதற்கு எந்த விதமான முன் உதாரணமும் கிடையாது. எனவே, தார்மீகப் பொறுப்பு ஏற்று அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும். இந்த கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி, கூட்டுப் பொறுப்பு என்று ஏற்றுக் கொண்டு இந்த அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். முழுமையாக இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்பதால் அவையை ஒத்தி வைத்து விட்டு இதை விவாதிக்க வேண்டும் என்றும், இந்த அமைச்சரவையே ராஜினாமா செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை வலியுறுத்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி, எதிர்க் கட்சித் தலைவர் விளக்கமாகச் சொல்லி விட்டார்கள். ஆகவே, உங்களுடைய கருத்தைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் அவமானப் பட்டு தலை குனிகின்ற வகையிலே நேற்றைய தினம் சென்னை உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இந்த வழக்கு மன்றத் தீர்ப்பு பற்றிப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான உங்களுடைய விளக்கம் இருந்தால் சுருக்கமாகச் சொல்லலாம்.** நீங்கள் கொடுத்தது... (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையில் இது வருகிறது என்று சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பேச முடியாது. (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அவசியம் பற்றி நான் விளக்குகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(குறுக்கீடு) கேளுங்கள். அதை இவரே சொல்லட்டும். ஏன் கவர்னரை இழுக்கிறார், கவர்னரை இழுக்கக் கூடாது. (குறுக்கீடு) ஆளுநரின் நடவடிக்கைகளை இந்தப் பேரவையில் எந்த வகையிலும் இழுக்கக் கூடாது. திரு. இளம்வழுதி பேசுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வருகிறபோது தான் பிரச்சினை ஆகவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதைப் பற்றியே பேச வேண்டாம்.** எனவே, அது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படு கிறது. நீங்கள் இதைப் பற்றி பேசுங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பி.என். ஜோசப் அவர்கள் தொடர்ந்த வழக்கில் நீதிபதி திரு. சீனிவாசன் அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் அளித்துள்ள தீர்ப்பில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி 175-க்கான அனுமதி வழங்கியதில் உள்ள முறைகேடுகளைக் குறிப்பிட்டு அந்த அனுமதிகளை ரத்து செய்திருப்பதோடு இந்த அரசாங்கம் தனது கடமையிலிருந்து தவறியது மட்டுமல்ல; ஒட்டு மொத்தமான அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ள குற்றச் சாட்டுக்கும் ஆளாகிறது என்று கண்டனம் செய்துள்ளது. கல்வி அமைச்சர் அவர்கள் ஆணையின்படி தான் இவ்வாறு நியதிகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பு சுட்டிக் காட்டி யிருக்கிறது.** (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிதி இளம்வழுதி நீங்கள் கொடுத்த அறிவிப்பு இந்த 175 பள்ளிகளைப் பற்றியது தான். எனவே, அதை மீறி நீங்கள் பேசுவது என்பது இந்த நேரத்தில் முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படு கிறது. இந்தப் பிரச்சினையை மீறிப் பேசினால் தங்களுக்கு அனுமதி மறுக்க வேண்டி வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1993 ஏப்ரல் 28]

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னதாகப் பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியது போல, ஏற் கனவே ஆந்திர மாநிலத்தில் இப்படி ஒரு தீர்ப்பு அந்த அரசின் மீது வழங்கியபோது அதற்கு தார்மீக பொறுப்பு ஏற்று அன் றைக்கு முதலமைச்சராக இருந்த ஜனார்தன் ரெட்டி அவர்கள் ராஜினாமா செய்தார்கள். அது போல இந்தப் பிரச்சினையின் மீது உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி, ** (மணியடிக்கப்பெற்றது).

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இளம்வழுதி உட்கார லாம். நீங்கள் கேட்ட கோரிக்கையோடு இருக்கலாம். அதெல் லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் அவையின் நேரத்தை வீணடிக்கிற முயற்சியில் ஈடுபடக் கூடாது. நான் ஏற்கெனவே உங்களுக்குத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். இந்தப் பிரச்சினையை மீறிப் பேசினால், நான் அதற்கு மேல் உங்களைப் பேச அனுமதிக்க மாட்டேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கனவே மாண்புமிகு ஜனார்த்தன் ரெட்டி அவர்கள் தார்மீகப் பொறுப்பேற்று ராஜிநாமா செய்தது போல, இந்தப் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும், ஏன் முதலமைச்சர் அவர்களும் தார்மீகப் பொறுப்பு ஏற்று ராஜினாமா செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவ தோடு, இது குறித்து விரிவாக விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டு அமர் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த இளம்வழுதி அவர்களும் கொண்டு வந்திருக்கிற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்துக்கு எதிராகச் சில விளக்கங்களைத் தர நான் விரும்புகிறேன். ஏனென்றால், நேற்றைய தினம், பத்திரிக்கையிலே வந்த செய்திகளை வைத்து ஒரு தவறான பிரச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சாரத்தை, அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், ஏன் பத்திரிகையிலே கூட ஒரு தவறான முறையிலே செய்திகள் வெளியிடப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும். மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்களும். ஆந்திராவிலே ஜனார்த்தன ரெட்டி முதலமைச்சராக இருந்தார்கள். அங்கே என்ஜினியரிங் கல்லூரிகளுக்கு அனுமதி தந்ததில் முறைகேடு இருக்கிறது என்று அவர் போட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது. ஆகவே, தார்மீகப் பொறுப்பு ஏற்று அவர்கள் ராஜிநாமா செய்தார்கள் என்று இங்கே சொன்னார்கள். அங்கே நடந்தது, அவரே கையெழுத்துப் போட்டு தந்த உத்தரவுகள். அவருடைய சொந்தக்காரர்களுக்கு என்ஜினியரிங் கல்லூரியை நடத்த தந்த அனுமதிகள் இப்படிப்பட்ட முறைகேடுகளைச் செய்த காரணத்தினாலேயும் அங்கே காங்கிரஸ் கட்சிக்குள்ளே இருந்த நிலைமை காரணமாகவும் அவர் ராஜிநாமா.... (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நான் நடைபெற்றதைச் சுட்டிக் காட்டினேன். இன்னொரு அவையிலே நடைபெற்றதைப் பற்றியும், இன்னொரு கட்சியைப் பற்றியும் விமர்சிக்க வேண்டிய அவசியம் இங்கே கிடையாது. பிறகு நாங்களும் பேச வேண்டி வரும். அமைதியாகப் பதில் அளித்தால் நாங்கள் கேட்டுக் கொள்ளத் தயார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சிமீது குறைபாடு சொல்லவில்லை. அந்தக் கட்சியிலே எடுத்த முடிவு என்றுகூட சொல்லலாம். காங்கிரஸ் கட்சியிலே இருந்த நிலை காரணமாக காங்கிரஸ் கட்சியே கூட அந்த நிலையை எடுத்திருக்கலாம் ராஜிநாமா செய்திட வேண்டுமென்று. ஆகவே, அவர் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சி வற்புறுத்தியது. அதனால் ராஜிநாமா செய்தார் என்று சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியிலே இருந்த நிலை காரணமாகவும்... [குறுக்கீடுகள்] உட்காருங்கள், (குறுக்கீடுகள்) இல்லை, அதை ஒரு உதாரணமாகச் சொன்னபோது, அவர் எந்தச் சூழ்நிலையில் ராஜிநாமா செய்தார் என்பதைப் பிறகு நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் அதைக் குறிப்பிட்ட காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், (குறுக்கீடுகள்) அதற்கும் இதற்கும் பொருந்தாது என்றால் நீங்கள் பிறகு சொல்லலாம். அவர் சொன்ன பிறகு அதற்கும் இதற்கும் பொருந்தாது என்று நீங்கள் சொல்லலாம். (குறுக்கீடுகள்) அவரைச் சொல்லவே விடவில்லையே. (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னீர்கள், ஆந்திராவில் திரு. ஜனார்த்தன ரெட்டி ராஜிநாமா செய்தது போல என்று நீங்கள் சொல்லிவிட்டதற்குப் பிறகு, அதற்கு அவர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய வழக்கமான மிரட்டுகின்ற பாணியை நிறுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அமைச்சரவையே ராஜிநாமா செய்யவேண்டும் என்று அவர் சொன்னபோது நாங்கள் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்து இருந்தோம். அதற்குத் தகுந்த விளக்கத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்ல முற்படும்போது, குறுக்கிடாமல், என்ன சொல்லுகிறோம் என்று அவர்களும் பொறுமையாகக் கேட்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறுக்கிடுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் சொன்னதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு விடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்னொரு இடத்திலே நடந்த ஒரு எடுத்துக்காட்டைச் சொன்னீர்கள் (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிரட்டல் பாணி என்று உள்நோக்கம் கற்பிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்நோக்கம் இல்லை. (குறுக்கீடுகள்) அதைப்பற்றி அமைச்சர் பேசவே கூடாது என்று தாங்கள் தெரிவித்தீர்கள். (குறுக்கீடுகள்) உள்நோக்கம் இல்லை. நீங்கள் சொன்னதைப்பற்றி அவர் குறிப்பிடவே கூடாது என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற தொனி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைக் குறிப்பிடவே கூடாது என்கிற போது, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதில் குற்றம் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதை குற்றம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) குற்றம் என்று சொல்லவில்லை.

முற்பகல் 11-25

தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்லி விடுகிறேன். சொன்னால் தானே தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் பேசிய கருத்துக்குக் கல்வியமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள் ஒரு

உதாரணத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த உதாரணம் இதற்குப் பொருந்தாது என்பதற்கு உரிய காரண, காரியங்களை அவர் சொல்கிறார். அதை அவர் சொல்ல அனுமதித்தால் தானே நீங்கள் தெரிவித்ததற்கு அது பொருந்துமா, பொருந்ாதா என்று நான் முடிவெடுக்க முடியும்? அதை அவர் சொல்லக் கூடாது என்று நீங்கள் சொல்கிற காரணத்தினாலேதான், அப்பொழுது தான் முதலமைச்சர் குறுக்கிட்டு அதைச் சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, தாங்கள் அதைச் சொல்லாமல் இருந்திருந்தால்....

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அந்த வார்த்தையை ஏன் சொன்னார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இதைப் பேசக் கூடாது என்று சொல்லாமல் இருந்திருந்தால் முதலமைச்சரே அதைச் சொல்லியிருக்க மாட்டார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : உங்களுக்கு வலது பக்கத்தில் இருந்தால்....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆரம்பத்தில் பேசுகின்றபொழுது, சில தவறான தகவல்களை இங்கே தந்திருக்கிறார்கள். அதற்கான சரியான விளக்கத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இப்பொழுது தர இருக்கிறார்கள். இங்கே சரியான விளக்கத்தைத் தரக் கூடாது என்று எண்ணுகிறார்களா? அதனால் தான் திரும்பத் திரும்பக் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறார்களா? குறுக்கீடுகளைத் தயவு செய்து நிறுத்திக் கொண்டு, கல்வியமைச்சரவர்களின் பதிலை முழுமையாகக் கேட்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒத்திவைப்புத் தீர்மானம். பேரவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஒத்திவைப்பதற்குரிய அவசியம் இல்லை என்பதற்கான விளக்கத்தை அரசு தரப்பிலே சொல்கிறார்கள். அதைச் சொல்வதற்கு அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அவர் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பதில் சொல்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் அளிக்கிற சந்தர்ப்பம் என்பதை நான் முடிவுசெய்ய வேண்டும். கல்வியமைச்சர் சொன்னதற்குப் பிறகு, அவர் என்ன சொல்லவிருக்கிறார் என்பதைத் தெரிந்து, அதற்குப் பிறகு பதில் அளிக்கலாம். (குறுக்கீடு) இப்பொழுதே பதில் அளிக்க சந்தர்ப்பம் வேண்டும் என்று கேட்பது சரியா? தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். பதில் அளிக்கிற சந்தர்ப்பம், அவர் சொன்னதற்குப் பிறகு தானே வருகிறது. கல்வியமைச்சரவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேறொரு மாநிலத்திலே நடைபெற்றதை நான் பேச வேண்டுமென்று எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்தான் அதை எடுத்துக் கொடுத்து, என்னைப் பேசச் சொல்லுமாறு தூண்டி இருக்கிறார் என்பது மட்டுமல்ல; மத்தியப் பிரதேச ஹைகோர்ட்டிலே ஒரு தீர்ப்பு வந்தது. அதை எல்லாமா நான் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி) அதற்கு யார் இராஜிநாமா செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இருக்கிறேனா? இப்பொழுது மத்தியப் பிரதேசத்திலே என்ன நிலைமை என்றால், சட்டசபையை ரிவைஸ் பண்ணச் சொல்லி ஹைகோர்ட்டே சொல்லியிருக்கிறது.

திரு. பெ. பொன்னுசாமி : ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : ஸ்டே பண்ணியிருந்தாலும் நான் இங்கே . . . (கூச்சல்-குழப்பம்) பேசுவதற்கு விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினைக்குத் தான் வரப்போகிறார். (குறுக்கீடு) உட்கார வேண்டும். ஞானசேகரன், இது முறை அல்ல, உட்காருங்கள், ஞானசேகரன் உட்கார வேண்டும். ராஜு, உட்கார வேண்டும். கல்வியமைச்சரவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் பேசக் கூடாது என்று இருந்தேன். இவர்கள் பேசியதற்காகச் சொல்வதற்கு இன்னொரு முக்கியமான காரணம் என்னவென்றால், ரிவைஸ் பண்ணியதற்கு அப்புறம் சட்டசபையை அவர்கள் ஸ்டே பண்ணியிருந்தாலும், நாளைக்கு சுப்ரீம் கோர்ட்டிலே என்ன உத்தரவு போட்டாலும் அன்று வரையிலும் அங்கே போடப்பட்ட அத்தனை அரசாங்க உத்தரவுகளும் சட்டவிரோதம் ஆனது

என்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்தாலும் அதுவும் சட்ட விரோதமானது என்றுதான் நான் கருதுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : டார்லிமெண்டிலே கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிக் குறுக்கிடாமல் இருப்பது நல்லது. செல்லக்குமார், ஞானசேகரன் அடிக்கடி நீங்கள் எழுந்திருக்கிற காரணத்தால் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் பிறகு எழுந்திருக்கிற சூழ்நிலை வருகிறது. அது எனக்கு வேலை வைக்கிற நிலை. ஆகவே, நீங்கள் எழுந் திருக்காமல் இருப்பது நல்லது.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், என்னை அவர்கள் இப்பொழுது இராஜினாமா செய்யச் சொல்கிறார்கள். நான் அதையெல்லாம் பரிசீலிக்கின்றபொழுது, பெரியவர்களெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் ; நமக்கெல்லாம் என்ன வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நான் பார்க்க வேண்டுமல்லவா ? ஆகவேதான் அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய தாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், மற்றதெல்லாம் பேச வேண்டாமென்றாலும்கூட - இந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் நானும், முதலமைச்சரவர்களும் கையெழுத் திட்டு எந்த உத்தரவும் போடவில்லை.

இது இணை இயக்குநர் அளவிலே -டைரக்டர் அளவிலே கூட இல்லை - இணை இயக்குநர் அளவிலே போடப்படுகிற உத்தரவுகள் தான்.

முற்பகல் 11-30.

சரி, இப்பொழுது 170 என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது எப்படி அந்த உத்தரவு போடப்பட்டது ? பெரும்பாலான பள்ளிகளுக்கு இதே உயர்நீதிமன்றம் உத்தரவு தந்து, 98 பள்ளிகளுக்கு தந் திருக்கிறது. இதற்கு யார் ராஜினாமா செய்வது ? (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல ; நாங்கள் போட்ட அந்த நியந்தனைகள் என்ற அந்த உத்தரவுகளை 'ஸ்டே' பண்ணிவிட்டு, இதுபோல வந்து கேட்கிறவர்களுக்கு நீங்கள் 'டைம்' கொடுத்து தரவேண்டுமென்ற 'டைரக்‌ஷனும்' தந்திருக்கிறார்கள். இது பூராவுமே மைனாரிடி இன்ஸ்டிட்யூஷன்ஸ். கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் நடத்துகிற பள்ளிகளுக்கு, அவர்களுக்கு உயர்நீதி

மன்றத்திலே இப்படி வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்களையும் தரும்படி தூண்டுகிறார்கள். நாங்கள் தரவில்லை என்றால், 'கன்டெம்ப்ட் பெட்டிஷன்' போட்டு, உள்ளே தள்ளட்டுமா என்று கேட்கிறார்கள். அதுவும் நடந்திருக்கிறது. நாங்களாகத் தந்தது அமைச்சர் என்ற முறையிலே, நான் 'இன்ஸ்ட்ரக்ஷன்' கொடுத்து தந்தது, இப்படி கிறிஸ்தவர் களுக்கும் முஸ்லீம்களுக்குமே தந்து கொண்டிருந்தால், தமிழ் நாட்டிலே பெரும்பான்மை சாதியைச் சார்ந்தவர்கள் இந்துக் களுக்கு ஒரு அநியாயம் செய்வது போல இருக்கிறது என்று சொன்னதன் காரணமாக, அப்படித் தரப்பட்ட பள்ளிகளே 24 பள்ளிகள்தான். நான் அதுவும் செய்யவில்லை என்றால், பெரும்பான்மையான சாதிக்கு நீதி வழங்காத ஒரு தன்மை எனக்கு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மதச் சார்பற்ற தன்மையை பின்பற்ற வேண்டிய அவசியம் என்னுடைய அரசியல் வாழ்க்கை யிலே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் குறுக்கீடுகள் வருமோ என்ற ஐயப்பாட்டினால், இரத்தினச் சுருக்கமாகச் சில விவரங் களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதன் பின்னர் விரிவான விளக்கத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அளிப்பார்கள். நேற்று, ஹைகோர்ட் ஆர்டரின்படி, 'ஸ்ட்ரைக் டவுன்' செய்யப்பட்டது. 'க்வாஷ்' செய்யப்பட்டது 175 டிரெயினிங் இன்ஸ்டிட்யூஷன்கள். இவற்றில் கோர்ட் ஆர்டர்படி, கோர்ட் ஆணையின்படி அனுமதி வழங்கப்பட்ட கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 98. கோர்ட் டைரக்ஷன்படி, ரெகக்னிஷன் - அனுமதி வழங்கப்பட்ட கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 53. ஆக, இந்த 175-இல் கோர்ட் ஆணைப்படியும் கோர்ட் டைரக்ஷன்படியும் அனுமதி வழங்கப்பட்ட மொத்தக் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 151. (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றில் கல்வி அமைச்சரகம் தானாக அனுமதி வழங்கி யது வெறும் 24 மட்டுமே. அதுவும் ஏற்கெனவே கல்வியமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னதைப்போல, மைனாரிட்டிக்கே போய்க் கொண்டிருக்கிறது ; மெஜாரிடி கம்யூனிட்டிக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக. எனவே, 175 கல்வி நிலையங்களில் 151 கோர்ட் ஆணைப்படியும், கோர்ட் டைரக்ஷன்படியும் அனுமதி வழங்கப்பட்டு இருக்கும்போது, ஏற்கனவே இதே ஹைகோர்ட்டிலே இப்படி 98 கல்வி நிலையங் களுக்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு, இதே ஹைகோர்ட் நீங்கள் மேலும் 53 கல்வி நிலையங்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று 'டைரக்ஷன்ஸ்' கொடுத்து விட்டு, நேற்று அதே கோர்ட், அவர்களுடைய நீதிபதி செய்ததே தவறு என்று தீர்ப்பு அளித்தால் கோர்ட்டில் உள்ள முரண்பாடு

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 28

களுக்கு இந்த அரசு எப்படிப் பொறுப்பேற்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, கல்வி அமைச்சரோ, இந்த அமைச்சரவையோ ஏன் ராஜினாமா செய்ய வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி அமைச்சர் முடித்து விடட்டும். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Criticism about the High Court cannot be permitted. அதாவது, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வியமைச்சர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) கல்வியமைச்சர் முடிக்கட்டும்; தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை; கல்வியமைச்சர் முடிக்கட்டும். தவறு என்றால் பிறகு சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத் தீர்ப்பை விமர்சனம் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயர்நீதிமன்றத் தீர்ப்பு எதையும் அவர்கள் விமர்சனம் செய்யவே இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அதற்கு உள்நோக்கம் கற்பிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்நோக்கம் கற்பிக்கவில்லை. ஹைகோர்ட்டில் ஒரு நீதிபதி செய்த முடிவை, ஹைகோர்ட்டினுடைய இன்னொரு நீதிமன்றம் 'ஸ்டிரைக் டவுன்' பண்ணுகிறபோது, (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் படித்துக் காட்டுகிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது என்றுதான் சொல்கிறார். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட் அளித்த தீர்ப்பை நான் விமர்சனம் செய்யவில்லை. அந்த கோர்ட்டே முன்பு இப்படி ஆணையிட்டிருக்கிறது. இதே கோர்ட், நேற்று மீண்டும் வேறுவிதமாக ஆணையிட்டிருக்கிறது ; தீர்ப்பு கூறியிருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். ஏற்கெனவே அவர்கள் ஆணை வழங்கியதைப்பற்றி நேற்று சொல்கிறார்கள் 'Unfortunately some Learned Judges of this Court held the view that such interlocutory orders could be passed directing the Government to grant temporary recognition even if the writ petitioner had not fulfilled the conditions for such grant,' என்று சொல்கிறார்கள். தங்களுடைய நீதிபதிகளைப் பற்றியே நேற்று உட்கார்ந்த டிவிஷன் பென்ச் 'Unfortunately some Learned Judges passed these orders என்று சொன்னால் என்ன அர்த்தம்? இதை நானா விமர்சனம் செய்கிறேன்? அந்தக் கோர்ட்டின் நீதிபதிகளே விமர்சனம் செய்திருக்கிறார்கள். இதே சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள நீதிபதிகள் அதே உயர் நீதிமன்றத்திலுள்ள வேறு நீதிபதிகளைப் பற்றி அவர்கள் கொடுத்த ஆணைகளைப் பற்றி விமர்சனம் செய்து இருக்கிறார்கள். கல்வி அமைச்சர் சொல்வார்.

முற்கல் 11.35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பகுதியை படித்துக் காட்டினார்கள். இவ்வளவு கொடுக்கச் சொல்லிச் சொன்ன அந்த நீதிபதியினுடைய உத்திர விலிருந்து ஒரு பகுதியை நான் படிக்கிறேன்.

'As and when applications are received by the Government, from these insitutions' 'from these institutions' என்றால் 'from the minority institutions. 'The Government should consider all these relevant aspects and then provide temporary recognition within four weeks therefrom,' நான்கு வாரத்திற்குள் அனுமதி தர வேண்டுமென்று கோர்ட்டு உத்தரவு. இதற்கு நான் ராஜினாமா செய்யவேண்டுமா ?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று உட்கார்ந்த டிவிஷன் பெஞ்ச் சொல்லுகிறது, ஏற்கெனவே இதே மெட்ராஸ் ஹைகோர்ட்டை சார்ந்திருக்கிற ஒரு நீதிபதி இப்படி ரெகக்னிஷன் வழங்க வேண்டுமென்று சொன்னதைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள்.

'The court has in effect directed the Government, to act contrary to the rules' என்று அவர்களே சொல்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, அரசாங்கத்தைப் பொறுத்தவரை

மெட்ராஸ் ஹைக்கோர்ட்டில் ஒரு ஜட்ஜ் உட்கார்ந்தாலும் ஹைகோர்ட்டுதான், ஒரு டிவிஷன் பென்ச் உட்கார்ந்தாலும் அது ஹைக்கோர்ட்டுதான், ஒரு புல் பென்ச் உட்கார்ந்தாலும் அது ஹைகோர்ட்டுதான். எனவே, எங்களைப் பொறுத்த வரையில் ஒரு நீதிபதி சொன்னாலும் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அதன்படி நடக்கவில்லை என்றால், எங்கள் மீது கன்டெம்ட் ஆப் கோர்ட்டு வந்திருக்கும். எனவே, How can the Government be held responsible for contradictory orders issued by Judges of the High Court?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The Division Bench difinitely can pass comment against a Single Judge. That was the order of the Single Judge. This is a Division Bench. (Interruption)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் இந்த பால பாடங்களை எல்லாம் எங்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. நான் சொல்வது சிங்கிள் பென்ச் என்றாலும், டிவிஷன் பென்ச் என்றாலும் நாங்கள் அதை ஹைகோர்ட்டு என்றுதான் மதிக்கின்றோம் என்பதைத் தான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : முக்கியமாக, ஒரு தனி நீதிபதி தீர்ப்புக்கு எதிராக எழுதலாம், அவருக்கு உரிமை உண்டு. ஆனால், இந்த அவை ஏற்கெனவே உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இங்கே விமர்சனம் செய்ய முடியாது, செய்யக் கூடாது. அவர்களுக்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எந்தவகையிலேயும் விமர்சனமே செய்யவில்லை. ஒரு நீதிபதி இப்படிச் சொல்லி இருக்கிறார். நேற்று உட்கார்ந்த நீதிபதிகள் இப்படி சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) நீதிபதி சொன்னதைக் குறிப்பிட்டு, இதற்காக நாங்கள் எப்படி ராஜினாமா செய்ய முடியும், பொறுப்பு ஏற்க முடியும் என்றுதான் கேட்டார். அதிலே ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடு) அவர் கோர்ட்டு உத்தரவைப் பற்றி துளிக்கூட விமர்சனம் செய்யவில்லை. எனவே, அதிலே பிரச்சினை வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, விமர்சனம் செய்யவில்லை என்று சொல்கிறபோது வேண்டாம் உட்காருங்கள்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிபதி அல்ல, பல நாட்கள் பல நீதிபதிகள் தீர்ப்பு அளித்து இருக்கிறார்கள் என்பதற்கு இங்கே விவரம் இருக்கிறது. குறிப்பாக Several orders were passed by this Court in batches of cases on 4.3.92, 30.3.92, 10.4.92, 20.4.92 and 30.4.92, in the order dated.... என்று ஒவ்வொரு ஆர்டரிலும் சொல்லியதை இந்த நீதி பென்ச் மறுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 11-40

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே தீர்ப்பிலே என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த அடிப்படையிலே அவர்கள் அங்கீகாரம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பிலே என்ன சொல்கிறார்கள் என்றால் "with this direction, the Government is directed to grant provisional recognition to all the minority institutions subject to the fulfilment of the conditions set forth here in above. Accordingly, the petition on the order".... என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அவர்களே அனுமதியும் தந்துவிட்டு, இப்படியெல்லாம் இருந்தால், நீங்களே நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால், நீங்களே அனுமதி தாருங்கள் என்று சொல்லிவிட்டு, நிபந்தனைகளையும் தடுத்து விட்டார்கள். ஆகவே எந்த நிபந்தனையும் இல்லாமல் கேட்கலாம், கொடுக்கவேண்டும் என்பதுபோல் ஒரு நிலைமை உருவாக்கப்பட்டு விட்டது. ஆகவே அந்த ஹைகோர்ட் டிரக்ஷன் பிரகாரம் சில பள்ளிகளுக்குத் தரப்பட்டது. இதிலே நான் விளக்கவேண்டியது முறைகேடு என்பது பற்றி. முறைகேடு என்பது என்னவென்றால் அரசாங்கம் போட்டிருக்கிற உத்தரவின் பிரகாரம் அவர்கள் விண்ணப்பிக்கவில்லை என்றால், அரசாங்கம் போட்டிருக்கிற நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை என்றால், அப்படிப் பூர்த்தி செய்யாமல் இருப்பவர்களுக்கு அனுமதி தந்திருந்தால் அது முறைகேடு; இதுதான் ஜட்ஜ்மெண்ட்டினுடைய கருத்து. அப்படி என்றால் இன்றைய தினமோ, நாளைக்கோ நாங்கள் இந்த மாதிரி பூர்த்தி செய்யாமல் இருந்திருந்தாலும் தற்காலிகமாக நாங்கள் தரலாம். ஏனென்றால் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிற காரணத்தால் ஒரு மூன்று வருஷத்தில் அதைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று ஒரு உத்தரவு போட்டிருந்தால் இதே நீதிபதி அதை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் முறைகேடு என்பது நிபந்தனையைப் பூர்த்தி செய்யாதது மட்டுமல்ல; கடைசியாக அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இந்தத் தீர்ப்பின் பிரகாரம் 17 பள்ளிகளுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இதே தீர்ப்பின் பிரகாரம் இதே பெஞ்ச் எல்லா பள்ளிகளுக்கும் இல்லை என்று சொல்லவில்லை. அப்படி

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1993 ஏப்ரல் 28

சொன்னது போல் பொது மக்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். இவர்களே 17 பள்ளிகளுக்கு, பூர்த்தி செய்திருக்கிறார்கள் என்று சொல்லி அனுமதி தந்துவிட்டு—

'If any of the institutions has since fulfilled the requirements of the rules' it is open to them to satisfy the authorities to that effect and seek orders of recognition. . . .'

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக நாளைக்கே இரண்டு பள்ளிக்கூடங்கள், நாங்கள் நிபந்தனைகளை எல்லாம் பூர்த்தி செய்து விட்டோம் என்று எங்களிடத்தில் வந்தால் நாங்கள் அந்த அனுமதியைத் தரலாம் என்பதுதான் இந்த, நேற்று பெஞ்ச் தந்திருக்கிற தீர்ப்பாகும், அந்த அடிப்படையிலேதான் அவர்கள் தீர்ப்பையும் தந்திருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முதலிலே தந்தது சிங்கிள் ஜட்ஜ், இரண்டாவது இப்போது வந்திருப்பது பெஞ்ச், அதைவிட இது அதிகாரத்தில் உயர்ந்தது என்று அவர்கள் சொன்னார்கள். இது, இவர்கள் இப்படி தரப்போகிறார்கள் என்று எங்களுக்கு முன்னரே தெரிந்திருந்தால் ஒருவேளை நாங்கள் தராமல் இருந்திருக்கலாம். இத்தனாம் தேதி பெஞ்ச் கூடி இதை எல்லாம் ரத்து செய்துவிடுவார்கள் என்று நாங்கள் கருதுகிற காரணத்தால் உங்களுக்கு அனுமதி இல்லை என்றுகூட நாங்கள் சொல்லியிருக்கலாம். நாங்கள் இதை எதிர்பார்க்கமுடியாது.

அதுமட்டுமல்ல, இந்த சிங்கிள் ஜட்ஜ் என்று நாம் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூறியது போல் பல சிங்கிள் ஜட்ஜ்கள், இவர்கள் இரண்டுபேர். ஆனால் அந்த 98 பள்ளிகளுக்கும் தந்தவர்கள் ஐந்தாறு பேராவது இருக்கும். அவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களைக் கூட்ட மாக உட்காரவைத்து கருத்துக் கேட்டால் அதைத்தான் சரி என்று சொல்வார்கள், அப்போது நாங்கள் அதை வைத்துக் கொண்டு, ஐந்தாறுபேர் அந்தக் கருத்தைச் சொன்னார்கள் என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. ஆனால் இப்போது இருக்கிற நிலைமை. . . .

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல் இந்த சிங்கிள் ஜட்ஜ் ஆர்டர் கொடுத்தது ஒருநாளில் அல்ல. ஒரு ஜட்ஜ் அல்ல—அதாவது in batches of cases several orders were passed by this Court in batches of cases on 4-3-1992, 30-3-1992, 10-4-1992, 29-4-1992 and 30-4-1932. . . . இப்படி வெவ்வேறு தேதிகளில் இத்தகைய ஆர்டர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில் 4.3.92 அன்று கொடுத்த ஆர்டரில் என்னென்ன கைட்லைன்ஸ் என்பதைக் குறிப்பிட்டு அதாவது

1993 ஏப்ரல் 28] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

amenities to teachers, pupils, equipment, buildings, laboratory, library, playground other facilities—இந்த ஃபெசிலிட்டிஸ் எல்லாம் இருக்குமேயானால் இந்த ஃபெசிலிட்டிஸ் ஃப்ரவைடு செய்வதாக அவர்கள் உத்தரவாதம் கொடுத்தால் ..as and when the applications are received by the Government from these institutions for grant of recognition, the Government should consider all these relevant aspects and then provide tempcrary recognition within 4 weeks therefrom pending disposal of the writ petition in which the ..validity of the aforesaid Government Order is challenged..

எனவே இதில் நாங்கள் மீண்டும் தெளிவுப்படுத்த விரும்புவது என்னவென்றால், கொள்கையில் இந்த அரசாங்கம் முரண்பாடாக நடந்திருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு குற்றம் சுமத்தினார்கள் இந்த கல்வி நிலையங்களுக்கெல்லாம் அதாவது டீச்சர்ஸ் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்க்கு அனுமதி வழங்கப் போவதில்லை என்று இந்த அரசாங்கம் சொல்லி விட்டு பின்னர் சில மாதங்களிலேயே இத்தனை கல்வி நிலையங்களுக்கும் அனுமதி வழங்கி இருக்கிறது என்பதை அதாவது நாங்கள் எங்கள் கொள்கைக்கு விரோதமாக செயல்பட்டது போல் ஒரு குற்றம் சுமத்தினார்கள்.

முற்பகல் 11–45

நான் சொல்ல விரும்புவது எங்கள் கொள்கையில் எந்த முரண்பாடும் இல்லை, எந்த வேறுபாடும் இல்லை, நாங்கள் கொடுக்க வேண்டாம் என்றுதான் இருந்தோம். கொடுக்க விரும்பவில்லை ஆனால் நீதிமன்றம் இப்படிப் பல்வேறு தேதிகளில், பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்படி ஆணையிட்டிருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள்.— "should provide tempery recognition within four weeks,,—Within four weeks.. என்று சொன்னால், அந்த 'four weeks'க்குள்ளே செய்யவில்லை என்று சொல்லவில்லை, இந்த அரசாங்கத்தின் மீது contempt of Court, Contempt of Court petition — போட்டு வந்திருக்கும். ஏற்கெனவே பலர் கோர்ட்டுக்குச் சென்று விட்டார்கள். இத்தனை நாட்கள் கழித்து கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்து ஒரு டிவிஷன் பென்ச் இப்படி உட்கார்ந்து இப்படி ஒரு தீர்ப்பு கொடுக்கும் என்று எங்களுக்கு என்ன ஆருடமா தெரியும், ஜோசியமா தெரியும் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கனவே மார்ச் 4, 1992–ம் தேதியன்று கொடுத்த ஆர்டர்படி கோர்ட் என்ன சொல்கிறது.—. as and when the pplications are received என்பதை அதாவது நாங்கள் எங்கள் கொள்கைக்கு விரோதமாக எப்பொழுதெல்லாம் இத்தகைய விண்ணப்பங்கள் வருகின்றனவோ அவற்றையெல்லாம் பரிசீலித்து நான்கு வாரங்களுக்குள் அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களே எத்தனையோ பேர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் விண்ணப்பங்கள் கொடுத்து அனுமதியும் பெற்றிருக்கிறார்கள். இந்த ஸ்ட்ரக்டவுன் செய்யப்பட்ட பள்ளிகளில் அவர்கள் பெயர்களும் அடங்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே கொடுத்து, இங்கே கொடுத்ததாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னிடத்திலே கொடுத்து ஒரு பள்ளிக்கூடத்திற்கு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை, அப்படி இல்லை. கல்வி அமைச்சர்தான், கல்வி அமைச்சர் என்பதற்குப் பதிலாக (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. it was a slip of the tongue மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்ல வந்தேன். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இன்னும் பலர் இத்தகைய கல்லூரிகள், இத்தகைய கல்வி நிலையங்கள் தங்களுக்குத் தொடங்க அனுமதி வழங்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சரிடம் கேட்டு அனுமதியும் பெற்றிருக்கிறார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதெல்லாம் எப்படி வருகிறது என்றால், நாங்கள் அனுமதி தராமல் இருந்தபோது. அனுமதி மறுத்தபோது. மைனாரிட்டி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கோர்ட்டுக்குப் போய் அனுமதி வாங்குகிறார்கள், எங்களையும் தரச்சொல்லி கோர்ட் சொல்கிறது, ஆகவே இது ஒரளவுக்கு அதிகமாகப் போகிறது என்று தெரிந்தபிறகு அரசு என்ன செய்கிறது? அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே 110 பள்ளிகளில் இந்த பயிற்சி ஆரம்பிக்கச் சொல்லி நாங்கள் உத்தரவு போடுகிறோம். இதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காக. அதற்குப் பிறகு அவர்கள் மறுபடியும் கோர்ட்டுக்கு வருகிறார்கள், ஒரு 200. 300 பேர்கள் வருகிறார்கள், அவர்கள் அந்த கோர்ட்டுக்கு வந்தபோதுதான் அந்த வழக்கு, இந்த வழக்கிலே இதிலேயும் நீதிபதிகள் அனுமதி மறுத்துவிடுகிறார்கள், அரசு செய்தது சரி என்று சொல்லி அனுமதி மறுக்கிறார்கள், அனுமதி மறுத்தவுடன் அவர்கள் மேலே போய் இருக்கிறார்கள், அனுமதி மறுத்தற்கு என்ன காரணம் என்றால் நான் முன்னே

1993 ஏப்ரல் 28] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

சொன்னதுபோல நிபந்தனை பூர்த்தி செய்யவில்லை என்பதாகும். நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் இருந்தாலும் கொடுங்கள் என்ற உயர்நீதிமன்ற உத்தரவின்படி நாங்கள் கொடுக்கிறோம். ஆனால் இந்த பெஞ்ச் என்ன சொல்கிறது என்றால் இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதவர்களுக்கு தரமுடியாது என்று சொல்லிவிட்டு ஒரு தீர்ப்பை வழங்கிவிட்ட அந்த நிலையில் பப்ளிக் லிட்டிகேஷன் பெட்டிஷன் என்று ஒருவர் போடுகிறார். எப்படி அதிலே சொல்கிறார் என்றால், இப்போது கேட்டவர்களுக்கு நிபந்தனை பூர்த்தி செய்யவில்லை என்று சொல்லி அனுமதியை இந்த கோர்ட்டு மறுத்திருக்கிறது. ஆனால் ஏற்கனவே கோர்ட்டும் அரசும் இப்படி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதவர்களுக்கு தந்திருக்கிறார்கள். அதையும் ரத்து செய்யவேண்டும் என்று ஒரு சமூக சேவகர் ஒரு பப்ளிக் லிட்டிகேஷன் பெட்டிஷனைப் போட்டு அந்த அடிப்படையிலேதான் இந்தத் தீர்ப்பை இந்த பெஞ்சானது வழங்கியிருக்கிறது, ஆகவே அப்படி வழங்குகிறபோது, நான் இங்கே ஒரு கருத்தாக சொல்கிறேன். விமர்சனமாகக் கூட இல்லை. நாம் லெஜிஸ்லேட்ஷர், எக்சிகியூட்டிவ் அல்லது ஜுடிசியரி என்பதைப் பற்றியெல்லாம் பேசுகிறபோது, நாங்கள் படித்தவரைக்கும் ஜுடிசியரி என்பது தனி நபர்களுடைய ஃபண்டமெண்டல் ரைட்ஸ்-ஐ பாதுகாப்பதற்கு இருக்கிறது, ஒரு கவர்ன்மெண்டோ அல்லது சட்டசபையோ அப்படி உரிமைகளை பாதிக்கிற விதத்திலே இருந்தால் அதையெல்லாம் திருத்தி பாதுகாப்புத் தரவேண்டியது ஒரு பெஞ்சினுடைய, ஒரு நீதிமன்றத்தினுடைய கடமை என்ற அளவுக்கு நாம் படித்திருக்கிறோமே தவிர, ஒரு கொடுத்த உரிமையை, அரசு நிர்வாகம் தவறாகக் கூட இருக்கலாம், அரசு நிர்வாக அடிப்படையிலே தந்ததை பிடுங்கவேண்டும் என்ற ஒரு தீர்ப்பை தருவது என்பதை நாம் இப்போதுதான் பார்க்கிறோம் என்று கருதுகிறேன். ஆகவே இந்த அடிப்படையிலே இவ்வளவு பள்ளிகளுக்கும் அவர்கள் ரத்து செய்துவிட்டு, 17 பள்ளிகளுக்கு தந்துவிட்டு, இந்த ரத்து செய்யப்பட்ட பள்ளிகளும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் அவர்களும் மறுபடியும் விண்ணப்பித்து அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்,

முற்பகல் 11-50

ஆக, இத்தகைய சூழ்நிலையில் ஒரு சிங்கிள் ஜட்ஜ் அல்லது 4, 5 ஜட்ஜ்கள் சொன்ன கருத்துக்களுக்கு மாறாக இரண்டு பேர் அடங்கிய பெஞ்ச் தன்னுடைய கருத்தைத் தெரிவித்து, தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் இப்போது இருக்கிற நிலைமையில் ஒரு குழப்பமான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலேயும், இதிலே ஆட்சியின்மீதும், அமைச்சர்

மீதும், அந்த வழக்கிலே சம்பந்தப்படாமல், சம்பந்தப்படுத்தப்படாத நிலையில் அமைச்சர் மீதும் களங்கம் கற்பிக்கின்ற விதத்திலே அந்தத் தீர்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே நாங்கள் உச்ச நீதிமன்றத்திலே அப்பீல் செய்யலாம் என்று கருதியிருக்கிறோம். முடிவு எடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதற்கு ராஜிநாமா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அந்த உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்து இதற்கு நீதி பெற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, இவ்வளவு தூரம் எல்லாம் பேசியதற்குப் பிறகு, மேற்கொண்டு ஒத்திவைத்து விவாதிக்க தேவையில்லை என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

The Hon. Dr. J.JAYALALITHA: I wish to make an announcement in this connection that an Appeal will be filed in the Supreme Court for the Purpose of expunging the remarks against the Minister and the officials.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்

Thiru. S.R. BALASUBRAMONIAN: He was extensively quoting form the Judgment. I am also quoting from the Judgement— ' The facts clearly show that orders were passed only on specific directions from a person in the higher echelons of the Ministerial level. Otherwise, the officials who are before us would not have been bold enough to pass such orders..'

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: இதை நான் மறுக்கவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரே சொன்னார். (குறுக்கீடு) அதற்குத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று அமைச்சரே சொன்னார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: The Judgement of the High Court is not the final word and the Supreme Court is to ultimately decide. எப்படி சரத்பவார் அவர்கள் சுப்ரீம்கோர்ட்டுக்கு சென்றிருக்கிறார்களோ அப்படி தமிழக அரசு--அவர் ராஜீநாமா செய்யவில்லை. இன்னும் பம்பாயில் அமைச்சராக இருக்கிறார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி அமைச்சர் கடைசியாகச் சொன்னார், என்மீது குற்றச்சாட்டுச் சொல்லியிருக்கிற காரணத்தால் அப்பீலுக்குப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார் (குறுக்கீடுகள்).

1993 ஏப்ரல் 28]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சத்ரபவாருக்கு எதிராக வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்பிலே, ஒரு பகுதியாக அந்த நீதிபதி என்ன சொல்லியிருக்கிறார் என்றால் 'it will not come into operation for six months.' It was not even stayed. It is said that it will not come into operation for six months. So there is no Judgement at all against Thiru Sharad Pawar. That is the deciesion there. You cannot compare this with that.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேசவே விட மாட்டீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை. அவர் இல்லையென்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் இப்படி எழுந்து நிற்பது முறையல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய மற்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எடுத்ததில் இருந்து 7, 8, 10 பேர் இப்படி எழுந்து நிற்பது முறையல்ல, (குறுக்கீடுகள்) அதற்கு நீங்கள் யார்? பி. வி. ராஜேந்திரன் யார்? (குறுக்கீடுகள்) நான் எதிர்க் கட்சித் தலைவரை பேச அழைக்கிறேன், திடீரென்று நீங்கள் எழுந்து நிற்பது இந்தச் சூழ்நிலையில் எப்படி முறையாகும்? (குறுக்கீடுகள்) இப்படி எழுந்து நிற்பது முறையல்ல. கண்டனத்திற்கு உரியது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவர், நான் விளக்கம் அளிக்க வேண்டும் என்கிறார், அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். அதற்குப் பிறகு திடீரென்று ஒவ்வொரு முறையும் 10, 20 உறுப்பினர்கள் எழுந்து நிற்பது என்பது என்ன முறை? (குறுக்கீடுகள்) என்ன முறையில் இப்பொழுது எழுந்து நிற்கிறீர்கள்? எந்த விதியின் கீழே இப்பொழுது எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) திடீரென்று 10,20 பேர் எழுந்து நிற்பது என்ன முறை? இதுமுறையல்ல. (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அந்த ஜட்ஜ்மென்டை பொறுத்தவரையில், அந்த ஜெட்ஜ்மென்டிலே ஒரு பகுதியாக அந்த நீதிபதி தெளிவாக எழுதியிருக்கிறார். எனவே, there is no Judgement at all against Thiru Sharad Pawar at the moment. But, here is a Judgement. (குறுக்கீடு) அதைத்தான் படித்துக்கொண்டிருந்தேன். இரண்டு சென்டென்ஸ்களையாவது படிப்பதற்கு அனுமதியுங்கள்.

"..the higher echelons of the Ministerial level. Otherwise, the officials who are before us would not have been bold enough to pass such orders, in utter violation of the provisions of the G.O.'s. We have on

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1993 ஏப்ரல் 28

doubt that the orders of recognition were granted only on extraneous considerations as alleged by the Petitioner, the Bench said." என்றும் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். கடைசியாக "The Government has not only fowled to do its duty but is guilty of grows abuse of powers." இவ்வளவும் சொன்னதற்குப் பிறகு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

முற்பகல் 11-55.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இதற்கெல்லாம் பதில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதாவது, அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் மைனாரிட்டி பள்ளிகள் என்பது ஒரு பிரிவு. இந்து மதத்தைச் சேர்ந்த, மெஜாரிட்டி இனத்தைச் சேர்ந்த பிரிவுகளின் பள்ளிகள் ஒரு பிரிவு. இது 24. மீதி எல்லாம் மைனாரிட்டி பள்ளிகள். மைனாரிட்டி பள்ளிகள், 93 பள்ளிகளுக்கு உயர்நீதிமன்றமே அனுமதி வழங்கி இருக்கிறது. இதைப்போல அனுமதி வழங்குங்கள் என்று ஒரு டைரக்ஷனும் தந்திருக்கிறது. அதன்படி, அவைகள் எல்லாம் அனுமதி பெற்றிருக்கின்றன. ஆகவே மீதியுள்ள இந்துக்கள் நடத்துகிற பள்ளிகளுக்கு—பூராவுமே முஸ்லீம்கள், கிருத்துவர்களாகவே ட்ரெயினிங் ஸ்கூல்ஸ் நடத்திக்கொண்டு, அவர்களே சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையில்...

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இனத் துவேஷம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எஞ்சி இருக்கிற 24 பள்ளிகளுக்கு ஏன் அனுமதித்தோம் என்பதைச் சொல்கிறார். (குறுக்கீடு) அது அவருடைய கருத்து. அது இனத் துவஷேம் அல்ல. அது அவருடைய கருத்து. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னாலேயே 2, 3 தடவை இதே சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். நான் தரச் சொன்னது, இந்துக்கள் நடத்துகிற பள்ளிகளுக்குத் தான் நான் தரச் சொன்னேன் என்றே சொல்லியிருக்கிறேன், இதே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். அதைத் தவறு என்று தாராளமாகச் சொல்லிவிட்டு, அதற்காக ராஜினாமா செய்யுங்கள் என்று கூடக் கேட்கலாம். அது வேறு விவகாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர்.

1993 ஏப்ரல் 28]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அரசாங்கம், பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். உயர்நீதிமன்றம் உடனே வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும் சொன்னார்கள். இப்போதைய தீர்ப்புக்கு அப்பீல் செய்யப்போகிறேன் என்று சொல்கிற அவர், அன்றைய தினம் அந்தத் தீர்ப்புக்கு எதிராக ஏன் அப்பீல் செய்யவில்லை? இது ஒன்று. இரண்டு, 24 பள்ளிக்கூடங்கள் என்று சொல்கிறார்கள் அல்லவா, அந்த 24 பள்ளிக்கூடங்களிலே எத்தனை மெஜாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவை, எத்தனை மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவை? மூன்று, டெம்பரரி ரெகக்னிஷன் கொடுத்தபோதே அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தாலொழிய அது நீடிக்க முடியாது என்று. அதை அரசாங்கம் பார்வையிட்டதா? ஏனென்று சொன்னால், 55 பள்ளிக்கூடங்களிலே வெறும் நேம் போர்ட்ஸ், சைன் போர்ட்ஸ் தவிர வேறு எதுவும் கிடையாது என்று தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். ஒத்தி வைத்துவிடவில்லை. ஒத்திவைத்திருந்தால் இது போன்ற விவரங்களை எல்லாம் கேட்கலாம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 59 பள்ளிகளைப் பொறுத்தமட்டில் அவை பழைய பள்ளிக்கூடங்கள். அவர்களுக்கு பயிற்சிப் பள்ளி நடத்த அனுமதி தரவில்லை. பரீட்சை எழுதுவதற்கு மட்டும்தான், அந்த ஓராண்டுக்கு மட்டும்தான் நாம் அந்த 59 பள்ளிகளுக்கு அனுமதி தந்திருக்கிறோம். அடுத்து என்ன கேட்டீர்கள்?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : 24 பள்ளிகளிலே எவ்வளவு மெஜாரிட்டி, எவ்வளவு மைனாரிட்டி?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : 24 மெஜாரிட்டி இனத்தைச் சார்ந்தவைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப்பின், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இசைவு மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இதில் பேச முடியாது. (குறுக்கீடு) நான் இசைவு மறுத்ததற்குப் பிறகு பேச முடியாது. பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவு அமைச்ச

ரவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை வெளியிட அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிடுவார்கள். (குறுக்கீடு) இது சரியல்ல நான் மறுத்ததற்குப் பிறகு இதில் பேச முடியாது. (குறுக்கீடு) நான் இசைவு மறுத்ததற்குப் பிறகு இதன்மீது பேச முடியாது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இரண்டு மூனறு முறை குறுக்கிட்டு விளக்கம் கேட்டீர்கள். (குறுக்கீடு) விளக்கம் கேட்டதற்குப் பிறகு, அதற்கு விளக்கம் தந்ததற்குப் பிறகு, அதை நான முடிவு செய்ததற்குப் பிறகு, இதிலே அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இதிலே அனுமதிக்க முடியாது .(குறுக்கீடு) மாண்புமிகு உணவு அமைச்சர். (குறுக்கீடு) இது முறையல்ல. நான் இசைவு மறுத்ததற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப் பிடிவாதம் செய்வது சரியல்ல. (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் விளக்கமாக உங்களுடைய விளக்கங்களை எல்லாம் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் விளக்கம் சொன்ன பிறகு, இந்தப் பிரச்சினையில் எந்த வகையிலும் திரும்பப் பேச முடியாது. மாண்புமிகு உணவு அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16–12–1992 முதல் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் செய்வது சரியல்ல என்றே திரும்பத் திரும்ப பேரவைத் தலைவர்மீதே குற்றம் சுமத்திக்கொண்டு இருக்கக்கூடாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் மீது "Member should not cast asperisons." என்று இருக்கிறது. (குறுக்கீடு). அதற்குப் பிறகும் நீங்கள் திரும்பத் திரும்ப இங்கே பேரவைத் தலைவருக்கு எதிராக முறைகேடாக இந்த மாதிரிப் பேசிவிட்டு பிறர் பேசுகிறார்கள் என்று வெளியிலே போய் சொல்வது நல்லதல்ல. (குறுக்கீடுகள்) பேரவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு செய்ததற்குப் பிறகு, அது அவசியம் என்று நீங்கள் கருதலாம். கல்வி அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்புக்கு மீறி நீங்கள் அது அவசியம்தான் என்று சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல. மாண்புமிகு உணவு அமைச்சர் (குறுக்கீடுகள்).

நண்பகல் 12.00

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 16—12—1992 முதல் 30—6—1993 வரை, காவேரி டெல்டா பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் நடைபெற அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சம்பா கொள்முதல் இலக்கு (குறுக்கீடுகள்) 12 இலட்சம் டன் நெல் என்று அரசு ஆணையில் உள்ளது. அந்த இலக்கு 12—4—1993-லேயே எய்தப்பட்டுவிட்டது. (கூச்சல்-குழப்பம்).

1993 ஏப்ரல் 28]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இது முறையல்ல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சியினர் இப்படி பேரவைத் தலைவருடைய தீர்ப்புக்குப் பின்னரும், இதை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அந்தப் பிரச்சினைக்கு முடிவு சொன்ன பிறகும், எதிர்க்கட்சித் தலைவர் தானும் எழுந்து நின்று தன்னுடைய கட்சியினரையும் இவ்வாறு எழுந்து நிற்கச் செய்துகொண்டிருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். இது முறையல்ல. (குறுக்கீடுகள்) எந்த விதியின்கீழ் இப்படி இத்தனை பேர் எழுந்து நிற்கிறீர்கள்? நான் அதை எடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னதற்குப் பிறகு, அதிலே பேசுவதற்கு எங்கே இடம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) எங்கே இடம் இருக்கிறது? உங்களுக்கு வாய்ப்பு அளிக்காமல் இல்லை, கல்வி அமைச்சர் விளக்கம் சொன்னதற்குப் பிறகும் கூட நான் அப்போதே தீர்ப்பு வழங்கியிருக்கலாம், அதற்குப் பின்னரும் நீங்கள் விளக்கம் கேட்க அனுமதித்து, அதற்குப் பதிலையும் கல்வி அமைச்சர் சொன்னதற்குப் பிறகும், இன்னும் திரும்பத் திரும்ப விளக்கம் கேட்டுக்கொண்டிருப்பதென்றால், நான் எப்படி அனுமதி அளிக்க முடியும்? இதற்கு நான் ஒத்திவைத்தே இருக்கலாம். (குறுக்கீடுகள்) இல்லை. ஒத்திவைப்பதற்கு மறுத்ததற்குப் பிறகு இந்த அவையிலே விவாதிக்க முடியாது என்று சொன்னதற்குப் பிறகு, வேண்டுமென்றே இதர அலுவல்களை குந்தகப்படுத்தவேண்டுமென்ற ஒரே முடிவிலேதான் நீங்கள் செயல்படுவதாக இது அமைகிறது. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. பேரவையின் முன்னவர் அவர்கள்தான் கருத்துச் சொல்ல வேண்டும். உங்கள் கருத்தைத்தான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) நான் தீர்ப்பை வழங்கியதற்குப் பின்னரும் இவ்வாறு முரண்பாடாக நடந்து கொண்டிருப்பது சரியல்ல. (கூச்சல்-குழப்பம்) இது சரியல்ல. இது சரியல்ல. பாராளுமன்ற மரபுகளுக்கு முற்றிலும் முரணானது. பாராளுமன்ற மரபுகளுக்கு முற்றிலுமாக முரணாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) இது சரியல்ல. கல்வியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு வரலாற்று முக்கியமான செய்தி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து வேண்டாம். ஒத்திவைப்பு சம்பந்தமாக வேண்டாம். வேறு எந்தப் பிரச்சினையில் வேண்டுமானாலும் சொல்லலாம். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையில் வேண்டாம். நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்ததற்குப் பிறகு அந்தப் பிரச்சினை மீது அவர்களுக்கு எந்தக் கருத்தும் சொல்ல எந்த அளவுக்கு அனுமதி இல்லையோ அதேபோல அமைச்சர்களுக்கும் அதிலே கருத்துச்

சொல்ல வாய்ப்பு இல்லை. நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவை மறுத்ததற்குப் பிறகு மற்ற உறுப்பினர்களுக்கு அனுமதி இல்லாதபோது அமைச்சர்களுக்கும்கூட அந்தப் பிரச்சினையில் கருத்துக்கள் சொல்ல அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உட்கார வேண்டும். தயவுசெய்து அனைவரும் உட்காரவேண்டும். வருவாய்த் துறை அமைச்சர். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி எதுவும் சொல்லப்போவது இல்லை. ஆனால், எதிர்க்கட்சிகள்—தமிழக சட்டமன்றத்தில் இதற்கு முன்னாலே இருந்த எதிர்க் கட்சிகள் எல்லாம் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைப்பற்றி சிலவற்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். (கூச்சல்-குழப்பம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் அமைதியாக இருந்து (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் உட்கார வேண்டும். தயவு செய்து உட்காரவேண்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அத்தனைபேரும் அமைதியாக இருக்கக்கேட்டுக்கொள்கிறேன். இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் விதிமுறைகளுக்குப் புறம்பாகவே, இந்த அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற அளவிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். தாங்கள் எவ்வளவோ சொல்லிவிட்டீர்கள். ஆகவே, விதிமுறைகளின்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்து அவையைத் தொடர்ந்து அமைதியாக நடத்த ஆவன செய்யும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவரும், அவரைச் சார்ந்த உறுப்பினர்களும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன், (குறுக்கீடுகள்) இது முறையல்ல, இந்த அளவுக்கு எழுந்து நின்று கொண்டிருப்பது முறையல்ல, (கூச்சல்—குழப்பம்) இது முறையல்ல, திரு, ஞானசேகரன் கோஷம் எழுப்புவது முறையல்ல, (கூச்சல்-குழப்பம்) எதிர்கட்சித் தலைவர் இது முறையல்ல, தயவுசெய்து உட்கார வேண்டும், அல்லது அவையை விட்டு வெளியேற வேண்டும், அவையை விட்டு வெளியேற வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் திரு, எஸ், ஆர், பாலசுப்ரமணியன் அவையை விட்டு வெளியேற வேண்டும், அவையை விட்டு வெளியேற வேண்டும் என்று சொன்னதற்குப் பிறகு இந்தியப் பாராளுமன்ற சரித்திரத்தில், எந்தச் சட்ட மன்றத்திலும். எதிர்க்கட்சித் தலைவரை வெளியேறுமாறு சொன்னபோது, வெளியேற மறுத்தது எந்தச் சட்டமன்றத்

1993 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

திலும் இல்லை. (குறுக்கீடுகள்) எந்தச் சட்டமன்றத்திலும் இப்படி இல்லை, அண்மையில் கூட ஆந்திரா சட்டமன்றத்தில் உறுப்பினர்களை வெளியேற்றியபோது. மற்ற உறுப்பினர்களை எல்லாம் அவை காவலர்களை வைத்து வெளியேற்றினார்கள், (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரான என்.டி, ராமாராவ் மட்டும் தானே வெளியேறினார். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் திரு, எஸ், ஆர், பாலசுப்ரமணியன் அவையை விட்டு வெளியேற வேண்டும், (கூச்சல்-குழப்பம்) திரு, எஸ், ஆர், பாலசுப்ரமணியன் அவர்களையும். தற்போது அவையில் முறை தவறி நின்றுகொண்டு பேரவையின் அலுவல்களைத் தடுத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் அவைக் காவலர்கள் வெளியேற்ற கேட்டுக் கொள்கிறேன், (கூச்சல்-குழப்பம்),

(எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும். அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்),

திரு, ஜானகிராமன். திரு, ஞானசேகரன். திரு, பீட்டர் அல்போன்ஸ். திரு, புரட்சிமணி ஆகியோர் இங்கே கோஷம் எழுப்பியது முழுக்க முழுக்க விதிமுறைகளுக்கு மாறான செயல். கண்டனத்திற்கு உரியது, அவையின் விதிகளின்படி இல்லாமல் அனைத்து முறையிலும் கண்டனத்திற்குரிய வகையில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் நடந்து கொண்டிருக்கிறார்கள், இது முழுக்க முழுக்கக் கண்டனத்திற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு, வே, தம்புசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, தம்புசாமி உட்கார வேண்டும், இது வேறு பிரச்சினை,

4, விதி 110-ன் கீழ் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை,

காவிரி டெல்டாப் பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோக நெல் கொள்முதல் 1—5—1993 முதல் நிறுத்தப்படுவது குறித்தும் நெல், அரிசி ஆகியவற்றைத் தடையின்றி பிற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வது குறித்தும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு, ஜி, விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16—12—1992 முதல் 30—6—1993 வரை காவிரி டெல்டா பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் நடைபெற அரசு ஆணை பிறப்பித்துள்ளது, (குறுக்கீடு)

திலும் இல்லை. (குறுக்கீடுகள்) எந்தச் சட்டமன்றத்திலும் இப்படி இல்லை, அண்மையில் கூட ஆந்திரா சட்டமன்றத்தில் உறுப்பினர்களை வெளியேற்றியபோது. மற்ற உறுப்பினர்களை எல்லாம் அவை காலவர்களை வைத்து வெளியேற்றினார்கள், (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரான என்.டி. ராமாராவ் மட்டும் தானே வெளியேறினார். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவையை விட்டு வெளியேற வேண்டும், (கூச்சல்-குழப்பம்) திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களையும். தற்போது அவையில் முறை தவறி நின்றுகொண்டு பேரவையின் அலுவல்களைத் தடுத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களையும் அவைக் காவலர்கள் வெளியேற்ற கேட்டுக் கொள்கிறேன், (கூச்சல்-குழப்பம்),

(எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும். அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்),

திரு. ஜானகிராமன். திரு. ஞானசேகரன். திரு. பீட்டர் அல்போன்ஸ். திரு. புரட்சிமணி ஆகியோர் இங்கே கோஷம் எழுப்பியது முழுக்க முழுக்க விதிமுறைகளுக்கு மாறான செயல். கண்டனத்திற்கு உரியது, அவையின் விதிகளின்படி இல்லாமல் அனைத்து முறையிலும் கண்டனத்திற்குரிய வகையில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் இந்தப் பேரவையில் நடந்து கொண்டிருக்கிறார்கள், இது முழுக்க முழுக்கக் கண்டனத்திற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி உட்கார வேண்டும். இது வேறு பிரச்சினை,

4. விதி 110-ன் கீழ் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை,

காவிரி டெல்டாப் பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோக நெல் கொள்முதல் 1—5—1993 முதல் நிறுத்தப்படுவது குறித்தும் நெல், அரிசி ஆகியவற்றைத் தடையின்றி பிற மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வது குறித்தும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16—12—1992 முதல் 30—6—1993 வரை காவிரி டெல்டா பகுதியில் சம்பா பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் நடைபெற அரசு ஆணை பிறப்பித்துள்ளது, (குறுக்கீடு)

சம்பா கொள்முதல் இலக்கு 12 இலட்சம் டன் நெல் என்று அரசு நிர்ணயித்துள்ளது, இந்த இலக்கு 12—4—1993 அன்று எய்தப்பட்டுவிட்டது,

(திரு. வே, தம்புசாமி மற்றும் திரு, ஜி, பழனிசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்).(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, இளம்வழுதி உட்கார வேண்டும், (குறுக்கீடு) இது வேறு பிரச்சினை, விதி 110-இன்கீழ் அமைச்சரின் அறிக்கை, இதிலே குறுக்கிடக் கூடாது,

மாண்புமிகு திரு, ஜி, விசுவநாதன்: 26—4—1993 அன்றைய நிலவரப்படி 12 இலட்சத்து 20 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விட்டது, (குறுக்கீடு),

(திரு. இளம்வழுதி அவையிலிருந்து வெளியேறினார்)

காவிரி டெல்டா பகுதியில் அறுவடையும் அநேகமாக முடிந்து விட்டது, தற்போது அரசின் கையிருப்பில் உள்ள நெல்லும் அரிசியும். மைய அரசு மாதந்தோறும் தனது தொகுப்பிலிருந்து வழங்கும் அரிசியும் பொது விநியோகத் திட்டத்தைத்தொடர்ந்து செயல்படுத்தத் தேவையான அளவுக்கு உள்ளது, இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு காவிரி டெல்டா பகுதியில் அரசு ஏகபோகக் கொள்முதலை மேலும் தொடர்வதைக் குறித்து பரிசீலித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் லாபியில் இருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்திக் கொண்டிருக்கக்கூடாது. வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களைக் காவலர்கள் அங்கேயிருந்தும் வெளியேற்றுவார்கள்.

நண்பகல் 12.10

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: தற்சமயம் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் தாராளமயமாக்கப்பட்ட—லிபரலைசேஷன்—கொள்கை அடிப்படையில் தேவையற்ற கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு. மாநிலம் முழுவதும் தடையின்றி சீராக உணவு தானியங்கள் கொண்டு செல்லப்பட்டால் வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும், குறைந்த விலையிலும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சென்ற ஆண்டில் வணிக லெவியை நிறுத்தி வைத்ததன் விளைவாக இத்தகைய சூழ்நிலை ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது தற்போது காவிரி டெல்டாப்பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளில் எந்தவித கட்டுப்பாடுமின்றி நெல், அரிசி கொண்டு செல்லலாம். காவிரி டெல்டா பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளையும் நீக்கி விட்டால் மாநிலம் முழுவதும் எவ்வித கட்டுப்பாடுமின்றி நெல், அரிசி கொண்டு போக முடியும். இதனால் வெளிச் சந்தையில் அதிகமான அளவுக்கு அரிசி கிடைக்கவும், விலை குறையவும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, அரசு காவிரி டெல்டாப் பகுதியில் தற்சமயமுள்ள ஏகபோக கொள்முதலை 1-3-1993 முதல் நிறுத்தித்

கொள்ள முடிவு செய்துள்ளது. இதன்பின் விவசாயிகள் அவர்கள் கைவசம் நெல் இருந்தால், அதை வெளிச் சந்தையில் தங்கு தடையின்றி விற்றுக்கொள்ளலாம். எனினும் விவசாயிகளுக்கு, நல்ல விலை கிடைக்கும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் காவிரி டெல்டா பகுதியில் உள்ள தனது கிட்டங்கிகளில் நெல்லை கொள்முதல் விலைக்கு வாங்கிக் கொள்ளும். அரசின் இந்த முடிவினால், பொதுமக்களுக்கு வெளிச் சந்தையில் தாராளமாகவும், குறைந்த விலையிலும் அரிசி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

5. பேரவைப் பணிகளினின்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தற்காலிகமாக நீக்கிவைக்கப்பெறுதல்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இன்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று காங்கிரசைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் விரும்பியபோது, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம் இன்று என்று பெருந்தன்மையோடு தாங்கள் கூறினீர்கள். பெருந்தன்மையோடு கூறினீர்கள் என்பது மட்டுமல்ல, முழு விளக்கத்தைத் தருவதற்கும் இடம் தந்தீர்கள்.

அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் பரிதி இளம் வழுதி அவர்களுக்கு நீங்கள் வாய்ப்புத் தந்தீர்கள். அவர்கள் முழு விளக்கத்தையும் தரும் போது, ஆளும் கட்சியைச் சேர்ந்த யாரும் குறுக்கீடு செய்யவே இல்லை. அவர்கள் முழுவதும் ஒத்திவைப்பதற்கான காரணத்தை தான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறார்களே தவிர, தீர்ப்பு வழங்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அந்தக் காரணங்களைச் சொல்லாமலேயே அவர்கள் தீர்ப்பு வழங்கி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் ராஜினாமா செய்யவேண்டும், இந்த அமைச்சரவையும் ராஜினாமா செய்யவேண்டும் என்று அவர்களே முடிவு கட்டி, அவர்களே தீர்ப்பையும் வழங்குவதற்குக் கூட நீங்கள் இடம் தந்தீர்கள். அதற்குத் தக்க பதில் சொல்கிற வகையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விரிவாகவும் சொன்னார்கள், தெளிவாகவும் சொன்னார்கள். ஏற்பட்டு இருக்கிற நிலைமைகள் என்ன என்பதையும் சொன்னார்கள். ஏன் இப்படிப்பட்ட கட்டம் வந்தது என்பதையும் சொன்னார்கள். அரசாங்கம் திட்டவட்டமாகத் தெளிவாக இருந்த முடிவை மாற்றியதே நீதிமன்றம்தான் என்பதையும் சொன்னார்கள். நீதிமன்றம் மாற்றியதுமட்டுமல்லாமல், நீதிமன்றத்திலுடைய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலே இந்த அரசு இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே செய்து கொண்டு வருகிறபோதுதான்,

கொள்ள முடிவு செய்துள்ளது. இதன்பின் விவசாயிகள் அவர்கள் கைவசம் நெல் இருந்தால், அதை வெளிச் சந்தையில் தங்கு தடையின்றி விற்றுக்கொள்ளலாம். எனினும் விவசாயிகளுக்கு, நல்ல விலை கிடைக்கும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் காவிரி டெல்டா பகுதியில் உள்ள தனது கிட்டங்கிகளில் நெல்லை கொள்முதல் விலைக்கு வாங்கிக் கொள்ளும். அரசின் இந்த முடிவினால், பொதுமக்களுக்கு வெளிச் சந்தையில் தாராளமாகவும், குறைந்த விலையிலும் அரிசி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

5. பேரவைப் பணிகளினின்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தற்காலிகமாக நீக்கிவைக்கப்பெறுதல்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இன்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று காங்கிரசைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் விரும்பியபோது, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம் இன்று என்று பெருந்தன்மையோடு தாங்கள் கூறினீர்கள். பெருந்தன்மையோடு கூறினீர்கள் என்பது மட்டுமல்ல, முழு விளக்கத்தைத் தருவதற்கும் இடம் தந்தீர்கள்.

அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் பரிதி இளம் வழுதி அவர்களுக்கு நீங்கள் வாய்ப்புத் தந்தீர்கள். அவர்கள் முழு விளக்கத்தையும் தரும் போது, ஆளும் கட்சியைச் சேர்ந்த யாரும் குறுக்கீடு செய்யவே இல்லை. அவர்கள் முழுவதும் ஒத்திவைப்பதற்கான காரணத்தை தான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறார்களே தவிர, தீர்ப்பு வழங்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அந்தக் காரணங்களைச் சொல்லாமலேயே அவர்கள் தீர்ப்பு வழங்கி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் ராஜினாமா செய்யவேண்டும், இந்த அமைச்சரவையும் ராஜினாமா செய்யவேண்டும் என்று அவர்களே முடிவு கட்டி, அவர்களே தீர்ப்பையும் வழங்குவதற்குக் கூட நீங்கள் இடம் தந்தீர்கள். அதற்குத் தக்க பதில் சொல்கிற வகையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விரிவாகவும் சொன்னார்கள், தெளிவாகவும் சொன்னார்கள். ஏற்பட்டு இருக்கிற நிலைமைகள் என்ன என்பதையும் சொன்னார்கள். ஏன் இப்படிப்பட்ட கட்டம் வந்தது என்பதையும் சொன்னார்கள். அரசாங்கம் திட்டவட்டமாகத் தெளிவாக இருந்த முடிவை மாற்றியதே நீதிமன்றம்தான் என்பதையும் சொன்னார்கள். நீதிமன்றம் மாற்றியதுமட்டுமல்லாமல், நீதிமன்றத்திலுடைய ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலே இந்த அரசு இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே செய்து கொண்டு வருகிறபோதுதான்,

இந்த அவைக்கே ஏற்கனெவே அறிவிக்காமல் எதையும் செய்ய வில்லை. ஆகவே, சிறுபான்மையோருக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை வைப்பதற்கு அனுமதி வழங்குகின்றபோது, நீதி மன்றமே வந்து அதற்கு ஆணையிடுகின்றபோது, பெரும்பான்மை யோருக்கு வழங்குவதை நியாயம் என்று கருதி நான் வழங்கினேன் என்று ஏற்கனவே இந்த அவையிலே பல தடவை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வளவு தெரிவித்ததற்குப் பிறகும் தாங்கள் இருசாராரையும் கேட்டு, அதுமட்டுமல்லாமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கமாக திரும்பவும் இப்படிப்பட்ட பிரச்சினையில் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்ப தில்லை. பல முறை அவர்களுக்கு, எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களும் விளக்கம் தந்ததற்குப் பிறகும், மறுபடியும் வாய்ப்புத் தந்தீர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு. அதற் குப் பிறகும், அவர்களுக்கு வாய்ப்புத் தந்ததற்குப் பிறகும் தாங்கள் ஒரு தீர்ப்பை அளித்தீர்கள். ஆகவே, இந்த அவையை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேண் டிய அவசியம் ஏற்படவில்லை என்று தீர்ப்பளித்தீர்கள். தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு, திட்டவட்டமாக தெளிவாக விதிமுறை களிலே இடம் இருக்கிறது அதற்குப் பிறகு அது பற்றி எதையும் எழுப்பக் கூடாது என்று. பொறுப்பு வாய்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இதை எழுப்பி, அதற்கு மேலும் பேசவேண்டும் என்று, தன்னுடைய கருத்தை நிலை நாட்ட விரும்புகிறார்களே தவிர, இந்த அவையினுடைய பொறுப்பிலே இருக்கிற தாங்கள் அவைத் தலைவராக இருந்து நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு மதிப்பு அளிக்காமல், தன் னுடைய கருத்தை நிலைநாட்ட வேண்டும் எனறு பிடிவாதமாக இருந்தது மட்டுமல்லாமல், தங்களுடைய ஆணையைக் கேட் காமல், உட்காரச் சொல்லியும், பல தடவை உட்காரச் சொல்லி யும் அவர்களும் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் உட்கார மறுத் திருக்கிறார்கள் என்று சொன்னால், ஜனநாயகத்திற்கும் இந்த அவைக்கும் இந்த அவையினுடைய சட்டதிட்டங்களுக்கும் எவ்வளவு மதிப்பு அளிக்கின்ற அளவுக்கு இன்றைக்கு எதிர்க் கட்சியிலே உள்ள காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறிந்துகொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாக இருக்கிறது.

அதுகூட வேடிக்கையல்ல, ஆனால், அவர்கள் எல்லாம் செய்தது சரிதான், ஒத்திவைப்புப் பிரச்சினையைப் பொறுத்த வரை தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு பேசலாம், எழுந்து நிற்கலாம் கூச்சல் போடலாம், எல்லோரும் எழுந்து நிற்கலாம் என்பதை

1993 *ஏப்ரல் 28]* *[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]*

கம்யூனிஸ்ட் கட்சியினரும் ஆதரிக்கிறார்களே என்பதுதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. இது முழுவதையும் ஆதரித்து முழுக்க முழுக்க உறுதுணையாக இருந்து ஆதரவாக இருந்து போய் இருக்கிறார்கள் என்று சொன்னால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் நடந்து கொண்ட விதம் முழுவதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரிக்கிற அளவுக்கு இருக்கிறார்களே என்பதையும், அந்த நிலைக்கு அவர்களும் சேர்ந்து இந்த அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் நாடு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காங்கிரஸ் கட்சியினரும் மற்ற எதிர்க்கட்சியினரும் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டு வர விரும்பிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே எடுத்துக் கொள்ளவே இல்லை என்று சொன்னால், அவர்கள் இங்கே எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும், கூச்சல் போடுவதற்கும், ரகளை செய்வதற்கும் அல்லது வெளிநடப்புச் செய்வதற்கும் ஒரு காரணம் இருந்திருக்கும்.

பிற்பகல் 12-15

ஆனால் மிக உயர்ந்த ஜனநாயக மரபுகளைக் கடைப்பிடித்து தாங்கள் அதை எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கினீர்கள். அவர்களுக்குப் பேச வாய்ப்பு வழங்கினீர்கள். அமைச்சர் அவர்களின் விரிவான பதில் உரைக்கு பின்னரும், விளக்கத்திற்கு பின்னரும் மீண்டும், பேச அனுமதித்தீர்கள். ஆக, இதில் ஏறக்குறைய ஒரு மணிநேரம் இந்த அவையின் நேரம் இதற்காகவே செலவிடப்பட்டது. எதற்காக இதை நான் விளக்கிச் சொல்லுகிறேன் என்று சொன்னால், அவர்கள் வெளியிலே சென்று, அரசாங்கத்தின் மீது ஒரு பழியைச் சுமத்த வேண்டும் என்று எண்ணிய நேரத்தில், அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டைச் சொல்ல வந்தால் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஜனநாயக முறைப்படி எங்களைப் பேச அனுமதிக்கவில்லை. நாங்கள் பேச வேண்டும் என்று கேட்டால் நேரம் கொடுக்கவில்லை. வாய்ப்பு கொடுக்கவில்லை. எங்களைப் பேசவிடாமல் அவையை விட்டே வெளியேற்றி விட்டார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் சொல்வார்கள். இந்தக் கூட்டத்தொடர் தொடங்கிய நாள் முதல் இத்தகைய நிகழ்ச்சிகளைத்தான் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே இங்கே இருக்கிற பத்திரிகை உலக நண்பர்களும் நடந்தவற்றையெல்லாம் பார்த்தார்கள். தாங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்ப அனுமதித்து, அதற்கு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு பிறகு வழக்கமாக எந்த சட்டமன்றத்திலேயும், அமைச்சரின் விளக்

கத்தைக் கேட்ட பிறகு, பேரவைத் தலைவர் அவையின் அலுவலை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தீர்ப்பு கூறிய பின்னர் யாரும் இது பற்றிப் பேசுவது இல்லை. ஆனால், அமைச்சரின் விளக்கத்திற்கு பின்னரும் கூடத் தாங்கள் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவருக்கு பேச வாய்ப்பு அளித்தீர்கள். அதுவும் பொதுவாக எந்த சட்டமன்றத்திலேயும் நடைபெறாத ஒன்று. ஆகவே எப்படியாவது இந்த அவையின் அலுவல்களை நல்ல முறையில்சுமூகமான முறையில் அமைதியான முறையில்கொண்டுச் செல்ல வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களும் நாங்களும் விரும்புகிறோம். ஆனால், எக்காரணத்தை முன்னிட்டாவது எப்படியும் இந்த அவையின் அலுவல்களைச் சுமூகமாக, அமைதியாக நடக்கவிடக் கூடாது என்று எதிர்க்கட்சியினர் கங்கணங் கட்டிக் கொண்டு செயல்படுகிறார்கள். நேற்றைய தினம் எந்தப் பிரச்சினையும் கிடைக்கவில்லை. ஓரளவிற்கு அமைதியாகவே நேற்றையதினம் பேரைவயின் அலுவல்கள் நடந்தேறி விட்டன எனவே அதில் அவர்களுக்கு வருத்தம் போல் இருக்கிறது, எனவே தான் இன்று ஒரு மணி நேரம் இந்தப் பிரச்சினை மீது பேச அனுமதித்த பின்னர் கூட, தேவையில்லாமல் அவர்கள் இங்கே கூச்சல் போட்டு, குழப்பம் விளைவித்து, அவையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்து தாங்கள் அவர்களை வெளியேற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏர்படுத்திவிட்டார்கள் என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கண்கூடாக எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தோம். நேற்று கூட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருக்கும், காங்கிரஸ் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நடந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் பார்த்தேன். கேட்டேன் முழுவதும் வருவாய்த் துறை அமைச்சருடைய ஸ்டேட்மென்ட்டை எல்லாம் இருட்டடிப்பு செய்துவிட்டு, மாண்புமிகு குமரி அனந்தனுடைய ஸ்டேட்மென்ட்டை மட்டும் சொல்லுகிறார்கள், தொலைக்காட்சியில். ரேடியோவிலும் இதே நிலை தான். இன்று கூட இதே நிலைதான் நீடிக்கும். இன்று மாலை நீங்கள் பார்த்தீர்களேயானால் இதே நிலை தான் வரும். முதலமைச்சருடைய தெளிவான விளக்கத்தை தள்ளி விட்டு, இவர்கள் ஏதோ வீராதி வீரர்களைப் போல் எண்ணி அதைத்தான் தொலைக்காட்சியிலே சொல்லுவார்கள். இதற்கு ஏதாவது ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொலைக்காட்சி, வானொலியில் இதேபோலத்தான் இந்தப் பேரவை தொடங்கிய நாளிலிருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே திட்டமிட்டு பேரவையினுடைய நடவடிக்கைகளைத் திசை திருப்புகிற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது பற்றி இரண்டு உரிமை மீறல் பிரச்சினைகள் கூட வந்திருக்கின்றன. அதற்கு அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம் கூட பேரவையினுடைய இறையாண்மையை மேலாண்மையை ஏற்றுக் கொண்டு கொடுப்பதாகத் தெரியவில்லை. எனவே அதையெல்லாம் நான் உரிமை மீறல் பிரச்சினையாக எப்படி எடுப்பது என்று கருதிக் கொண்டிருக்கிறேன். எனவே அவர்கள் தொடர்ந்து இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் இதைத்தான் செய்வார்கள்.

இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியினர் இந்தப் பிரச்சினையிலே எழுப்பியதைப் பற்றி ஒரு விளக்கத்தைப் பேரவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை. காலையில் இப்பிரச்சினை பற்றி எழுப்ப வேண்டும் என்று என்னுடைய அறையிலே வந்து அவர்களுடைய அறிவிப்பைக் கொடுத்தார்கள். இன்றைய தினம் பேரவையின் நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது அப்பிரோப்பிரியேஷன் பில்—நடைபெறுகிற விவாதத்தில் எல்லாப் பிரச்சினைகளையும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பொதுவாக இந்த அப்பிரோபிரியேஷன் பில் எடுத்துக் கொள்கிற நாளில், இது போன்ற அலுவல்களை, பேரவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று வரக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக் கொள்வது இல்லை. இதே பிரச்சினையை நீங்கள் இந்தப் பொது விவாதத்தில் பேசலாம் என்று சொல்லி இதுவரையிலேயும் மறுக்கப்பட்டுத்தான் வந்திருக்கிறது.

பிற்பகல் 12-20

இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவரும், ஏனைய உறுப்பினர்களும் அதை வற்புறுத்திக் கேட்டார்கள் என்பதற்காக நான் அந்தப் பிரச்சினையை எழுப்பவும் அனுமதித்தேன். எழுப்ப அனுமதித்து, எதிர்க் கட்சித் தலைவரை விரிவாகவும், பேச அனுமதித்தேன். அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல ஆரம்பித்த முதல் வாக்கியத்திலேயே குறுக்கீடு செய்ய ஆரம்பித்தார்கள். அதைத்தான் நீங்கள் கவனிக்க வேண்டும். அவர்கள் தெரிவித்ததே ஆந்திராவில் முதலமைச்சர் இராஜினாமா செய்த பிரச்சினையை இவர்களே வாதத்திலே கிளப்பிவிட்டு அதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல ஆரம்பித்தவுடன் குறுக்கிட்டார்கள். அப்படிக் குறுக்கிட்டதிலேயிருந்து நான் அப்போதிருந்தே சொல்லிக்கொண்டே இருந்தேன். எப்படிநீங்கள் பேசுகின்றபோது மற்ற உறுப்பினர்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எல்லாம் அமைதியாக இருந்தார்களா அதைப்போல கல்வி அமைச்சர் பதில் சொல்லவும் நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னேன். காங்கிரஸ் உறுப்பினர்கள் எத்தனை பேர், முறைகேடாக விதி முறைகளுக்குப் புறம்பாக கல்வி அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிற போது எத்தனை முறை எழுந்தார்கள் என்பதை அப்போதே குறிப்பிட்டுச் சொன்னேன். பிறகு பி. வி. இராஜேந்திரன் என்கிற உறுப்பினர் அத்துமீறி சத்தமிட்டதையும் கூட வன்மையாகக் கண்டித்தேன். அதையெல்லாம் கூட எதிர்க்கட்சித் தலைவர் கண்டு கொள்ளவே இல்லை. சரி, தவறுதான் என்னுடைய உறுப்பினர்கள் இனி அப்படி நடக்க மாட்டார்கள் என்று சொல்லவில்லை. அதன் பின்னர் ஒவ்வொரு முறையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கும், கல்வி அமைச்சர் தெரிவித்த கருத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மறுப்புரைகள் தெரிவிக்க வேண்டும் என்று எழுந்தபோதெல்லாம் அவர் அனுமதிக்கப்பட்டு இடையிடையேயும் மறுப்புத் தெரிவித்தார். மறுப்புத் தெரிவித்ததற்குப் பிறகு கல்வி அமைச்சர் தன்னுடைய விளக்கத்தை முடித்ததற்குப் பிறகு இது வரையிலேயும் பேரவையினுடைய வரலாற்றில் பேரவைத் தலைவர் 'இந்த விளக்கத்திற்குப் பிறகு பேரவை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை' என்று முடிவு கூறியதாகத்தான் இருக்கிறது. அல்லது வேறு இந்த விவாதத்திற்கு மேற்கொண்டு சில விவரங்களை எல்லாம் கேட்க வேண்டியிருக்கிறது, விவாதம் தேவைதான் என்று பேரவைத் தலைவர் முடிவு செய்தால் பேரவையை ஒத்தி வைக்கின்ற தீர்மானத்தை முன்மொழியச் சொல்லலாம். அந்த வகையில் கல்வி அமைச்சர் விளக்கத்திற்குப் பிறகும் எதிர்க் கட்சித் தலைவர் விளக்கம் கேட்க வேண்டும் என்று இரண்டொரு விளக்கத்தைக் கேட்டார் அந்த 24-ம் பெரும்பான்மையினருக்கே கொடுக்கப்பட்டதா என்றும் அதை யொட்டிய சில விளக்கங்களையும் கேட்டார். அப்போதே முடிந்துவிடுகிறது. இதை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இந்த 2, 3 விளக்கத்திலேதான் இருக்கிறது என்று அதையும் அவரே கேட்டு முடித்துவிட்டார். எனவே மேற்கொண்டு இதை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது, திரும்ப எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுத்த அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர் கேட்ட விளக்கத்திலேயிருந்து முடிந்தே விடுகிறது. கல்வி அமைச்சர் சொன்ன விளக்கத்தினாலே மட்டுமே கூட ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் முடிவு எடுக்க வேண்டிய அளவுக்கு நிலைமை இருந்தாலும் கூட, எதிர்க்கட்சித் தலைவர் திரும்பவும் வாய்ப்பை எடுத்துக் கொண்டு ஒத்திவைத்ததைப் போலவே கருதி, சில விளக்கங்களைக் கேட்டார். அதற்கும் பதில் சொல்லியாகி விட்டது. அதன் பின்னர் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் முடிவு செய்ததற்குப் பிறகு; எப்படி நீங்கள் அந்த முடிவை எடுக்கலாம் என்று விவகாரத்தை கிளப்புகிறார்கள். அந்த எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டு

விதிமுறைகளுக்குப் புறம்பாக நடக்கிறார்கள். அந்த நேரத்திலே கூட மற்ற எந்த உறுப்பினர்களும் அவர்களைப் போல எழுந்து முறைகேடாக நடந்துகொள்ளவில்லை.

எனவே, நாளைக்கு இந்தப் பிரச்சினை வெளியே போகின்ற போது திட்டமிட்டு இந்தப் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தை தவிர வேறு எந்த நோக்கமும் இல்லாமல் எதிர்க் கட்சியினர் நடந்து கொண்டார்கள் இன்றைக்கு என்கிற செய்தி (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிலே தெரிவிக்க வேண்டிய அளவுக்கு நியாய உணர்வுள்ள செய்தி நிறுவனங்களும்—தொலைக்காட்சி, வானொலி நிறுவனங்களுக்கும் அந்த நியாய உணர்வு இருக்குமேயானால் அவர்களும் இதை, இன்றைக்கு முறைகேடாக எதிர்க்கட்சியினர் நடந்து கொண்டு வெளியேறினார்கள், பேரவைத் தலைவர் சொன்ன தீர்ப்பை மீறி நாங்கள் பேச வேண்டும் என்று வற்புறுத்தி நின்று இங்கே விவகாரம் வளர்ப்பதற்குரிய சூழ்நிலைகளை எல்லாம் உருவாக்கி அதன் பின்னர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலிருந்து, இன்று நடைபெற்ற சம்பவத்திலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த அரசாங்கம் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டது, அரசாங்கம் ஏதோ பெரிய ஊழல் செய்துவிட்டது, எனவே அரசாங்கத்தின் பொசிஷன் வீக்காகயிருக்கிறது என்று அவர்களே ஒரு கணக்குப் போட்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி இங்கே பேசுவதற்கு தாங்கள் அனுமதி வழங்கமாட்டீர்கள் என்று அவர்களே எதிர்பார்த்து, அவர்களே ஒரு கணக்கு போட்டு, இங்கே எப்படியும் ரகளை செய்ய வேண்டும் என்ற திட்டத்துடன் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக தாங்கள் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அளித்த விளக்கங்களிலிருந்து அரசாங்கத்தின் மீது எந்தத் தவறும் இல்லை. வழங்கப்பட்ட அனுமதியில் கோர்ட் ஆணையின்படி, கோர்ட் டைரக்ஷன்படிதான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக இங்கே நிரூபித்து காட்டிவிட்டோம். எனவே அவர்கள் சைடு வீக்காக போய்விட்டது. என்ன செய்வது? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதியும் வழங்கி

விட்டீர்கள். ஒரு மணி நேரம் பேசி விட்டோம். விலாவாரியாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் நானும் விளக்கங் களைத் தந்தோம். எனவே, அரசாங்கம் எந்த தவறும் செய்யவில்லை ; எந்த ஊழலும் செய்யவில்லை என்பது தெளி வாகி விட்டது. அதற்கு மேல் அவர்கள் அமைதியாக உட் கார்ந்தால் எப்படி ? அவர்கள் திட்டம் வீணாகி விடுமே ; எனவே அவர்கள் தேவையில்லாமல் ஒரு மணி நேரம் விவாதித்தப் பின்னர் தாங்கள் ஒத்திவைக்க தேவையில்லை என்று அளித்த தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இப்படி ஒரு சூழ்நிலையை, வெளியேற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல இன்றைக்கு அந்தப் பிரச்சினை அந்த அளவிலே முடிவு பெற்று நான் அனுமதி மறுத்ததோடு நின்று இருக்குமானால் இன்றைக்கு என்ன செய்தி வெளியே போகும். இந்த 175 கல்வி நிறுவனங் களுக்கு உயர்நீதிமன்றம் தடை செய்திருப்பதில் அரசாங்கம் எந்த தவறும் செய்யவில்லை ; கோர்ட் உத்தரவின் பேரில் தான் இதுவரையிலும் கொடுத்திருக்கிறார்கள் என்கிற செய்தி தான் வெளியே போகும். அந்த செய்தி வெளியே போகிற போது இங்கே பெரிய தவறு நடந்ததைப் போல இன்றைக்கு ஒரு மிகப்பெரிய மாயையை உண்டாக்கிவிட்டோம் ; அந்த மாயையை தவிடுபொடியாக்கி விட்டோமே என்று கருதி, இன்றைக்கு இந்தச் செய்தி தலைப்புச் செய்தியாகப் போவ தற்குப் பதில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேற்றப் பட்டார்கள் என்கிற செய்தி தலைப்பில் செல்லவேண்டும் என்று அவர்கள் எடுத்த முடிவாகத் தான் இதனைக் கருது கிறேன். ஆகவே தான் வரம்பை மீறி, விதிமுறைகளை மீறி, சட்ட விதிகளை மீறி, இன்றைக்கு அவர்கள் நடந்து இருக் கிறார்கள் என்பது தெளிவாகியிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒரு செய்தியை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் கர்நாடக முதலமைச்சராக இருக்கிற திரு. வீரப்ப மொய்லி அவர்கள் கர்நாடகத்தினுடைய கல்வி அமைச்சராக இருந்த போது 134 கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சராக வந்த திரு. பங்காரப்பா அவர்கள் அவற்றையெல்லாம் ரத்து செய்துவிட்டு அவர் ஒரு 200 பள்ளிகளுக்கு மேல் (சிரிப்பு) அனுமதி தந்து ; அதை

இவர் முதலமைச்சராக வந்த பிறகு ரத்து செய்திருக்கிறார். (சிரிப்பு) இது கர்நாடகத்தில் நடந்தது. இதை ஒரு செய்தியாக நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத்தலைவ அவர்களே, தூங்குபவர்களை எழுப்பலாம். தூங்குபவர்களைப் போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது. இங்கே எதிர்க்கட்சித் தலைவர் இரண்டாவது முறையாக பேசுகின்ற போதே காங்கிரஸ் கட்சியினுடைய பல உறுப்பினர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற புத்தங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு வெளியேற தயாராகிவிட்டார்கள். ஆகவே, வெளியிலே அவர்கள் திட்டமிட்டு வந்த நாடகத்தைத்தான் இங்கே அரங்கேற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் எனக்கு உதவ வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பானவர். இந்தக் கூட்டத் தொடரிலே இது மூன்றாவது முறையாக வெளியேற்றப்பட்டிருக்கிறார். நம்முடைய பேரவை விதி 120-ன் படி ஒரு உறுப்பினர் முறைகேடாக நடந்து கொண்டு அவர் பெயர் கூறி அழைக்கப்பட்டு இரண்டு முறை வெளியேற்றப்பட்டாலே பேரவையின் எஞ்சிய நாட்களுக்கு பேரவைக்கு அனுமதிக்கப்படாமல் தள்ளி வைக்கலாம் என்கிற விதி இருக்கிறது. இரண்டாவது முறை அவர்கள் செய்த நேரத்தில் கூட அதை செய்திருக்கவேண்டும். பெருந்தன்மை காரணமாக ஏற்கனவே 2,3 உறுப்பினர்கள் விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு சில வேண்டுகோள் வைத்த காரணத்தால் அப்போதே அவர்களை அனுமதித்தோம். அதே பெருந்தன்மை தொடரட்டும் என்கிற வகையிலே தான் அவர்கள் இரண்டாவது முறையும் அன்றைக்கு அந்த அளவுக்கு ரொம்ப முறைகேடாக, வரம்பு மீறி நடந்து காவலர்களைத் தாக்கியதற்குப் பின்னாலும் கூட, அவர்கள் பேரவைக் கூட்டத்தில் எஞ்சிய நாட்களுக்கு வரக்கூடாது என்ற உத்தரவை அன்றைக்கே நாம் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து இப்படி நடக்கிற பெருந்தன்மையையே ஏதோ பலவீனம் என்பதைப் போல நினைத்துக்கொண்டு அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இதுபற்றியும் பேரவை ஒரு முடிவு செய்வது நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் ஆகிய தாங்கள் கொண்டிருக்கின்ற அந்த உணர்வு இந்த மன்றத்தில்

இருக்கிற உறுப்பினர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. இந்தப் பேரவையினுடைய விதிமுறைகள் காப்பாற்றப்பட வேண்டும்; ஒழுங்கு காப்பாற்றப்படவேண்டும்; கட்டுப்பாடு பேணப்படவேண்டும்; அதன் மூலமாக ஜனநாயக நெறி முறைகள் எல்லாம் முறையாக நடைபெறவேண்டும் என்பதிலே தான் நாம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். ஆனால் இவ்வளவு நாட்கள் தொடர்ந்து 1½ மாத காலத்திற்கு மேலாக இந்தப் பேரவை நடந்தும்; பல நாட்களுக்கு இந்தப் பேரவையிலேயே இடம் பெறாத அளவுக்கு தங்கள் போக்கை வைத்துக்கொண்டு வெளியேறுவதும் வெளியேற்றப்படுவது மாகிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்ற காரணத்தினால், விதிமுறைகள் காப்பாற்றப்பட வேண்டும்; விதி பேணப்படவேண்டுமென்பதுதான் நம் அத்தனை பேருடைய எண்ணமாகும் ஆகவே, விதிமுறைகளைக் காப்பாற்ற தாங்கள் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளலாம். விதிமுறைப்படி அவர்களை இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் வெளியேற்றுவது விதிக்குப் பொருந்தி வருகின்ற காரணத்தினால், எவ்வளவு பெருந்தன்மையை நாம் காட்டிக்கொண்டு வந்தாலும்கூட அந்தப் பெருந்தன்மையைப் பலகீனமாகக் கருதுகின்ற அளவுக்குத்தான் எதிர்க்கட்சியினர் இருந்து வருகிறார்கள் என்பதைக் காணுகிறோம். ஆகவே, விதிமுறையின்படி. தாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அப்படி எடுத்துக் கொண்டால்தான் விதிமுறைகளுக்கு இந்த அவை மதிப்புத் தந்தது என்றாகும். அந்த முறையிலே தக்க நடவடிக்கைகளை தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அவையின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா.ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னதைப்போல, உங்களுடைய பெருந்தன்மையை எதிர்க்கட்சியினர் பலகீனம் என்று கருதுவார்களேயானால், அந்த அளவுக்குத் தவறு செய்பவர்கள் உலகத்திலே யாரும் இருக்க மாட்டார்கள். வெளிநடப்பு செய்வது என்பது அவர்களுக்கு இருக்கின்ற உரிமை என்பதை உணர்கின்ற அதே நேரத்தில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் வெளிநடப்பு செய்யவில்லை. நான் வெளியேற்றியதற்குப் பிறகும் போக மறுத்து காவலர்களால் அப்புறப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

1993 ஏப்ரல் 28]

திரு. கா. ப. பட்டாபிராமன் : வெளியேற்றப்பட்ட பிறகும், இதற்கு முன்னாலே அவர்கள் வெளிநடப்பு செய்தபோதும் பேரவைத் தலைவர் அவர்களுடைய முடிவைப் பற்றி விமர்சனம் செய்துகொண்டு, தகாத வார்த்தைகளைப் பேசிக்கொண்டே அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். இன்றைய தினமும் அவர்கள் வெளியேற்றப்பட்டபோது அந்த முறையைக் கையாண்டு இருக்கிறார்கள். இன்றைய தினம் எதிர்க்கட்சி உறுப்பினர்களான மாண்புமிகு ஜானகிராமன் அவர்கள், மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள், மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், மாண்புமிகு புரட்சிமணி அவர்கள். உங்களுடைய தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பித்து, அவர்கள் கூச்சல் எழுப்பிக்கொண்டு வெளியே சென்றிருக்கிறார்கள் இந்த நிலைமையில் பாராளுமன்றத்தினுடைய மிகச் சிறந்த சபாநாயகராக இருந்த மவ்லாங்கர் அவர்கள் 1958-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், Conference of Presiding Officers of the LegislativeBodies என்கின்ற நூலில் ஒரு கருத்தினைச் சொல்லுகிறார்கள். அந்தக் கருத்தினை இந்த அவைக்கும், பேரவைத் தலைவர் அவர்களுடைய மேலான கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகின்றேன். walk out as matter of protest against the ruling of the chair was objectionable.... நீங்கள் கொடுத்த முடிவுக்குப் பிறகு, அவர்கள உங்களுடைய முடிவை எதிர்த்து வெளியேறுவது என்பது தவறு. "..was objectionable and against the decorum of the House. It was a reflection against the decision of the Chair. The Speaker has the right to decide one way or the other and has decision could not be questioned. If there were silent walk-outs denoting thereby quiet disagreement or disaffection, the matter could be ignored But if while going out, Members pass some derogaty observation, then it would amount to the contempt of the House and the Chair would be perfectly justified in taking suitable action. என்று இருக்கிறது ஆகவே. இதையும் நீங்கள் எண்ணிப் பார்த்து. இதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். துரை முருகன்.

திரு. கே.எஸ். துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சபையைவிட்டு வெளியெற்றப்படுவதற்கு முன்பாக, எழுந்து நின்று உண்மைக்குப் புறம்பான பல கோஷங்களை எழுப்பினார்கள். அந்த உண்மைக்குப் புறம்பான கோஷங்கள் எதுவும் அவைக் குறிப்பிலே....

மாண்புகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்காது. அவர்கள், காவலர்களால் வெளியேற்றப் பட்டபோது, அவர்கள் முழக்கங்களெல்லாம், எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது, அவையெல்லாம் முறை கேடானவை. அவை அவைக் குறிப்பிலே இருக்வே இருக்காது. இயற்கையாகவே இருக்காது. உட்காருங்கள்.

மாண்புகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு தலைமைக் கொறடா அவர்களும் தெரிவித்த கருத்துக்களைப் போல, காங்கிரஸ் கட்சியின் உறுப்யினர்கள் கடந்த சில நாட்களாகவே, திட்டமிட்டு, பேரவையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்த வேண்டும் என்கிற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த காரணத்தால் அவர்கள் கடுமையான நட வடிக்கைக்கு அந்தக் காலகட்டத்திலேயே ஆளாக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால், பெருந்தன்மை காரணமாக அத் தகைய கடுமையான நடவடிக்கைகளை எடுக்காமல், அவர்களும் பேரவையிலேயிருந்து பேரவை நடவடிக்கை களில் கலந்துகொண்டு தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுகிற வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில், நாம் பெருந்தன்மையாக இருந்து வந்ததை, அவர்கள் ஏற்றுக்கொள்கிற பக்குவமின்றி தொடர்ந்து நடந்து கொண்ட காரணத்தாலேதான் இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒட்டுமொத்தமாக அனைவரையும் ஒன்றுக்கு மூன்று முறை காவலர்களை வைத்தே வெளியேற்ற வேண்டிய நிலைமைக்குப் பேரவையை ஒரு துர்ப்பாக்கிய நிலைமைக்குப் பேரவையை ஆளாக்கினார்கள் மூன்று முறையும் காவலர்களை வைத்துத் தான் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்—அவர்களாகவே வெளியேறினார்கள் என்கிற நிலைமை இல்லை.

பிற்பகல் 12.35

நான் சொன்னதைப்போல பொறுப்புள்ள எதிர்க் கட்சி களாக இருந்திருக்கிறவர்கள் பேரவைத் தலைவர் ''வெளி யேற்றுகிறேன்'' என்று சொன்னதற்குப் பிறகு வெளியேறித் தான் இருக்கிறார்கள்.

திரு. செல்லபாண்டியன் அவர்கள் இந்தப் பேரவைத் தலைவராக இருந்தபொழுது, எந்த அளவிற்கு மாண்பைக் காப்பாற்றி வந்தார் என்பதை எல்லோரும் பெருமையாகச் சொல்லுவார்கள். அவர் ஒருமுறை, கம்யூனிஸ்ட் கட்சி யினுடைய தலைவர் திரு. ஆர். நல்லசிவம் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையைப் பேச எழுந்து, தொடர்ந்து இதைப் போன்ற ஒரு ஒத்திவைப்புப் பிரச்சினையை அவர் கொடுத்து, அனுமதி மறுத்துவிட்டார். நான் இன்றைக்கு அனுமதித்து அவர்களைப் பேச அனுமதித்தேன். அவர் இந்தப் பிரச்சி னையை எழுப்ப முடியாது என்று அனுமதி மறுத்தார். அனுமதி

[1993 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

மறுத்த நேரத்தில், திரு. ஆர். நல்லசிவம் அவர்கள் 1966-லே நடந்தது—திரு. ஆர். நல்லசிவம் அவர்கள் திரும்பத் திரும்ப அந்தப் பிரச்சினையை வற்புறுத்தி நான் எழுப்ப வேண்டும் என்று சொன்னார். எழுப்ப வேண்டும் என்று அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்தியதற்குப் பிறகு, இவர் திரும்பத் திரும்பச் சொல்லி, முடியாது, உட்காருங்கள் என்றார். அவர், நான் உட்கார முடியாது. இதில் அரசாங்கம் ஏதாவது பதில் சொன்னால்தான் உட்காருவேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். அதன் பின்னர் பேரவைத் தலைவர் அவரைச் சொன்னது, ஒன்று உட்காருங்கள் அல்லது வெளியே போங்கள் என்றார். அதற்குத் திரு. ஆர். நல்லசிவம், நான் எந்த உறுதி மொழியையும் அரசாங்கத்தினிடத் திலே இருந்து வாங்காமல், இதைப் பேசாமல் நான் உட்காருவதைவிட, வெளியே போகிறேன் என்று சொல்லிவிட்டு, வெளியே போய் விட்டார். பேரவைத் தலைவர், உட்காருங்கள் அல்லது வெளியே போங்கள் என்று ஆப்ஷனை அவருக்குக் கொடுத்தார். இரண்டு ஆப்ஷன் கொடுத்தார். பேரவைத தலைவர் கொடுத்த அந்த முதல் ஆப்ஷனை அவர் கேட்காமல், இரண்டாவது ஆப்ஷனை எடுத்துக்கொண்டு, நான் வெளியே போகிறேன் என்று சொல்லி விட்டுப் போனது பேரவைத் தலைவரை அவமதித்ததாக ஆகும் என்று அவர் முடிவு செய்து அதன் பின்னர் மறுநாளும் இந்தப் பிரச்சினையை அவர் எழுப்பி திரு. ஆர். நல்லசிவம் அவர்கள், நான் நடந்து கொண்ட விதத்திற்காக பேரவைத் தலைவரிடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்று சொல்கிறார். என்னைப் பொறுத்து பிரச்சினை இல்லை, இந்த அவைக்கு நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொல்லி அவர் மன்னிப்புக் கேட்டிருக்கிறார் என்கிற சம்பவம் எல்லாம் இந்தப் பேரவையிலே நடந்திருக்கிறது.

இவர்களைப் போல இவ்வளவு முறை— வெளியேறுங்கள் என்று சொன்னதற்குப் பிறகும் வெளியேற மாட்டோம் என்று பிடிவாதம் செய்யவில்லை திரு. ஆர். நல்லசிவம். உட்காருங்கள் அல்லது வெளியேறுங்கள் என்று சொன்னதற்கு, வெளியேறினார். நான் சொன்ன முதல் ஆணையை நிறைவேற்றாமல் இரண்டாவது ஆணைக்குத்தான் கட்டுப்பட்ட காரணத்தாலே அது கண்டனத்திற்குரியது என்று அவரை மன்னிப்புக் கேட்கச் செய்த பேரவை இந்தப் பேரவை, அன்றைக்குகிருந்த அந்தப் பேரவைத் தலைவர் செல்ல பாண்டியன் அவர்கள் இருந்த நேரத்தில் காங்கிரஸ் ஆட்சி; காங்கிரஸ் ஆட்சி நடந்த நேரத்தில் கம்யூனிஸ்ட் தலைவர், வெளியேறச் சொல்கிறீர்களானால் வெளியேறிக் கொள்கிறேன் என்று வெளியேறியதே குற்றம் என்று சொல்லி அவரை மன்னிப்புக் கேட்கச் செய்தார்கள்.

ஆனால், இன்றைக்கு வெளியேறுங்கள் என்று நான் ஒன்றுக்கு மூன்று முறை கட்டளையிட்டும்கூட, வெளியேறாமல் எதிர்க் கட்சித் தலைவரே பிடிவாதம் பிடித்து பேரவையின் நடவடிக் களுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற முயற்சியிலே ஈடுபட்டது மிகவும் கண்டனத்திற்குரியது. அப்படிக் கண்டனத்திற்குரிய காரியத்தை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், ஒன்றுக்கு மூன்று முறை செய்திருக்கிற காரணத்தால் பேரவை விதி 120-இன்படி "The Speaker may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House and any member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the day's meeting." என்று இருக்கிறது. "If any member is ordered to withdraw a second time in the same session, the Speaker may direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session". என்று இருக்கிறது.

எனவே, அந்தப் பேரவை விதி 120–இன் கீழ் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியத்தையும், இன்று அவையிலே இருந்த காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரையும், பேரவையின் இந்தக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும், பேரவையில் கலந்து கொள்ளக் கூடாது; பேரவையிலேயிருந்து தள்ளிவைக்கப்படு கிறார்கள் என்கிற அறிவிப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கவன ஈர்ப்பு

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் யூனியனில் ஆதிதிராவிட மக்களின் விளை நிலங்களை இரால் மீன் வளர்க்க ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

திரு. ஆ. பாலையா, அவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக் கிறார்.

ஆனால், இன்றைக்கு வெளியேறுங்கள் என்று நான் ஒன்றுக்கு மூன்று முறை கட்டளையிட்டும்கூட, வெளியேறாமல் எதிர்க் கட்சித் தலைவரே பிடிவாதம் பிடித்து பேரவையின் நடவடிக் கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற முயற்சியிலே ஈடுபட்டது மிகவும் கண்டனத்திற்குரியது. அப்படிக் கண்டனத்திற்குரிய காரியத்தை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், ஒன்றுக்கு மூன்று முறை செய்திருக்கிற காரணத்தால் பேரவை விதி 120-இன்படி "The Speaker may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House and any member so ordered to withdraw shall do so forthwith and absent himself during the remainder of the day's meeting." என்று இருக்கிறது. "If any member is ordered to withdraw a second time in the same session, the Speaker may direct the member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the session". என்று இருக்கிறது.

எனவே, அந்தப் பேரவை விதி 120-இன் கீழ் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியத்தையும், இன்று அவையிலே இருந்த காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரையும், பேரவையின் இந்தக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும், பேரவையில் கலந்து கொள்ளக் கூடாது; பேரவையிலேயிருந்து தள்ளிவைக்கப்படு கிறார்கள் என்கிற அறிவிப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கவன ஈர்ப்பு

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் யூனியனில் ஆதிதிராவிட மக்களின் விளை நிலங்களை இறால் மீன் வளர்க்க ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

திரு. ஆ. பாலையா, அவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக் கிறார்.

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. து. மூர்த்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> ''நாகை காயிதேமில்லத் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அடங்கியுள்ள கொள்ளிடம் யூனியனில் உள்ள ஆதிராவிட மக்களின் விளைநிலங்களை இரால் மீன் வளர்க்க ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து''

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சீர்காழி தொகுதியிலுள்ள காட்டூர், அம்மங்காடு, மகேந்திரப் பள்ளி, அப்புராயபுரம் ஆகிய கிராமங்களில் இரால் வளர்ப்பு இடங்கள் கொள்ளிடம் ஆறு மற்றும் அதன் உப்பனாறு அருகாமையில் அமைந்துள்ளன. இவ்விடங்கள் ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பிற்கு மிக அருகாமையில் உள்ளன. இங்குள்ள ஆதிதிராவிட மக்கள் விவசாய கூலிகளாக வேலை பார்த்து வந்துள்ளார்கள். இவர்களுக்கு சொந்தமான விளை நிலங்கள் எதையும் இரால் வளர்ப்பிற்கு ஆக்கிரமிப்பு செய்யவில்லை. மேற்குறிப்பிட்ட இடங்கள் கடந்த சில ஆண்டுகளாக உவர் நீர் பாதிப்பால் தரிசு நிலங்களாக உள்ளன. இரால் வாளர்ப்பின் மூலம் பெருமளவில் அன்னிய செலாவணி ஈட்டிடும் வாய்ப்புள்ள தால் இரால் வளர்ப்பினை தனியார்கள் மேற்கொள்ள அரசு ஊக்கம் அளித்து வருகிறது. எனவே இப்பகுதியில் தனியார் பட்டா நிலங்களில் இரால் வளர்ப்பு குளங்களை அமைத்து இரால் வளர்க்க முற்பட்டு வருகின்றன. தனியார் இவ்வாறு இரால் வளர்ப்பு குளங்கள் அமைத்து இரால் வளர்ப்பதால் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் சமுதாய

பிரச்சனைகள் குறித்தும் இப்பகுதி மக்கள் அச்சப் கொண்டு தக்க பாதுகாப்பு கோருகின்றனர். கிராமங்களுக்கு அருகாமையில் உவர்நீர் பண்ணைகள் அமைப்பதால் உவர்நீர் கசிவின் காரணமாக குடிநீர் பாதிக்கப்படும் என்றும் விவசாய கூலி வேலை பார்த்து வருவதால் விவசாய வேலையின்றி வருமானம் கிடைக்காமல் போகும் எனவும் அஞ்சுகின்றனர். தற்போதுள்ள விவசாய விளை நிலங்களை இறால் வளர்ப்புக்கு மாற்றம் செய்திடக்கூடாது எனவும் கருதுகின்றனர். இது பற்றி பட்டுக் கோட்டை உவர்நீர் மீன்துறை உதவி இயக்குநர் நேரில் சென்று விசாரணை நடத்தினார். விசாரணையின் போது இப்பகுதி மக்கள் இறால் வளர்ப்பு குறித்து தங்களது மேற்கண்ட அச்சத்தினை தெரிவித்தனரேயன்றி அதன் காரணமாக கிராமங் களில் பதட்ட நிலைமை நிலவுவது குறித்து ஏதும் தெரிவிக்க வில்லை. பதட்ட நிலைமை ஏதும் காணப்படவில்லை.

மேற்கண்ட கிராமங்களில் ஆதிதிராவிட மக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்து உரையாடி, பின்னர் தேவையான நடவடிக்கை பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதி, கொள்ளிடம் யூனியன் பகுதியில் அடங்கியுள்ள காட்டூர், அம்மங்காடு, மகேந்திர பள்ளி, அப்புராயபுரம் போன்ற கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். தற்சமயம் அங்கு இறால் பண்ணை வைத்து இறால் வளர்ப் பதால், அவர்கள் தற்போது பார்த்துக் கொண்டிருக்கும் கூலி வேலை இல்லாமல், போய்விடுமோ என்று அஞ்சுவதோடு, அவர் கள் வளர்க்கின்ற தென்னை மரம், அருந்துகின்ற குடிநீர் போன்றவைகள் உப்பு நீரால், அக்கிராமங்களில் வசிக்க முடி யாமல், பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிறார்கள். கடந்த மாதத்தில் இறால் பண்ணை வைக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென்று கூறி இருந்தார்கள். என்னிடம் வந்து முறை யிட்டார்கள். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், அங்கே இறால் பண்ணையை வைத்து விட்டால், அங்கே இருக்கிற ஏழை ஆதி திராவிட மக்களை, அந்தப் பண்ணையிலே வேலை கொடுக்க உத்தரவுகள் அளிக்கவும் அவர்கள் குடியிருக்கிற இடங்களில் குடிநீர் பாதிக்கப்படாமல் இருக்கவும். கடல் நீரால் பாதிக்கப்படாமல் இருக்கவும். மேலும் அவர்கள் இருக்கிற இடங்களில் சுற்றுப்புறச் சூழ்நிலை கெட்டுப் போகாமல் இருக்கவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்பைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கு தமிழகத்திலே அவற்றை வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. கடற்கரையோரங்களில்தான் இதை வளர்க்கக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், கடற்கரை ஓரங்களிலுள்ள நிலங்கள் நமக்கு மிக்வும் அவசியமானதாக இருக்கிற பட்சத்தில், இன்றைக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில்கூட, இறால் வளர்ப்பிலே அதிகமான அளவுக்கு ஈடுபட்டுக் கொண்டு, அதன் அடிப்படையிலே வளர்ந்து விட்ட அந்த 'டெக்னாலஜி'யைக் கொண்டு, இங்கு தமிழகத்திலேயும் செயல்படுவதற்கு, நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆசியாவிலே இல்லாத அளவுக்கு தர்வைகுளத்தில் முதலிலே 'அக்வா—கல்ச்சர்' எஸ்டேட் என்று சொல்லக்கூடிய இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிற சூழ்நிலையில், அதனை படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டைகள் அமைக்கக்கூடிய ஒரு பரிசீலனை, அரசினுடைய ஆய்விலே இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலே ஆதிதிராவிட மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையிலே அங்கே அமைக்கப்படுகிற பண்ணைகளில் எல்லாம் மீனவர்கள், மீனவ கைம்பெண்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அறிக்கைகள்—அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழு அறிக்கைகளை அளித்தல், செல்வி எல். சுலோசனா, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 107–வது, 108–வது, 109–வது, 110–வது, 111–வது மற்றும் 112–வது வரையிலான ஆறு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்பைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கு தமிழகத்திலே அவற்றை வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. கடற்கரையோரங்களில்தான் இதை வளர்க்கக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், கடற்கரை ஓரங்களிலுள்ள நிலங்கள் நமக்கு மிக்வும் அவசியமானதாக இருக்கிற பட்சத்தில், இன்றைக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில்கூட, இறால் வளர்ப்பிலே அதிகமான அளவுக்கு ஈடுபட்டுக் கொண்டு, அதன் அடிப்படையிலே வளர்ந்து விட்ட அந்த 'டெக்னாலஜி'யைக் கொண்டு, இங்கு தமிழகத்திலேயும் செயல்படுவதற்கு, நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆசியாவிலே இல்லாத அளவுக்கு தர்வைகுளத்தில் முதலிலே 'அக்வா—கல்ச்சர்' எஸ்டேட் என்று சொல்லக்கூடிய இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிற சூழ்நிலையில், அதனை படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டைகள் அமைக்கக்கூடிய ஒரு பரிசீலனை, அரசினுடைய ஆய்விலே இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலே ஆதிதிராவிட மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையிலே அங்கே அமைக்கப்படுகிற பண்ணைகளில் எல்லாம் மீனவர்கள், மீனவ கைம் பெண்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அறிக்கைகள்—அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழு அறிக்கைகளை அளித்தல், செல்வி எல். சுலோசனா, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 107–வது, 108–வது, 109–வது, 110–வது, 111–வது மற்றும் 112–வது வரையிலான ஆறு அறிக்கைகயைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

8. அறிவிப்புகள்.

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 12–45

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்.)

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல்.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

8. அறிவிப்புகள்.

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 12–45

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்.)

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல்.

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவினைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993) ஆ.செ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— (தொடர்ச்சி.)

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993) ஆ.செ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—(தொடர்ச்சி.)

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993) ஆ.செ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—(தொடர்ச்சி.)

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. .. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

(இ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம் —ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப் படுத்துதல்) சட்டமுன்வடிவு, பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம்— ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) நிதி ஒதுக்க எண் (2) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு, ஆய்வு செய்தல். 1993—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2). சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 17/1993), மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/1993) ஆய்வுக்கு @எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

@27—4—1993 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பெற்றுள்ளது.

(இ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம் —ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப் படுத்துதல்) சட்டமுன்வடிவு, பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம்—ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) நிதி ஒதுக்க எண் (2) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு, ஆய்வு செய்தல். 1993—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 2). சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 17/1993), மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/1993) ஆய்வுக்கு @எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

@27—4—1993 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். வி. சண்முகம்.

*திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்து கூறுகின்ற நல்ல வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ 50 நாட்கள் நடைபெற்ற இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் 9 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு தமிழ் நாட்டு மக்களுடைய மேம்பாட்டிற்காக நல்ல திட்டங்களையெல்லாம் உருவாக்கி இருக்கிறது. இந்தத் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது, இந்த நிதி ஒதுக்கங்களை எப்படியெல்லாம் பயன்படுத்துவது என்று விவாதிக்கின்ற இந்த வாய்ப்பினை துரதிருஷ்டவசமாக இந்தச் சட்டமன்றப் பேரவையிலே 60 பேர்களை கொண்ட காங்கிரஸ் கட்சி பயன்படுத்தாமல் போய்விட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ஒரு பொறுப்புள்ள கட்சி, அதுவும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் இந்திய அரசையும் ஆளக்கூடிய ஒரு கட்சி தங்களுக்கு கொடுத்திருக்கின்ற வாய்ப்பை எல்லாம் எவ்வளவு முறைகேடாக எவ்வளவு உண்மைக்குப் புறம்பாக பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகுந்த வேதனை அளிக்கிறது. இச்சட்டமன்றம் என்பது நீண்ட நெடிய வரலாறுகளைக் கொண்டது. இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, நீண்ட நெடிய வரலாறு படைத்த இச்சட்டமன்றத்தில் எப்படியாவது தகராறு செய்துவிட்டு வெளியே போக வேண்டும் என்பதற்காகவே உள்ளே வந்தார்கள். இன்றைக்குக் கூட நீதிமன்ற ஆணையைச் சுட்டிக்காட்டி இந்த அரசாங்கத்தின்மீது ஒரு பழியைச் சுமத்த முயற்சித்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும் நீதிமன்ற ஆணைகளை இந்த அரசு நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது குறித்து விளக்கங்கள் சொன்னபோது அவர்களாலே தாங்கிக் கொள்ள முடியாமல் வெளியே போய் விட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். நேற்று ஏதாவது காரணம் கிடைக்குமா என்று தேடிப் பார்த்தார்கள், கிடைக்காமல் இருந்தார்கள் என்று சொன்னார்கள். நேற்றும் அப்படி காரணங்களைத் தேடி அடித்தளங்களை இட்டார்கள். அம்மாதிரியான வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தினார்கள். ஏதோ தமிழுக்காக அவர்கள் பணியாற்றியது போலவும், மற்றவர்கள் எல்லாம் தமிழுக்கு விரோதமாக இருந்ததைப் போலவும், காரணங்களை எல்லாம் அவர்கள் சொன்னார்கள். நான் கூட நேற்று ஒரு கட்டத்திலே தலையிடலாம் என்று நினைத்தேன். நான் அப்படி தலையிடுவதே அவர்களுக்கு கோபத்தை உண்டாக்கிவிடுமோ என்பதால்தான் நான் பேசாமல் இருந்தேன்.

[திரு. எஸ்.வி. சண்முகம்]

பிற்பகல் 12—50

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பற்றி விவாதம் வந்தபோது அவர்களுடைய தேசிய வாழ்க்கை பற்றி எல்லாம் பேச்சு வந்தது. நான் அந்த நேரத்தில் தலையிடலாம் என்று ரொம்ப ஆவலோடு இருந்தேன். பின்பு, நான் அப்படித் தலையிடுவதால் கூட அவர்கள் கோபித்துக் கொண்டு வெளியே போய் விடுவார்களோ என்பதால் அமைதியாக இருந்தேன். அவர் காங்கிரஸ் கட்சியிலே இருந்தாரா ? ஜனதா கட்சியிலே இருந்தாரா ? என்ற வாதங்கள் எல்லாம் வந்தபோது நான் ஒரு கருத்தைச் சொல்லலாம் என்று நினைத்தேன். தேசிய இயக்கத்திற்குத் தன்னை நீண்ட காலமாக அர்ப்பணித்துக் கொண்ட தலைவர்போல் சொல்லிக் கொண்டிருந்தார். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் தேசிய அளவிலான கட்சியில் பணியாற்றினார் என்பது உண்மை. ஜனதா கட்சியில் பணியாற்றியபோது அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய படத்தை மதுரையிலே தீ வைத்துக் கொளுத்தினார். அதை நேற்று நினைவுபடுத்தலாம் என்று நினைத்தேன். மதுரையில் அன்னை இந்திராகாந்தியினுடைய படத்தை மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் ஜனதா கட்சியில் இருந்த போது தீ வைத்துக் கொளுத்தினார். அவருடைய பாரம்பரியத்தைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தபோது நான் அதைச் சொல்லலாம் என்று நினைத்தேன். அதைச் சொன்னால் கோபித்துக் கொண்டு வெளியே போய்விடுவார்களோ என்பதற்காகத்தான் நான் அமைதியாக இருந்தேன். இந்தச் சட்டமன்றம் அமைந்தபோது தமிழ்நாட்டிலே கூட சிலர் நினைத்தார்கள். இந்தச் சட்டமன்றத்திற்கு புதியவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்களே, புதிய அரசு அமைந்திருக்கிறதே, அனுபவம் இல்லாதவர்களாக முதல் முறையாக வந்திருக்கிறார்களே, இவர்கள் எல்லாம் எப்படி நடக்கப் போகிறார்கள் என்றெல்லாம் பத்திரிகைகளிலே எழுதினார்கள். எனக்குக் கூட அப்படி ஒரு அச்சம் இருந்தது. பெரும்பான்மையாக இருக்கிறோமே, மிகச் சிலர் வந்திருக்கிறார்களே, ஏதாவது விபரீதமான நிலைமை ஏற்பட்டு விடுமோ என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி அவர்கள் ராஜினாமா செய்து விட்டு வெளியே போனார்கள் என்று அன்றைக்கு செய்திகளைச் சொன்னார்கள்.

ஆளும் தரப்பிலே இருப்பவர்கள் இந்த அளவுக்குப் பொறுமையாக இருந்தார்கள் என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. 30 பேர்கள் இருந்து கொண்டு எந்த அளவுக்கு சீண்ட வேண்டுமோ அந்த அளவுக்கு சீண்டி, தட்டிவிட்டுப் பார்த்து, பொறுமைக்கு இருக்கிற அளவு கடந்து போகிற அளவுக்கு எல்லாம் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வெளியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினரைக் கைது செய்து அழைத்துச் சென்றபோது உதவி கமிஷனரையும் சண்டைக்கு இழுத்து பார்த்தார்கள். ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனர் ஒரு சட்டமன்

உறுப்பினரை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு செல்லும்போது, ஓடிப் பிடித்து இழுத்து அவரையும் வம்புக்கு இழுத்தார்கள். எப்படியாவது சட்டமன்ற வளாகத்தில் சண்டை நடக்க வேண்டும், போலீஸ் கமிஷனர், சட்டமன்ற உறுப்பினரைத் தாக்கினார் என்று செய்திகளை எல்லாம் பரப்புவதற்கு முயற்சித்தார்கள். எப்படியாவது இந்த அரசின் மீது பழி சுமத்தி, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை என்று இந்த அரசாங்கத்தின் மீது ஏதாவது ஒரு பழியைச் சுமத்த வேண்டும் என்று அதற்குரிய அடிப்படைகளை எல்லாம் உருவாக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

இராணிப்பேட்டை இடைத் தேர்தல் ரத்து என செய்தி வந்தது. தேர்தல் அறிவிப்பதற்கு முன்பே முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள். அதை ஒரு காரணமாக வைத்து இன்றைக்குத் தேர்தலை நிறுத்தி இருக்கிறார்கள். அதுபோல் பழனி தேர்தலையும் நிறுத்துவதற்கு அடித்தளங்களை உருவாக்கி இருக்கிறார்கள். இதிலிருந்தெல்லாம் ஒன்றைத் தெரிந்து கொள்ள முடியும். தேர்தல் என்று வந்தால் இவர்கள் இல்லாமல் போவார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

அதனாலேதான் இத்தகைய முயற்சிகளை எல்லாம் அவர்கள் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். விவாதத்திற்கு விவாதம், கருத்துக்குக் கருத்து, தத்துவத்திற்குத் தத்துவம் பதில் சொல்ல வேண்டிய ஒரு சட்டமன்றத்தைத் தெருவிலே நடப்பது போன்று ஊர்வலம் போன்று எல்லாம் மாற்றியிருக்கிறார்கள். இப்போது கூட போகும்போது, ஏதோ ஒரு ஊழல் புகார் சொல்லிவிட்டுப் போனார்கள். நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய வரவு-செலவுக் கணக்கே மொத்தம் ஏறத்தாழ 9 ஆயிரம் கோடி. ஷேர் மார்க்கெட் கணக்கு அதையும் தாண்டிவிட்டது. சொல்வதற்கு விவஸ்த்தை வேண்டாமா? யார் சொல்வது என்று வேண்டாமா? மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்கள் எல்லாம் இவர்களோடு சென்றார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் நண்பர்கள் தடம்புரண்டு பல ஆண்டுக்காலம் ஆகின்றது. இந்த சபையிலே இன்றைக்கு இருக்கிறாரே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது தாக்கப்பட்டபோது இந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எல்லாம் பத்திரிகையாளர்களிடம் என்ன சொன்னார்கள் தெரியுமா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ரமணி அவர்களிடம் பத்திரிகையாளர்கள் என்ன நடந்தது என்று கேட்டபோது, என்ன நடந்தது என்று இப்போது என்னால் சொல்ல முடியாது, கமிட்டியில் பேசிவிட்டுத்தான் சொல்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள். கண்ணால் கண்ட உண்மையைக்கூட கமிட்டியில்

[திரு. எஸ்.வி. சண்முகம்] [1993 ஏப்ரல் 28

கேட்டுவிட்டுத்தான் சொல்வாராம். அதே போல பாப்பா உமாநாத் என்ற பெண் உறுப்பினரிடம் கேட்டபோது அப்படி ஒன்றும் நடைபெறவில்லையே என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கண் முன்னாலே நடக்கின்ற கொடுமைகளை சொல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆப்பிரிக்காவிலே, அங்கோலாவிலே நடைபெறுகின்ற விஷயங்களைத்தான் பேசுகின்றவர்களாக இன்றைக்கு மாறி இருக்கிறார்கள். அவர்களிடம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. இல்லை என்றால், அரசியல் முரண்பாடுள்ள காங்கிரஸ் கட்சியினுடைய இவ்வளவு ஆழமான பயங்கரமான தவறுகளுக்கு கண்டிப்பாக அவர்கள் துணை போய் இருக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே காங்கிரஸ் கட்சி என்பது ஒரு ஸ்திரமற்ற அரசாங்கத்தை உருவாக்குவது என்பது அவர்களுடைய கொள்கை. அவர்களுக்குப் பிடிக்காத ஆட்சி என்று மூன்று தடவை கலைத்திருக்கிறார்கள். அத்தகைய முயற்சிகளையெல்லாம் அவர்கள் உருவாக்குவதற்கான அடித்தளமாகத்தான் 45 நாட்கள் நடைபெற்ற இந்தச் சட்டமன்றத்தில் அமளிதுமளி என்றெல்லாம் செய்திகளை வரவழைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சில காரியங்களைக் செய்தார்கள். உண்மையில் இந்தச் சட்டமன்றம் நம்மைப் பொறுத்தவரையில் மிக அமைதியாக நடந்திருக்கிறது. மிகத் தாராளமாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு 9 ஆயிரம் கோடி ரூபாயை, நாம் கொடுத்து இருக்கிறோம். அத்தகைய நல்ல திட்டங்களை எல்லாம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப் போகிறார்கள். இத்தகையத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதவர்கள் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது அவைகளைக் கண்டு சகித்துக் கொள்ளமுடியாதவர்கள் இத்தகைய** புகார்கள் என்று நினைக்கிறேன் என்று கூறி . . (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : **புகார்கள் என்பது வேண்டாம்.

<u>திரு. எஸ். வி. சண்முகம்</u> : உண்மைக்குப் புறம்பான புகார்களை என்று திருத்திக் கொள்கிறேன். இந்த அரசுக்கு எதிராக களங்கம் கற்பிக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகிறார்கள். தேர்தல் வந்தால் என்னவாகும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

எதிர்காலத்திலும் இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு தான் தமிழ்நாட்டு மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கிற அரசாகத் திகழும். எனக்கெல்லாம் மிகப் பெரிய ஆச்சரியம் என்ன

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வென்றால் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்தான் மதுரை மண்ணுக்கு உரிய சொந்தக்காரர் இந்த அளவுக்குப் பொறுமையோடு இருந்தார் என்பதை எண்ணி எண்ணிப் பார்த்து வியப்படைகிறேன். ஒவ்வொரு நாளும் அவர் தனக்கு வருகிற உணர்வுகளையெல்லாம் சிரித்துக்கொண்டே சமாளித்து வந்திருக்கிறார். அவருடைய சிரிப்புகூட எனக்குப் பக்கத்திலே இருந்தவராலே ஒரு நாள் விமர்சிக்கப்பட்டது. இந்திய வரலாற்றிலே, தமிழக வரலாற்றிலே பொறுப்பும் சகிப்பும் உள்ளவர்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். பொங்குகின்றவர்கள், கோபக்காரர்கள் அழிந்து போய் இருக்கிறார்கள். ஆகவே, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நடந்தவைகளை மிகைப்படுத்தி வெளியே ஏதாவது செய்திகள் போய் இருக்கலாம். சில பத்திரிகைகளுக்கு சிலநோக்கங்கள் இருக்கின்றன. எல்லாப்பத்திரிகைகளுக்கும் அல்ல. சில பத்திரிகைகளுக்கு, ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனரை ஒரு சட்ட மன்ற உறுப்பினர் பிடித்து இழுத்து அவரைச் சண்டைக்கு இழுக்கிறார். அது தலைப்புச் செய்தியாக வரவில்லை. மாறாக, காவலரை அடித்தவர் கைது செய்யப்படுகிறார். அது செய்தியாக வருகிறது. ஆக, ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் தெளிவாக இருக்கிறார்கள். நம்பிக்கையாக இருக்கிறார்கள். சட்டமன்றத்திற்குள் இந்த 50 நாட்களில் வேண்டாத விபரீத விளைவுகளை உருவாக்கியவர்கள் யார் என்பதும் இத்தனை ஆத்திரமூட்டல்களையும் சகித்துக்கொண்டு பொறுமையோடு இருந்தவர்கள் யார் என்பதும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்.

பிற்பகல் 1—00

ஆகவே, எதிர்காலத்தில் மீண்டும் இந்தத்தமிழ்நாட்டில் எத்தகைய முயற்சிகள் செய்தாலும், இந்த அரசாங்கத்தை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் சொல்லப்போனால், இந்த அரசுக்கு ஏதாவது விபரீதங்களை, விளைவுகளை ஏற்படுத்த முயற்சிப்பவர்கள் கூட ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். அடுத்ததும், இந்த ஆட்சியின் சட்டமன்றம்தான் அமையும், அது வரையிலும் இந்த மாண்புமிகு சபாநாயகர் தான் இருப்பார். அவரை யாராலும் எதுவும் செய்ய முடியாது. ஆகவே, அச்சுறுத்தல்கள், ஆத்திரமூட்டுதல்கள் இவைகளை எல்லாம் நாம் பொருட்படுத்தத் தேவையில்லை என்பதைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறந்தது மதுரை மண் என்றாலும்கூட, உட்கார்ந்து இருக்கிற இடம் ''லார்ட் வெலிங்டன்'' கொடுத்த, இவ்வளவு உயரமான நாற்காலி என்பதை மனதிலே வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் கொஞ்சம் அந்த மண் வாசனையைக் கூட மறக்க வேண்டியிருக்கிறது. திரு. முகம்மது ஆசிப்.

* **Thiru Mohamed Asif** : Hon. Speaker Sir, at the outset, while thanking you, I wish to pay my respects to my noble leader and Chief Minister of Tamil Nadu Dr. Puratchi Thalaivi (Thumping of desks) for giving me this opportunity to speak in this august House and also for reconstituting the Tamil Nadu Wakf Board and giving me an opportunity to serve it as its Chairman.

Hon. Speaker Sir, I take this as a great honour my noble leader has done for me. I assure the Members of this Legislature and my great leader that I shall discharge my duties to the best of my ability, honesty, and integrity and certainly try to bring laurels to the Government of my great leader Dr. Puratchi Thalaivi.

Hon. Speaker Sir, first I would like to clear the impression I can also call it as a wrong impression—in the general public that the Tamil Nadu Wakf Board owns properties worth crores of rupees and it is a very rich Board. Of course, on that point of view Tamil Nadu owns property of Wakfs worth many crores but it does not belong to the Tamil Nadu Wakf Board. All the properties of Wakfs are under the management and control of every individual wakf. The Tamil Nadu Wakf Board is only an authority, a body, which has got power to control or to see the proper administration of the wakf properties managed by the individual Mutawalis. For this service the Board renders, gets a small amount—I can call it even a paltry sum—of 6 per cent of the contribution out of the net income, the trustees get from their individual wakf properties. Out of this 6 per cent, the Tamil Nadu Wakf Board has to pay 1 per cent as its contribution to the Central Wakf Council and then another $1\frac{1}{2}$ per cent is payable towards audit charges, with the result hardly $3\frac{1}{2}$ per cent of the contribution the Board gets is left and this $3\frac{1}{2}$ per cent of the amount that we receive does not exceed more than Rs. 3 lakhs per month. Whereas, the commitment for the Board is about Rs. 5 lakhs per month. Salaries alone constitute about Rs. 3 lakhs for the staff plus other things as T.A., telephone bill, other incidental charges which come to about Rs. 2 lakhs, i.e., about 5 lakhs on the whole. We can make out the deficit of Rs. 2 lakhs a month which the Tamil Nadu Wakf Board is facing. Consequent to this, the Tamil Nadu Wakf Board could not meet its commitment to pay 1 per cent contribution to the Central Wakf Council which amount has swollen to nearly Rs. 26,32,000.

பிற்பகல் 1–05

(Hon. Deputy Speaker in the Chair).

This default in payment has not only belittled the status of the Tamil Nadu Board in the eyes of the Central Wakf Council but the Tamil Nadu Board is also now deprived of the benefits, facilities which it was deriving in the form of development loan with nominal interest. That is for the development of wakf properties, for new constructions as well as alterations, additions and repairs.

This has caused a great handicap to the Board in taking up any development schemes. Besides this, some years before, the Tamil Nadu Government was also giving a helping hand by giving a development loan to the tune of Rs. 2 lakhs or so to the Board which was also stopped sometime in 1988 for reasons best known to them. So, with this a total breakdown of the development schemes in Tamil Nadu Wakf Board has taken place. Apart from this, I wish to say that the Tamil Nadu Wakf Board does not possess any assets other than the plot of land in George Town, which was purchased some time in 1981 for a value of Rs. 3,07,000. This amount also was received from the Government of Tamil Nadu as a grant given by our great leader, then Chief Minister of Tamil Nadu, Dr. Puratchi Thalaivar. Since then, this plot of land is lying vacant, because there are no funds at the disposal of the Wakf Board for the construction of office premises.

பிற்பகல் 1-10

Meanwhile, I am grateful to the Hon. the Chief Minister, Dr. Puratchi Thalaivi for having donated about Rs. 5 lakhs (Thumping of desks) as an advance from the Government funds to make a beginning in the construction of the office building. In this regard, Hon. Deputy Speaker Sir, through you I wish to request humbly our Hon. Chief Minister to kindly come forward and give us a helping hand by granting at least a crore of rupees. There is a reason why I mention this amount of a crore of rupees. The estimate for the construction which was prepared by the previous Board is available in the file. From that, I could make out that the amount that would be required today would be much more than what was estimated a couple of years ago. However, I think it will be reasonable if I could request for the grant of about a crore of rupees only. If this amount is allotted right now, the Board will be in a position to take up the work. Of course, we are going to take up the work with the advance already given. However, to complete the work at an early date without any halt or break in between, to proceed with the work at one stretch and complete it in a short time, this amount will be helpful. At present, the Tamil Nadu Wakf Board is functioning in a very old, dilapidated, rented building and it is paying about Rs. 5,000 as rent. The space available in this building is really insufficient in all respects. If we take up the construction of office premises now, it will take at least one year to complete the work. Till then, I feel that it would be in the interests of the better administration and management of the Wakf Office, if an alternate accommodation is allotted in any of the Housing Board buildings, either on a rent-free basis or on nominal rent. If that is done, we could make a good start and begin the work of the newly constituted Wakf Board with the blessings of our Hon. the Chief Minister. (The gong was sounded). Sir, I have got some more points to say. Kindly give me some more time. In the whole session, I have not spoken and this is the first opportunity that I have taken.

Further, I would like to request the Hon. the Chief Minister, through you, Sir, to help the Board by issuing strict instructions to the police authorities and also the Revenue Authorities to come to rescue whenever the Wakf Board Officials approach them for help to prevent trespasses in the Wakf properties, sir, encroachments have become the order of the day. In very many places, our Mutawalis face a big problem. we have to even lose the lands because many encroachments crop up over night and this is really a very bad thing.

பிற்பகல் 1–15

This is a Chairtable Institution. The properties of Wakfs are meant for the Charitable purpose. It is the responsibility of all of us to preserve it for the purpose for which it is gifted or wakfed. On these points Sir, I can also say certain enactments which take away the rights of properties of not only Wakfs but also temples, churches and all other religious institutions. To overcome this difficulty the following Acts need immediate amendment granting exemptions to the properties of Religious Charitable Institutions.

The Loan Abolition Act : Under this Act the ownership of the Wakf is taken away and vested with the occupants by grant of ryotwari pattas to the agriculturists. A considerable portion of the Wakfs' land in this State is lost by the Wakfs.

The Second one is *Cultivating Tenants' Protection Act*. This Act prevent the Mutawalis from evicting the agricultural tenants from their holdings even if they default to pay the rents for several years. Very often the rents of agricultural lands including the Mutawali's share are taken away by the announcement of concessions granted to Cultivating Tenants, by the Government.

The Third Act is *kudiyiruppu Act*. By this Enactment the Tenants of the Agricultural land having a small hut or a structure nearer in the Farm land is given protection occupied by him or her is to be sold to him or her only. Under this Enactment also Wakf lands are lost.

Under the above said enactments a major portion of the agricultural lands are lost to the Wakf. 75 to 80 per cent of the Wakf's properties in Tamil Nadu consist of agricultural lands only. By the above said enactments the income and the coffers of the Wakf is lost to a very large extent.

Then comes the City Tenants' Protection Act. By this enactment the tenant of a building has put up a construction of his own in the Wakf land enjoys the protection from eviction. The land occupied by him has to be sold to him for the price fixed by the Courts if the Landlord wants to vacate his tenant. The amount fixed in almost all cases is negligible and that too has to be paid in instalments only. Further I humbly suggest for a better administration and quick justice setting up of Special Tribunals with powers to fix damages for the wrongful occupation of Wakf lands and also for eviction. The Special Courts or Tribunals to be set up for taking action for recovery of alienated Wakf property or the market value expeditiously. Because, as on today several cases relating to the recovery of Wakf properties are pending in vairous Courts including High Courts and Supreme Court for several years ranging from 20 to 30 years. The very purpose is affected we all know justice delayed is justice denied.

Sir, I have already explained the plight faced by the Tamil Nadu Wakf Board. On this count, I humbly request our Hon. Chief Minister, through you Sir, to kindly come forward to help us with certain grants, as is being done in Karnataka, for the administration of our Board. So, these are the few suggestions and some requests to make.

பிற்பகல் 1-20

Now, in a nutshell, I wish to place before this August House the following with my plea to the Hon'ble Chief Minister Dr. Puratchi Thalaivi to consider them with sympathy and help the Wakf Board to come out of the woods :

Renovation grant for the Wakf properties may kindly be increased from Rs. 3 lakhs to atleast Rs. 10 lakhs with immediate effect and also accord sanction to increase the maximum amount of aid to the individual institution from Rs. 15,000 to Rs. 25,000.

Request to kindly sanction a grant of Rs. 30 lakhs for Board's administration expenses and Rs. 60 lakhs towards benefit of wakf institutions yearly as is being done in the neighbouring state of Karnataka.

Mr. Deputy Speaker : Sir, the Bill has to be passed.

Thiru Mohammed Asif : Deputy Speaker Sir, I have covered a major portion. I just want to take two more minutes. I request our Government to kindly consider favourably and accord sanction of Ulema Pension to all the 200 persons now in the waiting list and thereby help the deserving aged helpless religious people and then to revive the development loan with an increase to Rs. 10 lakhs from Rs. 3 lakhs.

Finally, Sir, I also make a plea to the Government to come out with a ban on the sale of Wak' porperties—not only sale, but also long leases. Of course there is a provision for the sale of the Wakf properties in the Act, for the betterment etc. But, it is very often being not operated properly or taken care of. With the result, the properties whose value is appreciating day by day, are sold for very small amounts. So, the very purpose for which the Wakf has given or donated the properties to the Wakf is lost.—Not only the value, but their sentiments also is not honoured. In this regard I wish to add that when I was the Minister I had imposed the ban and I think, for some reason, now it stands revoked. I request the Hon. Chief Minister to kindly look into this and do the right thing what she feels proper, to protect the Wakf properties.

Thank you, Deputy Speaker Sir, for giving me this opportunity to say a few words of my feeling. Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

*திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின் இது மூன்றாவது நிதி நிலை அறிக்கை, நிதி நெருக்கடியிலும், மிகவும் சிறப்பாக

மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒருவர் முன்பு பேரவையில் பேசியதாக குறிப்பிட்டுப் பேரவைத் தலைவர் தெரிவித்த கருத்து குறித்த விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் காலையில் 1966-வது ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சி என்று ஒரு உறுப்பினர் பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சியைச் சொல்கிறபோது, தற்போதைய கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம் என்பது போல அது பதிவாகி இருக்கிறது. அவர் தற்போதைய கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம் அல்ல. அன்றைய சென்னிமலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். நல்லசிவம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 28]

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி.

பிற்பகல் 1-25

திரு. எஸ். அன்பழகன் : இந்தச் சட்டத்தை சிறப்பாக நிறைவேற்றி பல மாநிலங்களுக்கு தமிழகம் வழி காட்டும் அளவுக்கு......(மணியடிக்கப்பெற்றது). (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நல்லசிவம் தான். ஆனால் தற்போதைய கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம் அல்ல என்று சொன்னேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த சென்னிமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். நல்லசிவம்.

திரு. எஸ். அன்பழகன் : தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டும் அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருப்பதை வரவேற்கக் கடமைப் பட்டுள்ளேன். குறிப்பாக தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு மற்ற மாநிலங்களை விட சிறப்பாக இருக்கிறது என்பதை வடக்கேயிருந்து வரும் தலைவர்களும் சரி, வெளிநாட்டவரும் சரி பாராட்டுகிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களோ மக்களுக்காக பல நல்ல திட்டங்களையும் பலகோடிக்கணக்கான நலத் திட்டங்களையும் அறிவித்தாலும், அதிலேயும் குறை சொல்லுகிறார்கள். ஏனென்றால் தொகுதிக்குச் சென்று மக்களைச் சந்திக்கும் போது சட்டமன்ற உறுப்பினர் அவர்களே, நீங்கள் சட்ட சபையில் பேசினீர்களா ? எதிலே பேசினீர்கள் ? வரவு—செலவுத் திட்டத்திலா, வேளாண்மைத் துறையிலா, பொதுப் பணித்துறையிலா அல்லது போக்குவரத்துத் துறையிலா என்று கேட்டால் பதில் சொல்ல முடியாத அளவிற்கு அவர்கள் தலை நாணி குனியும் அளவுக்கு இன்று நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கடந்த 5, 6 நாட்களாக நாம் அறிவோம். அருமை மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் நேற்று அவர்கள் வெளிநடப்பு செய்யாததற்குக் காரணம் என்ன என்று தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு ஒன்றே ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது. நேற்று அவர்கள் வந்தது, நம்முடைய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் ஏதாவது சம்பளம் உயர்த்திக் கொடுப்பார்கள், சம்பளம் கொடுப்பார்களோ அதை தெரிந்துக் கொண்டு போகத்தான் வந்தார்கள் என்று நினைத்துப் பார்க்கிறேன். புரட்சித் தலைவி அவர்களே, யானைக்கு வலிமை அதனுடைய தும்பிக்கை உங்களுக்குரிய வலிமை மக்களுடைய நம்பிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கையும் இந்த நம்பிக்கையும் சேர்த்து இரண்டு கைகளாக வைத்துக் கொள்ளுங்கள் வேறு எந்தக் கையையும் நம்பாதீர்கள், அது நன்றி கெட்ட கை என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

எனவே நீங்கள் துணிந்து உங்கள் வழியே தொடருங்கள் நாங்கள் எல்லாம் தொடர்ந்து வருகிறோம் என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா", "தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவனுக்கொரு குணம் உண்டு" என்றும் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்று சொன்ன நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் வாழ்ந்த வீட்டை அரசுடைமையாக்கி எங்களுக்கெல்லாம் பெருமை செய்த புரட்சித் தலைவி அவர்களுக்கு நாமக்கல் தொகுதி மக்கள் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக நாமக்கல்லிலே இந்தியாவிலேயே முதன்மைத் தொழிலாக லாரித் தொழில் இருக்கிறது. ஏறக்குறைய 7 ஆயிரம் லாரிகள் இங்கே (நாமக்கல்லில்) இருக்கின்றன. அதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகி அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனைத் தவிர்க்கும் பொருட்டு நாமக்கல்லிலே ஒரு பைபாஸ் சாலையை விரைவாக அமைத்துத் தரும்படி என் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்ற கோழிப் பண்ணை நாமக்கல்லைச் சேர்ந்தது என்ற பெருமை உண்டு. அப்படிப்பட்ட அந்த கோழிப் பண்ணையிலே கடந்த 2 மாத காலமாக ஐ.பி.டி. Infectious Burell Disease என்று சொல்லக் கூடிய வைரஸ் நோயால் கோழிகள் பாதிக்கப்பட்டு இலட்சக்கணக்கான கோழிகள் இறந்திருக்கின்றன. அந்தக் கோழிப் பண்ணை வைத்திருப்பவர்கள் எல்லாம் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் வருடா வருடம் இது போன்ற நோய் வந்து அந்தக் கோழிகளை பாதிக்கும்போது சரியான மருந்து இல்லாமல் போகிறது. அரசிலேயிருந்து அந்த மருந்தைத் தயாரித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். எனவே கோழிகளுக்கு வேண்டிய மருந்துகளை அரசே தயாரிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் உள்ள தனியார் கோழிப் பண்ணையில் உள்ள கோழிக் குஞ்சுகள் இலட்சக் கணக்கில் இறந்தன, அதற்கு அரசாங்கம் மருந்து தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கே இருக்கக் கூடிய அந்தக் கோழிகளை வளர்க்கக் கூடியவர்கள் அரசு மருந்தை பயன்படுத்துவது இல்லை. தனியாக அவர்களே வாங்கி தனியாக மருத்துவரை வைத்து ஒரு கோழிக்கு எவ்வளவு தடுப்பு மருந்து தேவையோ அந்த அளவுக்குக் கூட அந்த மருந்தைக் கொடுக்

காமல் அவர்களுடைய கவனக் குறைவினால்தான் அந்தநிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அது தெரிந்தவுடன் அரசு முழு வீச்சாக இயக்குநர்களையும் மருத்துவர்களையும் அனுப்பி வைத்து அந்த நோயைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்றும் அங்கே ஒரு டீம் இருந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 1-30

திரு. எஸ். அன்பழகன் : அடுத்ததாக வேளாண்மைச் கொள்கை குறிப்பேட்டில் சேலம், பெரியார் மாவட்டங்களில் இந்த ஆண்டு மழை குறைவாக இருக்கிறது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. உண்மைதான். அதே நேரத்தில் நிலத்தடி நீர் கீழே போய்விட்டதால் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு வருகிறது. இதை போக்கும் பொருட்டு நிரந்தரமாக நீண்டகால திட்டங்களை தண்ணீர்ப் பஞ்சம் போக்குவதற்கு தயாரிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஓரிரு உதாரணங்களை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். காவேரி ஆற்றிலிருந்து நாமக்கல் கால்நடை கல்லூரிக்கு வருகின்ற அந்த வே சைடு வில்லேஜ் என்று சொல்லக்கூடிய வழித்தடங்கள் கிராமங்களுக்கு வரக்கூடிய தண்ணீரை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அதே மாதிரி மேட்டூர் காடையாம்பட்டித் திட்டம், முசிறி தலைவாசல் திட்டம், நாமகிரிப்பேட்டை மோகனூர் திட்டம் போன்ற திட்டங்களை விரைவாக நிறைவேற்றி சேலம் மாவட்டத்தில் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கோரிக்கை விடுகிறேன்.

அடுத்ததாக நாமக்கல் வளர்ந்து வரும் நகரம். அதில் அனைத்து மாவட்ட அலுவலகங்களும் இருக்கின்றன. தற்போது கூட நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்திலே சுதந்திரம் வாங்கியதிலிருந்து இது வரை எங்கள் நாமக்கல்லில் (போலீஸ் குவார்ட்டஸ்), காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் இல்லை. இந்த ஆண்டு 35 வீடுகள் கொடுத்துள்ளார்கள். அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அங்கு அதிக விபத்துக்கள் ஏற்படுவதால் நாமக்கல் காவல்நிலையத்தை அர்பன், ரூரல் என்று இரண்டாகப் பிரித்து நாமக்கல்லிலே போக்குவரத்து இடைஞ்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நாமக்கல் ஒன்றியத்தில் உள்ள 6 கிராமங்களை நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கும் தீர்மானம் கடந்த ஓராண்டுக் காலமாக நடப்பில் இருக்கிறது. அதையும் சேர்த்து நமக்கல் நகரத்தை விரிவு படுத்த வேண்டுகிறேன். அப்படி நாமக்கல் நகரோடு இணைக்கும் போது இந்த லோக்கல் ஸெஸ் டாக்ஸ் என்பது ஒன்றியத்திற்குக் கிடைக்காது. அதற்குப் பதிலாக ஸ்பெஷல் கிராண்ட் டாக்ஸ் ஒன்றை ஏற்படுத்தி

[திரு. எஸ். அன்பழகன்] [1993 ஏப்ரல் 28

அந்த ஒன்றியத்திற்குத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் சேலம் மாவட்டத்திற்கு– அங்கு தான் தாழ்த்தப்பட்ட தொகுதிகள் அதிகமாக இருப்பதால்–அதிகமான வீடுகள் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாமக்கல் நகராட்சியில் ஏ.எஸ். பேட்டை., திருச்செங்கோடு ரோடு, பள்ளிசாமி தெரு போன்ற வீதிகளுக்கு குடிநீர் வழங்க எஸ்டிமேட் போட்டு ஓராண்டுக் காலம் ஆகியும் எஸ்.ஈ. அலுவலகத்தில் அந்த ஃபைல் இருக்கிறது. அதை உடனே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சியை ஒட்டிய அழகு நகரில் வீட்டு வசதி மூலம் காவேரி நீர் வழங்க வேண்டுகிறேன். ஏன் என்றால் வீட்டு வசதி மூலம் கட்டிய வீடுகளில் பாதி வீடு நகராட்சியில் இருக்கிறது. அதற்குத் தண்ணீர் கிடைக்கிறது. பாதி வீடு ஊராட்சி ஒன்றியத்தில் வருகிறது. அதற்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. அந்த நியாயத்தை அறிந்து மிதமுள்ள பாதி வீடுகளுக்கும் காவேரி நீர் வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் அதிகமாக வசிக்கக் கூடிய ஆசிரியர் காலனிக்கு வழியோர கிராமங்கள் மூலமும் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். மோகனூர், எருமப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பவுத்திரம் வரை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த மாதம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சேலத்தில் வந்து நலத் திட்டங்களை அறிவித்த அந்த நல்ல திட்டங்களில் எருமப்பட்டி பஸ் ஸ்டாண்டும் ஒன்று. அதை விரைவில் கட்டி முடித்து அந்த எருமப்பட்டி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருகின்ற 1994 ஆம் ஆண்டுடன் நாமக்கல் நகராட்சிக்கு 25 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. இந்த வெள்ளிவிழா ஆண்டு நினைவாக ஒரு கட்டிடம் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுகிறேன். நீண்ட காலமாக சேலம் மாவட்டத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றி சேலம் நகரத்தினுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக வசதிக்காக சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது காசியிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை ஏழு - என்.எச். 7 அந்த சாலையில் பெங்களூர் திருச்சி செல்லக்கூடிய சாலையில், மதுரை விழுப்புரம் செல்லக் கூடிய சாலையில் மத்திய பகுதியில் நாமக்கல் இருக்கிறது. நாமக்கல்லில் அனைத்து மாவட்ட அலுவலகங்களும் இருக்கின்றன. பெரிய நகரம். சேலத்திற்கு அடுத்த பெரிய நகரம். எனவே சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் போது நாமக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

கடைசியாக இந்த ஆட்சியை சட்டம் ஒழுங்கைக் காட்டி கலைக்க நினைப்பவர்களுக்கு ஒரே ஒரு கதையை மட்டும் சொல்ல நான் நினைக்கிறேன். ஆந்திர மாநிலத்திலே தெனாலி ராமன் என்ற ஒரு விகடகவி, ஒரு நகைச்சுவை மன்னன் இருந்தான். அவன் மீது சில மந்திரிமார்களும், சில பெரியவர்களும் களங்கம் கற்பித்து கோள் மூட்டுவார்கள். இப்போது தமிழ் நாட்டைப் பற்றி டெல்லிக்குச் சென்று கோள்மூட்டுகிறார்களே அதைப்போல கோள் மூட்டிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் ராஜா இதையெல்லாம் உண்மையெனக் கருதி அந்த தென்னாலி ராமனைப் பார்த்து, தென்னாலிராமா, உனக்குச் சாவு வந்து விட்டது; நீ செத்தாக வேண்டுமென்று சொல்லிவிட்டார். நகைச்சுவை மன்னனை ஏமாற்ற முடியுமா? சரி என்று ஏற்றுக் கொண்டான் தென்னாலிராமன். சரி அரசே, கேட்பார் பேச்சைக் கேட்கிறீர்கள், என்னை நீங்கள் சாகடிக்க முடிவு செய்து விட்டீர்கள், நான் சாக விரும்புகிறேன் என்று சொன்னார். அப்படியானால் தென்னாலிராமா எப்போது சாகிறாய் என்று அரசன் கேட்டார். அரசரே நான் ஒரு கண்டிஷன் போடுகிறேன். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றார் தென்னாலி ராமன். இவன் சாகத்தானே போகிறான் என்று நினைத்து அந்தக் கண்டிஷனை ஏற்றுக்கொண்டார் அரசர். என்ன கண்டிஷன் என்று கேட்டார். நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று உத்தரவாதம் கொடுங்கள் என்று அரசனிடம் தென்னாலிராமன் கேட்டான். உத்தரவாதம் கொடுக்கிறேன் சொல் தென்னாலிராமா என்றார் அரசர். அரசரே நீங்கள் சாவதற்கு முதல் நாள் நான் செத்து விடுகிறேன் என்றார் தென்னாலிராமன். இதைக் கேட்ட அரசர் அசந்து போய்விட்டார். புதன்கிழமை தென்னாலிராமன் செத்தால் வியாழக்கிழமை நாம் செத்துவிடுவோமே என்று அசந்து போனார். இது நடந்தது ஆந்திர மாநிலத்தில். நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் இருக்கக்கூடிய மாநிலத்தில் இந்தக் கதை நடந்தது; அவருக்கும் தெரியும். அவர் வழிவந்த, காங்கிரஸ்காரர்களுக்கும் தெரியும். எனவே இந்தக் கதையை அவர்கள் மனதில் கொள்ள வேண்டும். சட்டம் ஒழுங்கு என்று சொல்லி தமிழக அரசை எப்படியும் ஆட்டிப் படைக்கவேண்டுமென்று கனவு காண்பவர்களுக்கு இந்தக் கதையை நினைவுபடுத்தி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. எம். பெரியவீரன்.

<u>திரு. எம். பெரியவீரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று வாய்ப்புக் கொடுத்த....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீண்ட நாட்களாக வாய்ப்பு கேட்டுக் கொண்டிருந்தீர்கள்; வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் தயாராக இல்லையென்றால் பரவாயில்லை.

*திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, நான் பேசி விடுகிறேன். நீண்ட நாட்களாக சட்டப்பேரவையில் பல மானியக் கோரிக்கைகளின் மீது பேச எனக்கு வாய்ப்புக் கேட்டு ஏங்கிக்கொண்டிருந்த நேரத்தில் இந்த மானியக் கோரிக்கையிலாவது என்னுடைய பேச்சைப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டப் பேரவைக் கொறடா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னை இந்த மன்றத்திலே 3-வது முறையாக மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கு பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த எங்களது அன்னை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய தொகுதியினுடைய நிலைமைகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆண்டுகளுக்கு முன்பு நீங்களும் பெரியகுளம் தொகுதியில் வேட்பாளராக நின்று மக்களைச் சந்தித்து வந்த பகுதியாகும் அது. பெரியகுளம், பெரிய தொகுதியாகும். அது கொடைக்கானல் பகுதியிலே மலைவாழ் மக்கள், மற்றும் விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே சாலை வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி பல சாலைகளுக்கு அரசு அங்கீகாரம் கொடுத்தும் கூட போதுமான தொகை கட்டுப்படியாகாத காரணத்தால் அந்தச் சாலைகளை யாரும் டெண்டர் பெற முற்படவில்லை. எனவே அந்தப் பகுதியினுடைய சிரமங்களை மனதில் கொண்டு தொகையை அதிகரித்துக் கொடுத்து அந்தப் பணிகளை சிறப்புடன் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பெரியகுளம் தொகுதியில் ஆண்டுக்கு இரண்டு முறை ஜாதிச் சண்டைகளும் மற்றும் சில பிரச்சினைகளும் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறது. பெரியகுளத்துக்கு வெளியே ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே பஸ், வாகனங்கள் போக முடியாத நிலையில் போலீஸ் ஸ்டேஷன் அமைந்துள்ள காரணத்தால் பழைய பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் 48 சென்ட் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை அவர்கள் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தப் பகுதியின் மத்தியில் அது அமைந்து இருப்பதால் அதை உடனடியாக எடுத்துக்கொண்டு அதில் போலீஸ் ஸ்டேஷன் புதிதாகக் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பெரியகுளம் பகுதியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு அந்தப் பகுதிக்கு குடிநீர் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இப்போதுள்ள சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் குடிநீர்ப் பற்றாக்குறையினால் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதை மனதில் கொண்டு

இந்த குடிநீர் தேக்கத் தொட்டியை விரிவுபடுத்தி அதிகப்படியாக குடிநீரைக்கொண்டுவந்து மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கொடைக்கானல் மலைப் பகுதியிலே வருகின்ற மே மாதம் கோடை விழா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்ச்சிகளில் கடந்த முறை, இந்தக் கோடை விழாவுக்கு நமது கழகத்தின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்து அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைத் தீர்க்கும் வண்ணம் பல திட்டங்களைத் தீட்டி அந்தப் பகுதியினுடைய வரைபடங்கள் போன்றவற்றையெல்லாம் கொடுத்து, மக்களுக்குப் பல பணிகளைச் செய்யவேண்டுமென்று கொடுத்திருந்தேன். ஆனால், அம்மா அவர்கள் சென்ற முறை, கோடை விழாவுக்கு ஊட்டி போக வேண்டி இருந்ததால், மறுமுறை வந்து அந்தப் பகுதியினுடைய பிரச்சினைகளை நிறைவேற்றித் தருகிறேன் என்று கூறி இருந்தார்கள். ஆகவே, இந்த ஆண்டு வந்து அந்தப் பகுதி மக்களுடைய நிலைமைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கெல்லாம் நல்ல பணிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு பெய்த மழையின் காரணமாக, பெருவாரியான ஏழைகளினுடைய வீடுகளெல்லாம் இடிந்து, தகர்ந்து பிரச்சினைக்குள்ளாகி இருந்தன. அந்தப் பகுதியினுடைய மக்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று, அதனுடைய வரைபடம் மற்றும் எஸ்டிமேட் போட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. அதனுடைய நிலைமைகளைக் கண்டறிந்து உடனடியாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டி, அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த 1984 ஆம் ஆண்டு பெரியகுளம் சோத்துப்பாறை அணை என்று ஒன்றை நிறுவி அதற்கு கடந்த ஓராண்டுக் காலமாக எந்தவொரு டெண்டரும் பெற முடியாத நிலையில், கட்டுப்படியாகாததால் யாரும் டெண்டர் போடுவதற்கு முற்படாத ஒரு சூழ்நிலையைக் கண்டு, அந்தப் பகுதிகளுக்கு இடுபொருள்களையெல்லாம் நீண்ட தூரத்திலிருந்து எடுத்து வரப்பட வேண்டியது இருப்பதால் ரேட் கட்டுப்படியாகவில்லை என்று, அதிகப்படியாக 30 சதவீதம், 40 சதவீதம் போடுவதால், அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு கான்ட்ராக்ட் பெறக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படவில்லை. இதில் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிடையாகத் தலையிட்டு, உடனடியாக அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், 10 ஆயிரம் ஏக்கருக்குமேல் அந்தப் பகுதிகளில் புஞ்சைக் காடுகளாக உள்ளன. அவை நஞ்சைகளாக மாறுவது மட்டுமல்லாமல், பெரியகுளத்து கீழ்பகுதியிலே உள்ள மதுரை மாவட்டம், இராமநாதபுரம் முடிய இந்த நீர்ப் பாசனம் எல்லோருக்கும் உதவியாக இருக்கும். இதை வெகு விரைவில் முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி விவசாயப் பெருமக்கள் அதிகம் வாழுகின்ற தொகுதியாகும். அதிலே, குறிப்பாகச் சொல்லப்போனால், வெற்றிலை கொடிக் கால் இடுபவர்கள் அதிகமாக உள்ளனர். கடந்த மாதம் கறுகல் நோய் ஏற்பட்டு, பெரும்பாலான விவசாயிகள், அந்தப் பகுதி யிலே உள்ளவர்கள் எல்லாம், பாதிப்புக்கு உள்ளாகி விட்டார் கள். சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி கொடிக்கால் விவசாயிகளுடைய சூழ்நிலையைக் கண் டறிந்து அவர்களுக்கு ஏதேனும் உதவி புரியவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஆண்டுக்காலமாக, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பேசி அன்னை தெரசா பல்கலைக்கழகத்தை கொடைக்கானலுக்கு மாற்றிச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தும்கூட, இதுவரையில் வந்து சேராத சூழ்நிலையில், இந்த ஆண்டு அதை வெற்றிகரமாக முடித்து, அந்தப் பகுதிக்கென்று தீர்மானம் போட்டு, நிறைவேற்றிவிட்டதைக் கண்டு சம்பந்தப்பட்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சார்பாக நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

கொடைக்கானல் பகுதிக்கு இதுவரைக்கும் போட்ட திட்டப் பணிகளுக்கு, கட்டுப்படியாகாத ரேட்டுகளைப் போட்டுவிட்ட காரணத்தால், போட்ட திட்டங்கள் எதுவும் நிறைவேறாத சூழ்நிலையில் இருக்கின்றன. கொடைக்கானல் பஸ் நிலையம் கட்டுவதற்கு ரூபாய் ஒரு கோடி திட்டம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தும் கூட, அந்த டெண்டர் கோரப்படாத சூழ்நிலையில் உள்ளது.

அதேபோன்று, சிறப்பங்காடிகளுக்கும், கட்டிடங்களுக்கும் பலமுறை, 5 முறை டெண்டர் கோரப்பட்டும்கூட, இன்னும் நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே மலைப் பிரதேசத்திற்கென்று தனியாக, ஒரு சிறப்பு ஏற்படுத்தி, அந்தப் பகுதியினுடைய கட்டிட வசதியாக இருந்தாலும் சரி, சாலை வசதியாக இருந்தாலும் சரி, அதற்கு உடனடியாக தொகையை கொஞ்சம் சேர்த்துக் கொடுத்து அந்தப் பணிகள் சிறப்புடன் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்பு மிகு முதல்வர் அவர்களும் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சரி, இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன், பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

1993 ஏப்ரல் 28]

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் முடிந்து விட்டதா ?

திரு. எம். பெரியவீரன் : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியிலே அவர் இப்பொழுது தெரிவித்தது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பாத கமலங்களில் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்து, நடைபெற்ற சட்டமன்றத்தினுடைய காங்கிரஸ் கட்சியால் எழுப்பப்பட்ட சில பிரச்சினைகளுக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுடைய இதயங்களிலே சில நினைவுகளை எழுப்பிச் சில கருத்துக்களைச் சொல்லி விடை பெற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அதற்காகப் பேரவைத் தலைவரவர்கள் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்காக என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தீவிரவாத இயக்கங்களைப் பொறுத்தவரையில் அமெரிக்காவில் நேசிக்கிற நாடுகளினுடைய வரிசையிலே ஒரு காலத்திலே இந்தியா இருந்தாலும் இன்றைக்கு இந்தியா கூட தீவிர வாதங்கள் பெருகியிருக்கிற ஒரு நாடாக அமெரிக்கா கருதுகிறது. நம்முடைய விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையிலே கூட, இந்திய அமைதிப்படை சுமார் 75,000 பேர் முதல் ஒரு லட்சம் பேர் இலங்கையிலே சென்று அங்கேயிருக்கிற மூன்றாயிரம் விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதற்காக முற்பட்டு, ஒரு மாத காலத்திலே அவர்களுடைய ஆயுதங்களைக் கைப்பற்ற முடியும் என்று கருதிய பின்னர், இந்தியப் படையால் ஓராண்டுக்காலம் ஆன பின்னர் கூட, அந்த விடுதலைப் புலிகளை அடக்க முடியாது போய்விட்ட பின்னர், அதற்கு மிஞ்சிய விடுதலைப் புலிகள் எவ்வளவு பயங்கரமான தீவிரவாதிகளாக இருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நாடு உணர்ந்திருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட சர்வதேச தீவிரவாதிகளாகக் கருதப் படுகிற விடுதலைப் புலிகளைத் தமிழகத்திலே இருக்கிற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய திறமையாலும், இங்கேயிருக்கிற சாதாரணமான காவல் துறையை வைத்துக்கொண்டு நடவடிக்கையெடுத்து இன்றைக்குத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகப் பெரிய ஒரு காரியம் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதுபோன்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் நாம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்தோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்படும் என்கிற ஒரு கருத்து அன்றைக்கு பாராளுமன் றத்திலே நிலவியது உண்டு. அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சியாக இருந்த தேசிய முன் னணியைச் சார்ந்தவர்கள் அன்றைக்குப் பாராளுமன்றத்திலே பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப் படக்கூடாது என்று அன்றைக்கு இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்த சந்திரசேகர் அவர் களைக் குறித்துச் சொன்ன நேரத்தில், ஜார்ஜ் பெர்னான்டஸ் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு முறைக்கு பத்து முறை நீங்கள் யோசித்துப் பார்த்து திராவிட முன்னேற்றக் கழ கத்தைக் கலைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

ஆனால் இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்த சந்திர சேகர் தேசிய முன்னணியினுடைய தலைவர்களை அழைத்து, பிரதமருடைய அறையிலே வைத்து, பல்வேறு ஆவணங்களைக் காட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையிலே இருக்கிற உணர்வுகளை, உறவுகளை ஆவணங்கள் மூலமாக தேசிய முன்னணித் தலைவர்களோடு கலந்து, ஒரு முறைக்கு 100 முறை சிந்தித்துப் பார்த்துத்தான் நான் முடிவு எடுப்பேன் என்று நாடாளுமன்றத்திலே அறிவித்த பின்னர்தான், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தேச விரோத கட்சியாகக் கருதப்பட்டு, கலைக்கப்பட்டது என்பதை நான் இந்த மாமன்றத்தில் நினைவு கூற ஆசைப்படுகிறேன்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்ட பின்னர் கூட தேசிய முன்னணி என்பது திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புக் குரலை நாடாளு மன்றத்தில் எழுப்பவில்லை என்பதை நான் நினைவுகூற ஆசைப் படுகிறேன்.

அதுகூட இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கிட்டுவைப் பொறுத்த வரையிலே ஏதோ தமிழகத்திற்கு வந்தது போன்ற உணர்வுகளைப் பரப்புவதற்கு முயற்சித்தார்கள். எவ்வளவு உண்மைக்குப் புறம்பாக அவர்கள் இன்றைக்கு நடந்து வருகிறார்கள் என்பதற்கு கிட்டு போன்ற வர்களுடைய படகிலே அவர்கள் பயணம் செய்ததை அமெரிக்கா, பாகிஸ்தானைப் பார்த்துச் சொல்கிறது, ஜனவரி மாதம் 16 ஆம் தேதி இந்த படகு கைப்பற்றப்பட்ட பின்னர், பாகிஸ் தானிலிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு கிட்டு இலங்கைக்குச் செல்வதை இந்திய ராணுவம் கைப்பற்றியதன் மூலமாகப் பல்வேறு தஸ்தாவேகஜுகள் இன்றைக்குக் கிடைத்திருக் கின்றன என்பதைவைத்து பாகிஸ்தானை ஒரு தீவிரவாத நாடாகக் காட்டுவதற்காக அமெரிக்கா பாகிஸ்தானை எச்சரித்தது. இது

1993 ஏப்ரல் 28] [திரு. கு. லாரன்ஸ்]

இன்றைக்கு ஒரு மிக முக்கிய காரியமாக இருக்கிறது. ஆனால் இவைகளையெல்லாம் காங்கிரஸ் கட்சி மறைத்து வைத்துக் கொண்டு, உண்மைக்குப் புறம்பாக பல்வேறு காரியங்களை இங்கே செய்ய அவர்கள் முற்பட்டு வந்தார்கள் என்பதை நான் மீண்டும், மீண்டும் நினைவுகூற விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

இன்றைக்குக் கூட நம்முடைய ஆந்திராவினுடைய முதலமைச்சரைப் பற்றிச் சொன்னார்கள். அவர், நீதிமன்றத்தினுடைய ஆணை கிடைத்தவுடனேயே தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்யவில்லை. இரண்டு மாதமாக காங்கிரஸ் கட்சி கடுமையான போராட்டம் நடத்தி, அவர் ராஜினாமாவே செய்ய முடியாது என்று கடைசிவரைப் போராடிப் பார்த்து, முடியாத ஒரு சூழ்நிலையில், காங்கிரஸ் கட்சியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்கிற உணர்வோடுதான் அதுவும் 2 மாதத்திற்குப் பின்னாலேதான், ஒரு போராட்டத்திற்குப் பின்னாலே தான் அவர் ராஜினாமா செய்தார்.

இன்றைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை நாம் பார்ப்போமேயானால், இந்த நாட்டிலே, வேறு எந்த நாட்டிலேயும் ஒரு எதிர்க் கட்சியாக 25 ஆண்டுக் காலம் இருந்தவர்கள், ** என்று நமக்குப் புரியவில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் 25 ஆண்டுக் காலம் எதிர்க்கட்சியாக இருந்து, இந்த 25 ஆண்டுக் காலமாக ** என்ற குற்றச்சாட்டை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரியல்ல: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. 'பெர்சனல்'-ஆக யாரையும் குற்றம் சொல்லக் கூடாது. ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. ஜே.பி.-யைப் பொறுத்த வரையில், மார்ச் 21 ஆம் தேதி இங்கே நடைபெறுவதாக இருந்த ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட அவர்கள் கடுமையாக விமர்சித்தார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற கேரளாவில் பிப்ரவரி 18ஆம் தேதி பொதுக்கூட்டம் நடைபெற்றது. சென்னை மாநகரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு மட்டும் பயங்கரமாக ஒரு இரண்டு வாரகாலமாக சட்டமன்றத்திலே பல்வேறு பிரச்சினைகளை செய்தவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிற கல்கத்தாவிலே கூட ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். பேரணிகளை நடத்தி இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கட்சியும் இதுபோன்ற இயக்கங்கள் இருக்கிற இடங்களிலே
மட்டும்தான் அவர்கள் இன்றைக்கு பேரணிகளை நடத்தி
யிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நடைபெற்ற சட்டமன்றத்திலே பத்மினி
யினுடைய வழக்கைப் பற்றி சொன்னார்கள். ஆக, இந்த
சட்டமன்றம் முன்பு நடை பெற்ற நேரத்தில், 10 மாதங்களுக்கு
முன்னால்,பத்மினியின் வழக்கு குறித்து, இடது சாரி கம்யூனிஸ்ட்
கட்சியும், வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சியும் அந்தப் பிரச்சினை
யை சட்ட மன்றத்திலே எடுத்து வைத்தது. ஆனால்,
அன்றைக்கு காங்கிரஸ் அந்தப் பிரச்சினையை சட்டமன்
றத்திலே எடுத்து வைக்கவில்லை. மாறாக, இப்போது
10 மாதங்களுக்குப் பின்னர்தான் அந்தப் பிரச்சினையை
சட்ட மன்றத்திலே எடுத்து வைத்தார்கள் என்பதை
நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், சட்ட மன்றம் நடைபெற்றுக் கொண்
டிருக்கிற நேரத்திலே, 3 சட்ட மன்ற உறுப்பினர்களை
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்
கடத்திச் சென்று விட்டார்கள் என்று கூட காங்கிரஸ் கட்சியி
னுடைய தலைவர்கள், ஒரு பிரச்சினையைக் கிளப்
னார்கள். அது பத்திரிகைகளிலே எல்லாம் பெரிய பிரச்
னையாக இருந்தது. இரண்டு மாதகாலமாக சட்ட
மன்றம் நடை பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் காங்
கிரஸ் கட்சியோ, காங்கிரஸ் கட்சினுடைய சட்ட மன்ற
உறுப்பினர்களோ, அதனுடைய தோழமைக் கட்சிகளோ
அந்தப் பிரச்சினையை சட்ட மன்றத்தில் எடுத்து வைக்க
வில்லை. அடிப்பதற்குச் செல்கிற நேரத்தில் காற்றுப்
பட்டால்கூட அது ஒரு பெரிய பிரச்சினையாக இந்த சட்ட
மன்றத்திலே எடுத்து வைத்தவர்கள், கடத்திச் சென்றார்
கள் ; அண்ணா திராவிட முன்னேற்றக் கழத்தினர் கடத்திச்
சென்றார்கள் என்று சொன்னார்களே, அதை எடுத்து
வைக்கவில்லை. எனவே, பொய்யான சில பிரச்சினை
களைச் சொல்வதற்காக வேண்டுமென்றே தவறான,
அவைக்குப் புறம்பான சில காரியங்களைச் செய்வதற்
காக ஒரு பரபரப்பான செய்தியை பரப்புவதற்காக
தார்மீக உணர்வுகளுக்கு அப்பால், பல்வேறு காரியங்
களை சட்டமன்றத்திலேயும், சட்டமன்றத்திற்குப்
புறமும், காங்கிரஸ் கட்சி செய்து வந்தது என்பதை நான்
உறுதியாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. எஸ்.
வி. சண்முகம் அவர்கள் கூட சொன்னார்கள். இந்த
சட்டமன்றத்திலே இன்றைக்கு திராவிட முன்னேற்றக்

1993 ஏப்ரல் 28] [திரு. கு. லாரன்ஸ்]

கழக உறுப்பினர் ** என்று, **வேட்டி இல்லாமல் 'பேன்ட்' போட்டுக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை இன்றைக்கு ஏற்படுத்துவதற்கு காங்கிரஸ் கட்சியினுடைய சட்ட மன்ற உறுப்பினர்கள்தான் காரணம். நம்முடைய அவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அந்தப் பிரச்சினை ஏற்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதியினுடைய. . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் சொன்ன ''வேட்டி போடாமல் 'பேன்ட்' போட்டுக் கோண்டு வருகிறார்'' என்பது மட்டும் அவைக் குறிப்பிலே இருக்கும். அதற்கு முன்னர் * * * என்பது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அந்த மாதிரி சொற்றொடர்கள் எல்லாம் வேண்டாம். அவர்கள் அவையிலே இல்லை என்று சொன்னாலும் கூட, சில உறுப்பினர்கள் பற்றி அவ்வாறு சொல்லக் கூடாது.

<u>திரு. கு. லாரன்ஸ்</u> : அன்றைக்கு அவர், இந்த சட்ட மன்றத்தில் காங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பியனர்கள் தன்னைத் தாக்கினார்கள் என்று சொன்னார். அதற்குப் பிறகு, நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்தார் என்பது உண்மை; அதனுடைய அடிப்படை.

பிற்பகல் 1-55.

இந்தச் சட்ட மன்றத்தில் அவர் வேட்டி இழந்த செய்திகள் அல்லது அவரை அடித்தது போன்ற செய்திகளை திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சியும் நடத்தியிருக்கிறது. இதுகாறும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் எந்த விதமான தவறான காரியங்களை இந்தச் சட்ட மன்றத்தில் செய்யவில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். அவர்களுடைய பல்வேறு சட்டத்திற்குப் புறம்பான காரியங்களை எல்லாம் பொறுமையோடு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றைக்கு இந்த அவையிலே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுகூற ஆசைப்படுகிறேன். அதே, போல மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் கூட அன்றைக்கு ஆவணத்தைக் கொடுப்பது போன்று ஒரு பாசாங்கு செய்து, ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[திரு. கு. லாரன்ஸ்] [1993 ஏப்ரல் 28

பெரிய பிரச்சினையைச் செய்தார்கள் சில பேப்பர்களை வைத்துக் கொண்டு, இது காறும் அந்த ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை என்று கருதுகிறேன். அது போல இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்று நடைபெற்ற முதல் கூட்டத்திலேயே கவர்னர் உரையாற்றுகிற நேரத்தில நம்முடைய மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்கள் கவர்னர் இந்த நாட்டிற்குத் தேவையில்லை என்று சொல்கிற ஒரு வாதத்தை எடுத்து வைத்தார்கள். ஒரு கொள்கை வடிவமாக கவர்னர் தேவையில்லை என்று சொன்னார்கள். தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகளை எழுப்பினார்கள். ஆனால், அதே தலைவர்கள் இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நம்முடைய மாண்புமிகு அவைத் தலைவருக்கு எதிராக, இன்றைக்கு கவர்னர் அவர்களைச் சந்தித்து, அவர்கள் மனுக்கள் கொடுக்கிறார்கள் என்றால், எவ்வளவு முரண்பாடான கொள்கைகளை அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் உங்களுடைய சிந்தனைக்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஏதோ இரண்டாக வந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட எதிர்க்கட்சி இரண்டாக வந்தவர்கள், ஒன்றாகப் போனது போல நினைக்கிறார்கள். உண்மையில் அண்மைக் காலங்களில் தமிழகத்தில் தெரு ஓரங்களில் எப்படி சண்டைப் போட்டார்கள் என்பதும் அதைத் தொடர்ந்து வர இருக்கிற சட்ட மன்றத் தொடர்களில் அவர்கள் இன்னும் இரண்டாகப் பிரிவதற்கு வாய்ப்புண்டு என்பதையும், அவர்களே சண்டை போட்டுக் கொண்டிருந்தவர்கள், சண்டைகளை நிறுத்தி விட்டு, நம்மோடு தாக்குகின்ற முயற்சிகளை மேற்கொள்பவர்கள், மீண்டும் அவர்களே சண்டை போடுகிற வாய்ப்புண்டு என்பதையும் இந்த மன்றத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று சட்டமன்றம் முடிவுற்ற பின்னர் திருநாவுக்கரசு அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய பக்கத்திலேயிருந்து ஏசுவது போன்ற குரல் எழும்பியது. ஆனால், அந்தக் குரலை வைத்துக் கொண்டு, யார் என்று அடையாளம் சொல்லாது, கும்பலாகவே அவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டு சட்டமன்றத்தினுடைய தொடர் நடவடிக்கைகளை அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு சாதாரண விவகாரத்திற்காக பல்வேறு பிரச்சினையை எடுத்து வைத்து ஒரு போராட்டத்தைச் செய்தார்கள். உண்மையில சொல்லப்போனால், விடுதலைப் புலிகள் பிரச்சினை வருகிற நேரத்தில் திருநாவுக்கரசு அவர்களை பல்வேறு நேரங்களில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைகளுக்கு எதிராக இந்த மன்றத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கிற

1993 ஏப்ரல் 28] [திரு. கு. லாரன்ஸ்]

எஸ். ஆர். பாலசுப்ரமனியன்தான் முதலிலே உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார். அவரே பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை எழுப்பி, இந்த அவையினுடைய தீர்மானத்திலே கலந்து கொண்டு ஒட்டு மொத்தமாக பத்திரிகைகளுக்கு எதிராக தீர்மானத்தைப் போட்ட பின்னர். பத்திரிகைகளுக்கும் இந்த அவைக்கும் பிரச்சினைகள் எழும்பிய நேரங்களில் எல்லாம் எப்படிப்பட்ட வேதனையான காரியங்களை காங்கிரஸ் கட்சி செய்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும், அதுபோன்று காங்கிரஸ் கட்சியை இழிவுபடுத்தி குமாரதாஸ் பேசினார் என்பதற்காக ஒரு நாள் முழுவதுமே இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற எஸ்.ஆர்,பி.-யும் மற்ற காங்கிரஸ்காரர்களும் குமாரதாசுடன் சண்டை போட்டார்கள், ஆனால் அதற்குப் பிறகு இரண்டு பேரும் சேர்ந்து கொண்டார்கள், அன்றைக்கு ராஜீவ் காந்தி ஆட்சியிலே இருந்த காலகட்டத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவருடன் இருந்தது. ராஜீவ் காந்தி நாடாளுமன்றத்திலே எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற நேரத்திலே கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே ராஜீவ் காந்தியை ஆதரித்தது, அன்றைக்குக் கூட ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற பல்வேறு சூழ்நிலைகள் எழும்பியது உண்டு. இந்தியாவிலேயே ராஜீவ் காந்தியை ஆதரித்த ஒரே இயக்கம். புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் இருந்த இயக்கம்தான், நாம் அந்தக் கொள்கையிலே இன்றைக்குத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம், ஆனால் காங்கிரஸ் கட்சி விடுதலைப் புலிகளை ஆதரித்த, நாட்டை விட்டே ஓட்டப்பட்ட இயக்கங்களோடு. இந்த நாட்டிலே விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்ற இயக்கங்களோடும் தொடர்ந்து உறவை வைத்துக் கொண்டு நமக்கு தொந்தரவுகளைச் செய்வார்களேயானால், அதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்வேன், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டு பிரச்சினைகளை நான் இந்த மன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், சர்க்கரை அரசு உயர் நிலைப் பள்ளியில் இஸ்ரவேல் என்கிற ஒருவர் அங்கே வாச்மேன்—ஆக இருக்கிறவர். காலை 8,30 மணிக்கு அவர் இருதய நோயால் துடித்து இறந்தார் என்பதும்....

பிற்பகல் 2-00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது.

திரு. கு. லாரன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன், இஸ்ரவேல் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அந்த வாட்ச் மேன் இருதய நோயால் துடித்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்தப் பள்ளிக் கூடத்தில் இருந்த பல்வேறு ஊழியர்கள், ஆசிரியர்கள் அதைப் பார்த்த பிறகும் அவருடைய உடம்பிலே பல்வேறு காயங்கள் இருந்தது தெரிந்த பிறகும் 100 அடி பக்கத்தில் ஒரு மருத்துவமனை இருந்தபோதிலும், ஒன்றரை மணி நேரமாக அந்த மருத்துவமனையில் சேர்க்காத காரணத்தால் அந்த ஊழியர் இறந்துவிட்டார் என்று ஒரு செய்தி இருக்கிறது, அதை இந்த அரசாங்கம் விசாரிக்க வேண்டும். 26-3-1993 ஆம் நாள் அந்தச் சம்பவம் நடைபெற்று இருக்கிறது. இதை அரசு விசாரிக்க வேண்டும் என்று மெத்த பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன்,

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சவுதி அரேபியா போன்ற பல்வேறு நாடுகளில் பணியாற்றுவதற்கு நம்முடைய தொழிலாளத் தோழர்கள் செல்கிறார்கள். ஆனால் அங்கே இறந்து விட்டால் என்ன காரணத்திற்காக இறந்து விடுகிறார்கள் என்ற உண்மையான செய்திகள் நமக்குக் கிடைப்பதில்லை. கிடைக்கிற செய்திகளும் 40, 50 நாட்களுக்குப் பிறகு கிடைக்கிறது. அப்படி அவர்கள் உடல் அழுகிப் போகிற சூழ்நிலையில் இறந்து விட்ட பின் இரண்டு மாதங்களுக்குப் பின்னாலே வருவதன் மூலமாக இந்த நாட்டு மக்களுக்கு மிகுந்த இன்னலும், துன்பங்களும் ஏற்படுகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நெல்சன், முருகன், ராபின்சன், ஐயப்பன் ஆகிய 4 பேர் இறந்துவிட்டு. எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல். எந்த விதமான தகவலும் இல்லாமல் இரண்டு மாதங்களுக்குப் பின்னால் அவர்களுடைய அழிந்து போன உடல்களை அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். இது மத்திய அரசுக்குச் சொந்தமான துறை தொடர்புடையது. மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். எனவே இது குறித்து நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லி இதுகாறும் பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. புதுநயினார் ஆதித்தன். நேற்றைய தினம் பேசுவதற்காகக் கேட்டீர்கள். (குறுக்கீடு) அதனால் 5 நிமிடம்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய

தினம் என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேச முடியாத காரணத்தால் இன்று என்னுடைய தொகுதியைப் பற்றி சில பிரச்சினைகளைக் கூறி சட்டமுன்வடிவை வரவேற்கலாம் என்று இருக்கிறேன். என்னுடைய தொகுதியில், சென்ற கூட்டத் தொடரில் கே.டி.சி. சார்பாக தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று அமைப்பதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்திருந்தார்கள். ஆனால் அதிகாரிகளினுடைய மெத்தனப் போக்கினால் அவர்கள் அதைப் பாளையங்கோட்டையிலே அமைக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் தலையிட்டு என் தொகுதியில் அது அமைவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கனடியன் கால்வாய் என்பது என்னுடைய தொகுதியினுடைய முக்கியமான பிரச்சினையாகும். என்னுடைய சேரன்மாதேவி தொகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி இருக்கிற தொகுதி. இந்த கனடியன் கால்வாயில் உள்ள 192 மடைகளும் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருப்பதால் என்னுடைய தொகுதியில் உள்ள கடைசிக் குளமான கொத்தங்குளம் வரைகூட தண்ணீர் குறைவான காலங்களில் வந்து சேர்வதில்லை. அதனால் அந்த மடையைச் சீர் செய்வதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உலக வங்கியோடு தொடர்பு கொண்டு அதைச் சீர் செய்து தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கடயத்தின் வடக்குப் பகுதியில் வாழ்கிற மக்கள் மானாவாரி விவசாயம் செய்பவர்கள். மழையை நம்பி, மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும் என்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன் கருதி அங்கே இருக்கிற ராமநதி அணையில் கால்வாய் அமைத்துக் கொடுத்து, கடயத்தின் வடக்குப் பகுதியில் இருக்கின்ற, மழையை நம்பி விவசாயம் செய்து கொண்டிருக்கிற, அந்த மக்களுக்கு வழி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள முக்கியமான பிரச்சினை ஒன்றைச் சொல்கிறேன். என்னுடைய தொகுதி வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி என்று இரண்டு பகுதியாக இருக்கிறது. இந்த தெற்குப் பகுதியில்தான் விவசாயமும், தண்ணீரும் அதிகமாக இருக்கிறது. அதாவது மணிமுத்தாறு பாசனம், தாமிரபரணி பாசனம் ஆகியவை தெற்குப் பகுதியிலே இருப்பதால் விவசாயம் எல்லாம் அங்கேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே தெற்குப் பகுதியில் விவசாயம் செய்து, அதன் மூலம் வருகின்ற விளை பொருட்களை எல்லாம் வடக்குப் பகுதிக்கு எடுத்து வருவதும், பக்கத்து மார்க்கெட் ஆன ஆலங்குளம் சென்று அதை வியாபாரம் செய்வதற்கும் பல கிலோ மீட்டர்கள் சுற்றி வர

[திரு. இரா. புதுநாயினார் ஆதித்தன்] [1993 ஏப்ரல் 28

வேண்டி இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தொகுதிக்கு ஒரு பாலம் என்று அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் முக்கூடல்—வீரவநல்லூர் பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத்தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் கடனாநதி அணை பெரிய அளவிலே போடப்பட்டு மீண்டும் கருணாநிதி காலத்திலே அது சுருக்கப்பட்டு அந்த அணை முடிவு பெற்றது. அந்த அணையை விரிவுபடுத்தி என்னுடைய தொகுதி மக்கள் பயன் பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின் மோட்டார்கள். தொகுதியிலுள்ள குடி தண்ணீர் பிரச்சினை. மின் மோட்டார்கள் பழுதடைந்தால், அதை ரிப்பேர் செய்வதற்கு என்று ஒரு கோட்டத்திற்கு ஒருவருக்குத்தான் அனுமதி அளித்து இருக்கிறார்கள். இப்படி குடி தண்ணீர் பிரச்சினைக்கான அந்த மின் மோட்டார் பழுதடைந்த நேரத்தில் மோட்டார் பழுதை நீக்க ஒரு கோட்டத்திற்கு ஒருவர் என்றால் அந்த பழுதை நீக்க வருவதற்கு பல மாதங்கள் ஆகின்றன. அதனால் ஒரு கோட்டத்திற்கு 2, 3 பேர்களை அரசாங்கத்தில் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

என்னுடைய தொகுதியில் கடையத்தில் பனையேறும் நாடார் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை விட மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். வருடத்தில் 6 மாத காலம்தான் பனையேறுகின்ற தொழில் இருக்கிறது. மீதி 6 மாத காலம் அவர்கள் வேறு எந்தத் தொழிலும் இல்லாமல் மிகவும் வறுமையில் வாடுகின்றார்கள். அவர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது பல கிராமங்களில் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் எல்லாம் முன்பு பி.டி.ஓ.க்கள் கண்ட்ரோலில் இருந்தபோது, பி.டி.ஓ.க்கள் அந்த கிராமங்களுக்குச் செல்கின்ற நேரங்களிலே அதை சோதனை செய்கின்ற வாய்ப்பு இருந்தது. தற்போது அந்த வாய்ப்பு ஏ.ஈ.ஓ. என்ற அதிகாரிகளுக்கு மாற்றப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இப்போது கல்விச் சாலைகளிலே ஆசிரியர்கள் வருவது குறைந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றி பி.டி.ஓ.க்கள் அதிகாரத்தின் கீழ் கிராமப் பள்ளிகள் வரவேண்டும் என்று மரியாதையாக கேட்டுக் கொண்டு..(குறுக்கீடு) (மணியடிக்கப் பெற்றது).

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பணிவோடு என்று சொல்லுங்கள்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : சரி, பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த வெள்ள நிவாரணத்தில் மணி முத்தாறு, பாபநாசம் அணைகளிலே எல்லாம் வெள்ளத்தோடு வரும் மணல் நிரம்பிவிடுகிறது. அதிக அளவிலே மணல் நிரம்பி யிருப்பதை நீங்கள் நீக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

கடைசியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். வெள்ள நேரத்தில் எங்களுடைய மாவட்டத்தில் பல ஏழை எளிய விவசாயிகளுடைய வீடுகள் அழிந்துவிட்டன. அவர்கள் விவசாயத்திலே நஷ்டம் அடைந்து இருக்கின்ற காரணத்தினால், அந்த வீடுகளை மீண்டும் அவர்கள் கட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கின்றார்கள். நீங்கள் குமரி மாவட்டத்திற்கு அறிவித்ததைப் போல எங்க ளுடைய மாவட்டத்திற்கும் அந்த வீடு இழந்த ஏழை விவசாய மக்களுக்கு அந்த வீட்டை மானியத்தில் கட்டித்தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டு இந்த சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றில் புதுமைப் பெண், என் றும், புரட்சித் தலைவி என்றும், பொன்மனச் செல்வி என்றும், ஏழை எளியோர், நடுத்தர மக்கள், பாட்டாளிகள் ஆகியோரின் இதயத்தில் அழியாத இடம் பெற்றுள்ள நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லி சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்திய நாட்டிலேயுள்ள அனைத்து மாநிலங்களிலேயும் தமிழ் நாடுதான் இன்றைக்கு சட்டம் ஒழுங்கு காக்கப்படுவதிலே முதன்மையாக விளங்குகிறது என்றால் மிகையாகாது.

மாவட்ட அளவிலே இன்றைக்கு நல்லமுறையிலே நிர்வாகம் அமைந்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 6 மாதக் காலத்திற்கு ஒரு முறை குறை கேட்க 'மாஸ் காண்டாக்ட்'ஐ நடத்த வேண்டும் என்ற என்னு டைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே பேசிய பேச்சுக்கு எதிராக அவர் மதவாதிகளுக்கு ஆதரவளிக்கின்றார் என்று தவறான பிரச்சாரங்களைச் செய்து வருகின்றார்கள். அது பற்றி ஒரு சில கருத்துக்களை நான் கூற விழைகிறேன். அரசில் உள்ளவர்கள், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு கொடுப்பது போல பெரும்பான்மையினரையும் பாதுகாக்கவேண்டிய கடமை யும் உள்ளது. ஒரு அரசே இந்தக் கடமையை ஆற்றும்போது, இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை இந்துக்களின் நன்மைக்கும் உரிமைகளுக்கும் தாங்கள்தான் பாதுகாவலர்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அப்படி பல அமைப்புகள் தோன்ற வாய்ப்பே இல்லாமல் போய்விடும். எல்லோருடைய எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் உரிய மதிப்பளித்து, அவர்களுடைய நலனைக் காத்து இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நல்லாட்சி நடத்தி வருகின்றார். கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்றால் பாராட்டப் படுகின்றது. இசுலாமிய மசூதிகளுக்குச் சென்றால் பாராட்டப் படுகின்றது. ஆனால், இந்துக் கோவில்களுக்குச் சென்றால் மட்டும் விமர்சனம் செய்யப்படுகிறது. திராவிடப் பாரம்பரியத் தின் பரிணாம வளர்ச்சியாக இன்று மிளிர்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், எல்லா மதத்தின ருடைய உணர்வுகளுக்கும் உரிய மதிப்பளித்து வருகிறார் என்பது தான் உண்மையான யதார்த்த நிலைமையாகும். அவரது சமய நோக்கு பொது நல நோக்கு உடையது. அவருடைய உயர்ந்த எண்ணங்களின் வெளிப்பாடுதான் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்து ஆகும். அவர்களுக்கு விரோதமாக பலரும் தவறான விமர்சனம் செய்தார்கள். மத வாத அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக பேசுகிறார் என்பது போன்ற உண்மைக்கு புறம்பான பிரச்சாரம் செய்தனர். அந்த நேரத்தில் பலருக்கும் தெரியும். . .

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதியைப் பற்றி 2, 3 நிமிடம் பேச வேண்டுமென்று கேட்டீர்கள். பிறகு ஒட்டுமொத்த இந்திய அரசியல் பற்றி பேசிக் கொண்டிருந்தீர் கள் என்றால் இந்த நேரத்தில் சரியாக இருக்காது. ஏதாவது தொகுதியைப் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத உறுப்பினர் களுக்கு, ஒன்றிரண்டு பேர்களுக்குக் கொடுப்பது என்பதற்காக எல்லோரும் பட்டினியாக இருக்கிறார்கள் என்ற நிலை வரக் கூடாது. இப்போது அரசியல் பேசிக் கொண்டிருந்தீர்கள் என்றால் எப்படி ?

செல்வி எல். சுலோசனா : இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல மக்களுக்கும் நல்ல நன்மைகளை செய்யக்கூடிய விதத்திலே திட்டங்களை நிறைவேற்றி வரக்கூடிய இந்த சூழ் நிலையில் என்னுடைய தொகுதியை குறித்து இரண்டு கோரிக்கை களை மட்டும் வைக்க விரும்புகிறேன்.

காரமடை நகரம் என்பது என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நகரமாகும். அங்கே எழுந்தருளியுள்ள திரு. அரங்கநாத திருக்கோயில் 400 ஆண்டுகளாக உள்ள பழமையான கோவிலாகும். இன்றைக்கு காரைமடை மாசி மாதத்திலே மகம் நட்சத்திரத்தில் வருடா வருடம் அங்கே தேர்த்திருவிழா நடைபெறுகிறது. லட்சக்கணக்கான மக்கள் வந்து அந்த சுவாமியை தரிசனம் செய்து கொண்டு செல்கிறார்கள். அந்தப் பழமைவாய்ந்த கோவிலுக்கு ஒரு ராஜகோபுரம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது அங்கு இருக்கிற ஆன்மீக மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் நான் சமர்ப்பிக்கின்றேன்.

அடுத்தது, தேக்கம்பட்டி கிராமம், தேவிகோட்டத்தில் அமைந்துள்ள வனப் பத்ரகாளியம்மன் கோவில் அப்பகுதியில் மிகவும் பிரசித்திப்பெற்றதாகும். அக்கோவிலுக்கு கணிசமான வருமானம் வருகிறது. எனது தொகுதியில் அரசுக் கல்லூரி கிடையாது. மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஏழை, எளிய மக்கள் மிகவும் அதிகமாக உள்ள எனது தொகுதி மக்கள் பயன்பெற வனப்பத்திரகாளியம்மன் திருக்கோவில் சார்பாக ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை அமைத்து, ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, மேட்டுப்பாளையம் 'ஏ' கிரேடு நகராட்சியாகும். மக்கள் தொகை நாளும் பெருகி வருகிறது. நீலகிரி மாவட்டத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. வியாபார நிமித்தம், வியாபாரிகள் அதிகம் வந்து, செல்லுகின்றார்கள். இந்த ஆட்சி வருவதற்கு முன்பு இந்து-முஸ்லீம் சமுதாயத்தினரிடையே கலவரம் மேட்டுப்பாளையத்தில் நடைபெற்று வந்தது. கடந்த $1\frac{1}{2}$ வருடமாக நல்லமுறையில் அமைதி காக்கப்படுகிறது. இருந்தாலும் சமூக விரோதிகளால் எந்த நேரமும் மதக் கிளர்ச்சி தூண்டிவிடப்படலாம். எனவே, மேட்டுப்பாளையத்தி கூடுதலாக காவல் நிலையம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் போன்றுள்ள இதர நகரங்களில் 2-ம், 2-க்கும் மேற்பட்ட காவல் நிலையங்கள் உள்ளன. ஆனால் மேட்டுப்பாளையத்தில் ஒரு காவல் நிலையம்தான் உள்ளது.

தற்சமயம் மேட்டுப்பாளையம் நகரத்தின் வட பகுதியில் காவல் நிலையம் அமைந்துள்ளது. மேலும், கூடுதலாக தென் பகுதியில் ஒரு காவல் நிலையத்தை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு வழங்கிடுமாறு பணிவுடன் வேண்டி, கேட்டுக் கொள்கின்றேன்.

மேட்டுப்பாளையம் சர்க்கிள், அன்னூர் சர்க்கிள், பெரிய நாயக்கன்பாளையம் ஆகிய காவல்துறையில் இருக்கக்கூடிய 3 சர்க்கிள்களையும் இணைத்து ஒரு டி.எஸ்.பி. ஆபீசை

மேட்டுப்பாளையத்தில் — மத்திய பகுதியாக இருக்கக்கூடிய மேட்டுப்பாளையத்தில் அமைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொண்டு இந்த நல்ல வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

*திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு மசோதாவில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1991-92 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பொதுப்பணித் துறையால் இராமநாதபுரம் மாவட்டத்தில், கடலாடி, முதுகுளத்தூர், கமுதி போன்ற பகுதிகள் பயன்பெறும் வகையில் மலட்டாறு நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 17 கோடியே 25 லட்சம் ரூபாய் ஒரு நிதி ஒதுக்கீடு மசோதாவில் குறிக்கப்பட்டு 40 லட்சம் ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டது. ஆனால் பொதுப்பணித் துறைச் செயலாளர் அவர்கள அந்த வேலையை துவங்க வேண்டாமென்று தந்தி மூலமாக அதை நிறுத்தி வைத்துவிட்டு, அந்தக் கோப்புகள் இன்றுவரை துறையின் கீழே சுற்றிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 1971-ல் இந்தத் திட்டம் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு, இந்தத் திட்டம் நிதி ஒதுக்கீடு பெறாமலே கிடப்பில் கிடந்ததை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் தேடி கண்டுபிடிக்கப்பட்டு நிதி நிலையில் அனுமதி வழங்கப்பட்டது.

பிற்பகல் 2-15

ஆனால், துறை அதிகாரிகளுடைய கவனக் குறைவின் காரணமாக, மெத்தனப் போக்கின் காரணமாக மிகவும் வறட்சிக்கு இலக்கான பகுதிகளான முதுகுளத்தூர், கடலாடி பகுதிகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாததன் காரணமாக, அந்தப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்பதை எடுத்துச் சொல்ல விழைகிறேன். குடிநீர் பற்றாக்குறை இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகக் கொடிய முறையில் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குப் பல்வேறு முறை நான் கொண்டுவந்திருக்கிறேன். கடலாடி, முதுகுளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று 1980-லே முதலில் வாகைக்குளம் குடிநீர்த் திட்டம் என்று ஆரம்பித்து, ஒரு துப்பாக்கிச் சூடு சம்பவத்தாலே அந்தத் திட்டம் தடைபட்டு, அதற்குப் பிறகு ராஜகம்பீரத்தில் ஒரு திட்டம் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவில் 1985-ல் நிதி ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு, இன்றைய வரையில் அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படாமல், திட்டம் தீட்டப்பட்ட ஒரு கிராமத்திற்குக் கூட தண்ணீர் கிடைக்காமல்—அதாவது கடலாடி கூட்டுக்குடிநீர்த்

திட்டத்தில் 84 கிராமங்களுக்கும் முதுகுளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 70 கிராமங்களுக்கும் ராஜகம்பீரம் பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கக்கூடிய திட்டம் இன்னும் கிடப்பில் கிடக்கிறது. இதுபோன்று இன்னும் இரண்டு, மூன்று மிகப் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையுள்ள அதிகாரிகள் பல்வேறு முறைகேடான நடவடிக்கைகளில ஈடுபட்டிருப்பதாகப் பரவலாகத் தகவல் இருக்கிறது. மாநில அளவில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுபற்றி ஆய்வு நடத்தி, இதன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுடைய கவனத்தை மிகவும் ஈர்க்க விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய குடிநீர்ப் பற்றாக்குறை போக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தத் துறையில் இருக்கும் அதிகாரிகள் மீது வந்திருக்கும் புகார்கள் பற்றி மிகக் கவனமாக, உன்னிப்பாகப் பார்த்து, திடகாத்திரமான நடவடிக்கையை அருள் கூர்ந்து மேற்கொள்ள வேண்டும். கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் பல்வேறு பிரச்சினைகள் அலுவலர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிய வருகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் விவசாயத் துறையிலே மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். இலக்கை எல்லாம் மிஞ்சி விட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே இது பெருமைபடக்கூடிய ஒன்றுதான். ஆனாலும், விவசாயத் துறை மூலம் தயாரிக்கப்படும் பூச்சி மருந்துகள் முழுமையாகப் பயன் தருகின்றனவா என்றால் இல்லை. நாம் விஞ்ஞான ரீதியில் எவ்வளவோ உயர்ந்து கொண்டு போனாலும், இன்றையதினம் ரேடியோ மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய வேண்டுகோள் என்னவென்று சொன்னால் நெற்பயிர், மிளகாய்ப் பயிர், பருத்திப் பயிர் போன்றவற்றுக்கு பூச்சிகளால் மிகத் தொந்தரவு ஏற்படுமானால், மருந்து அடித்தால் முழுமையாகக் கொல்ல முடியாது விளக்குப் பொறிகளை வைத்து, கையால் பிடியுங்கள் என்று விவசாயத் துறையிலிருந்து விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால், விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் நோயைத் தடுப்பதில் விவசாயத் துறை விஞ்ஞான ரீதியில் தோல்வியைச் சந்தித்திருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் அந்தத் துறையில் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பில் புதிய நுட்பத்தைக் கையாண்டு, எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பை வழங்க வேண்டும்.

இந்த ஆண்டு மிளகாயினுடைய விலை வீழ்ச்சி மிகக் கடுமையாக இருந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஒரு குவிண்டால், 100 கிலோ மிளகாய் வற்றலின் விலை 5,000 ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு ஆயிரம் ரூபாய்க்கு வாங்கு வாரற்ற நிலையில் இருக்கிறது. இராமநாதபுரத்தில் வாரத்திற்கு ஒரு முறை நடக்கும் மிளகாய்ச் சந்தையில், மிளகாய் விவசாயிகள் தங்கள் மிளகாயை விற்பதற்காகச் சென்று, ரோடு ஓரம் குவித்து வைத்திருந்தால், மிளகாய் வியாபாரிகள் காவல் துறையினரை வைத்து, அவர்களை விரட்டக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஒரு பொருளின் விலை 5,000 ரூபாய். இந்த ஆண்டு, அந்த விவசாயப் பொருளின் விலை ஆயிரம் ரூபாய், அதாவது ஐந்தில் ஒரு பங்காகக் குறைந்தால், அந்த விவசாயினுடைய நிலைமை என்னவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றையதினம் ஆந்திர மாநிலம், பிற மாநிலங்களில் எல்லாம் மிளகாய் விலையை உயர்த்த வேண்டுமென்று நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் நமது அரசாங்கமும் மிளகாய் விலையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வது தடைபட்டிருக்குமானால், அதற்கான தடைக் கற்களை அகற்றி, மிளகாய் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு மிளகாய்ப் பயிருக்கு, இதுவரையில் கண்டிராத நோய் ஒன்று வந்திருக்கிறது. அந்த மிளகாய்ச் செடி முழுவதுமே கருப்பாக, புகை அடித்தது போல் மாறிவிடுகிறது. அதற்கு எந்த மருந்து அடித்தாலும் கூட அந்த நோய் தடுக்கப்படவில்லை. இது மாதிரியான குறைகளை அகற்றுவதற்கு அந்தந்தத் துறை அதிகாரிகள் சிறப்பான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

பிற்பகல் 2-20

அதேபோல, கால்நடைகளைப் பொறுத்தவரையில் செம்மறி ஆடுகள் வளர்ப்பு தமிழகத்தில் மிகப் பெரும்பான்மையாக இருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் மிக அதிகம் பேர் செம்மறி ஆடுகள் வளர்ப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சில காலகட்டங்களில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு செம்மறி ஆடுகளைக் கொண்டு சென்று வளர்த்து வருகிறார்கள். அவற்றுக்கு பல்வேறு நோய்கள் வருகின்றன. வாயிலும் புண், காலிலும் புண் வருகிறது. அந்த நோய்க்கு மருந்தே இல்லையென்று கால்நடை மருத்துவ அதிகாரிகள் சொல்கிறார்கள். இதுவரையிலும் அந்த நோய்க்கு நாங்கள் மருந்தைக் கண்டுபிடிக்கவில்லை. கண்ணுக்குப் போடுகிற கிளிசரினை அந்த ஆட்டின் வாயில் தடவிப் பாருங்கள் என்று நாட்டு மருத்துவர்கள் சொல்வதைப் போன்று கால்நடை மருத்துவர்கள், அந்தக் கிராமத்தில் உள்ளவர்களிடம் கூறுகிறார்கள். (குறுக்கீடு)

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கால்நடை மருத்துவரே உங்களுக்கு விளக்கம் சொல்கிறார்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடுகளுக்கு வாயிலும் காலிலும் புண் வருகிறது. அந்த வைரஸ் நோய் பற்றி சொன்னார்கள். அதற்கு மருந்து இருக்கிறது. அந்த மருந்தை சப்சிடி ரேட்டில் அரசாங்கம் கொடுத்து வருகிறது என்ற தகவலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை இந்த அவைக்கு தருகிறார் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தவறான தகவலைச் சொல்லவில்லை. அவருக்கு இதுவரை மருந்து ஒன்றும் கிடைக்கவில்லை என்றுதான் சொல்கிறார். நீங்கள் மருத்துவர். கிடைக்கிறது என்று சொல்கிறீர்கள். அவ்வளவுதான். திரு. சத்தியமூர்த்தி பேசலாம்.

*திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. வி. எஸ். சி. படித்த நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் இதற்கு ஆர்வமாகப் பதில் சொல்ல வந்ததற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் வங்கியில் வேலை பார்த்து, இங்கே வந்திருக்கிறார். அவர் கால்நடை மருத்துவத்தில் ஈடுபட்டு பல ஆண்டுகளாகிவிட்டது. நான் செம்மறி ஆடுகளை வளர்த்துக் கொண்டிருப்பவன். எனக்கு சொந்தமாக ஆடுகள் இருக்கின்றன. நான் பல டாக்டர்களை அணுகிப் பார்த்திருக்கிறேன். இதற்கு இன்னமும் மருந்து நம் நாட்டில் கண்டு பிடிக்கப்படவில்லை என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இது புதிதாக ஏற்பட்ட நோய். ஓரிரு ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட நோய். இந்த நோயால் ஆயிரக்கணக்கான ஆடுகள் செத்துக் கொண்டிருக்கின்றன. அவைகளைக் காப்பாற்ற முடியவில்லை. அதை நம்பி, தொழில் செய்பவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

என்னுடைய முதுகுளத்தூர் தாலுக்காவில் குதிரைமொழியில் 5 ஏக்கர் பகுதி என்று ஒன்று இருக்கிறது. 1967 வாக்கில் மிகவும் ஏழ்மையானவர்களுக்கு, பர்மா போன்ற நாடுகளிலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு ஐந்து ஐந்து ஏக்கர் நிலம் தென்னை சாகுபடி செய்வதற்காக கொடுக்கப்பட்டது. அந்த நிலத்தை நம்பி அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்திடம் கடன் பெற வேண்டுமென்றால் அவர்களுக்கு பட்டா தேவைப்படுகிறது. பட்டா கேட்டு வருவாய்த்துறைக்கு அவர்கள் விண்ணப்பித்து 20 ஆண்டுகளுக்கு மேல் முறையிட்டு வருகிறார்கள். அந்தக் கோப்பு, நில நிர்வாக ஆணையாளரிடமும்

வருவாய்த் துறை செயலாளரிடமும் நிலுவையில் இருந்து வருகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் பலமுறை நான் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் அந்த ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்த அந்த நிலத்திற்கு உரிமம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி மானியக் கோரிக்கையில் வெறும் 10 அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கான நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு செய்யப் பட்டிருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் சொல் லப்பட்டிருக்கிறது. நாங்கள் இங்கே 234 சட்டமன்ற உறுப் பினர்கள் இருக்கிறோம். எல்லாத் தொகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் அங்கங்கே மேல்நிலைப் பள்ளிகள் வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்காக தாராளமாக நிதி ஒதுக்க வேண்டும். இன்னும் பல இடங்களில் ஆரம்பப் பள்ளிகள் கூட நிறைய அளவில் வேண்டுமென்று கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய கடலாடி தொகுதியில் தொடர்ந்து பத்தாண்டுகளாக ஆரம்பப் பள்ளி வேண்டுமென்று கேட்டு, கோப்பு தயார் செய்து கல்வித் துறை இயக்குநருக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய கோரிக்கை இன்னமும் நிறைவேறாத நிலையில் இருக்கிறது. இந்த ஆண்டு கூடுதலாக ஆரம்பப் பள்ளிகள் திறக்கக் கூடுதல் நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கடலாடித் தொகுதி, முதுகுளத்தூர் தாலுக்காவில் உச்சிநத்தம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே 1977—ல் 35 லட்சம் ரூபாய் செலவில் பார்ட்—2 திட்டத்தில் சாலை போடப்பட்டது. அதிலே இரண்டு சிறிய பாலங்கள் போடாத காரணத்தால் 35 லட்ச ரூபாய் செலவு செய்து சாலை போட்டும், 15 கிலோ மீட்டர் சாலை போட்டும், 10 கிராமங்களை இணைக்கின்ற அந்த இடத்தில் பேருந்து போக்குவரத்து இல் லாமல் இருக்கிறது. நானும் பத்தாண்டு காலமாக ஒவ்வொருவரிடமும் சொல்லியிருக்கிறேன். முறையிடாதவர்களே இல்லை என்று கூடச் சொல்லலாம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை இதற்காக நான் ஈர்க்க விரும்புகிறேன். உச்சிநத்தம் சாலையில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும். அந்தச் சாலைக்கு 35 லட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது. 13 ஆண்டுகள் ஆகி விட்டன. 15 கிலோ மீட்டர் தூரம் 10 கிராமங்களை இணைக்கிறது. ஆனால் பேருந்து வசதியில்லாமல் இருக்கிறது. தாங்கள் துடிப்போடு செயல்படக்கூடிய இளைய அமைச்சர், அதுவும் எங்கள் பகுதியில் அக்கறையுள்ள அமைச்சர் ஆவீர்கள்——அந்தச் சாலையில் ஒரு பாலம் அன்புகூர்ந்து கட்டிக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன். எதிர்க்கட்சிகளின் சார்பில் வெண்ட்-அப் செய்து பேசுகிறார்.

பிற்பகல் 2-25

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்க மசோதாவின் மீது இந்தியக் குடியரசு கட்சியின் சார்பில் கருத்துக்களை வழங்க வாய்ப்பு வழங்கியமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி நான் சுருக்கமாக என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய நாள் 28 ஆம் தேதி என்பது எங்களைப் பொறுத்தவரையில் கொஞ்சம் பிரச்சினையான நாளாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பேரவையில் முன்பு மேலவையாக இருந்தபோது 1920-களில் தாத்தா ரெட்டமலை சீனிவாசன் போன்றவர்கள் எல்லாம் இங்கே போரிட்டு பெற்ற அந்த இட ஒதுக்கீடு முறைக்கு இன்றைக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிற நாளாக இந்த நாள் இருக்கிறது. சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டில் மண்டல் பிரச்சினை குறித்து ஒரு பெஞ்ச் வழங்கிய தீர்ப்பின் காரணமாக, அதிலே கொஞ்சமும் தொடர்பில்லாத எங்களைக் குறித்தும் நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்ததால், இனி சூப்பர் ஸ்பெஷாலிட்டி என்று சொல்லப்படுகிற, தனி நிபுணத்துவம் உள்ள பிரிவுகளில் எதிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு கூடாது என்ற தீர்ப்பு வந்து, அந்தத் தீர்ப்பு எல்லோருக்கும் ஒரு அறிக்கையாக அனுப்பப்பட்டு, பல பல்கலைக்கழகங்களில் அதை நிறைவேற்றுவதற்கும் தொடங்கி, இன்றைக்கு அது கெடுநாளாக இருந்து, இந்தத் தேதியில் ஸ்டேயை வாங்காவிட்டால் இனி ஆதிதிராவிட மாணவர்களுக்கு சூப்பர் ஸ்பெஷாலிட்டி என்று சொல்லப்படுகிறவைகளில் இட ஒதுக்கீடு இல்லை என்று இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, நம்முடைய தமிழக அரசு மத்திய அரசுக்கு மறு ஆய்வு செய்ய கோரிக்கை மனு உச்சநீதிமன்றத்தில் போட்டிருக்கிறது. அது அரசின் சார்பில் போடப்பட்டிருக்கிறது என்றாலும், அதிலே இந்த ஆதிதிராவிட மக்களுடைய பிரச்சினையை எடுத்துச் சொல்வதற்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, இது குறித்து தனியாக மறு ஆய்வு மனுவை ஆதிதிராவிட நலத் துறை விரைந்து போட்டு, இதற்கு உத்தரவாதமும், பாதுகாப்பும் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். ஏனென்றால் இன்றைக்கு அது burning problem. இந்த ஆண்டு நாம் அந்த இட ஒதுக்கீட்டைப் பெற முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது என்பதால் நான் இதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 ஏப்ரல் 28

இரண்டாவதாக, வருவாய்த் துறையில் கிராம காவலர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சமீபத்தில் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி இருக்கிறார்கள். சம்பளத்தை உயர்த்தி னால் மட்டும் போதாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம காவலர்களை நிரந்தரப் படுத்த வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என்று சொல்லுகிறபோது, அதிலே பூரண பொறுப்பையும் நீங்களே எடுத்துக்கொண்டு, பல ஆண்டுகளாக அதற்கு பாடு படுவதாக பொருள்பட இங்கே பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். அது உண்மைக்கு மாறானது. அவர்களுக்காகத் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டு வருவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும், அரசும் தான் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். அதிலே நீங்கள் பாடுபட்டுக் கொண்டு வருவதாகச் சொல்வது சரியென்று வந்துவிட்டால், அன்றைக்கு சட்டமன்றத்திலே பேசினேன். அதனால் வந்து விட்டது என்று சொல்வதற்கு வாய்ப்பாகும். இப்படிப்பட்ட வாய்ப்புகளை எல்லாம் உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரையும் விட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் கிராம காவலர்களுக்கு பல சலுகைகளையும், உரிமைகளையும் தந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தான் வெட்டி யான், தலையாரி, தோட்டி என்று இருந்த பெயர்களை எல்லாம் மாற்றி கிராம காவலர்கள் என்று பெயர் மாற்றமே செய்தவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே ஒன்று சொல்வார்கள். தலை இருக்க வால் ஆடுமா என்று. எனவே, அதை எந்த அமைச் சர் சொன்னாலும், அப்போது இருக்கிற முதலமைச்சர் தான் அதற்கு பொறுப்பாளி ஆவார். அப்போது இதயதெய்வம் புரட்சித் தலைவர் தான் அதைச் செய்தார் என்று சொல்வேன். நான் செய்ததாகச் சொன்னால், அது தலையிருக்க வால் ஆடியதைப் போலாகும்.

1993 ஏப்ரல் 28]

திரு. செ. கு. தமிழரசன் : நான் அவர்களுக்கு எல்லாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால், அமைச்சராக இருந்து, அதைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்தான். நான் இதைச் சொல்ல விரும்புவதற்குக் காரணம், இவ்வளவும் செய்து,—70 ஆண்டுக் காலமாக அவர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள்— 70 ஆண்டுக் காலமாக அவர்கள் டெம்ரவரியாக, தற்காலிக ஊழியர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். 100 ஆண்டுக் காலம் போன பின்னாலுமா இதைச் செய்யப் போகிறோம். எனவே, 70 ஆண்டுக் காலமாக தற்காலிக ஊழியர்களாக இருக்கிற நிலையை மாற்றி அவர்களைப் பணி நிரந்தரம் செய்தால் என்ன ? 24 மணி நேரமும் அவர்கள் உழைக்கிறார்கள். 24 மணி நேரமும் உழைக்கிற சாதாரண அடிமட்டப் பணியிலே இருந்து கொண்டிருக்கிற அவர்களுக்கு ஒரு பரிகாரம் காணவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

பிற்பகல் 2-30

அதேபோல, வரலாற்று சிறப்புமிக்க ஒரு மிகப் பெரிய சாதனையை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இங்கே செய்தார்கள். ஏப்ரல் 14 ஆம் தேதி, பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கார் அவர்கள் பெயரிலே ஒரு மண்டபத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். ஒரு கோடி ரூபாய் அளவிலே அந்த மண்டபம் கட்டப்பட இருக்கிறது. ஆனால் அங்கே சாக்கடையும் சகதியுமாக இருக்கிற அந்தப் பகுதி விலை உயர்ந்த பகுதியாக இருந்தாலும், அது ரொம்பவும் ஆழமான பகுதியாக இருப்பதால், அதை நிரப்புவதற்கே பல லட்சம் ரூபாய் செலவாகும் என்ற நிலைமை இருக்கிறது. எனவே, அதற்கு ஒரு கோடி என்று இல்லாமல் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. அந்தச்சிறப்பான மண்டபத்தைக் காலம் காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் நினைத்துப் பார்க்கக்கூடிய அந்த மண்டபத்தை கொஞ்சம் அதிகப்படியான பணம் செலவானாலும் அதைக் கட்டுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், நம்முடைய நேரு ஸ்டேடியத்தைப் போல—பொதுமக்களிடமிருந்தும் பொது நிறுவனங்களிடமிருந்தும் பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் வசூலித்தாலும் பரவாயில்லை,—அதைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை 5 மணிக்கு நமது இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்கின்ற விருந்து இருக்கிறது. ஆகவே, தற்போது சென்று சாப்பிட்டுவிட்டு திரும்பவும் 5 மணிக்கு எப்படி ருசித்துச் சாப்பிட முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, 7 மணிக்கு.

திரு. வி. பி. சந்திரசேகர் : 5 மணிக்குத்தானே வரச் சொல்லியிருக்கிறீர்கள்? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேநீர் விருந்துக்கு அல்ல, இன்றைக்கு இரவு உங்களுக்கு விருந்துக்கே. (குறுக்கீடு) முழு விருந்தே உங்களுக்கு. சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : சுருக்கமாகவே என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிடுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும், தாழ்த்தப்பட்ட மக்களை ஆதி திராவிடர்கள் என்று நாம் அழைக்கிறோம். ஒரு காலத்திலே சென்னை மாகாணம் என்று இருந்த போது, அதிலே ஆந்திராவும், கர்நாடகாவும் வேறு சில பகுதிகளும் இருந்தபோது, நாம் ஒட்டுமொத்தமாக சேர்த்து ஆதி திராவிடர்கள் என்று அவர்களை அழைத்தோம். ஆனால் தமிழ்நாடு என்று பிரிந்துவிட்ட பின்னாலே, இப்போது ஆந்திராவிலே இருப்பவர்களை ஆதி ஆந்திரர்கள் என்று சொல்கிறார்கள், கர்நாடகாவிலே இருப்பவர்களை ஆதி கர்நாடகர்கள் என்று சொல்கிறார்கள், ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்,—மொத்தமாகச் சேர்த்து ஆதி ஆந்திரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, இதிலே பெயர் மாற்றம் செய்து, ஆதி தமிழர்கள் என்று அழைத்தால் என்ன ? இதை நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால், இதே கருத்தை எங்களுடைய முதுபெரும் தலைவர், எம். சி. ராஜா அவர்கள் கூட மேலவையிலே 1920 கால கட்டத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் இந்தப் பெயர் மாற்றம் வந்தபோது, எனவே, அவர்களை ஆதி தமிழர்கள் என்று அழைத்தால் என்ன என்பதை நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் என்றால்,— இந்தியத் துணைக் கண்டம் பூராவும் இருக்கிற நீங்கள்தான் முதன் முதலிலே இந்தியாவிலே வந்தவர்கள் என்பதற்காகத்தான் ஆதி திராவிடர்கள் என்று அழைக்கிறோம். ஆதி தமிழர்கள் என்று சொல்லிவிட்டால், அவர்களுக்கு எல்லாம் மற்ற மாநிலத்திலே உள்ளவர்களுக்கு எல்லாம் அந்த உரிமை இல்லாமல் போய் விடும். ஆதி திராவிடர்கள் என்று சொல்வதற்குக் காரணம் இந்தியாவில் உள்ள எல்லா மக்களுக்கும் நீங்கள் ஆதியிலே வந்தவர்கள் என்பதால்தான்.

1993 ஏப்ரல் 28]

திரு. செ. கு. தமிழரசன் : சென்னை மாகாணம் முழுமையாக இருந்தபோது அந்தக் கருத்து சொல்லப்பட்டது. இப்போது கர்நாடகாவிலே ஆதி கர்நாடகர்கள் என்று சொல்கிறார்கள். ஆந்திராவிலே ஆதி ஆந்திரர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களை எல்லாம் சேர்த்து இங்கே ஆதி திராவிடர்கள் என்று சொல்கிறோம். திராவிடம் என்றால், ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு எல்லாம் சேர்ந்ததுதான். வட இந்தியர்களை நாம் திராவிடர்கள் என்று சொல்ல முடியாது. எனவே, இந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்பதை மட்டும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய காவல்துறை மானியத்திலே காவல் துறையிலே பணி நியமனம் செய்யப்பட்ட புள்ளி விவரங்களை எல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 14 விழுக்காடு நிரப்பப்பட்டு இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். எனவே, மீதமுள்ள 5 விழுக்காட்டை - 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் 1 சதவீதம் மலைஜாதியினருக்கும் - கேரி பார்வார்ட் என்று சொல்லப்படுகிற நிலுவையில் வைக்கப்பட்டு அந்த இடங்களை நீங்கள் தனித் தேர்வின் மூலம் நிரப்பவேண்டும், என்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோல் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டு இருக்கிற காவலர்களுக்கு 1,000 ரூபாய் ரிஸ்க் அலவன்சும், 60 சதவீதம் பயணப்படியும் வழங்குவதாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் நீட்டித்து பாதுகாப்பு பணியிலே- அமைச்சர் பெருமக்களுக்கு, நீதிபதிகளுக்கு, உயர் அலுவலர்களுக்கு - ஆக இப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு பணியிலே ஈடுபட்டிருக்கிற அவர்களுக்கும் -செக்யூரிட்டி பிரான்ஞ்சிலே இருக்கிற அவர்களுக்கும் அதை நீட்டிப்பு செய்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன். இன்று கூட நம்முடைய அவையிலே கல்வி அமைச்சர் அவர்கள் ராஜினாமா செய்யவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வலியுறுத்தி எதிர்க்கட்சியினர் பலரும் வெளிநடப்புச் செய்தார்கள். (மணியடிக்கப் பெற்றது).

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : அப்படி வெளிநடப்பு செய்திருப்பார்களேயானால் கூட அவர்களை ஏதோ ஒரு வரம்பிற்குள்ளே நடந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியும். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்துப் பேசவிட்டு அதற்குப் பிறகு ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் எடுத்த முடிவிற்கு பிறகு அதை என்றுக் கொள்ளாமல் ஒத்திவைத்துத்தான் தீர வேண்டும் ஏன்று சொல்லிவிட்டு, பிடிவாதம் செய்தார்கள். காவலர்களாலே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : வெளியேற்றப்பட்டார்கள் ஆனால் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்தினார்கள். ஒரு நீதிமன்ற தீர்ப்பினாலே ஒருவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற நிலைமை இருந்தால் மத்தியப் பிரதேச அரசை கலைத்தது தவறு என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறதே, அந்தத் தீர்ப்பை வலியுறுத்தி ராஜினாமா செய்ய வேண்டு மானால் பிரதமர் அவர்கள் ராஜினாமா செய்வார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) செய்ய மாட்டார்கள். அப்படி கோரினால் அது சரியாக இருக்காது. அதேபோல மராட்டிய மாநிலத்திலே இன்றைக்கு முதல்வராக இருக்கக்கூடிய சரத்பவார் அவர்கள் பெயரிலே குற்றச்சாட்டுகள் சொல்லப் பட்டு, அவர்கள் பேரிலே உயர்நீதிமன்றம் எதிர்த்து தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதை வலியுறுத்தி அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று நான் சொல்ல முடியுமா? அதை நாம் சொல்ல முடியாது. அதேபோல மராட்டிய மாநில முதல்வராக இருந்த ஏ. ஆர். அந்துலே பேரிலே ஒரு குற்றச் சாட்டை நிரூபிக்கச் செய்து விட்டதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறதே, அதை அவர் ஏற்று ராஜினாமா செய்ய வேண்டும் என்று அந்தத் தீர்ப்பை வலியுறுத்த முடியுமா? வலியுறுத்த முடியாது. அன்றைய ரயில்வே அமைச்சர், இன்றைக்கும் ரயில்வே அமைச்சராக இருக்கிற ஜாபர் ஷெரிப் அவர்கள் ஒப்பந்தத்திலே சில முறைகேடுகள் செய்து விட்டார்கள் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக் கிறது. அதை வலியுறுத்தி மைய அமைச்சர் ராஜினாமா செய்யவேண்டும், ஜாபர் ஷெரிப் ராஜினாமா செய்ய வேண் டும் என்று சொல்ல முடியுமா? சொல்ல முடியாது. ஆனால் அவர்களுடைய கோரிக்கையெல்லாம் எப்படியாவது இந்த சட்டமன்றத்தைப் பொறுத்த வரையிலே ஒரு பெரிய தகராறை உருவாக்கி இந்த மன்றத்தை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்பதுதான். ஒத்திவைப்புத் தீர்மானங்களை எப்போதுமே இல்லாத அளவுக்கு இந்தப் பேரவையிலே பல ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டி ருக்கிறோம், இந்தத் தொடரிலே கூட 20–க்கும் மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் மிகவும் பெருந்தன்மையோடு எடுத்துக் கொண்டி ருக்கிறார்கள். நான் பழைய சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்க்கும்போது 1957–லேயிருந்து 1959 வரை 2 ஆண்டு களுக்கும் இங்கே காங்கிரஸ் அமைச்சரவை இருந்தபோது, அன்றைக்கு இருந்த சட்டமன்றத் தலைவர் திரு. கிருஷ்ணா ராவ் அவர்கள், இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட எடுத்துக் கொள்ளவேயில்லை. ஆனால் இந்தக் கூட்டத் தொடரிலே மட்டும் 20–க்கும் மேற் பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்களை நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார் கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு அனுமதி தரவில்லையே தவிர ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தந்திருந்தால் அவர்கள் எந்த அளவிற்கு பேச வேண்டுமோ எந்த அளவிற்கு விளக்க வேண்டுமோ அதற்கான வாய்ப்புகள் அனைத்தும் தந்து அவர்கள் எல்லாம் பேசினார்கள். அதற்கெல்லாம் பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரையிலும் தரப்படாத அளவுக்கு வாய்ப்புகளையும் நீங்கள் தந்திருக் கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் காலை யிலேயே சொன்னேன். அவர்களுக்கு வாய்ப்பும் வழங்கி கல்வி அமைச்சரும் பதில் சொன்னதற்குப் பிறகு, திரும்பவும் சில விளக்கங்களை கேட்க ஆரம்பித்தபோது, அதுவே எக்ஸாஸ்ட் ஆயிற்று என்பதால் அதற்குப் பிறகு மேற்கொண்டு வேறு எந்த விவாதத்திற்கும் இடமே இல்லை என்றுதான் காலையிலேயே என்னுடைய முடிவைச் சொல்லியிருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்தி வைக்க வேண்டிய அவசியமே இல்லாத ஒரு நிலைமை வந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதே தான், ஒத்தி வைத்து என்னென்ன பேச வேண்டுமோ அவ்வளவும் பேசி, அதற்கு பதிலும் சொல்லியாகி விட்டது.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கும் நீதி மன்றத்திற் கும் ஒரு வித்தியாசம் உண்டு. நீதிமன்றம் ஒரு தனி மனித உரிமைகளை பாதுகாப்பது. சட்டமன்றம் என்பது பெரும் பான்மையான மக்களுடைய சட்டத்தின் ஆட்சியை உருவாக்கு வது. ஆகவே இங்கே எடுக்கப்படுகிற எந்த முடிவுகளும் பெரும்பான்மை மக்களுடைய உணர்வுகளை பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிரதிநிதிகளுடைய உரிமைகளை பிரதிபலிக்கவேண்டியதாய் இருக்க வேண்டும். அந்த வகையிலே தான் உங்களுடைய முடிவுகள் இருக்கின்றன. எந்த விவாதத்தையும் முடித்து வைக்கிற உரிமை உங்களுக்கு இருக்கிறது. பிரிட்டன் பாராளுமன்றத்திலே ஒரு விவாதம் $41\frac{1}{2}$ மணி நேரம் நடந்திருக்கிறது. $41\frac{1}{2}$ மணி நேரத்திற்கு பிறகு என்ன செய்வது என்று புரியாமல் அதற்கு பிறகு தான்— நாமெல்லாம் முன் உதாரணமாக எடுத்துக் கொண்டிருக்கிற அந்த பிரிட்டன் பாராளுமன்றத்திலே $41\frac{1}{2}$ மணி நேரம் ஒரு விவாதம் நடந்ததற்கு பிறகு தான் முதல் முதலிலே— விவாதத்திற்கு முடிவு எடுக்கிற அந்த உரிமையை பேரவைத் தலை வருக்கு விட்டு விடுவது என்ற முடிவை முதன் முறையாக எடுத்திருக்கிறார்கள், அதற்குப் பிறகு தொன்றுதொட்டு

எந்த விவாதத்திற்கும் முடிவு எடுக்கிற உரிமை பேரவைத் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பேரவைத் தலைவராகிய நீங்கள் பெரும்பான்மை மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகை யிலே முடிவு எடுத்த பின்னாலே, அந்த முடிவை வேறு எவ ரும் கொச்சைப் படுத்த முடியாது. ஆனால், இங்கு இருக் கின்ற சில எதிர்க் கட்சிக்காரர்கள் எப்படியாவது அந்த முடிவு அவர்களுடைய முடிவாக இருக்க வேண்டு மென்று உங்களை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருப்பது ஒரு ஜனநாயக விரோதப் போக்கையே நமக்கு தென்படுத்துகிறது. ஒரு பேரவைத் தலைவர் எப்படி செயல்பட வேண்டும் என்ப தற்கு.....(மணியடிக்கப் பெற்றது)

பிற்பகல் 2-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவு நீண்ட விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தால் இப்போது எல்லா உறுப்பினர்களும் பசியோடு இருக்கிறார்கள். பேரவைத் தலைவருக்கு உதாரணங்கள் சொல்லிக் கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சிதான். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் சொல்லி விடுகிறேன். ஒரு பேரவைத் தலைவர் இயல்பு எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்பதற் காக ஒரு புத்தகத்திலே சர். வில்லியம் பார்வர்டு என்ற மிகப் பெரிய அறிஞர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரவணைத் துச் செல்லும் அதிகாரம் முதல் இயல்பு, அதற்கேற்ற கண்ணியம், அடக்கியாளும் உறுதி, அறிவுறுத்தும் திறன், நெஞ்சத்துக் கோணாமை, நேர்மை பிறழாமை, சகிப்புத் தன்மை, சார்புடைமை, இங்கிதமான சொல், இணக்கமான நடை, பிறர் பணியும் பீடுடமை, பிறர் நயக்கும் பெற்ற மை, காட்சிக்கு எளிமை, கண்டவருக்கு இனிமை, இயல் பால் அமைந்த பண்பு நயம், எவரையும் ஈர்க்கும் இனிமை நலம் இவைகளே ஒரு பேரவைத் தலைவருடைய சிறப்பான பண்புகளாக இருக்க வேண்டும் என்று அந்த அறிஞர் குறிப் பிட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பேரவைத் தலைவருக்கு மட்டு மல்ல. எல்லோருக்குமே வேண்டும் என்று அவர் குறிப் பிட்டிருக்கிறார்.

திரு. செ. கு. தமிழரசன் : பேரவைத் தலைவர் அவர்களே அத்தகைய பண்புகளோடு இந்தப் பேரவையை மிக அமை தியாக, சிறப்பாக, நம்முடைய கண்ணியம் கொஞ்சமும் குறையாத வகையிலே நடத்திச் செல்லுகின்ற அந்தப் பாங்கை நாங்கள் பார்த்து பாராட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இந்தப் பேரவையை எப்படியாவது செயல் இழக்கச் செய்ய வேண்டும் என்று சிலர் அத்தகைய செயலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற அந்த வருத்தத்தைச் சொல்வதற்காகத் தான் நான் இவைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் மிகச் சுருக்கமாக என்னுடைய கருத் துக்களைச் சொல்ல விழைவதனால் ஓரிரு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதியிலே உணவுக் கட்டணமாக கொடுக்கப்படுகின்ற தொகை மிக மிக குறை வாக இருக்கிறது. இந்த ஆண்டு 30 ரூபாயைத் தான் உயர்த்தி இருக்கிறோம். ஏறி வருகின்ற விலைவாசிக் கேற்ப 30 ரூபாய் உயர்வு என்பது கொஞ்சமும் போதாது. எனவே அவர்களுக்கு இந்தத் தொகையை 400 ஆக—400 ரூபாய் இருந்தால்தான் கல்லூரி படிக்கின்ற மாணவர்களுக்கு எம். ஏ., படிக்கின்ற மாணவர்களுக்கு, சட்டம் படிக் கின்றவர்களுக்கு, வளர்ந்த மாணவர்களுக்கு முடியும், அவர் களுக்கு ஒரு மாதத்திற்கு 400 ரூபாய் இல்லை யென்றால் எப்படி சரியாகும்? (குறுக்கீடு) 220—ஆ ? அது போதாது. எனவே 400 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு சென்னையிலே குடிநீர்ப் பிரச்சினை மிகப் பெரிய பிரச் சினையாக இருக்கிறது. அதைச் சாமளிப்பதற்காக நம் முடைய தமிழக அரசு வேகமான நடவடிக்கைகளை முனைந்து செயல் படுத்தி வருகிறது. இந்த குடிநீர்ப் பிரச்சினைக்கே மூலகாரணம் ஒரு நீண்ட கால பார்வையோடு பார்த் தால் இங்கே இட நெருக்கடியும், மக்கள் நெருக்கடி யும் அதிகமாக இருப்பதனால் தான். எனவே, புற நகர் பகுதிகளை நாம் உருவாக்குவோமேயானால், நீர் நிலை யைப் பொறுத்த வரையில் அங்கே கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். நான் ஏற்கனவே இந்த அவையிலே சொன்ன தைப் போல கூட ஒரு செகண்ட் சிட்டியை டெல்லி, நியூடெல்லி, என்று இருப்பதைப் போல, ஹைதராபாத், செகன்ட்ராபாத் என்று இருப்பதைப் போல இங்கே ஒரு செகன்ட் சிட்டியை சென்னையிலே உருவாக்கினால் என்ன ? அல்லது குறைந்த பட்சம் புற நகர்ப்பகுதிகளையாவது உருவாக்கி, நமக்கு நீர் கிடைப்பதற்கான வசதிகளை உருவாக்க நீங்கள் முயல வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை முன் வைக்க விரும் புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) நீண்ட காலமாக ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழுக்கள் போடப் படாமல் இருக்கின்றன. மாவட்ட அளவிலே அந்தக் குழுக்கள் போடப் படாமல் இருக்கின்றன. எனவே அந்த குழுவைப் போட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். பாரா ளுமன்றத்தில் இருப்பது போல, பல சட்ட மன்றங்களிலே இருப்பது போல, சட்ட மன்றத்திலே கூட ஒரு ஆதிதிராவிடர் நலக் குழுவை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைத்து, நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரை. நாளைக்குத் தொடர்கிறீர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் கடந்துவிட்டதன் காரணமாகவும், கடும்பசி ஏற்பட்டுவிட்டதன் காரணமாகவும் பதிலுரையை நாளைக் காலை வைத்தால்தான் எல்லோரும் அமைதியாகவும் கேட்பார்கள், நிதானமாகவும் கேட்பார்கள், முறையோடும் கேட்பார்கள் என்ற காரணத்தினால் நாளைக் காலை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29—4—1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2.44 மணிக்கு ஒத்தி வைக்கபெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

199. சென்னை, உம்மிடி நந்தகோபால் டிரஸ்ட்டினால் விற்பனை செய்யப்பட்ட ஏழு வெள்ளி யிலான நேரு விளையாட்டு அரங்கம் உருவமைப்புடன் கூடிய நினைவு பரிசாக 18—1—1993 அன்று நேரு விளையாட்டு அரங்கம் திறக்கப்பட்டபோது முக்கிய நபர்களுக்கு வழங்கப்பட்டதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—2—1993 ஆம் நாளிட்ட 39 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

200. தூத்துக்குடி, இந்து மிஷன் மருத்துவமனைக்கு எந்த ஒரு விற்பனையாளராலும் விற்கப்படும் மருந்துகள் மற்றும் தளவாடங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள்

Finally, Sir, I also make a plea to the Government to come out with a ban on the sale of Wak' porperties—not only sale, but also long leases. Of course there is a provision for the sale of the Wakf properties in the Act, for the betterment etc. But, it is very often being not operated properly or taken care of. With the result, the properties whose value is appreciating day by day, are sold for very small amounts. So, the very purpose for which the Wakf has given or donated the properties to the Wakf is lost.—Not only the value, but their sentiments also is not honoured. In this regard I wish to add that when I was the Minister I had imposed the ban and I think, for some reason, now it stands revoked. I request the Hon. Chief Minister to kindly look into this and do the right thing what she feels proper, to protect the Wakf properties.

Thank you, Deputy Speaker Sir, for giving me this opportunity to say a few words of my feeling. Thank you.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

*திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின் இது மூன்றாவது நிதி நிலை அறிக்கை, நிதி நெருக்கடியிலும், மிகவும் சிறப்பாக.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒருவர் முன்பு பேரவையில் பேசியதாக குறிப்பிட்டுப் பேரவைத் தலைவர் தெரிவித்த கருத்து குறித்த விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் காலையில் 1966-வது ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சி என்று ஒரு உறுப்பினர் பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சியைச் சொல்கிறபோது, தற்போதைய கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம் என்பது போல அது பதிவாகி இருக்கிறது. அவர் தற்போதைய கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம் அல்ல. அன்றைய சென்னிமலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். நல்லசிவம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரை. நாளைக்குத் தொடர்கிறீர்களா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் கடந்துவிட்டதன் காரணமாகவும், கடும்பசி ஏற்பட்டுவிட்டதன் காரணமாகவும் பதிலுரையை நாளைக் காலை வைத்தால்தான் எல்லோரும் அமைதியாகவும் கேட்பார்கள், நிதானமாகவும் கேட்பார்கள், முறையோடும் கேட்பார்கள் என்ற காரணத்தினால் நாளைக் காலை வைத்துக்கொள்ளலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29—4—1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2.44 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

199. சென்னை, உம்மிடி நந்தகோபால் டிரஸ்ட்டினால் விற்பனை செய்யப்பட்ட ஏழு வெள்ளி யிலான நேரு விளையாட்டு அரங்கம் உருவமைப்புடன் கூடிய நினைவு பரிசாக 18—1—1993 அன்று நேரு விளையாட்டு அரங்கம் திறக்கப்பட்டபோது முக்கிய நபர்களுக்கு வழங் கப்பட்டதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—2—1993 ஆம் நாளிட்ட 39 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

200. தூத்துக்குடி, இந்து மிஷன் மருத்துவமனைக்கு எந்த ஒரு விற்பனையாளராலும் விற்கப்படும் மருந்துகள் மற்றும் தளவாடங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள்

துறையின் 13—11—1992 ஆம் நாளிட்ட 402 ஆம் எண் அரசாணையில் வெளியிட்டப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

201. சென்னை மாநகரிலும் ஏனைய இடங்களிலும் காவல் துறையினர் சட்ட விரோதமாகக் கைது செய்தது குறித்து 31—8—1992 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி வி. காலித் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

202. சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் பல்லவன் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்குமிடையே வாய்ச் சண்டை ஏற்பட்டதற்கான காரணங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்தும் அதனையடுத்து 25—10—1991 அன்று காவலர் நடவடிக்கை எடுத்ததற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. பி. கிருஷ்ணசாமி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4)–பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

256. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை, 1992–93.

257. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை, 1992–93.

258. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை, 1992–93.

259. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பத்தாவது அறிக்கை, 1992–93.

துறையின் 13—11—1992 ஆம் நாளிட்ட 402 ஆம் எண் அரசாணையில் வெளியிட்டப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

201. சென்னை மாநகரிலும் ஏனைய இடங்களிலும் காவல் துறையினர் சட்ட விரோதமாகக் கைது செய்தது குறித்து 31—8—1992 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி வி. காலித் விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

202. சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் பல்லவன் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்குமிடையே வாய்ச் சண்டை ஏற்பட்டதற்கான காரணங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்தும் அதனையடுத்து 25—10—1991 அன்று காவலர் நடவடிக்கை எடுத்ததற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. பி. கிருஷ்ணசாமி விசாரணைக் குழுவின் அறிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4)-பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

256. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை, 1992–93.

257. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை, 1992–93.

258. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை, 1992–93.

259. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பத்தாவது அறிக்கை, 1992–93.

[1993 ஏப்ரல் 28

260. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினொன்றாவது அறிக்கை, 1992–93.

261. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பன்னிரெண்டாவது அறிக்கை, 1992–93.

262. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முப்பதாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

263. உடுக்குறியிடாத வினாக்கள் — விடைகள் பட்டியல் (முப்பத்தி ஒன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).

264. உடுகுறியிடாத வினாக்கள் — விடைகள் பட்டியல் (முப்பத்தி இரண்டாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).